வெளியீடு: 20-2-2007 Issued: 20-2-2007

753
12.06.07
6
12/06/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 4, 2006—தொகுதி 7—எண் 2

Friday the 4th August, 2006 —Volume 7—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V2, 31/01
Pol. 72
227419

[Price Rs. 3.00

**4–8–2006**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1. | **வினாக்கள்—விடைகள்—** | |
| | *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 305-325 |
| 2. | **தகவல் கோரல்—** | |
| | *ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோருதல்* | 325-326<br>331-335,390 |
| 3. | **பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில், ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்** | 326-327 |
| 4. | **இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்** | 327-331<br>335-339<br>432-434,435,447 |
| 5. | **உரிமை மீறல் பிரச்சினை—** | |
| | *'மாலை மலர்' பத்திரிகைமீது* | 339-346 |
| 6. | **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| | *(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006* | 346-347 |
| | *(ஆ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006* | 347-348 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. **மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி— | |
| (அ) கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை | 348-432,433 |
| (ஆ) கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை | 435-506 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 348,388-389 396-397,399-401 404,405,406, 407,408,412, 416-417 468-484,487, 489-490 |
| *மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 366,389,394,395 396,455-468,486, 487,490-491 |
| திரு. சி.வி. சண்முகம் | 390-399,403-405 409-411 413-416 |
| *திரு. எம். பன்னீர்செல்வம் | 414, 417-423 |
| *திரு. விடியல் எஸ். சேகர் | 423-432 |
| *திரு. ஜி.கே. மணி | 435-446 |
| *திரு. விஜயகாந்த் | 447-455 |
| 8. **மேட்டூர் அணையின் நீர்மட்டம் மற்றும் உறுதித் தன்மை குறித்து** | 434-435 |
| 9. **அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)**— | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006 | 507-508 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 507-508 |
| 10. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 509 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 19, விய–திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 4, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1. திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

### கட்டட வசதி

*2—**திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி தீயணைப்பு நிலையத்துக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருக்காட்டுப்பள்ளியில் தீயணைப்பு நிலையம் கட்டுவது அரசின் பரிசீலனையிலே உள்ளது.

[2006 ஆகஸ்ட் 4

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்றால், எந்த அளவில் பரிசீலனையில் உள்ளது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த நிலையம் கட்டுவதற்காகத் தேர்வு செய்யப்பட்ட இடம், பழமானேரி கிராமத்தில் இருக்கின்றது. அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற காரணத்தால், பொதுப் பணித் துறையோடு தொடர்பு கொண்டு, அந்த இடத்தைப் பெற்று அங்கே நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டன? 1996 முதல் 2001 வரை, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே, எத்தனை தீயணைப்பு நிலையங்கள் தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்டன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தி.மு.கழக ஆட்சியில் 57 தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் 4 தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்க எவ்வளவு செலவு ஏற்படும் என்பதனைத் தெரிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையத்தினுடைய பரப்பளவு, [illegible] அளவு [illegible]வற்றைப் பொறுத்து, அது பெரிய நிலையமா,

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227419
சென்னை-600 008



2006 ஆகஸ்ட் 4]

நடுத்தர நிலையமா என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, அதற்கேற்ப செலவழிக்கப்படுகிறது. எனவே, குறிப்பாக ஒரு தீயணைப்பு நிலையத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று சொல்வதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன? அவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் எத்தனை உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது 282 தீயணைப்பு மற்றும் ஒரு மீட்புப் பணி நிலையங்கள் இருக்கின்றன. இவற்றிலே சொந்தக் கட்டடத்திலே உள்ளவை 161. ஓரளவு நிரந்தரமாக் இருப்பவை 30. வாடகைக் கட்டடத்திலே இருப்பவை 91.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையில் இரண்டு பணிகள் முக்கியமானவை. ஒன்று தீயை அணைப்பது; இன்னொன்று மீட்புப் பணி. இந்த இரண்டு பணிகளுக்காக, தீயணைப்புத் துறையால் வாங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை? மீண்டும் வாகனங்கள் வாங்குவதற்கு ஏதேனும் உத்தேசம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அதேமாதிரி, அடுக்குமாடிக் கட்டடங்களிலே தீ பரவும்போது அதற்காக சிறப்பு வாகனங்கள் வாங்கப்படுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இவை இரண்டும் தனித் தனியானவை. எனவே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நீதி அமைச்சர் அவர்கள்.

D
03.1.06 7.2

2—

## கட்டட வசதி

*55—திரு. ஆர். சாமி:

மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூரில் கருவூலத்திற்கென தனியாக புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதியமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர், சார்நிலைக் கருவூலத்திற்கென தனியாக புதிய கட்டடம் கட்டத் தேவைப்படும் 8 சென்ட் நிலத்தினை, மேலூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஒதுக்கீடு செய்ய, தேவையான கருத்துரு, சென்னை, வருவாய் நிர்வாக ஆணையரின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், மேலூர் சார்நிலைக் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் உள்ள கருவூலம், ஓட்டுக் கொட்டகையில் இயங்கி வருகின்றது. புதிய கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடம், அங்கேயே இருப்பதாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த இடத்தைக் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கி, நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டே மேலூர் தொகுதியில் உள்ள—மேலூர், தாலுகா அலுவலகத்தில் இருக்கின்ற—கருவூலத்திற்குப் புதிய கட்டடமாக இந்த நிதி ஆண்டிலே கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே துறையாக இருந்தால்கூட நிருவாக வேறுபாடுகள் இருப்பது காரணமாக, ஒரு துறை இன்னொரு துறையினிடத்திலே அனுமதி பெற்றுத்தான் அந்த இடத்திலே கட்டடம் கட்ட வேண்டியிருக்கிறது. அதுவும் நிருவாக ஆணையருடைய அனுமதி கிடைத்தவுடன், கட்டுவதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் உள்ள கருவூலம், வாடகைக் கட்டடத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்குமேல் செயல்பட்டு வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு ஒரு தனிக் கேள்வி போட முன்வருவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

## பேருந்து வசதி

*650—திருமதி பி. பத்மாவதி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலத்திலிருந்து சென்னை சென்று வர, அரசு விரைவுப் பேருந்தினை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு, நன்னிலம் வழியாக இயக்கப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்ட பேருந்தை அக்கழகத்தால் மீண்டும் இயக்க, திட்டம் ஏதுமில்லை. எனினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளினைப் பூர்த்தி செய்யும்விதமாக, கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் ஒரு சொகுசுப் பேருந்து நன்னிலத்திலிருந்து சென்னைக்கு 15–7–2006 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோளை ஏற்று உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, பேருந்து இயக்கிவிட்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் கேரள மாநிலத்தைச் சார்ந்த மக்கள் சற்றேறக்குறைய ஒரு இலட்சம் பேர் அங்கே வசித்து வருகிறார்கள், வேலை காரணமாக. ஆகவே, அவர்கள் கேரள மாநிலத்திற்கு—சொந்த ஊருக்கு—அடிக்கடி சென்று வருவதற்கு திருப்பூரிலிருந்து திருச்சூர் அல்லது குருவாயூர் வரையில், பேருந்து வசதி தேவை என்று கோரியிருக்கிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வாய்ப்பிருக்கிறதா என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள். கவர்னர் உரை விவாதத்தின்போது தங்களுடைய தொகுதிக்கு என்ன bus தேவை என்பதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எங்களுக்கு உத்தரவிட்டு, 40 பேருந்துப் புதிய வழித் தடங்களைத் துவக்க வேண்டும் என்று சொல்லி, 20 வழித் தடங்கள் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு இருக்கின்றன. மேலும், அவர்களுக்குத் தேவையான அத்தனை வழித் தடங்களையும் முதலமைச்சர் தரச் சொல்லி உத்தரவிட்டு இருக்கிறார்கள். வெகுவிரைவில் அவையெல்லாம் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

*முற்பகல் 9–40*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகள் என்று நாம் அழைத்துக் கொண்டிருக்கிறோம்.





அந்தப் பேருந்துகள் சொகுசாக இல்லை. தனியார்கள் வைத்திருப்பது போன்று, சொகுசுப் பேருந்துகளை அரசே இயக்க முன்வருமா? இப்போது இருக்கின்ற பேருந்துகளையெல்லாம் சாதாரணப் பேருந்துகளாக மாற்றிவிட்டு, புதிய வாகனங்கள் வாங்குகின்றபோது, அவற்றிற்கு body கட்டுவதற்கு வடிவமைக்கின்றபோது, சொகுசுப் பேருந்துகளாக வடிவமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இந்தப் பேருந்துகள் எல்லாம் மிகவும் பழையனவாக, ஓட்டக்கூடிய தகுதி இல்லாமல் இருப்பதைக் கண்டறிந்து, துறையின் சார்பாக அவர்களிடம் சென்றபோது, அரசுத் தொகையாக 100 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1998 ஆம் ஆண்டு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சராக அன்றைக்குப் பணியாற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அன்றைக்கு முதலமைச்சர் 200 கோடி ரூபாய் தந்தார்கள். அதற்குப் பிறகு எவரும் அதற்காக, புதிய பேருந்து வாங்குவதற்காக, அரசிலிருந்து நிதி தரவில்லை. மீண்டும் தலைவர் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகு, 100 கோடி ரூபாயை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; நமது மாணவர்களுக்குரிய இலவச bus pass–க்கான அந்தத் தொகையையும் உடனடியாக இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; diesel விலை ஏறிவிட்ட காரணத்தால், அதற்குரிய நஷ்டத் தொகையையும் உடனடியாக அரசிடமிருந்து வழங்கியிருக்கிறார்கள். எனவே, அரசு சார்பாக 100 கோடி ரூபாயிலே 1,000 பேருந்துகளும், எங்களுடைய துறையின் சார்பாக 1,000 பேருந்துகளும், ஏற்கெனவே வாங்கப்பட வேண்டிய, நிலுவையிலிருந்த 230 பேருந்துகளும், ஆக 2,230 பேருந்துகள் இப்போது புதிதாக வாங்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) வருகிற 8 ஆம் தேதி அதற்கான tender திறக்கப்படவிருக்கிறது. இவற்றில் விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 200 பேருந்துகள் தரச் சொல்லி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 110 பேருந்துகள் புதிதாக இயக்கப்பட்டு வருகின்றன இப்போது, மீண்டும் கூடுதலாக 200 புதிய பேருந்துகள், தனியாரோடு போட்டிப் போடுகின்ற அளவிற்குச் சிறப்பான அளவிலே, இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2006 ஆகஸ்ட் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001 ஆம் ஆண்டு வரையில், கடந்த கழக ஆட்சியில், எவ்வளவு புதிய பேருந்துகளைக் கொள்முதல் செய்து, பயணிகளுக்காக அரசு இயக்கியது? அதேபோல, 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையில் புதிய பேருந்துகள் எவ்வளவு கொள்முதல் செய்து, வழித் தடங்களில் விடப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில், அம்பத்தூரிலிருந்தும் சொகுசுப் பேருந்துகள் விடுவதற்கு அரசிடம் ஏதாகிலும் செயற்குறிப்பு உள்ளதா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்காக, சொகுசுப் பேருந்துகள் 200 புதிதாக விடப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறோம். 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டுவரை, அவ்வப்போது மாற்றக்கூடிய பேருந்துகளை மாற்றிக் கொண்டுதான் இருந்தோம். ஆனால் 2001–லிருந்து 2006 ஆம் ஆண்டுவரை, ஐந்தாண்டுக் காலம் அவர்கள் வாங்கிய பேருந்துகள், வெறும 3,000–தான். இன்றைக்கு 18,000 பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் இயக்கப்பட்டாலும், 9,000 பேருந்துகள் மாற்றக்கூடிய தகுதியில் இருந்து கொண்டிருக்கின்றன. அதைப் படிப்படியாக ஆண்டுதோறும் மாற்றியிருந்தால், இன்றைக்குச் சிறப்பாக இருந்திருக்கும். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது நிதி தந்து, மாற்றச் சொல்லி, உத்தரவு தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** அமைச்சர் ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள். முதலில் உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு இந்த அரசு முடிவெடுத்திருப்பதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். குறிப்பாக 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுக்குள்ளாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கின்ற இரண்டு வழித் தடங்கள் வழங்கப்பட்டன. அந்தந்தத் தொகுதியிலே மக்களுக்குப் பயன்படுகின்றவகையிலே, அது மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றையவரையிலும் அதுதான். பல கிராமங்களை இணைப்பதற்குரிய, மக்களை நகரப் பகுதிகளுக்கு வந்து சேர்ப்பதற்குரிய அந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டாக்டர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக, இந்தத் துறையின்மூலமாக, மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு வழித் தடங்களை வழங்குவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 4]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுக் காலம், 50 ஆண்டுக் காலமாக, தொடர்ந்து தனியார் பேருந்துகள் கிராமப் பகுதியிலே ஓடிக் கொண்டிருந்ததை, நீதிமன்றம் சென்று, அதன்மூலமாக ஆணையைப் பெற்று, கிராமப் பகுதிகளுக்குச் செல்லாமல், இன்றைக்கு நகர்ப்புறங்களுக்கு அந்தத் தனியார் பேருந்துகள் வந்துவிட்டன. அதனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். கிராமப் பகுதியிலே பல பேருந்துகள் ஓடிக் கொண்டிருந்த இடத்தில், தேவைப்படும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வார்களேயானால், அதற்கு முன்னுரிமை தந்து அத்தனை இடங்களிலும் அரசுப் பேருந்துகள் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு வழித் தடங்கள் கேட்டார். அவர்கள் ஒரு வழித் தடத்திலே இருப்பதுதான் நல்லது! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் பேருந்து — நன்னிலம், கும்பகோணம்

வழியாக சென்னை செல்கிற பேருந்து – குடவாசல் வழியாக இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** அரசு விரைவுப் பேருந்துகள், தமிழ்நாட்டில் மொத்தம் 900 இப்போது இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலே பெரும்பகுதியான பேருந்துகள், மிகவும் பழையனவாக இருந்து கொண்டிருக்கின்றன. மீண்டும், இப்போது புதிய பேருந்துகள் வருகின்றபோது, அந்தப் பகுதியிலே மக்கள் விருப்பப்படுவார்களேயானால், சட்டமன்ற உறுப்பினர்கள் விருப்பப்படுவார்களேயானால், நிச்சயமாக புதிய தடத்தை நாங்கள் உருவாக்கித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. க. ராஜா.

**திரு. தி. க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு வியாபாரப் பெருமக்கள், அலுவல் காரணமாக வர வேண்டும் என்று சொன்னால், நாள் ஒன்றுக்கு இருபதுக்கும் மேற்பட்ட பேருந்துகள், அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளாக நான் சொகுசுப் பேருந்து வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தேன். என் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. கலைஞருடைய ஆட்சியிலேயாவது, திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து விடுவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நாட்களில் போக்குவரத்தினுடைய மானியம் இருக்கிறது. அதிலே இந்த அறிவிப்புகள் எல்லாம் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4. திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

## பேருந்து வசதி

***761—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



செங்கல்பட்டு முதல் கிளாப்பாக்கம் வரை சென்று கொண்டிருந்த டி–27 நகரப் பேருந்தினை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு கிளாப்பாக்கம் இடையே இயக்கப்படும் தடம் எண் டி–27 என்ற பேருந்து, பெரும்பேடு, கிளாப்பாக்கம் இடைப் பகுதி சாலை பழுதுபட்டிருப்பதால், பெரும்பேடு வரை மட்டுமே இயக்கப்பட்டு வந்தது. சாலை சீரமைக்கப்பட்டபின்னர், கிளாப்பாக்கம் வரை 15–6–2006 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டிலிருந்து கிளாப்பாக்கம் வரை சென்றுகொண்டிருந்த பேருந்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இப்போது இயக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பாக நான் வினா கொடுத்திருந்தேன். அதேசமயத்திலே, இப்போது மூன்று முறைகள் மட்டுமே அந்தக் கிராமத்திற்கு இந்தப் பேருந்து செல்கிறது. ஆனால், வழியிலே திருமழி, சோகண்டி, அமணம்பாக்கம், பெரும்பேடு, கொல்லமேடு உள்ளிட்ட ஏராளமான கிராமங்களிலே, இது போதாது; வருகிற இந்த நடை போதாது; தனியாகவே ஒரு பேருந்து காலை முதல் இரவு வரை இயங்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பள்ளி மாணவர்களுக்கும், நோயாளிகளுக்கும் மற்றும் பயணிகளுக்கும் அது உகந்ததாக இருக்கும் என்பதால், அனைத்து மக்களின் நலன் கருதி, அங்கே தனியாக ஒரு பேருந்தை, காலை முதல் இரவு வரை இயக்குவதற்கான நடைமுறையை, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் விரிவாக பதில் சொல்லியாக வேண்டும். சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகங்களில், இதுவரை 2,700 பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. கடந்தகால ஆட்சியிலே, சென்னை மாநகரத்தில் அரசு சார்பாக இயக்கப்படக்கூடிய பேருந்துகள் எல்லாம், தனியாருக்கு விடப்படும் என்று அறிவித்த காரணத்தால், அந்தப் பேருந்துகளை எல்லாம் சரி செய்யாமல் ஆயிரம் பேருந்துகளுக்கு மேல், இப்போது

shed-இலே இருக்கின்றன. ஐந்தாண்டுக் காலம், ஓட்டுநரும், நடத்துநரும் எடுக்காத காரணத்தால், ஏழு, எட்டாயிரம் பேருந்துகள், அவற்றிற்கு ஓட்டுநர், நடத்துநர்களே இல்லாத நிலை. இப்போது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக பொறுப்பேற்றுக்கொண்டபோது, 1,800 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்து, இப்போது 2,300 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னமும் 200, 300 பேருந்துகள் இயக்கக்கூடிய அளவிற்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முழுமையாக இன்னும் 20, 30 நாட்களில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலே தனியாகவே ஒரு பேருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனியாகவே, ஒரு நாள் முழுவதும் அனைத்து நடைகளும் ஓட்டுவதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். நன்றி. அதேபோன்று... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலிலே.

*முற்பகல் 9—50*

**திரு. கி. ஆறுமுகம்:** கடந்த கேள்வியிலேயே நான் ஒரு கேள்வி கேட்க நினைத்தேன். வாய்ப்புக் கொடுக்கவில்லை, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள். அனைத்து தென் மாவட்டங்களிலிருந்து வரும் விரைவுப் பேருந்துகள் அனைத்தும், செங்கல்பட்டைக் கடந்துதான் வர வேண்டும். இருந்தாலும்கூட, செங்கல்பட்டு நகருக்குள் வராமலேயே புறவழிச் சாலையிலே வந்து சென்றுவிடுகின்றன. ஏராளமான பயணிகள், அதுவும் நெடுந்தொலைவிலிருந்து வருகிற பயணிகள், அதுவும் குறிப்பாக இரவு நேரங்களிலே குடும்பத்தோடு வருகிற பயணிகளைப் புறவழிச் சாலையிலேயே விட்டுவிடுகிறார்கள். இரவு நேரங்களிலே அங்கே மின் விளக்குகூட கிடையாது. குழந்தைகளோடு வருபவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, இரவு 9—00 மணியிலேயிருந்து அதிகாலை 6—00 மணி வரையிலாவது விரைவுப் பேருந்துகளும், Point to Point பேருந்துகளும் உள்ளே வந்து செல்வதற்கான வழிமுறைகளை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறையிலே வந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். உரிய முறையிலே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தச் செளகரியங்கள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைக் கூப்பிடவில்லை. உட்காருங்கள். திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** பண்ருட்டியிலிருந்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரான, நம்முடைய அண்ணன் அவருடைய பகுதிக்கு—திருச்சி பகுதிக்கு—இதுவரையில் பேருந்து வசதியே இல்லை. அதேபோல், பண்ருட்டியிலிருந்து திருப்பதிக்கும் இதுவரையில் பேருந்து வசதி இல்லை. இந்த இரண்டு புதிய வழித் தடங்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதையும், அதேபோல இலவச சைக்கிள் பெற்ற மாணவர்களுக்குப் பேருந்துகளிலே போவதற்கான வாய்ப்புகள் இல்லையென்று பல இடங்களில் மறுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட, இதை அரசு பரிசீலித்து அவர்களுக்கும் அந்த இலவச பயணம் செய்வதற்கான வழிவகை செய்யப்படும் என்று ஓர் அறிக்கையிலே அறிவித்திருந்தார். அதை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடைமுறைப்படுத்துவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டத்தின் சார்பாகப் புதிய பேருந்துகள் 300 புதியதாக இயக்கப்படவிருக்கின்றன, இன்னும் இரண்டு மாதத்தில். பண்ருட்டியிலிருந்தும் பல பகுதிகளிலேயிருந்தும் புதிதாகத் தேவைப்படுகின்றபோது, அந்தப் பகுதிகளிலே புதிய வழித் தடம் துவங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இலவச bus pass மாணவர்களுக்கு

[2006 ஆகஸ்ட் 4

வழங்குகின்றபோது, சைக்கிள் வழங்கியவர்களுக்கெல்லாம் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி—ஏனென்றால் இது நிதி சம்பந்தப்பட்ட பிரச்சினை; முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசி— தேவைப்படுகின்ற இடங்களிலே அவர்களுக்கெல்லாம் வழங்குவதற்கு முதலமைச்சரின் ஆணையைப் பெற்று வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன்.

**திரு. பொ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்திலிருந்து ஜெகவீரபுரம்வரை இயங்கிய route No. 7 பேருந்து, தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** கடந்த காலத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த அந்தப் பகுதியிலே மக்கள் விருப்பப்படுவார்களேயானால், நாங்கள் அதைத் தொடர்ந்து ஓட்டுவதற்கு உரிய முயற்சி எடுக்கிறோம். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்தின் கடைகோடி பகுதி, ஆந்திர மாநிலத்தையொட்டி இருக்கக்கூடிய பகுதியான குடியாத்தம் பரதராமி வழியாக ஆந்திர மாநிலம் திருப்பதிக்கு சொகுசு வண்டிகளை இயக்குவதற்கு ஆவன செய்யமுடியுமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளிலே சொகுசுப் பேருந்து வேண்டுமென்று விரும்பினால், இதுவரை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் மட்டுமே சொகுசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. இப்போது ஆங்காங்கே இருக்கின்ற கோட்டங்கள்—விழுப்புரம், திருச்சி, கும்பகோணம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற அந்த அரசுப் பேருந்துகளும் சொகுசுப் பேருந்துகளாக ஒவ்வொருவரும் 25/30 பேருந்துகள் வாங்க



2006 ஆகஸ்ட் 4]

இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் விருப்பத்திற்கேற்ப, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் கூடாது என்று சொன்னாலுங்கூட, குற்றச்சாட்டு சொல்வது மட்டுமல்ல; அந்தப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை. அதாவது கடந்த ஆட்சிக் காலத்திலே சென்னை மாநகரம் (குறுக்கீடு) முதலிலே சொல்லிவிடுகிறேன். சென்னை மாநகரத்தில் 2,700 பேருந்துகள் இயக்கப்பட வேண்டியதற்கு 2,000 பேருந்துகள்தான் ஓடிக்கொண்டு இருக்கின்றதாக தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வியைத்தான் கேட்கவேண்டும் நீங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** Hello, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** கேள்வியைச் சொல்லப்போகிறேன், சொல்லப்போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் முதலில் கேளுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** அதைத்தான் கேட்கிறேன். கடந்த ஆட்சியில், அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2,400 பேருந்துகள் இயக்கப்பட்டன. அமைச்சருடைய பதிலிலே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 2,300 பேருந்துகள்தான் ஓட்டப்படுகின்றன என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்ததைவிட, 100 பேருந்துகள் குறைவாகத்தான் இயக்குவதாக அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தபடியாக, 3,000 பேருந்துகள்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்டன என்ற தவறான புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார். அந்தப் புள்ளிவிவரத்தில் அவர் உறுதியாக இருக்கிறாரா என்பதை

மீண்டும் அறிய விரும்புகிறேன். அதோடுமட்டுமல்ல; இப்போது variation சம்பந்தமாக ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கின்றார். (குறுக்கீடு)

முற்பகல் 9—55

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்கலாமேதவிர, வாதம் செய்வதற்கு (குறுக்கீடு) அந்த மானியம் வருகிறபோது வாதம் செய்யலாமேதவிர, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தை வாதத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதல்', (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், சொல்கிறேன், கேளுங்கள். துணைக் கேள்வி கேட்பதாய் இருந்தால் கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) துணைக் கேள்வி கேட்பதாய் இருந்தால் கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் "புள்ளிவிவரத்திலே உறுதியாக இருக்கிறாரா?" என்று கேட்கிறார்; உறுதியாக இருக்கிறோம். அதிலே ஒன்றும் மாற்றம் இல்லை. "2,400 பேருந்துகள் இயக்கப்பட்டன" என்று சொல்கிறார். அதிலே அவர் உறுதியாக இருக்கவேண்டும். (குறுக்கீடுகள்) 13—5—2006, இந்த ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்று, எவ்வளவு பேருந்துகள் ஓடின என்று கணக்கிருக்கிறது. உங்களுடைய ஆட்சியில் 2,400 பேருந்துகள் ஓடவில்லை. இப்போதுதான் படிப்படியாக—இன்னும் சொல்லப் போனால், spare parts வாங்குவதற்குக்கூட பணம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுப்பெற்று, கடந்த இரண்டு நாட்களுக்குமுன்பு 23½ கோடி ரூபாய் (குறுக்கீடு)—பேசும்போது, நீங்கள் பேசிவிட்டீர்கள்—வாங்கிக் கொடுத்துத்தான், இன்றைக்குப் பேருந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, 2,000 பேருந்துகளைத் தொடங்கி வைத்தார். அதற்குப் பிறகு, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் புதிய பேருந்துகளும்,



புதிய வழித் தடங்களும், இந்தப் பகுதியிலே இயக்காத காரணத்தால், இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே பேருந்து வசதிகள் மிக மிகக் குறைவாக இருக்கின்றன. அதைப் போக்குவதற்காகவும், மக்களுக்குத் தேவையானதைக் கொடுப்பதற்காகவும் இப்போது முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் டாக்டர் க. பொன்முடி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏதோ இங்கே புள்ளிவிவரத்தைச் சொல்கிறபோது, தவறாகச் சொல்லிவிட்டதாகச் சொன்னார். இந்தச் சட்டமன்றத்திலே பல விவரங்களைத் தவறாகச் சொல்லியிருக்கிற செய்திகளெல்லாம் பதிவாகி இருக்கின்றன. (குறுக்கீடுகள்) ஒன்றே ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான்.... (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஏனென்றால், இங்கே, இதே சட்டமன்றத்திலே நேற்றைக்கு முதல் நாள் பேசுகிறபோது கேட்டேன். 'கணக்கிலே மிகவும் புலியாக இருப்பீர்களே!' என்றுகூட கேட்டேன். 200—க்கு 200 marks வாங்கியதாகச் சொன்னார்கள். ஏதோ, நான் கல்வித் துறையிலே இருப்பவன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். பேசி விடுகிறேன். (குறுக்கீடுகள்) ஏன் பயப்படுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே சொன்ன வார்த்தையைச் சொல்வதில் ஒன்றும் தவறில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையிலே சொன்ன வார்த்தைதான் அது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையிலே சொன்ன வார்த்தையைச் சொல்வதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) அமைச்சர், சொல்லுங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன் அவர்கள் வினா ஒன்றிற்காக எழுந்து எழுந்து, கையை உயர்த்தி உயர்த்தி, அலுத்துப்போய்விட்ட காட்சியைப் பார்த்த காரணத்தால், நான்தான் தங்களுக்குப் பரிந்துரை செய்து, "திரு. விசுவநாதன் அவர்களுடைய கேள்விக்கு இடம் அளியுங்கள் என்று"... (குறுக்கீடுகள்)—என்ன பேசுகிறீர்கள்? நீங்கள் என்னவோ

சொல்கிறீர்களே, என்ன? (குறுக்கீடுகள்)—தங்களுக்குப் பரிந்துரை செய்து, "திரு. விசுவநாதன் அவர்கள் கையை உயர்த்திக் கொண்டிருக்கின்றார்; கேள்விக்கு அனுமதி கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். ஆனால், அது வினாவோடு நில்லாமல், விவாதம் அளவிற்கு வந்து, இப்போது பரீட்சை mark வரையிலே வந்திருப்பது நல்லதல்ல. ஆகவே, கேள்வி நேரத்தைக் கேள்வி நேரமாகவே நடத்த தாங்களும் வழிகாட்டவேண்டும்; அனைவரும் ஒத்துழைக்கவேண்டும், அமைச்சர்கள் உள்பட. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

## வருவாய் வட்டம்

**•195—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி மாவட்டம், இராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருட்டிணகிரி மாவட்டத்திலே இராயக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, வட்டம் பிரிப்பது தற்சமயம் இயலாது.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயக்கோட்டை கிராமத்திலிருந்து வட்டத் தலைநகரங்களான தேன்கனிக்கோட்டைக்குச் செல்லவேண்டுமானால் 35 கிலோ மீட்டரும், கிருட்டிணகிரிக்கு 32 கிலோ மீட்டரும், பாலக்கோட்டிற்கு 30 கிலோ மீட்டரும் செல்லவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிற கிராமப்புறப் பகுதி அது. ஏழையெளிய மக்கள், கிராமப்புற மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலே இருக்கிற பெரும்பாலான மக்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்குச் செல்வதற்கு மிகவும் இடர்ப்பாடாக இருக்கிற சூழ்நிலையில், ஏராளமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற தகுதி வாய்ந்த இந்த இடத்தை,



நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாக இருக்கிற காரணத்தால், வட்ட வருவாய்க் கோட்டமாக அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை மீண்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற எல்லை வரையறை ஆணையத்தின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்த ஆணையத்தினுடைய கடிதத்திலே, தற்சமயம் நகராட்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இந்தப் பகுதிகளிலே வட்டங்கள் பிரிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டுமென்ற கோரிக்கை, அந்த எல்லை வரையறை ஆணையத்திடமிருந்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், தற்சமயம் வழங்க இயலாது என்று அறிவித்தேன்.

முற்பகல் 10—00

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக எல்லைகள் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வருகிறபோது, மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற காரணத்தால், எல்லைகள் பிரிக்க முடியாது என்ற நிலையும், இப்போது சட்டமன்ற, நாடாளுமன்ற எல்லை மறுசீரமைப்பு என்ற காரணத்தால், பிரிக்க முடியாது என்ற நிலையும் இருக்கிற இந்தச் சூழ்நிலையில், ஒரு சிறப்பு விதிவிலக்கு அடிப்படையில் மக்களுடைய தேவைகளைக் கருதி, பெருமளவுக்கு இருந்த தருமபுரியை, கிருட்டிணகிரி—தரும்புரி மாவட்டம் என இரண்டாகப் பிரித்து—கிருட்டிணகிரி மாவட்டமாக ஆகியிருக்கிற இந்த நிலையில், அப்போதே வட்டத் தலைநகரத்தைப் பிரித்து இருக்கலாம். இல்லாவிட்டாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு விதிவிலக்கு தந்து, இராயக்கோட்டைப் பகுதி மக்களுடைய நீண்டகாலக் கனவை நனவாக்குகிறவகையில், பிரித்துத்தர அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பதிலிலே, எல்லை வரையறை ஆணையம் குறிப்பிட்டிருப்பதைத் தெளிவாக இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே இதே கருத்தை என்னிடத்திலே நேரிலும், வினாக்களுமாகத் தந்திருக்கின்றார்கள். மிகச் சிறப்பு நேர்வாகக்

கருதுகின்ற நேரத்திலே, இந்த அரசு எல்லை வரையறை ஆணையத்தைத் தொடர்பு கொண்டு அப்படி அத்தியாவசியம் ஏற்பட்டால், நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் 42 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், ஐந்து வருவாய் வட்டங்கள் மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஐந்து வருவாய் வட்டங்கள் செயல்படக்கூடிய காரணத்தினால், மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பல்வேறு சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமம் என்பது ஏற்படக்கூடிய காரணத்தினால், சென்னை மாநகரத்தில் கூடுதல் வருவாய் வட்டங்கள் உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக எல்லை வரையறை ஆணையத்தைக் குறிப்பிட்டு நான் ஏற்கெனவே இந்த அவையிலே டதில் அளித்திருக்கின்றேன். அந்தவகையிலே சிறப்பு நேர்வாக மிக அத்தியாவசியம் நீங்கள் பிரித்தே ஆக வேண்டும்; அதிலே இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் அரசிற்குத் தெரிவித்தால், எல்லை வரையறை ஆணையத்தோடு தொடர்புகொண்டு அந்த வட்டங்களைப் பிரிப்பதற்கு இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கோயம்பள்ளி ஊராட்சி, அமராவதி ஆற்றின் வட பகுதியில் உள்ளது. கரூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இந்தப் பகுதி இணைந்துள்ளதால் பொது மக்கள் தாந்தோணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்றுவர சிரமமாக உள்ளது. இதை அப்பகுதி மக்கள், கரூர் ஊராட்சி ஒன்றியத்துடன் சேர்த்துக்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுள்ளார்கள். உரிய விளக்கம் கேட்க விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** தற்சமயம் இயலாது. எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசுப் போக்குவரத்துக் கழகம் குறித்து கேள்வி கேட்க கை தூக்கியிருந்தேன். இப்போது அதைக் கேட்கலாமா என்பதை நீங்கள் தயவுசெய்து சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இந்த வினாவிற்குத்தான் துணை வினா கேட்க முடியும்.

**திரு. எஸ்.வி. சேகர்:** இல்லை, இல்லை. நான் அப்போதே கையைத் தூக்கிவிட்டேன். இப்போதுதான் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில், உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்

### ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோருதல்

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நேற்று இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து விவாதிப்பதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிப்பார்களா? நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும், விதிமுறைகளுக்கு மாறாக இருக்கின்ற காரணத்தால், விதிகள் மீறப்பட்டிருக்கின்றன என்ற ஒழுங்குப் பிரச்சினையை, விதி 116-ன்கீழ் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை, இந்த நேரத்தில் எழுப்பவே முடியாது. யாரும் எழுப்ப முடியாது. ஒழுங்குப் பிரச்சினை என்பது, அது நடைபெறுகிற நேரத்தில், அதுசம்பந்தமாக யாரும் எழுப்பலாமே தவிர, இப்போது இந்தப் பிரச்சினையை எழுப்புவது, ஒழுங்கு இல்லாத பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

*முற்பகல் 10–05*

## 3. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில், ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது குறித்து, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நாளைக்கு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஆந்திர மாநிலத்திற்குச் சென்று, ஹைதராபாத்திற்குச் சென்று, பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்கள். ஆனால், இன்று எங்கள் மாவட்டத்திலிருந்து வந்திருக்கக்கூடிய பத்திரிகைகளில், அந்தக் குப்பம் பகுதியில் இருக்கக்கூடிய ஆந்திரப் பொறியாளர் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். 6 ஆம் தேதி அங்கே உள்ளாட்சித் தேர்தல். உள்ளாட்சித் தேர்தல் முடிந்தவுடன், பூமி பூஜை போட இருப்பதாகவும், ஒரு மாதம் கழித்து அங்கே அணை கட்டுவதற்கான பணிகளைத் தொடங்க இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார். ஆனால், ஆந்திராவினுடைய முதல்வர், நேற்று இங்கே பேட்டி அளிக்கிறபோது, சட்டத்திற்கு உட்பட்டு, அங்கே நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு வார்த்தையை, அங்கே இருக்கக்கூடிய முதலமைச்சர், இங்கே, சென்னைக்கு வந்து, நேற்று பேட்டி கொடுத்திருக்கிறார். ஆகவே, நாளை நம்முடைய அமைச்சர்கள் போகிறபோது, பேச்சுவார்த்தையில் இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, பாலாற்றின் குறுக்கே அணை கட்டாமல் இருப்பதற்கான வழிவகைக்ளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் இதைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்பொழுதே நாங்கள் பதில் சொல்லியிருக்கிறோம். நிச்சயமாக, நாளை ஆந்திர முதலமைச்சரைப் பார்க்கிறபோது, இதுபற்றிப் பேசப்பட்டு, அதற்கான பதிலும் சட்டமன்றத்திலேயே சொல்லப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஒன்றுக்காகப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, இலங்கையில் சிங்கள இராணுவம், முழுமூச்சான தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. அப்பாவித் தமிழ் மக்கள் வாழும் பகுதியிலே விமானங்கள்மூலம் குண்டுகளை வீசி, குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட பல நூறு தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது. ஒரு நாட்டில் 500 பேருக்குமேல் கொல்லப்பட்டால், அதைப் போராகக் கருத வேண்டும் என்று, சர்வதேச நெறிமுறைப்படி கருத வேண்டியிருக்கிறது. இப்போது இலங்கையிலே நடப்பது முழுமையான யுத்தமாகும். அதனால்தான், இலங்கையிலே செயல்பட்டுவந்த சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய அமைதிக் காப்புக் குழு, அதனைக் கண்டித்துள்ளது. இந்நிலையில், சிங்களக் காவல் துறையைச் சார்ந்த காவலர்களுக்குக் கண்ணி வெடிகளை அகற்றுதல், தாக்குதல்களைச் சமாளித்தல் போன்ற போர்சார்ந்த பயிற்சிகளை, நமது மத்திய அரசைச் சார்ந்த காவல் துறை—C.R.P.F.—கோவையில் உள்ள பயிற்சிக் கல்லூரியில் அளித்து வருகிறது. இப்படிப் பயிற்சி அளிப்பதனால், சிங்களக் காவல் துறையினர், அந்தத் திறமையைத் தமிழ் மக்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்போகின்றனர். மேலும், பல தமிழர்களைக் கொல்லவே இந்தப் பயிற்சி உதவப் போகிறது. இது தமிழ்நாட்டிலே உள்ள பல கோடி தமிழர்களின் நெஞ்சங்களைக் கொதிப்படையச் செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பிரச்சினைபற்றி, இந்தப் பேரவையின் கவனத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் ஈர்த்துப் பேசியபோது, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசினார். மத்திய அரசு கவனத்தில் கொள்ளும் என நம்புகிறேன் என்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தெரிவித்த கருத்தின்மூலம் வெளிப்பட்ட உணர்விற்கு மதிப்பளித்து, சிங்களக் காவல் வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதை நடுவண் அரசு நிறுத்திவிடும் என்று நம்பினோம். அவர்களை உடனே திருப்பியனுப்பும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சொற்களுக்கும், தமிழக மக்களின் உணர்வுகளுக்கும் உரிய முக்கியத்துவமும், மதிப்பும் அளிக்காமல், அந்தப் பயிற்சியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது, மனித நேயம் கொண்ட அனைத்துத் தமிழ் மக்களுக்கும் மன வேதனையை அளிக்கிறது. அந்த வேதனையை இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் பகிர்ந்து, விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த கோவை மாநகரில், இலங்கை இராணுவத்தினர்க்குப் பயிற்சி அளிப்பதாக ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியைக் கேட்டவுடனே, எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்களும், மத்திய அரசுக்குச் சொல்லி, இதை எப்படியாவது மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்; பயிற்சி பெறுபவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தமிழினத் தலைவர் அவர்களும் அவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு, அங்கேயிருக்கிற தமிழர்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற அந்த உயரிய அடிப்படையிலேதான், அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களின் அந்தக் கூற்றை, அவருடைய செயல்பாட்டை வரவேற்கக்கூடிய அதேவேளையில், அங்கேயிருப்பவர்கள் தமிழர்கள்; தமிழர்கள் மேலும் பாதித்துவிடக்கூடாது; இந்தப் பயிற்சி, பாதிப்பிற்கே வழி வகுக்கும் என்ற காரணத்தால், நம்முடைய அரசு இதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, நம்முடைய



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை மத்திய அரசுக்கு எடுத்துவைக்க வேண்டும். விரைவாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதை இம்மன்றத்தின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் மணி அவர்களும், செல்வம் அவர்களும் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். கோவை நகரிலே இலங்கை இராணுவத்தினர்க்கு அளிக்கப்படுகிற பயிற்சி, அதனால் ஏற்படுகிற உணர்வுகள் என்ற அடிப்படையிலே இங்கே வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, இலங்கையும், தமிழகமும் மிக அருகிலே இருக்கிற காரணத்தினாலும், தமிழர்கள், சிங்களர்கள் என்ற பிரச்சினையாக அங்கே நடைபெறுகிற காரணத்தினாலும், நாம், தமிழ்நாடு, தமிழ் மக்கள் என்ற உணர்வின் அடிப்படையிலேயும் இது ஒரு சிக்கலுக்குரிய பிரச்சினையாகவே நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இந்தப் பயிற்சி என்பது தமிழகத்தின், தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பாதிக்கச் செய்வதாக இருக்கும் என்ற காரணத்தினாலே, இதை மத்திய அரசாங்கம் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதை நம்முடைய மாநில அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக வலியுறுத்தி அதை, அந்தப் பயிற்சி நிலையத்தை இரத்து செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைச் சிறுத்தைகளுடைய கட்சியின் தலைவர் திரு. செல்வம் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. கோ.க. மணி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சிவபுண்ணியம் அவர்களும் எழுப்பியுள்ள பிரச்சினை, அலட்சியப்படுத்தப்படக்கூடியது அல்ல என்பதை நான் அறிகின்றேன். இதுபற்றி ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் ஒரு கேள்வி அல்லது கவனம் நம் பக்கம் திரும்பியபோது, அதற்குரிய விளக்கத்தை நான் கூறியிருக்கின்றேன்.

தொடர்ந்து இந்தச் செய்திகள் பத்திரிகைகளிலே வருவதும், அதற்கு மறுப்பளிக்கும் விதத்தில், இன்றையதினம்கூட பத்திரிகைகளில், அது இராணுவப் பயிற்சி அல்ல, காவல் துறை பயிற்சிதான், போலீஸ் பயிற்சிதான், பொதுமக்களை அமைதிப்படுத்த, கூட்டங்களில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தப் பயன்படுகின்ற பயிற்சிதான் என்று விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், இந்தச் சந்தேகத்தைப் போக்கவேண்டிய பெரும் கடமை, குழப்பத்திலே இப்பொழுது ஆழ்ந்திருக்கின்ற தமிழ்நாட்டு மக்களை, அந்தக் குழப்பத்திலேயிருந்து விடுவிக்கவேண்டிய பெரும் பொறுப்பு தமிழக அரசுக்கு மாத்திரம் அல்ல; மத்தியிலே இருக்கின்ற அரசுக்கும் இருக்கிறது என்பதை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழர்கள் இங்கே தாக்குண்டாலும், அருகிலேயுள்ள பகுதிகளில் தாக்குண்டாலும், எங்கேயோ 10,000 மைல்களுக்கு அப்பால் தமிழர்களுக்கு வேதனை, விபத்து என்றால் கலங்கித் தவிக்கின்ற நாம், இந்தச் செய்திகளைக் கேட்டு கலங்காமல் இருக்கமுடியாது. ஆகவே, நம்முடைய கலக்கத்தை, நம்முடைய வேதனையை, வருத்தத்தை, நம்முடைய உணர்வுகளை, இங்கே நாம் ஆற்றிய உரைகளின்மூலமாக மத்தியப் பேரரசுக்குத் தெரிவித்திருப்பதாகவே கருதி, அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.. வெறும் காவல் துறைப் பயிற்சிதான் என்றால், அது இப்பொழுது தேவையா என்பதையும், இலங்கை அரசும் எண்ணிப்பார்க்க வேண்டும். இலங்கை அரசை இந்தப் பயிற்சிக்கு இந்திய அரசு அனுமதித்திருந்தால், இந்திய அரசும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். கடந்த காலங்களில் நாம் காட்டிய அனுதாபம், பரிவு, பற்று, பாசம் இவை எல்லாம் எங்கே போய் முடிந்தன என்பதையும் நாம் மறந்துவிடவில்லை. அந்த முடிவினால், ஏற்பட்ட விளைவுகளையும் நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது. இதுபற்றி நான் அன்றைக்கு முதலமைச்சராக 1989 ஆம் ஆண்டில் பொறுப்பேற்று, மரியாதை நிமித்தமாக அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க சென்றபோது, எனக்கும், அவருக்கும் இடையிலே நடைபெற்ற உரையாடல், அந்த உரையாடல் மாத்திரம் வெற்றிகரமாக திரும்பியிருக்குமேயானால், பலித்திருக்குமேயானால், இன்றைக்கு இலங்கைப் பிரச்சினையே வேறுவிதமாகத் திரும்பியிருக்கக்கூடும். ஆனால் அது எதிர்பாராவிதமாக வாய்ப்பு இல்லாத காரணமாக, வேறுவகையிலே போய் முடிந்துவிட்டது. இருந்தாலும்கூட, இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைக்காக நான் பெரிதும் வருந்துகின்றேன். தமிழ்நாட்டு மக்கள் ஆழ்ந்த துயரத்தில் இருக்கின்றார்கள். சிக்கலிலே



இருக்கின்றார்கள். குழப்பத்திலே இருக்கின்றார்கள். இந்தக் குழப்பத்தைத் தீர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு, மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை இங்கே நடைபெற்ற இந்த விவாதத்தின் மூலமாகச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

*முற்பகல் 10–15*

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், ஒரு தவறான தகவலை இங்கே பதிவு செய்திருக்கின்றார்கள். அதுகுறித்து நான் பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒழுங்குப் பிரச்சினை கொடுத்திருக்கின்றேன். அதற்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி. நேற்றையதினம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். கொஞ்சம் wait பண்ணுங்கள். அதனைக் கொண்டுவந்து இப்போது table–இல் வைத்துவிட்டால், கொடுத்துவிட்டதாக அர்த்தமாகிவிடுமா? இங்கே கொண்டுவந்து கொடுக்கிறீர்கள். (குறுக்கீடு) இங்கே கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனால்... (குறுக்கீடு) எத்தனை மணிக்கு? 10–15 மணி அல்லது 10–10 மணிக்குக் கொடுத்தால் எப்படி பதில் வரும்? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) எதுவாக இருந்தாலும், காலையில் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) 10–10–க்குக் கொண்டு வந்து, table–இல் வைத்துவிட்டுப் போனால் அது கொடுத்ததாக அர்த்தமா? உட்காருங்கள். மாண்புமிகு துரை சந்திரசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை நேற்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறையான பதில் இல்லை என்பதல்ல. அதை நான் படித்தே பார்க்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் இன்னும் படித்தே பார்க்கவில்லை. (குறுக்கீடுகள்) அது இருக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் இன்னும் படிக்கவில்லை. (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

(அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மரபைக் கடைபிடியுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். தெரியும். (குறுக்கீடுகள்) சரி, சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது எப்பொழுது அனுமதி கொடுக்க வேண்டுமென்று விதியிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) விதியிலே இருக்கிறது; எப்போது கொடுக்க வேண்டுமென்று விதியிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) இங்கே கொண்டுவந்து இப்போது கொடுத்துவிட்டால் பார்க்க முடியுமா, என்ன? (குறுக்கீடுகள்) மற்ற அலுவல்களைப் பார்க்க வேண்டாமா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவு பேரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், நேற்று நடந்த பிரச்சினை குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்சினையை, இன்று தங்களிடத்திலே 10—10—க்குத் தங்கள் மேஜையிலே வைத்துவிட்டு, இப்போது 10—16-க்கு ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறார்கள். ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது என்பது, அவர்களுடைய உரிமை. அதை அனுமதிப்பது என்பது உங்களுடைய உரிமை. நான் தெரிந்துகொள்ள விரும்புவது, கடந்த பல ஆண்டுகளாக ஏறக்குறைய 40 ஆண்டுக் காலமாக இந்த அவையிலே பல முறை உறுப்பினராக இருந்தவன் என்கின்ற முறையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதல் நாள் நடந்த விவாதத்தில், ஓர் ஒழுங்குப் பிரச்சினையாக இருந்தாலும், அல்லது வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், காலையிலே 9—15 மணிக்குச் சட்டப் பேரவைத் தலைவரிடம் போய் கொடுத்து அனுமதி கேட்பதுதான் முறை ஆனால் திடீரென்று சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற



நேரத்திலே, பேரவைத் தலைவருடைய மேஜையிலே வைத்துவிட்டு, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது என்பது, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த, இன்று எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக இருக்கக்கூடிய அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அதுமட்டுமல்ல; நான் இன்னும் ஒன்றை இந்த அவையிலே தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு பிரச்சினையை எழுப்பும்போது, அந்த உறுப்பினர்மட்டும் அந்தப் பிரச்சினையை எழுப்பலாம். ஆனால் ஒட்டுமொத்த கட்சி உறுப்பினர்கள், ஒட்டுமொத்தமாக, ஒருவர் எழுந்தால் எல்லோரும் எழுந்து நிற்பது என்பது, இதுவரையிலே இந்த அவையிலே நடக்காத ஒன்று. (குறுக்கீடுகள்)

(முற்பகல் 10—20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எனவே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்; இந்த அவை கண்ணியமாக நடப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்கக்கூடிய வகையில் (குறுக்கீடுகள்) பிரச்சினைகளை எழுப்புகின்றவர்கள், தங்களுடைய அனுமதியைப் பெற்று அவர்கள் எழுப்பினால், நீங்கள் அனுமதித்தால், பேசுவதுதான் முறையாக இதுவரையிலே இருந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரை ஒழுங்குப் பிரச்சினை என்பது சபை நடந்து கொண்டிருக்கும்போது, அது ஒழுங்கு தவறிப்போனால், அதை ஒழுங்காகக் கொண்டு வருவதற்காக இங்கே எழுப்பப்படுவதுதான் ஒழுங்குப் பிரச்சினையே தவிர, தனியாக அறிவிப்புக் கொடுத்து எழுப்பப்படுவது அல்ல என்பதைத் தங்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Speaker Sir. (குறுக்கீடுகள்) I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 116–(குறுக்கீடு) இல்லை, இல்லை. வந்து விடுகிறேன், வந்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 116–ன்படி "Any Member may at any time.... (குறுக்கீடுகள்) இல்லை, பேசவிடுங்கள் என்னை. I am just trying to speak because you have called me to talk.... (குறுக்கீடுகள்)"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரைப் பேசவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Why do they interrupt? I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 116–ன்படி (குறுக்கீடுகள்) "Any Member may, at any time, submit a point of order for the decision of the Speaker, but in doing so, shall confine himself to stating the point" என்று போட்டு, அதிலே கடைசியில் என்ன வருகிறது என்றால்... (குறுக்கீடு) இருங்கள். வந்து விடுகிறேன், வந்து விடுகிறேன். 'அந்த நேரத்தில்'—'moment'—என்று வருகிறது. அதாவது, 'அந்த நேரத்தில்'—ஒரு நடவடிக்கைக் குறிப்பை நாம் நடத்திக் கொண்டிருக்கிறபோது—ஏதாவது ஒழுங்கு, அதாவது order தவறிப்போய், அது disorder ஆகப் போனால், அதை order ஆக்குவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்குத்தான் வருகிறதே தவிர, "a point of order may be raised in relation to the business before the House at the moment"—'அந்த நேரத்தில்'—என்றுதான் இருக்கிறதேயொழிய, ஒரு நாள் கழித்துவிட்டு, யோசனை செய்துவிட்டு, பிறகு யாராவது சொல்லிக்கொடுத்து, பிறகு வந்து எழுதிக் கொடுப்பதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய findings–ஐச் சொல்கிறேன். உட்காருங்கள். உட்காருங்கள். அதாவது தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளிலே (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளிலே (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார், உட்காருங்கள், உட்காருங்கள். தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளிலே, விதி 116(2)–இன் கீழ் எழுப்பப்பெறும் எல்லா ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றியும், பேரவைத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யப்படும் முடிவே இறுதியானது. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. கு. செல்வம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கு. செல்வம், பேசுங்கள்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நேற்று அந்த விதிப் பிரகாரம் நடந்ததா? நேற்றையதினம் நடந்த நிகழ்ச்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள் முதலில். திரு. கு. செல்வம், பேசுங்கள். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை. திரு. கே.ஏ. செங்கோட்டையன், உட்காருங்கள்.

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம், பேசுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சரின் இந்த உணர்வுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தபோதிலும், தமிழ் மண்ணிலே தமிழினத்தை அழிப்பதற்காக ஒரு பயிற்சி அளிக்கப்படுவதை எங்களால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. நடுவண் அரசைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

(விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடந்து கொண்டிருப்பது தமிழகச் சட்டமன்றம். மைய அரசைக் கண்டித்து இங்கே வெளிநடப்புச் செய்வது என்பது துரதிருஷ்டவசமானது. அதுமட்டுமல்ல; நடந்து கொண்டிருக்கிற பிரச்சினைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் சரியான தீர்வு காண்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். முதலமைச்சர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். அதைவிட்டுவிட்டு, மத்திய அரசைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்பது எந்தவிதத்திலே நியாயம் என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், இலங்கையில் சிங்களவர்கள் தமிழர்களைக் கொன்று குவித்துவருகின்ற இந்தச் சூழ்நிலையில், காவல் துறை பயிற்சி என்பது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலக் கருதப்படுகிறது. எனவே, காவல் துறை பயிற்சிகூட தமிழ்நாட்டில் மத்திய அரசால் தரக்கூடாது என்பதனை இந்த மன்றத்திலே பதிவுசெய்து, எங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி நாங்களும் வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுடைய அனுமதியோடு காவல் துறை, இலங்கைக் காவல் துறைக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று சொல்வது மத்திய அரசிலே அங்கம் பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தெரியாமல் நடந்திருக்கிறதா? மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது என்று சொன்னால், மாநிலத்திலே இருக்கிற ஒரு முதலமைச்சர், எல்லோருக்குமாகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிற அவர்கள், ஏன் இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாங்கள் அவையின்மூலமாகத் தெரிந்துகொள்வதோடு, மாநில சர்க்காருக்குத் தெரிந்தே இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, நாங்கள் இதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இருக்கக்கூடிய காவல் துறையினருக்குத்



தமிழகத்திலே பயிற்சி அளிப்பது என்பது, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் நடக்கிறது என்பது, உண்மை அல்ல. கடந்த காலத்தில் இருந்தே, இந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. தி.மு.க. ஆட்சியிலாவது நம்முடைய முதல்வர் அவர்கள், அவருக்கு இருக்கக்கூடிய அந்த உணர்வுகளை, உலகத்திலே உள்ள தமிழர்களுக்கு எந்தக் குறை ஏற்பட்டாலும், அதற்காக வேதனைப் படுகின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், தன்னுடைய உணர்வுகளை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே அதைப்பற்றி கவலையேபடாதவர்கள் இன்று வெளிநடப்புச் செய்வதுதான் விந்தையாக இருக்கிறது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி எப்பொழுதிலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? அப்பொழுது ஆண்டுகொண்டிருந்தபோது, 'விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் எதிராக இருந்தவர்கள்' என்று இங்கே இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே சொல்லிக்கொண்டிருந்தது. இன்றைக்கு அவர்கள் கூட்டணி சேர்ந்திருக்கின்றதன் பயனாக, விடுதலைப் புலிகளுக்குச் சிலபேர் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களோடு இவர்கள் கூட்டணி சேர்ந்திருக்கின்ற காரணத்தினாலே, இப்பொழுது வெளிநடப்புச் செய்கிறார்களா அல்லது சென்ற ஆட்சிக் காலத்திலே இந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டதா; இப்பொழுதுதான் புதிதாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பயிற்சி கொடுப்பது என்பது இலங்கைத் தமிழர்களுக்கு எதிரானது என்ற வினாக்கள் இங்கே எழுப்பப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தங்கள் உள்ளார்ந்த அந்த ஆதங்கத்தோடு, தங்களுடைய வருத்தத்தை வெளிப்படுத்துகிற நிலையில் மட்டுமல்ல, எந்த நிலையிலும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை இருக்கக்கூடாது என்ற ஆழ்ந்த அந்த உணர்வின் அடிப்படையிலேதான் மத்திய அரசுக்கு வேண்டுகோள் வைக்கின்ற நிலையிலும் அதற்கான முயற்சிகள் எடுப்பதாக தார்மீக உணர்வின் அடிப்படையிலே, அரிய கருத்துக்களை, எல்லோருடைய மனதும் உருகுகின்ற வகையிலே சொன்னார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒட்டுமொத்த தமிழர்களுக்கு,

தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்ல; எங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கு எதிரான ஒரு இயக்கம் அ.தி.மு.க. என்பதைக் கடந்தகால வரலாற்று நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அப்படிப்பட்டவர்கள் இன்று மாமன்றத்தில் தமிழர்களுக்காக வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்வது விந்தையிலும், விந்தையாக இருக்கிறது. இதுவும் ஒரு நாடகம்; தொடர்ந்து நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக ஒட்டுமொத்த தமிழர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவலர் பயிற்சிபற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக மிக எச்சரிக்கையோடும், பொறுப்போடும் பதில் அளித்திருக்கிறார்கள். இது மத்திய அரசாங்கத்திற்குத் தேவையான அளவிற்குப் புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். அதன்மீது விரைவான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்கள். அதேநேரத்திலே, இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் வெளிநடப்புச் செய்திருப்பது என்பது, நிரம்ப வேடிக்கையாக இருக்கிறது, ஒருவகையிலே மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இந்தப் பிரச்சினையின்மீது அண்ணா தி.மு.க. இங்கே வெளிநடப்புச் செய்வது, இது யாரைக் கண்டித்து வெளிநடப்புச் செய்தார்கள் என்று அவர்கள். சொல்லவில்லை, பரவாயில்லை. ஆனால் இதே நடவடிக்கையையும் அவர்கள் நாடாளுமன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மேற்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்சினை, அதாவது, இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தமிழகத்திலே பயிற்சி அளிக்கப்படுகிறது என்று தொடங்கி, அண்மையிலே, நேற்று, இன்றெல்லாம் வெளிவந்துள்ள செய்திகளின்படி இராணுவப் பயிற்சி அல்ல, police பயிற்சிதான் என்கின்ற செய்தி இங்கே எடுத்துக் கூறப்பட்டு, அதன்மீது, முதலில் விடுதலைச் சிறுத்தைகள், தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி,



தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் கருத்துகள் எல்லாம் கூறப்பட்டு, இடையிலே பல பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, பிறகு விடுதலைச் சிறுத்தைகள், 'நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்' என்று சொன்னபிறகு, பிரதான எதிர்க்கட்சிக்கும் அந்த உணர்வு ஏற்பட்டு, அதற்குப் பிறகுதான் அந்த உணர்வு ஏற்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கத்திலே ஏற்படாத அந்த உணர்வு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சிறுத்தைகளின் சீற்றத்திற்குப் பிறகு ஏற்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 'நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்' என்று கூறியிருக்கின்றார்கள். எனவே, இந்த வெளிநடப்பில் உண்மை ஒளி இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன். இது எப்படி நடைபெற்றது என்பதையெல்லாம் இங்கே உட்கார்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக வெளிநடப்புச் செய்வதாக அறிவித்துவிட்டு, அவர்கள், இவர்களைப் பார்த்ததும், இவர்கள், அவர்களைப் பார்த்ததும், (சிரிப்பு) 'நீங்கள் சொல்லாமலே வெளிநடப்புச் செய்யும்போதெல்லாம் பின்னால் வந்தோமே, இன்றைக்கு நாங்கள் வெளிநடப்புச் செய்யும்போது பேசாமல் உட்கார்ந்து இருக்கிறீர்களே!' என்று மௌன பாஷையிலே நம்முடைய செல்வம் அவர்கள் கேட்டதும், என்னுடைய காதுகளிலே விழுந்தது. (சிரிப்பு) மௌன பாஷை எப்படி விழுந்தது என்று கேட்பீர்கள், முன்கூட்டியே விழுந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விழுந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலையிலே நடைபெற்ற இந்த வெளிநடப்பு ஒரு வேடிக்கை, விளையாட்டு; ஆனால், சிறுத்தைகளைப் பொறுத்தவரையிலே அந்த வெளிநடப்பு உணர்வுபூர்வமானது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அறிவேன். ஏனென்றால், அவர்களுடைய அடிப்படை உணர்ச்சிகளை அறிந்தவன் என்கின்ற முறையில் அந்தக் கொள்கை அடிப்படையிலே இதைச் செய்திருக்கின்றார்கள். எனவே, அதை நான் பழித்தோ, இழித்தோ கூற விரும்பவில்லை. இருந்தாலும், இங்கு நடைபெற்று இருக்கிற இந்த நிகழ்ச்சிகளை மனதில்கொண்டு, மத்திய அரசு இந்தப் பயிற்சி நடைபெறுவதில் கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கின்றேன்.

## 5. உரிமை மீறல் பிரச்சினை

### 'மாலை மலர்' பத்திரிகைமீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் துரை சந்திரசேகரன், ஞானசேகரன், கோவிந்தசாமி ஆகியோர் உரிமை மீறல் பிரச்சினை குறித்து, விதி எண் 219—ன்கீழ்

அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

முற்பகல் 10—35

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான பத்திரிகைச் சுதந்திரம் என்பது பேணிக் காக்கப்பட வேண்டுமென்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதேபோல, சட்டமன்றத்தினுடைய மாண்பும், மரபும் காக்கப்பட வேண்டுமென்பது நிதர்சனமான உண்மை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 14 வயதில் பத்திரிகையாளராக அவர் வாழ்க்கையைத் தொடங்கியவர்கள். அதேபோல சட்டமன்றத்தில் நீண்டகாலமாக உறுப்பினராக இருக்கின்றார்கள். இரண்டு துறைகளிலும் சிறந்து விளங்குகின்ற அனுபவம் மிகுந்த முதல்வர் அவர்களைப் பெற்றிருக்கின்றோம். ஆனால், நேற்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சியில், தாங்கள் இந்த அவையில் இருந்தபோது, அ.தி.மு.க.—வினுடைய உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், உங்களிடம் அனுமதிகோரி ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார். அதற்கு நீங்கள் மறுத்துவிட்டீர்கள். அவர் பேசியது அப்படியே ஒரு மாலைப் பத்திரிகையில் வந்திருப்பது, ஜனநாயகத்தை மதிக்கின்ற ஒரு செயலாக அது இல்லை. இந்தச் சட்டமன்றத்திற்குரிய மாண்பும், மரபும் காக்கப்படவேண்டும். இதை உரிமை மீறிய செயலாகக் கருதி, இதை அவை உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நேற்று மாலை வெளிவந்த 'மாலை மலர்' என்ற பத்திரிகையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** பேரவை விதி 219, 220—ன்கீழ், கீழ்க்கண்ட அறிவிப்பை அளிக்கிறேன்:

"3—8—2006 அன்று நாளிட்ட 'மாலை மலர்' பத்திரிகையில் சட்டமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி மீது உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியதாகவும், அப்போது பேசிய பேச்சாகவும், சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பாக செய்தி





வெளியிட்டுள்ளது. 3—8—2006 அன்று சட்டமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், ஏதோ பேச முற்பட்டபோது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்கவில்லை. மேலும், அவர் கூறிய எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். எனவே, பேரவை நிகழ்ச்சியில் நடைபெறாத ஒன்றை, அவைக் குறிப்பில் இல்லாத நிகழ்ச்சியை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், அவையில் பேசியதாக வெளியிட்டு இருப்பது, அவை உரிமை மீறிய செயலாகும். எனவே, பேரவை விதி 220—ன்கீழ் இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு ஒரு நெடிய வரலாறு உண்டு. இந்த மாமன்ற நிகழ்ச்சிகளில் பேசப்படுகின்ற அனைத்தும் தாங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவைக் குறிப்பில் அவை ஏற்றப்பட்டு, பிறகு புத்தகங்களாக வெளிவந்து எங்களுக்கெல்லாம் அனுப்பப்படுகின்றன. எவையெவை எல்லாம் அவைக் குறிப்பில் ஏற்றப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் தாங்கள். அந்தவகையில் நேற்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், ஒரு பிரச்சினையைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறபோது, அதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு முனைவர் தம்பிதுரை அவர்கள், தங்கள்மீது கொண்டுவந்த ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தாங்கள் விவாதத்திற்கு, பொதுவான பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டீர்கள். நீங்கள் அதுகுறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றபோதே, அதே கட்சியைச் சார்ந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் ஒன்றைக் குறித்து பேசியதாகவும், அது உரிமை மீறல் பிரச்சினையில் வரும் என்றும் அவர் பேசிக் கொண்டேயிருந்தார். ஆனால், தாங்கள் ஒரு--ruling--தீர்ப்பை அளித்தீர்கள். திரு. டி. ஜெயக்குமார் பேசுகிற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது என்று கூறிவிட்டு, தாங்கள், தங்கள்மீது வந்த அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்பற்றிய செயல்பாடுகளில் நீங்கள் இறங்கிக்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஆகஸ்ட் 4

கொண்டிருந்தபோது, அவர் பேசியவை அவைக் குறிப்பில் ஏறாது என்று சொன்னவையெல்லாம், அன்று 'மாலை மலர்' பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறதே. இது இந்த அவையினுடைய உரிமையை மீறிய ஒரு செயலாகும். இங்கே அமர்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், தாங்கள் அனுமதித்ததை எவ்வளவோ பேசுகிறார்கள். அவையெல்லாம் பத்திரிகைகளில் வராமல் போகின்றன. ஆனால், எதை அவைக் குறிப்பில் ஏற்றவில்லையோ, எதை ஏற்றக் கூடாது என்று சொல்கிறீர்களோ, அது பத்திரிகைகளில் வருகிறது. இது எப்படி என்று எங்களுக்குப் புரியவில்லை. நாங்கள் பத்திரிகைகள்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள். ஜனநாயகத்தில் பத்திரிகைகளுக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறவர்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன் சொன்னதைப்போல, நம்முடைய தமிழகத்து முதல்வர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே ஒரு பத்திரிகையாளர் என்கின்ற வகையில், நிச்சயமாக நாங்கள் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய மரியாதையை முழுக்க கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கிறபோது, இந்த அவையினுடைய உரிமையை மீறுகிறவகையில், இந்த அவைக் குறிப்பிலே இல்லாத ஒன்றை, அது ஏற்றப்படாது அவைக் குறிப்பிலே என்று தாங்கள் சொன்னது, எப்படி இந்தப் பத்திரிகையிலே, 'மாலை மலர்' என்ற பத்திரிகையிலே வந்தது? இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் வராமல் இருந்தால்தான், இந்த அவையினுடைய மாண்பு காப்பாற்றப்படும்; மாட்சிமை நிச்சயமாக நிலைநிறுத்தப்படும். ஆகவே தாங்கள் இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, இப்படிப்பட்ட நிகழ்வுகள் எதிர்காலத்தில் வராமல் தடுப்பதற்கு ஆணையிடுவீர்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற ஜனநாயகம் முறையாகப் பாதுகாக்கப்படவும், பத்திரிகை தருமம் பாதுகாக்கப்படவும், தங்களுடைய அனுமதியின் பெயரால் பேரவை விதி 219, 220—ன்கீழ், இங்கே கீழ்க்கண்ட இந்த அறிவிப்பைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தங்கள் நடவடிக்கையைக் கோருகிறேன்:



2006 ஆகஸ்ட் 4] [திரு. சி. கோவிந்தசாமி]

"கடந்த 3—8—2006 ஆம் தேதியன்று வெளிவரப்பட்ட 'மாலை மலர்' பத்திரிகையில், சட்டமன்றத்தில், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்மீது உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியதாகவும், அப்போது பேசிய பேச்சினைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. 3—8—2006 அன்று சட்டமன்ற அவையிலே நானும் இருந்தேன். அன்றையதினம் அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் ஏதோ பேச முற்பட்டபோது, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள், அதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஆனால், அவர் அனுமதி இல்லாமல் மேலும் சில கருத்துகளை இங்கே பேசிக் கொண்டிருந்தார். அவை, அவைக் குறிப்பில் இடம்பெறாது என்று தாங்கள் ஆணையிட்ட பிறகும், இன்றைக்கு 'மாலை மலர்' பத்திரிகையிலே, அவையில் நடந்ததாக இந்தச் செய்தி வெளிவந்திருப்பது, உள்ளபடியே பத்திரிகை தருமத்திற்கு மாறானது; சட்டமன்ற ஜனநாயக மரபுகளுக்கு மாறானது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, பத்திரிகையின்மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் உள்ள ஓர் அமைப்பின் பிரதிநிதி என்றாலும், எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுக்கின்றவகையில், சபை விதி 220—ன்கீழ் இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்மீது பேரவை விதி 220—ன்கீழ் மீனவர்களுடைய ஒரு கிராமத்திலே, அவர்கள் அல்லல்படுகின்ற ஒரு நிலைமை குறித்த அந்தக் கருத்தை, இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே, நான் அந்தக் கருத்தைத் தெரிவிக்க முற்பட்டபோது, தாங்கள் அதை எடுக்க மறுத்தீர்கள். அது உண்மை. 10 ஆண்டுக் காலம் இந்த மன்றத்திலே உறுப்பினராகவும், அமைச்சராகவும் நான் கடமையாற்றி இருக்கின்றேன். எனக்கு இந்த அவையினுடைய கண்ணியமும், கடமையும், உறுப்பினருடைய உரிமைகள் எல்லாம் நிச்சயமாகத் தெரிந்திருக்கின்ற ஒன்று. ஆனால், வெளியே சென்றபோது, ஜனநாயகத்தினுடைய நான்காவது தூணாக இருக்கின்ற பத்திரிகை; அவர்கள் கேட்கும்போது என்ன நடந்தது என்பதை எங்களால் சொல்லாமல் இருக்கமுடியாது. எனவே, அந்த அடிப்படையில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பேட்டியாகத்தான் நான்

கொடுத்திருக்கிறேன். இன்று காலை பத்திரிகையிலே, நீங்கள் அதை நிச்சயமாகப் பார்த்திருக்கலாம். 'தினத்தந்தி'–யிலே வந்திருக்கிறது. 'தினபூமி'-யிலேகூட வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். எனவே, இதில் உரிமை மீறல் இல்லை என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள், ஒரு பேட்டியிலே கொடுத்த செய்தியாகப் பத்திரிகையிலே வந்திருந்தால், நாங்கள் இந்த அவையிலே அதை எழுப்பப் போவதில்லை. ஆனால், 'மாலை மலர்' பத்திரிகையிலே பார்த்தீர்கள் என்று சொன்னால் இங்கே சட்டசபையில் அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி மீது உரிமை மீறல் குறித்து பிரச்சினை எழுப்பினார் என்றும், அப்போது அவர் பேசியதாவது என்று சொல்லி திருவொற்றியூரிலே உள்ள கே.வி.கே. குப்பத்தில், என்றெல்லாம் போட்டு, இவர் சட்டமன்றத்தில் பேசிய பேச்சு என்றுதான், அந்த 'மாலை மலர்' பத்திரிகையிலே வந்திருக்கிறதேயொழிய, இவர் வெளியே சென்று கொடுத்த பேட்டியாக அது வெளிவரவில்லை. அது பேட்டியாக வெளி வந்திருக்குமானால் இந்த அவையில் அந்தப் பிரச்சினையைப்பற்றி நாங்கள் எழுப்பப் போவதும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு கருத்து, 219, 220 விதிகளிலே வரப்போவதும் இல்லை. (குறுக்கீடு) ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாலை மலர்' பத்திரிகையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் இந்த அவையிலே பேசியதாகத்தான் செய்தி வந்திருக்கிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் சொல்கிறபோது, "நாங்கள் வெளியிலே போய், என்ன நடந்தது என்று கேட்டார்கள்; நான் பேட்டியாகக் கொடுத்தேன்; அதுதான் வந்திருக்கிறது" என்று சொல்கிறார். ஆகவே, இவர் 'மாலை மலர்' பத்திரிகைமீது முழுமையாகக் குற்றம் சாட்ட விரும்புகிறாரா என்று அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினை குறித்துப் பேசிய அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், உறுப்பினர்களும் பத்திரிகைகளை



மதிப்பவர்கள் என்பதிலே எள்ளளவு சந்தேகமும் கிடையாது. இந்த மாமன்றத்தில் எத்தனையோ பத்திரிகைகள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு, உரிமைக் குழுவிற்கு அவை அனுப்பப்பெற்று, அந்தப் பத்திரிகை ஆசிரியர்கள் தந்த விளக்கங்கள் சில நேரங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டும், சில நேரங்களில் ஏற்றுக்கொள்ளப்படாமலும், நம்முடைய பேராசிரியர் போன்றவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அந்த உரிமைக் குழுவிலே வாதாடியும்கூட ஏற்றுக்கொள்ளப்படாத பல சூழ்நிலைகள் இருந்திருக்கின்றன. இதே மாமன்றத்தில் 'முரசொலி' பத்திரிகை எந்த அளவிற்குத் தண்டிக்கப்பட்டது என்பதையும், யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அதற்காகவே வேலைமெனக்கெட்டு, ஒரு கூண்டு கட்டி அந்தக் கூண்டிலே 'முரசொலி' ஆசிரியரை நிறுத்தி வைத்து அழகு பார்த்த காட்சியெல்லாம் இந்த மாமன்றத்தினுடைய வரலாறு. எனவே, அதே முறையை நாம் பின்பற்ற வேண்டுமென்று இல்லை. 'மாலை மலர்' பத்திரிகையிலே வந்த செய்தியை, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் எல்லாம் எடுத்துக்கூறி, உரிமைக் குழுவிற்கு அதை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இங்கே பேசப்பட்ட இந்த விஷயங்கள், அந்தப் பேச்சிலே தொனித்த கண்டனங்கள், இவையே அந்தப் பத்திரிகைக்கு ஓர் எச்சரிக்கையாக அமையும் என்று நான் கருதுகின்றேன். ஆகவே, தாங்கள் தயவுகூர்ந்து பத்திரிகையின்மீது நாம் கொண்டுள்ள அன்பு, பரிவு இவற்றின் அடிப்படையில் அந்தப் பத்திரிகைக்கு, ஓர் எச்சரிக்கை என்கிற அளவில் தாங்கள் இங்கே அறிவித்து, உரிமைக் குழுவிற்கு அனுப்புகின்ற அந்த நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *3–8–2006* தேதியிட்ட 'மாலை மலர்' பத்திரிகையில், சட்டமன்றத்தில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஜெயக்குமார் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி மீது உரிமை மீறல் பிரச்சினை எழுப்பியதாகவும், அவர் அதுகுறித்து அவையில் பேசியதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. *3–8–2006* அன்று, திரு. ஜெயக்குமார் அவர்கள் ஏதோ பேச எழுந்தபோது அவருக்கு நான் பேச அனுமதி அளிக்கவில்லை. பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அவருடைய பேச்சு இடம்பெறாது என்று அப்போதே நான் ஆணையிட்டுள்ளேன். பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அவருடைய பேச்சும் இடம்பெறவில்லை. ஆனால், சில பத்திரிகைகள் அவர், அவை நடவடிக்கைகளில் கலந்துகொண்டு இப்பிரச்சினையை எழுப்பிப் பேசியது போன்று செய்தி வெளியிட்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

பத்திரிகை சுதந்திரம் என்பது மிக முக்கியமானது. ஆனால், அவை நடவடிக்கைகளில் இடம்பெறாத ஒரு நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் வெளியிட்டிருப்பது சட்டமன்ற மரபுக்கு மாறானதாகும். ஜனநாயக அமைப்பில் சட்டமன்றத்திற்குள்ள மிக முக்கியமான ஆளுமையையும், நீதிமன்றத்திற்கு உள்ள தனித் தன்மையையும் நாம் அனைவரும் அறிவோம். இதில் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படுகின்ற பத்திரிகைகள், மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. சில பத்திரிகைகள் அவையின் கண்ணியத்தையும் மதிப்பையும் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. பத்திரிகைகள் இதுபோன்று செய்திகள் வெளியிடுமானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, முதல்வர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, இனிமேல் இப்பத்திரிகைகள் நடுநிலையுடன் விருப்பு வெறுப்பின்றி உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு உணர்த்தும்வகையில் செய்திகள் வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10—50

### (ஆ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்த சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசார தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொல் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்த (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய் அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 20 - உயர் கல்வித் துறை

### (ஆ) கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வித் துறை

### (அ) கோரிக்கை எண் 20 - உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006-2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,14,76,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 51, திரு. சு. சிவராஜ்.





**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 365, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்திற்குப் போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொழில்நுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் கட்டாய நன்கொடை வசூல் செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 59, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை அதிகப்படுத்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1186, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் ஓரே ஒரு அரசுக் கலைக் கல்லூரி மட்டும் தருமபுரியில் உள்ளது. அரூர் சட்டமன்றத் தொகுதியான (SC) அரூரில், அரசுக் கலைக் கல்லூரி வேண்டி, பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்வாண்டில் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 453, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 536, திரு. தி. க. ராஜா.



**திரு. தி. க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்விப் பயிலும் மாணவர்களின் எதிர்கால வேலைவாய்ப்பின் தன்மையைக் கருதி, பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 612, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள தனியார் கட்டடங்களில் இயங்கும் மாணவர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 707, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 978, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1077, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட எந்தப் பகுதியிலும், அரசு சார்பில் கல்லூரிகள், Polytechnic இல்லாததால், அவற்றைப் பெரணமல்லூர் தொகுதியில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1126, திரு. த. அ. மேகநாதன்.

**திரு. த. அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதியில் அரசுப் பொறியியல் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1398, திரு. கே. எல். இளவழகன்.



**திரு. கே. எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள Vellore Institute of Technology (V.I.T.) நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஆக்கிரமித்துள்ள மாவட்ட விளையாட்டுத் துறைக்குச் சொந்தமான இடத்தை மீட்டுத்தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1469, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் நகரம், தொழிற்சாலை நிறைந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த நகரம். எனவே, மேட்டூரில் அரசு I.I.T. வளாகத்திலேயே அரசு Polytechnic கல்லூரி துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 861, திரு. சு. ப. வேலுமணி.

**திரு. சு. ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட கல்லூரிகள், அரசு நிலத்தையும், தனியார் நிலத்தையும் கையகப்படுத்தி, கல்லூரிக் கட்டடங்கள் கட்டி, மாணவர்களிடம் அரசு நிர்ணயித்த தொகையைவிட அதிகமாக வசூலிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 374, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாத சிவகாசி தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 387, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் அரசினர் பொறியியல் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 291, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்பு கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 452, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடசென்னையில் உள்ள அரசினர் பாரதி மகளிர் கல்லூரியில் மாணவியர் நலன் கருதி, பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளில் கூடுதலாக மாணவியரைச் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 366, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி, அரசுத் தொழில்நுட்பக் கல்லூரி, அரசுப் பொறியியல் கல்லூரி, அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, இளங்கலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, முதுநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அரசுத் தொழிற்பயிற்சிக் (I.T.I.) கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 173, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை, அரசுக் கலைக் கல்லூரியில் பார்வையற்ற மாணவ, மாணவியர் இருப்பின், அவர்களுக்குக் கணிப்பொறி பெறத் தேவையான வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 157, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் அரசுக் கலைக் கல்லூரியில் M.A. (தமிழ்), M.Sc. (கணிதம்), M.C.A. ஆகிய துறைகள் புதிதாகத் துவக்கிட நிதி ஒதுக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 469, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி மக்கள் பயன்பெறும்வகையில், கலசப்பாக்கம் தொகுதியில், ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் படிக்க ஏதுவாக, புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உடனடியாகத் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 480, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 486, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை பகுதியில் அரசுக் கலைக் கல்லூரி துவக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1319, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசினர் கலைக் கல்லூரிகளில், மாணவ மாணவிகள் இட எண்ணிக்கையை உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1341, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியர்க்கு இலவசப் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1351, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி அரசுக் கலைக் கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், போதிய ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1384, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரநயினார் கோவில் தொகுதியில், பெண்களுக்கு அரசுக் கல்லூரி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1516, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில், (i) முதுகலை-வேதியியல் (ii) முதுகலை—இயற்பியல் (iii) முதுகலை—விலங்கியல் (iv) முதுகலை—வணிகவியல் ஆகிய பிரிவுகள் இன்னும் துவக்கப்படவில்லை. உடனடியாக இக்கல்லூரியில்



அப்பிரிவுகள் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1511, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில், தேன்கனிக்கோட்டையில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1407, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாணவர் விகிதாசாரத்தின்படி ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு அல்லது பொதட்டூர்ப்பேட்டை பகுதியில் புதிய அரசுக் கலைக் கல்லூரி

அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 20, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் அரசு மகளிர் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1246, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1292, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவிநாசி தொகுதியில் பெரும்பாலான மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளிச் சுற்றுச் சுவர்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்தும், பெரும்பாலான பள்ளிகளில் இரவுக் காவலர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1303, திரு. மா. சந்திரகாசி.



**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் அல்லது குன்னம் பகுதியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1220, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், ரூபாய் இரண்டு இலட்சம் வரை கூடுதலாக நன்கொடை இரசீதின்றி பெறப்பட்டுவரும் நடைமுறையைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1191, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, இறையன்காடு பகுதியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1190, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, அரசினர் உலகநாதன் அரசுக் கலைக் கல்லூரிக்குச் சுற்றுச் சுவர்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1188, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1028, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உயர் கல்விப் பயிலும் மாணவர்கள், கல்விக் கடன் கேட்டு வங்கிகளை அணுகுகின்றனர். ஒரு சில வங்கிகள்தான் கடன் வழங்குகின்றன. பல வங்கிகள் கல்விக் கடன் வழங்க மறுக்கின்றன. உயர் படிப்புக்குச் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்களின் நலன் கருதி, கல்விக் கடன் வழங்க நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1002, திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் பொறியியல் கல்லூரிகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கல்விக் கட்டணத்தைவிட கூடுதலாகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1014, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 933, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாட்டில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 921, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 924, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்விப் பயில நுழைவுத் தேர்வு முறையை இரத்து செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 842, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 755, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற மாணவ, மாணவியர் தொழிற்கல்வி பயில வாய்ப்பளிக்கும்வகையில் இட ஒதுக்கீடு அளிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 655, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் மகளிர் அரசுக் கலைக் கல்லூரி ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 667, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 636, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோபிசெட்டிப்பாளையத்தில், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று துவக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 640, திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசு சார்பாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,11,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

(முற்பகல் 11–00)

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.5,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 49, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "திருக்கோவிலூர் ஒன்றியம், நகடி கிராம நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 138, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள ரொட்டிக் கடை உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பு அறைகள், கழிப்பிட வசதிகள், பெஞ்சுகள், குடிநீர் வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 289, திரு. விடியல் எஸ். சேகர்.

***திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் தொகுதி, காங்கேயம் ஒன்றியம், மேலப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 446, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்ப் பண்ணிசை வகுப்பு தொடங்கி, அதைக் கட்டாயப் பாடமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 504, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள அனைத்துத் தகுதியுள்ள நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 592, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 716, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களுக்குப் போதிய ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 805, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆற்காடு ஒன்றியம், புதுப்பாடி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூபாய் ஒரு இலட்சம், 2003 ஆம் வருடம் கட்டியும், இதுநாள்வரை நடைமுறைக்கு வராததன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1073, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட ஆயிலவாடி அரசு உயர்நிலைப் பள்ளி, கடந்த சில வருடங்களாகவே தலைமை ஆசிரியர் இன்றி இயங்கி வருகிறது. அப்பணியிடத்தை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1163, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1486, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு வரன்முறை செய்யப்பட்ட ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1184, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் சுமார் 251 பஞ்சாயத்துக்களில் ஆயிரத்திற்கும்



மேற்பட்ட (hamlet villages) குக்கிராமங்கள் உள்ளன. இவற்றில் 200-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள் இல்லை. அரூர் தொகுதியில் 5 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1317, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கணினி ஆசிரியர்களைப் பணி நிரந்தரமாக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 854, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, பிச்சனூர் ஊராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 322, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் ஐந்தாம் வகுப்புவரை தேர்வு இல்லாமலே, மாணவர்களைக் கல்வி கற்கும் முறையை அமல்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 171, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதி, ராஜேந்திரா ரோடு அரசு உயர்நிலைப் பள்ளி, உடுமலை மற்றும் எலையமுத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் அதிக அளவில் பயின்று வருவதால் பள்ளியில் மாணவ, மாணவியர் நலன் கருதி மேற்கண்ட பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 154, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, கோட்டநத்தம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 18, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதியில் சத்துவாச்சாரி நகராட்சி, வ.உ.சி. நகரில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், குறிப்பாக, தக்கலை கல்வி மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள், அலுவலக உதவியாளர் பணியிடங்கள், காவலர்கள் மற்றும் துப்புரவாளர் பணியிடங்களை நிரப்பும்வகையில் பணி நியமனங்கள் உடனடியாக செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1225, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதிக்குட்பட்ட அகரம், நல்லமநாயக்கன்பட்டி ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1244, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மலைவாழ், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்க சமமான கல்வி வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1240, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் தொகுதியில் பல அரசுப் பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றை ஆய்வு செய்து பழுதுபார்த்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1298, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியம், கீழப்புலியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதால், அங்குள்ள பள்ளி மாணவர்கள் அடுத்த மாவட்டத்தில் பள்ளியில் சேரும் நிலை உள்ளது. அரசு காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1312, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் இயந்திரவியல் சம்பந்தப்பட்ட தொழிற்கல்வி தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1354, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் உள்ள பல பள்ளிகளில் இடப் பற்றாக்குறை காரணமாக பல பள்ளிகள் தரம் உயர்த்தப்படாமல் உள்ளன. அதனால் அருகிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களைப் பள்ளிகளுக்கு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1336, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, மானத்தாள் ஊராட்சியில் நூலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1365, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் வெட்டைக்கிணறு, தாண்டகவுண்டம்பாளையம், மந்திரிபாளையம், ராசாக்கவுண்டம்பாளையம், தாண்டகவுண்டம்பாளையம், புதூர் ஆரம்பப் பள்ளிக்கூட மாணவ, மாணவிகள், சுமார் 5 (ஐந்து) கி.மீ. தூரம் உள்ள நடுநிலைப் பள்ளிக்கூடம் சென்று படிக்க வேண்டியுள்ளது. வெட்டைக்கிணறு பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1367, திரு. வே. செந்தில் பாலாஜி.



**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, என்.புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1385, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள அரசு மாணவ, மாணவியர் நலன் கருதி சுற்றுச் சுவர் இல்லாத பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1379, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப் பருவத்திலேயே விளையாட்டு ஆர்வத்தை வளர்க்க பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1503, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,850 மாணவ, மாணவிகள் பயிலுகின்றனர். இதில் மாணவர்கள் 1,069, மாணவிகள் 789 உள்ளனர். எனவே, இப்பள்ளியை இரண்டாகப் பிரித்து, பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தனியாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1408, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை அரசுடைமை ஆக்குவதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1387, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 654, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி வட்டம், கோமங்கலம்புதூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 482, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் அரசு மேல்நிலைப் பள்ளி இல்லை. அதனால் அங்கு ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி துவக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1207, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1217, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கல்வி மாவட்டம், இடைகாலில் இயங்கிவரும் மீனாட்சி சுந்தரம் நினைவு உயர்நிலைப் பள்ளியில் துவக்கப்பட்டிருக்கும் 6, 7, 8 வகுப்புகளுக்கு அரசு அங்கீகாரம் கோரி, மூன்று ஆண்டுகளான பின்பும், அங்கீகாரம் வழங்கப்படாமல் உள்ளது. அங்கீகாரம் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 976, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம், அத்தியூர்திருகை கிராமத்தில் மூன்று வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 999, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை ஒன்றியம், ஆலடிக்குமுளை ஊராட்சி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 923, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் படவீடு பேரூராட்சி, பச்சாம்பாளையம் அரசுப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 912, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் தொகுதி, சூலூர் மற்றும் பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணியூர், காடம்பாடி, செம்மாண்டம்பாளையம், முத்தகவுண்டன்புதூர்–பூமலூர், காமநாயக்கன்பாளையம் (பல்லடம்) ஆகிய ஊர்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 905, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியிலுள்ள நெடுங்குளம் ஆதிதிராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளியை, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி எனத் தனியாகப் பிரித்து செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1099, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குத் தரமான கட்டட வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1007, திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் உள்ள தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் நிரப்பப்படாத ஆசிரியர், தலைமையாசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பி, கல்வி வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1033, திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி, மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள பூங்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 386, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, காமயகவுண்டன்பட்டியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 356, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் மீனவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் கல்வி பயிலுகின்ற சி.எஸ்.ஐ. இராஜகோபால் உயர்நிலைப் பள்ளியை மேனிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 367, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள பள்ளிகளில் மாணவ மாணவியர் சேர்க்கை அதிகமிருப்பதால், அரசுப் பள்ளிகளுக்குப், பள்ளித் துணைக் கட்டடங்கள், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடம், உடையார்பாளையம் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடம், டி. பழூர் ஆகியவை உதவிக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடம், டி. பழூர் ஆகியவை கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 390, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டையிலுள்ள மேனிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 376, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துப் பள்ளிகளிலும், முப்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமிப்பது குறித்தும் அனைத்துப் பள்ளிகளுக்கும் பாதுகாப்பான கட்டடங்கள் கட்டுவதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 467, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம்



தொகுதி. கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கலசப்பாக்கம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேனிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, தேவையான கட்டடங்களை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 463, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கோட்டக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி மேனிலைப் பள்ளியாகவும், வானூர் தொகுதியிலுள்ள ஆரம்பப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை, மேனிலைப் பள்ளியாகவும் இந்த வருடம் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 476. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, கும்பகோணம் தாலுகா, சோழபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேனிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 850, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் அதிகமாக வசிக்கின்றனர். எனவே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை, அரசு மூலம் பொன்னேரி தொகுதியில், நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 882, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டதாரி ஆசிரியர்களின் நியமனம், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 635, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோபிச்செட்டிபாளையம் தொகுதி, கரட்டடிபாளையத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 649, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, எரசக்க நாயக்கனூர் அரசு உயர்நிலைப் பள்ளியினைத் தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளியாகவும், தேனி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகிய அரசுப் பள்ளிகளை இந்த வருடம் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 774, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலைத் தொகுதியில் அரசினர் விளையாட்டுப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 789, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1000, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட ஆடுதுறையில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,287,96,16,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.150,84,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்,



தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை[@] நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை[@@] நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தினை அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். 2006-2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். பேசுவோர் பட்டியல்; 8 பேர் பேசுகிறார்கள். ஆளுக்கு 10 நிமிடத்திற்கு மேற்படாமல் உரையாற்றி, இங்கே இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டியிருக்கிற காரணத்தினால், அதற்குரிய time-ஐ அவர்கள் எடுத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பை நாம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம். (குறுக்கீடு)

---

@ 511 முதல் 552 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆ அச்சிடப்பட்டுள்ளது.

@@ 553 முதல் 608 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆ அச்சிடப்பட்டுள்ளது.

## 2. தகவல் கோரல்–தொடர்ச்சி

### ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோருதல்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமன்றத்தில், சட்டப்பேரவைத் தலைவரிடம் தவறான அணுகுமுறையைக் கடைபிடிக்கிறேன் என்று பதிவாகிவிடக்கூடாது. நான் கடிதத்தை கையில் கொடுத்தேனா, table-இல் வைத்தேனா என்பதை வீடியோ தொலைக்காட்சிமூலம் படம் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதைப் போட்டுப் பார்த்தாலே நான் கையில்தான் கொடுத்தேன் என்பது நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சி.வி. சண்முகம். (குறுக்கீடுகள்)

## 7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த இளம் வயதிலே முதன்முறையாக, திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, கல்வித் துறையினுடைய — மிகப் பெரிய ஒரு முக்கியம்வாய்ந்த கல்வித் துறையினுடைய — அமைச்சராகவும், மற்றொரு முக்கியத்துவம்வாய்ந்த வணிக வரித் துறையினுடைய அமைச்சராகவும் என்னை நியமித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு மீண்டும் இரண் டாவது முறையாக என்னை திண்டிவனத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து இருக்கின்ற எங்கள் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்து, வாக்களித்துத் தேர்ந்தெடுத்த திண்டிவனத்தினுடைய வாக்காளப் பெருமக்களுக்கு அவர்களுடைய பாதம் பணிந்து என்னுடைய நன்றியைத்



தெரிவித்துக்கொள்கின்றேன். என்னை, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்டிருக்கின்ற எங்களுடைய கூட்டணியினுடைய அனைத்துத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்குக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்து இருக்கின்றீர்கள். ஒரேயொரு கருத்தை ஆரம்பத்திலே சொல்ல விரும்புகின்றேன். கல்வித் துறை மிகப் பெரிய ஒரு துறை. அதனுடைய மானியக் கோரிக்கையிலே இன்றைக்கு அனைவருக்கும் 10 நிமிடம்தான் பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்றீர்கள். இதற்காக நான் உங்களைக் குறை சொல்லவில்லை. கடந்த காலங்களிலே, ஒரு முழு நாள் கல்வித் துறைக்கு எடுத்துக்கொண்டிருக்கின்றோம். நீங்கள் வாய்ப்பளித்திருக்கின்ற 10 நிமிடத்திலே, எதைப் பேசுவது, எதை விடுவது என்று தெரியவில்லை. இருந்தாலும், நீங்கள் கொடுத்திருக்கின்ற அந்தக் காலக்கெடுவிற்குள் நான் பேசி முடிப்பதற்கு முயற்சி செய்கின்றேன்.

*முற்பகல் 11-15*

ஐந்தாண்டுக் காலம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, கல்வித் துறையிலே எடுத்த நடவடிக்கைகள், எடுத்த சீர்திருத்தங்கள், புரட்சிகரமான திட்டங்களால் இன்றைக்குத் தமிழகம், இந்தியாவிலேயே தொழில் துறையிலே முன்னேறிய மாநிலமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. வளர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு மாநிலமாக இன்றைக்குச் சொல்லுகின்றோம் என்றால், அதற்குக் காரணம் ஐந்தாண்டுக் காலத்திலே, இந்தக் கல்வித் துறையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைதான் என்பதனையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா மட்டுமல்ல; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த அந்தக் காலத்திலேதான் இந்த கல்வித் துறைக்கு மிகப் பெரிய ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, குறிப்பாக தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அன்றைக்குக் கொடுக்கப்பட்ட அந்த முக்கியத்துவத்தின் காரணமாகத்தான், இன்றைக்குத் தமிழகத்திற்கு இந்தியாவிலே மட்டுமல்ல; உலகத்தில் இருக்கின்ற சர்வதேசத் தரம் வாய்ந்த நிறுவனங்கள் எல்லாம், இந்தியாவிலே சென்னையை நோக்கி மட்டும் வருகின்றன என்றால் அதற்குக் காரணம் அன்றைக்குப் புரட்சித்

தலைவர் அவர்கள், தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தமிழகத்திலே
திறந்ததுதான். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அதிகமாகத்
தொழில்நுட்பக் கல்வி படித்த மாணவர்கள், தேர்ச்சியடைந்த
மாணவர்கள், திறமையான மாணவர்கள், உலகத் தரம் வாய்ந்த
மாணவர்கள் இப்போது இருக்கின்றார்கள். அதற்காகத்தான் உலகத்தில்
இருக்கின்ற நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்குச் சென்னையை நோக்கி
வருகின்றன. அதற்கு அவர்கள் சொல்லுகின்ற காரணம், தமிழகத்திலே,
சென்னையிலே இருக்கின்ற மாணவர்கள், திறமையான மாணவர்கள்,
பொறியியல் கல்வி படித்த மாணவர்கள் திறமையான மாணவர்கள்
என்பது; மற்றொரு காரணம் சென்னையில் இருக்கின்ற
மாணவர்கள்தான் ஆங்கிலப் புலமை வாய்ந்தவர்கள்; ஆங்கிலத் திறமை
வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள் என்பது; ஆகவேதான், நாங்கள்
சென்னையை நோக்கி வருகின்றோம் என்று உலகத்தில் இருக்கின்ற
அந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் சொல்லுகின்றன. அந்த அளவிற்கு
ஐந்தாண்டுக் காலத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதனால் தமிழகம் இப்போது
கல்வித் துறையில் மட்டும் வளர்ச்சியடையவில்லை; தொழில்
துறையிலேயும் புரட்சி ஏற்பட்டதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மிக
மிக ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது இந்தக் கல்வித் துறை.
ஐந்தாண்டுக் கால அம்மாவினுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட
நடவடிக்கைகள்தான் இதற்குக் காரணம் என்பதை இங்கே நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; ஆரம்பக் கல்வியாகட்டும், நடுநிலைக்
கல்வியாகட்டும், உயர்நிலைக் கல்வியாகட்டும், ஐந்தாண்டுக் காலத்திலே
எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, இப்போது இந்தியாவில்
இருக்கின்ற மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியான மாநிலமாகத்
தமிழகம் திகழ்கின்றது. இப்போது தொடக்கக் கல்வியாகட்டும்,
நடுநிலைப் பள்ளியாகட்டும், 100 விழுக்காடு தமிழகம் எட்டியிருக்கிறது.

அனைவருக்கும் கல்வித் திட்டம். அனைவருக்கும் கல்வித்
திட்டத்தை மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சேர்ந்து
செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தியாவில்
இருக்கின்ற அத்தனை மாநிலங்களையும் பார்த்தீர்கள் என்றால், சில
மாநிலங்களிலே அனைவருக்கும் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த
முடியாத, இன்னும் ஆரம்ப கட்டத்திலே இருக்கின்ற நிலையிருக்கிறது.
இப்போது இந்தியாவிலே அனைவருக்கும் கல்வித் திட்டத்தினைச்
செயல்படுத்துவதில், தமிழகம் அனைத்து மாநிலங்களுக்கும்



முன்மாதிரியான ஒரு மாநிலமாக விளங்குகிறது என்று நாங்கள்
சொல்லவில்லை; உலக வங்கியும், ஐரோப்பா கூட்டமைப்பும், மத்திய
அரசாங்கமும் பாராட்டியிருக்கின்றன. பாரதப் பிரதமர் மன்மோகன்
சிங் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, தமிழகத்திலே கல்வித்
துறை, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து
கொண்டிருக்கின்றது என்று நாங்கள் சொல்லவில்லை; நீங்கள் கூட்டணி
அமைத்துக் கொண்டிருக்கின்ற கட்சியைச் சேர்ந்த பாரதப் பிரதமர்
அதை அறிவித்திருக்கின்றார்; சொல்லியிருக்கின்றார். அந்த அளவிற்கு
இப்போது கல்வித் துறையிலே மிகப் பெரிய ஒரு புரட்சியை
ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

நீங்கள் பார்த்தீர்கள் என்றால், ஒரேயொரு உதாரணம். ஐந்தாண்டுக்
காலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கிய நடுநிலைப்
பள்ளிகள் மட்டும் 2,700. 1996–2001 ஆம் ஆண்டிலே நீங்கள் 550
பள்ளிகளைத் திறந்தீர்கள். ஆனால் அம்மாவினுடைய ஆட்சியிலே 2,700
நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தியிருக்கின்றார்கள். 2,225
பள்ளிகளைக் கூடுதலாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள்.
இப்படிப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது போன்று பல்வேறு
நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள்.

பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட வேண்டும்; நூறு
சதவீத மாணவர்கள் பள்ளிகளிலே சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும்; பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகள் பாதியிலே
தங்களுடைய பள்ளிப் படிப்பை நிறுத்துவதை நிறுத்த வேண்டும்;
தடைப்படுத்தி அதை நிறுத்த வேண்டும் என்பதற்காக, எடுத்த பல்வேறு
நடவடிக்கைகள்தான், இலவசப் பாடப் புத்தகம், இலவச சைக்கிள்,
இலவச Bus pass, இலவசச் சீருடை (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்
பல்வேறு திட்டங்களை அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்தார்கள்.

அதுமட்டுமல்ல; ஒரு மாணவன் எந்தக் காரணத்தைக் கொண்டும்,
எந்தச் சூழ்நிலையைக் கொண்டும், தன்னுடைய படிப்பைப் பாதியிலே
நிறுத்தக்கூடாது; ஏழ்மையின் காரணமாக, வசதியின்மை காரணமாக,
ஒரு மாணவன் தன் படிப்பைப் பாதியிலே நிறுத்தக்கூடாது
என்பதற்காக, அவன் பெற்றோர், வருவாய் ஈட்டுகின்ற தாயோ,
தந்தையோ இறந்தால், அதன்காரணமாக அந்த மாணவனுடைய படிப்பு
நிறுத்தப்படக் கூடாது என்பதற்காக, அந்த மாணவனுக்கு 50,000
ரூபாயை வைப்பீட்டுத் தொகையாக வைத்து, (மேசையைத் தட்டும்
ஒலி) அதில் வருகின்ற வட்டியை வைத்து, அவன் படிப்பைத்

தொடர்வதற்கும், அதற்குப் பிறகு, பள்ளிப் படிப்பை முடித்த பிறகு 50,000 ரூபாயை அந்த மாணவனுடைய வாழ்க்கைச் செலவிற்காக எடுத்துக்கொள்வதற்கும் உத்தரவிட்டுச் செயல்படுத்தியவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே—நான் தவறாகச் சொல்லவில்லை; ஒருவேளை அது தவறாக அச்சிடப்பட்டிருக்கிறதோ என்பது எனக்குத் தெரியவில்லை— 'அரசு உதவி பெறும் பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகள் பெற்றோர் இறந்தால் அவர்களுக்கு 50,000 ரூபாய்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியென்றால் அரசுப் பள்ளியிலே படிக்கின்ற மாணவருடைய தாய், தந்தை இறந்தால் அந்த மாணவ, மாணவிகளுக்கு அந்த நிதி கிடைக்காதா என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நான் ஆரம்பத்திலேயே அது தவறாக அச்சிடப்பட்டிருக்கலாம் என்று சொல்லிவிட்டேன். அதில் 'அரசு' என்பது விடுபட்டிருக்கின்றது; அதற்காகத்தான் சொன்னேன். குறை சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்றால்— ஆனால், நீங்கள் அதற்கு 1,50,000 ரூபாய்தான் ஒதுக்கியிருக்கின்றீர்கள். அப்படியென்றால் ஓராண்டுக்கு 3 மாணவர்களுக்கு மட்டுந்தான் தரப் போகின்றீர்களா என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 11—20*

அதுமட்டுமல்ல; அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் பற்றி சொல்ல விரும்புகிறேன். தொழில் துறையில் ஒரு புரட்சி ஏற்படுத்த வேண்டுமென்றால், தொழில் துறையிலே தமிழகம் முன்னுக்கு வரவேண்டுமென்றால், முதன்மை மாநிலமாக இருக்க வேண்டுமென்றால், தொழிற் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் நல்ல ஆங்கிலம் படிக்க வேண்டும்; ஆங்கிலத்தை எழுத வேண்டுமென்பதற்காக, ஆங்கிலப் புலமை பெற்றிருக்க வேண்டும்;



அம்மா அவர்கள் British Council–உடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, Cambridge பல்கலைக்கழகத்தோடு இணைந்து, ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுத்து சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, அனைத்துக் கல்லூரிகளிலும் அந்தத் திட்டத்தை இப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப் பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; ஆசிரியர்களுக்குக் கலந்தாய்வு முறை; ஒளிவுமறைவற்ற புரட்சிகரமான, கலந்தாய்வு முறையை அம்மா அவர்கள், ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றவகையிலே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். புதிய நடைமுறைகளின்படி, விதிமுறைகளின்படி நீங்களும் அதைத் தொடர்வதாக இப்போது அறிவித்திருக்கின்றீர்கள். உங்களுடைய அறிவிப்பை நான் குறை சொல்லவில்லை. ஆனால், இப்போது பல்வேறு மாவட்டங்களில், குறிப்பாக எடுத்துக்கொண்டீர்களானால், காஞ்சிபுரம் மாவட்டம், தென் மாவட்டங்களான தூத்துக்குடி மாவட்டம், விருதுநகர் மாவட்டம், நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டங்களிலே இருக்கின்ற அதிகாரிகள், ஆசிரியர்களுடைய காலிப் பணியிடங்களைத் தெரிவிக்காமல், தெரிவிக்காமல், குறிப்பிட்ட இடங்களைத் தெரிவிக்காமல், முறைகேடுகள் நடப்பதாக – நாங்கள் சொல்லவில்லை—நீங்கள் பத்திரிகையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆளுநர் உரையிலே அறிவித்ததைப்போல, ஆசிரியர்கள் பொது மாறுதல்கள், ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு முறையிலேதான் நடைபெறுகின்றன. இதுவரை, ஏறத்தாழ 21 ஆயிரம் ஆசிரியர்கள் இந்தக் கலந்தாய்வு மூலமாகப் பயன்பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவிப்பையொட்டி, இதுவரை எந்த இடத்தில் இருந்துமே இப்படி ஒரு முறைகேடு நடந்ததாக எங்களுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 21 ஆயிரம் பேருக்கு நடந்துகொண்டிருக்கக்கூடிய, counselling என்று சொல்லக்கூடிய இந்தக் கலந்தாய்வு முறையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நான்கைந்து மாவட்டங்களிலே இப்படி அந்தக் காலிப் பணியிடங்களைக் காட்டவில்லை என்று சொன்னால், ஆசிரியர்கள், குறிப்பாக, அந்த ஆசிரியர்களை represent

செய்யக்கூடிய ஆசிரியர் சங்கங்கள் எத்தனை இருக்கின்றன; அத்தனை சங்கங்களிலிருந்தும் யாராவது இதுவரை குரல் எழுப்பாமல் இருப்பார்களா? இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய, ஒளிவுமறைவற்ற ஒரு கலந்தாய்வு முறையினை இந்த அரசு மேற்கொள்வதை, அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்களே, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருக்கக்கூடிய பத்திரிகைகள் பார்த்துக்கொண்டிருக்கின்றன என்று; அவர்கள் எல்லாம் இதைப்பற்றி விமர்சனம் செய்யாமல் இருப்பார்களா என்பதைத்தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஆசிரியர் பொது மாறுதலைப் பொறுத்தமட்டிலும், ஒளிவுமறைவற்ற அந்தக் கலந்தாய்வு முறைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. அதிலே எந்தவிதமான முறைகேடுகளும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நான்காவது தூணான பத்திரிகைத் துறை பார்த்துக்கொண்டிருக்கிறது; பத்திரிகையிலே வரவில்லை; தொலைக்காட்சியிலே வரவில்லை என்ற கருத்தைச் சொல்கிறார். அப்படியென்றால், அமைச்சர் அவர்கள் பத்திரிகைகளையே பார்க்கவில்லையா என்று எனக்குச் சந்தேகம் இருக்கிறது. நான் இதைக் குறை சொல்வதற்காக—ஆரம்பத்திலேயே சொன்னேன்; நான் குறை சொல்வதற்காக—சொல்லவில்லை என்று சொன்னேன். குறிப்பிட்ட, அனைத்து இடங்களிலும் முறைகேடுகள் நடப்பதாகச் சொல்லவில்லை. குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களில் நடக்கிறது. அது பத்திரிகைகளிலே வந்திருக்கிறது, தொலைக்காட்சியிலே வந்திருக்கிறது. ஆசிரியர்கள், அந்தப் பத்திரிகைகளிலே, தொலைக்காட்சியிலே பேட்டியளித்திருக்கிறார்கள், அழுதிருக்கிறார்கள் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் வேண்டுமென்றால் அதை விசாரித்துத் தெரிந்துகொள்ளுங்கள். நான் வேறு விஷயத்திற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு ஆணையிட்டு, அது கீழேயிருக்கிற பள்ளிகளில் மட்டுமல்லாமல், கல்லூரி ஆசிரியர்கள் மாறுதலிலேயும், இந்த counselling முறை பின்பற்றப்பட வேண்டும் என்று



ஆணையிட்டு, இந்த ஆண்டு, கல்லூரி ஆசிரியர்களிடத்திலேயும் இது பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 12 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். முடியுங்கள் சீக்கிரம்.

முற்பகல் 11–25

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் 10 நிமிடங்கள் கொடுப்பீர்களானால், குறிப்பிட்ட இரண்டு முக்கியமான விஷயங்களை நான் கேட்க விரும்புகின்றேன். இப்போது தொழில் கல்லூரிகளிலே, சுயநிதி தொழில் கல்லூரிகளிலே கூடுதலாக 65 சதவீத இடங்களை நாம் பெற்றிருக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். வரவேற்கிறேன், பாராட்டுகின்றேன், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் குறை சொல்லவில்லை. ஆனால் அதற்காக நீங்கள் கொடுத்த விலை என்ன? 65 சதவீதம் கூடுதலாக இடம் பெற்றதாகச் சொல்கிற நீங்கள், அதற்காகக் கொடுத்த விலை என்ன என்பதை நான் கேட்க விரும்புகின்றேன். இன்றைக்குத் தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கின்றபோது, எப்படி மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம், இனாம்தார் வழக்கிலே இறுதியாக ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. Transparency, merit and single window system. இந்த triple tests கண்டிப்பாக அனைத்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இதிலே, இந்த ஆண்டு தொழிற் கல்விக்கான சேர்க்கை தொடங்கியிருக்கின்றபோது சுயநிதிக் கல்லூரிகள் உச்ச நீதிமன்றத்திலே வழக்குப் போட்டன. இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க எங்களை வற்புறுத்தக்கூடாது; ஒற்றைச் சாளர முறையிலே, மாணவர்களைச் சேர்ப்பதிலே, எங்களைக் கடைப்பிடிக்க வற்புறுத்தக்கூடாது என்று வழக்கு போட்டன. அதிலே அரசு, பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, அரசு வழக்கறிஞர் வாதாடினார். நம்முடைய அரசு வழக்கறிஞர், திரு. விடுதலை அவர்கள் வாதாடினார்கள். அதிலே, முன்னுக்குப்பின் முரணாக, இன்றைக்கு ஒரு Affidavit, அடுத்த வாரம் ஒரு Affidavit என்று முன்னுக்குப்பின் முரணாக வாதிட்டார்கள். அரசு, தன் நிலையைத் தெளிவாகத் தெரிவிக்காமல், முதல் நாள் ஒரு நிலையை எடுக்கின்றது. நாங்களும், தனியார் சுயநிதிக் கல்லூரிகளும் பேசி, ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கின்றோம்; 65 சதவிகிதம் இடம் என்று அரசாங்கத்திற்கும், 35 சதவிகிதம் நிர்வாகத்திற்கும்; அதிலே நாங்கள் இட ஒதுக்கீட்டை வற்புறுத்த மாட்டோம் என்று—(குறுக்கீடு)

இரண்டாவது, நான் சொல்லிவிடுகிறேன் அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். நான் சொல்லிவிடுகிறேன்—முதலாவது, நாங்கள் இட ஒதுக்கீட்டை வற்புறுத்தமாட்டோம்; Single Window System, ஒற்றைச் சாளர முறையை அரசு வற்புறுத்தாது என்று ஒரு Affidavit முதலிலேயே தாக்கல் செய்யப்பட்டது. ஐந்து நாட்களுக்குப் பிறகு, இரண்டாவது ஒரு Affidavit தாக்கல் செய்யப்பட்டது உயர் நீதிமன்றத்திலே. அதில் என்ன சொல்லப்பட்டது என்றால், இட ஒதுக்கீடு 65:35; அதிலே எந்த மாற்றமும் இல்லை; ஆனால், இட ஒதுக்கீடு கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டுமென அரசு தன் நிலையை மாற்றிக்கொண்டது. இட ஒதுக்கீட்டை அரசு வற்புறுத்தியது. ஆனால், ஒற்றைச் சாளர முறையிலே மாணவர்களை நிர்வாக ஒதுக்கீட்டிலே சேர்ப்பதைக் குறித்து, சுப்பிரமணியம் கமிட்டி அளித்த அந்த உத்தரவை அரசு வற்புறுத்தாது என்று உயர் நீதிமன்றத்தில் சொல்லவேண்டிய காரணம் என்ன? அதுமட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தால் இனாம்தார் வழக்கிலே சொல்லப்பட்டது என்னவென்றால், அரசு, மாநில அரசு, அந்த மாணவர்கள் சேர்க்கையைப் பற்றியோ, மாணவர்களுடைய கட்டணத்தைப் பற்றிய விதிமுறைகளைப் பற்றியோ, சட்டத்தை விதிமுறைகளை இயற்றுகின்றவரை, அதை முறைப்படுத்துகின்ற, நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரம், அந்த சுப்பிரமணியம் கமிட்டிக்கு உண்டு என்று சொல்லப்பட்டது. ஆனால், சுப்பிரமணியம் கமிட்டி ஓர் உத்தரவைப் போடுகின்றது. சுயநிதிக் கல்லூரிகள் இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்கவேண்டும்; மாணவர்களை ஒற்றைச் சாளர முறையிலே அனுமதிக்கப்பட வேண்டும் என்ற அந்த உத்தரவை எதிர்த்து, உயர் நீதிமன்றத்திலே அரசு, இந்த அரசு, தனியார் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறையிலே மாணவர்களைச் சேர்க்கத் தேவையில்லை; இந்த அரசு வற்புறுத்தாது என்று சொல்லவேண்டிய காரணம் என்ன? நீங்கள் 65 சதவிகிதம் வாங்கியதாகச் சொல்கின்றீர்கள். கூடுதலாக இடங்களை வாங்கியதாகச் சொல்கின்றீர்கள். நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. அதற்குக் கொடுக்கப்பட்ட விலை—ஏனென்றால், கடந்த ஆண்டு 18,735 இடங்கள் காலியாக இருந்தன. அரசுக்குக் கொடுக்கப்பட்ட மொத்த இடங்கள், கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளிலே 18,735 இடங்கள் காலியாக உள்ள நிலையிலே, நீங்கள் கூடுதலான இடங்கள் வாங்கினாலும் இன்னும் 28,000 இடங்கள் காலியாக வரப்போகின்றன. ஆனால், இதற்கு நீங்கள் கொடுத்த விலை—தனியார் கல்லூரிகளிலே ஒற்றைச் சாளர முறையிலே மாணவர்களை நாங்கள் அனுமதிக்க வற்புறுத்தமாட்டோம் என்று சொன்ன காரணத்தினால், ஒரு குறிப்பிட்ட கல்லூரிகளில், ஒரு பத்து கல்லூரிகளில் இன்றைக்கு மாணவர்களைச் சுரண்டி



மாணவர்களைக் கொள்ளையடிக்கின்ற வழியை, இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள ஏழையெளிய மாணவர்களை, நன்றாகப் படித்துத் தேறிய மாணவர்களை, அந்தப் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே சேர்ப்பதற்கு வாய்ப்பில்லாமல், பணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள், பணம் உள்ளவர்கள் அந்தக் கல்லூரிகளிலே சேர்ப்பதற்கு, அரசு இன்றைக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இதற்கு என்ன காரணம்? இதில் ஆதாயம் யாருக்கு என்பதை நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஐம்பது சதவிகிதத்தை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அதுவும் குறிப்பாக ஒற்றைச் சாளர முறையும் இல்லாமல் சிறுபான்மை சமுதாயத்தினருக்கு எழுபது சதவிகிதம் கொடுத்துவிட்டீர்கள். அப்போது ஒற்றைச் சாளர முறையை நடத்தியிருந்தால்—மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கெல்லாம் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்—அப்போது நீங்கள் ஒற்றைச் சாளர முறையை நடத்தினீர்களா? 70 சதவிகிதத்தைத் தாரை வார்த்தீர்கள்; ஐம்பது சதவிகிதத்தைத் தாரை வார்த்தீர்கள். அப்போதெல்லாம் இதே வழக்கு, வருடா வருடம் நீதிமன்றத்திலே சென்று கொண்டே இருந்தது. அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரி நிர்வாகிகளை அழைத்துப பேசி—ஏனென்றால் அந்தத் தீர்ப்பிலேயே இருக்கிறது, consensus என்று—அனைவருக்கும் இடையிலே ஒரு ஒற்றுமையை உருவாக்கினால், அந்த ஒற்றுமையின் அடிப்படையிலே இந்த இட ஒதுக்கீடு கொடுக்கப்படவேண்டும். சட்டத்தை அரசு இயற்றிவிடும் என்று சொன்னால், அதற்குப் பிறகு குழுவிற்கு வேலையேயில்லை என்றும் அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் அந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஏதேனும் ஆரம்பித்திருக்கிறீர்களா? அதுவும் இல்லை. அதற்குப் பிறகுதான் அங்கேயிருக்கிற அனைத்து நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி, அவர்களோடு ஒரு consensus உருவாக்கப்பட்டது. நீங்கள் சொல்லுகிறீர்களே, அங்கே இட ஒதுக்கீடு இல்லையென்று; இதுவரை ஐந்து ஆண்டுக் காலங்களிலே வலியுறுத்தி நீங்கள் இட ஒதுக்கீட்டை ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கலைஞருடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, இதே சட்டமன்றத்திலே, தனியார் கல்லூரிகளிலேயும், Management Quota-க்களிலேயும் இட ஒதுக்கீடு தர வேண்டுமென்ற சட்டத்தைப் போட்டிருக்கிற அரசு, கலைஞருடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

அதுமட்டுமல்ல; நீதிமன்றத்திலே ஏதோ தவறாக நம்முடைய A.G. அவர்கள் சொன்னதாகக் குறிப்பிட்டீர்கள். அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்; அங்கே 65 சதவிகிதம் போக, மீதமிருக்கிற 35 சதவிகிதத்தில், 15 சதவிகிதம் N.R.I., வெளிநாட்டிலேயிருந்து வந்து படிக்கிற மாணவர்களுக்கு இருக்கிற இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீடு, காலங்காலமாக மத்திய அரசே, அங்கே இருப்பவர்களுக்குக் கொடுத்திருக்கிற இட ஒதுக்கீடு. ஆக, அந்த 15 சதவிகிதம் N.R.I. Quota போக, தனியார் கல்லூரிகளுக்கு இருக்கிற இடம் 20 சதவிகிதம்தான், இப்போது இந்த அரசினுடைய இந்த ஒப்பந்தத்தின்படி. அந்த 20 சதவிகிதத்திலேயும் இட ஒதுக்கீட்டைப் பின்பற்றப்படவேண்டுமென்று இங்கே வழக்கறிஞரும் சொல்லி, நீதிமன்றமும் அதைத் தீர்ப்பாகக் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, சிறுபான்மையினருடைய கல்லூரிகளிலே 50 சதவிகிதம் : 50 சதவிகிதம் என்றிருக்கிறது. இந்தச் சிறுபான்மையினர் என்று சொல்லிவிட்ட காரணத்தினால், 50 சதவிகிதத்திலே இட ஒதுக்கீடு கேட்கமுடியாது. அது சிறுபான்மையினருக்காக உள்ளது. ஆக, அந்த அடிப்படையிலேதான், இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அவர்களையும் அழைத்துப்பேசினோம். ஏனென்று சொன்னால், அவர்களும் தனியார் கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு மோதல் போக்கை அனுமதித்துக் கொண்டிருப்போம் என்றால், பாதிக்கப்படுவர்கள் மாணவர்களும், ஆசிரியர்களும்தான். இவ்வளவு பேசுகிறீர்களே; கடந்த காலத்திலே court–இலே எத்தனை case? யாரையாவது படிக்க விட்டீர்களா? பெற்றோரும், அவனுமாக case என்று அலைந்து கொண்டிருந்தார்கள். இந்த வருடம், ஏதாவது ஒரு case இருக்கிறதா, பார்த்தீர்களா? இதுதான் கலைஞர் ஆட்சியினுடைய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள தீர விசாரித்து, சட்டம் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தோம். அதனாலே அனைவரையும் அழைத்துப் பேசி, ஒரு consensus, அவர்களோடு ஏற்படுத்திக்கொண்டு, அவர்களும மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டைக் கொடுத்து, அதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்களே ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஒரு 10, 15 கல்லூரிகளிலேதான் இருக்கிறது என்று. அந்த 10, 15 கல்லூரிகளிலே இருக்கிற போட்டி; அந்தப் போட்டியின்



விளைவாகத்தான், அந்தக் கல்லூரிகளிலேயும் இன்றைக்கு 65 சதவிகித இட ஒதுக்கீடு நமக்குக் கிடைத்து, பொதுவாக தேர்வு எழுதுகிற மாணவர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறதே. அது அதிகரிக்கவில்லையா? இதை மறுக்க முடியுமா? நீங்கள் சொல்கிற அந்த 10, 15 கல்லூரிகள், Standard Colleges, அவற்றிலே உங்கள் காலத்திலே கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீடு 50 சதவிகிதம். அவர்களுக்கு 50 சதவிகிதம். அரசாங்கத்திற்கு 50 சதவிகிதம். ஆனால், இன்றைக்கு அரசாங்கத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற மாணவர்கள் 65 சதவிகிதமாக, அந்த மேம்படுத்தப்பட்ட கல்லூரிகளிலே இடம் கிடைக்கிறதே, யாருடைய சாதனை? (மேசையைந் தட்டும் ஒலி) சாதாரண கிராமப்புறத்திலேயிருந்து வருகிற அந்த மாணவனுக்கு, அதுபோன்ற உயர் கல்லூரிகளிலே இடம் கிடைத்திருக்கிறதே, சாதனையா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் செய்துவிட்டுக் கேட்டிருந்தால், குறைந்தபட்சம் முயற்சி எடுத்திருந்தால்கூட வரவேற்கலாம். எந்த முயற்சியும் எடுக்காமல், எதையுமே செய்யாமல், அவர்களையே நீதிமன்றத்திற்குச் செல்லத் தூண்டிவிட்டுவிட்டு, தொடர்ந்து குழப்பத்தை உருவாக்கிக் கொண்டிருந்தீர்கள். பெற்றோர்களும், மாணவர்களும் நீதிமன்றங்களுக்கு அலைந்து கொண்டிருந்தார்கள். அதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், அவர்களை அழைத்துப் பேசி, இந்த முடிவுகள் எடுக்கப்பட்டு, இன்றைக்கு மாணவர்களுக்கான இந்த ஒதுக்கீடுகளும் கிடைத்திருக்கின்றன.

நிச்சயமாக நீங்கள் சொன்னதைப் போல, காலியிடங்கள்—காலியிடங்கள் இருப்பது என்பது கல்லூரிகளுடைய தரத்தைப் பொறுத்தது—அந்தத் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சியையும் நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதையெல்லாம் பின்னர் குறிப்பிட இருக்கிறேன்; பதிலுரையில் குறிப்பிடவிருக்கிறேன். ஆகவே, இந்த அரசு எடுத்திருக்கிற முயற்சிகளை நிச்சயமாக இங்கே மட்டுமல்ல; எல்லா மாநிலங்களிலேயிருந்தும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி அவர்களை ஏற்க வைத்தீர்கள்; எங்களுக்கெல்லாம் சொல்லிக்கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் குறிப்பிடும்போது, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பின்பற்றப்பட்ட கொள்கைகளையும், தி.மு.க. ஆட்சியிலே பின்பற்றிவருகின்ற கொள்கைகளையும் பற்றி விவாதித்தார்கள். ஒரு வேடிக்கை என்னவென்றால், அவர் அமைச்சராக இருக்கின்ற காலத்திலே, உச்ச நீதிமன்றத்திலே, சுயநிதிக் கல்லூரிகளில் 100 சதவிகித இடங்களையும் அவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கவில்லை. ஆனால், இந்த ஆண்டுதான் சுயநிதிக் கல்லூரிகள் உச்ச நீதிமன்றத்திற்குப்போய், அவர்கள் மனு செய்து வாதாடிய நேரத்தில், 100 சதவிகித இடத்தையும் அவர்களே நிரப்பிக் கொள்ளலாம் என்ற ஒரு நிலை ஏற்பட்டபோதுதான், 100 சதவிகிதமும் அவர்களுக்கே கொடுத்துவிட்டால், ஏழையெளியவர்கள் என்ன செய்வது என்பதை எண்ணிப் பார்த்து, மாண்புமிகு நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், முதல்வரோடு கலந்து பேசி, அந்த சுயநிதிக் கல்லூரிகளுடைய உரிமையாளர்களையும் அழைத்துப் பேசி, ஒரு சமாதானமான முடிவுக்கு வந்தோம். இது எங்கேயும் குறை சொல்லப்படவில்லை. மற்ற மாநிலங்களிலே எல்லாம் இன்னும் திணரிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றைச் சொன்னார்; ஒரு 10, 15 கல்லூரிகளிலே கொள்ளை அடிக்கிறார்கள் என்று சொன்னார். அந்தக் கொள்ளை தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு அல்ல; பல ஆண்டுக் காலமாக, தரமுள்ள கல்லூரிகள், அந்தக் கொள்ளையை அடித்துக்கொண்டுதான் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி.

*முற்பகல் 11–35*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்தில் மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் பல்வேறு கேள்விகளைக் கேட்டதற்கு இரண்டு அமைச்சர் பெருமக்கள் சரியான விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள குறிப்பிட்டது மாதிரி, கடந்த காலங்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய



10, 12 சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் கட்டணம் என்ன வாங்கப்பட்டது; இப்போது அதற்குக் கூடுதலாக வாங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிற அதேவேளையில், யார் இதைப்பற்றிப் பேச வேண்டும்? இதே மாமன்றத்தில், பல முறை கல்விக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள்; கடந்த கால அரசு துணை போய்க் கொண்டிருக்கின்றது என்று பலமுறை நாங்கள் வாதாடினோம். அதையெல்லாம் பார்த்துக்கொண்டு, வேடிக்கைப் பார்த்துக்கொண்டு, அந்தக் கொள்ளையர்களை ஊக்குவிப்பவர்கள், ஊக்குவித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது கல்விக் கட்டணம் கூடுதலாக இருப்பது என்று பேசுவது, எந்தவகையில் பொருத்தமாக இருக்கிறது என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; அந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு அவர்கள் என்ன முயற்சி எடுத்தார்கள்? எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த முயற்சியும் எடுக்காத கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியிலே பொறுப்பிலே இருந்தவர்கள், இப்போது கல்வியிலே ஒரு புத்துணர்ச்சியை, பொற்காலத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கேள்வி கேட்பது, விந்தையாக இருக்கிறது; வேடிக்கையாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம், நீங்கள் 24 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) விரைவாகப் பேசி முடியுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, நான் முதலிலே விடையளிக்கத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கால அவகாசம் கொடுத்தால், அவர்கள் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் தெளிவாக பதில் சொல்ல, திராணி உள்ளவனாக நான் இருந்து கொண்டிருக்கிறேன். முதலிலே நீங்கள் கேட்ட கேள்வி, நீங்கள் கேட்ட கேள்வி, 'நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ஒற்றைச் சாளர முறையை நீங்கள் கடைப்பிடித்தீர்களா? இட ஒதுக்கீட்டை நீங்கள் கடைப்பிடித்தீர்களா' என்று கேட்டீர்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன். உங்களுடைய துறையினுடைய அதிகாரிகளை அழைத்து, 2003–லே அன்றைக்கு அம்மாவினுடைய அரசு, ஓர் அரசாணை போட்டிருக்கின்றதே, அந்த அரசாணையின்மூலம், அந்த இரண்டாண்டுக் காலம், இட ஒதுக்கீடுகளில் மாணவர்களைச் சேர்த்தார்களா இல்லையா என்பதை

இங்கே உட்கார்ந்திருக்கின்ற உங்கள் அதிகாரிகளை இப்போதேகூட கேட்டாலும் உங்களுக்குத் தெரியும். அரசு ஆணை 22, அரசு ஆணை 23. முதன்முதலிலே இந்தியாவிலேயே கல்லூரிகளிலே கல்வி நிலையங்களிலே 69 சதவீத இட ஒதுக்கீட்டைத் தர வேண்டுமென்று இந்த மன்றத்திலே சட்டத்தை இயற்றி, 9 வது அட்டவணையிலே சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் 1996...(குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு) இருங்கள்; நீங்கள் சொன்னீர்கள்; நான் சொல்ல வேண்டுமில்லையா? பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, management quota-விலே கொடுக்க வேண்டும். 69 சதவீதம் இருக்கிறது என்பது கல்லூரிகளுடைய இட ஒதுக்கீடுகளில் கொடுக்கின்ற இட ஒதுக்கீடு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம், உட்காருங்கள். அமைச்சர் எழுந்திருந்து பதில் சொல்ல ஆரம்பித்தால், உட்கார வேண்டும். அதுதான் மரபு. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஏன் அவசரப்படுகிறீர்கள்? விவரம் இருந்தால் சொல்லுங்கள். தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கிய 50 சதவீத இட ஒதுக்கீடு, அதிலேதான் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டதே தவிர, அவர்களுக்கான management quota-விலே இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. Challenge பண்ணுகிறேன். எந்தக் கல்லூரியினுடைய record–ஐயும் கொண்டுவந்து தருகிறேன். அதற்கு இப்போது இருக்கிற முன்னாள் அமைச்சர் பொறுப்பேற்றுக்கொள்கிறாரா? சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) விரைவாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் தருகிறேன். அவ்வளவுதான். நேரம் ஆகிவிட்டது.

**திரு. சி.வி. சண்முகம்:** என்னை முழுமையாகப் பேச விட மாட்டேன் என்கிறீர்கள். முழுமையாகப் பேசினால், அவருக்கு முழுமையாக பதில் சொல்லிவிடுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் தருகிறேன். முடியுங்கள்.



**திரு. சி.வி. சண்முகம்:** அவர் பதில் சொல்லப் போகிறார். அவர் பதில் சொல்லப் போகிறார். ஒரு மணி நேரம் பதில் சொல்லப் போகிறார்கள், சொல்லட்டும்; சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள் சீக்கிரம். நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடப் போகிறேன்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–லே 69 சதவீதம் இட ஒதுக்கீட்டிற்கான சட்டம் இயற்றி—1993–லே நாங்கள் சட்டம் இயற்றினோம். 1996–லேயிருந்து 69 சதவீத இட ஒதுக்கீட்டை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்காக சட்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** சட்டமே இப்போதுதான் கொண்டு வந்திருக்கிறோம் தனியார் கல்லூரிகளுக்காக. சட்டமா இயற்றியிருக்கிறீர்கள்? சட்டமா இயற்றியிருக்கிறீர்கள்? சட்டம் எங்கே இயற்றினீர்கள்? (குறுக்கீடுகள்) பேசவேண்டும் என்பதற்காகத் தவறாகச் சொல்லாதீர்கள் ஐயா, தவறாகச் சொல்லாதீர்கள் ஐயா!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், உட்காருங்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உறுப்பினர்கள், உட்காருங்கள் முதலிலே.

**மாண்புமிகு டாக்டர் க பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஏன் பேசுகிறார்? பேரவைத் தலைவர் அவர்களே, 69 சதவீதம் வேண்டுமென்று... (குறுக்கீடுகள்) என்ன? என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அவருக்கு, பதில் சொல்ல வேண்டுமில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருகிறீர்களா? இல்லையா? உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *அவர் மட்டும் என்னைப் பார்த்துப் பேசலாமா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள் எல்லோரும்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *அவர்மட்டும் என்னிடம் கத்தும்போது...(குறுக்கீடு)*

*முற்பகல் 11–40*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையை நீட்டிப் பேசக்கூடாது, உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) உறுப்பினர் சின்னராஜ், கையை நீட்டிப் பேசுவது மரபல்ல, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைச்சர் தந்த பதிலுக்கு, உண்மைக்கு மாறாக இந்த அவையில் ஒரு தகவலைக் கொடுத்தால்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அதற்கு மறுப்புச் சொல்லக்கூடிய பொறுப்பும், கடமையும் அமைச்சருக்கு இருக்கிறது. ஆகவே, அமைச்சர் சொல்கிறபோது, அவர்கள் உட்கார வேண்டும். அதற்குப் பின்பு, அவர்கள் விளக்கம் சொல்லலாமே தவிர, மற்றவர்களெல்லாம் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். உறுப்பினர்கள் உட்கா ருங்கள், முதலிலே.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அப்பொழுது நாங்களெல்லாம் எழுந்து நிற்கக்கூடாதா? நாங்களெல்லாம் ஆளுங்கட்சியிலே இருக்கிறோம். பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருக்க வேண்டுமா, கையைக் கட்டிக்கொண்டு? அவர்களுக்குத்தான் தெரியுமா? (குறுக்கீடுகள்) என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், உட்காருங்கள். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா? நடவடிக்கை எடுக்க வேண்டுமா? உட்காருகிறீர்களா? நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள், முதலிலே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. ஜெயக்குமார். நீங்களெல்லாம் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். முதலிலே அதை உணர்ந்து கொள்ளுங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் உங்களுடைய control-இல் இல்லையா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே ஐந்தாண்டுக் காலம் நான் எதிர்க்கட்சி உறுப்பினர் வரிசையிலே உட்கார்ந்து பேசியிருக்கிறேன். பேசுகிறபோது, அமைச்சர்கள் பதில் சொல்கிறபோது, நாங்கள் அமர்ந்துதான் பழக்கப்பட்டிருப்பவர்கள். நான் பதில் சொல்கிறபோது, அமரவேமாட்டேன் என்று, என்னைப் பார்த்து அவர் கையைக் காட்டி, 'நீ எப்படிப் பேசலாம்? உட்கார்' என்று சொன்னால், நாங்கள் பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, முதலில், உங்கள் உறுப்பினர்களிடம், அமைச்சர்கள் எழுந்து பேசினால், உட்கார வேண்டும் என்ற அந்த மரபைக் கடைப்பிடிக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர்களாகப் பலபேர் இருந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே பல அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். உறுப்பினர்கள், நாங்கள் இங்கே இருக்கிற பலர், எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்திருக்கிறோம். பேசுகிறபோது, அமைச்சர்கள் பேசுகிறபோது, நாங்கள் எழுந்து பதில் சொல்ல முற்படுகிறபோது, உட்கார வேண்டாமா? (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், நின்று கொண்டே மிரட்டிப் பார்க்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் மிரட்டுகிறீர்கள். இதற்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் கிடையாது. நீங்கள் முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். அதைத்தான் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர்கள் அவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டுமே தவிர, ஒருவரையொருவர் பார்த்துப் பேசக்கூடாது. முதலில் திரு. ஜெயக்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் என்னிடம் பேசவேண்டாம். பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் ஏன் என்னிடம் பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் அமைதி காக்கவில்லையென்றால், நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டீர்கள், உட்காருங்கள் என்று திரு. ஜெயக்குமார் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து பேரவைத் தலைவர் ஆணையிட்ட பிறகும், உறுப்பினர் உட்காரவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் எழுந்து, அந்த மூலையிலேயிருந்து, இங்கே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கையை நீட்டி, ஏதோ பேசுகிறார். அவர் எந்த அடிப்படையிலே பேசுகிறார்? அவருக்கு என்ன உரிமையிருக்கிறது? நீங்கள் இதை அனுமதித்தால், இந்தச் சட்டப்பேரவையை எப்படி ஒழுங்காக நடத்த இயலும்? ஆகவே, விதிப்படி சட்டமன்றத்தை நடத்துவதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், முதலிலே. நான் அறிவிப்புச் சொல்கிறேன். உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of order. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவைத் தலைவரைப்



பார்த்துத்தான் பேசவேண்டுமே தவிர, ஓர் உறுப்பினர் மற்றோர் உறுப்பினரைப் பார்த்துப் பேசவோ, கையை நீட்டிப் பேசவோ கூடாது. இந்த மாதிரி நடவடிக்கையில் ஈடுபட்டால், நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். முதலில் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். I am not permitting you. Sit down. திரு. சண்முகம், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். திரு. சண்முகம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் இப்போது கொண்டுவந்த சட்டத்தை நான் சொல்லவில்லை. இப்போது நீங்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள், இல்லையென்று சொல்லவில்லை. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை முழுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். அதற்குள்ளே நீங்கள் கோபப்பட்டுப் பேசினால் எப்படி? நான் சொல்ல வந்தது, 1993–லே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 69 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, அதை 9–வது அட்டவணையிலே சேர்த்து, இன்றைக்கு அது உச்ச நீதிமன்றத்திலே இன்றுவரை நிலுவையில் இருக்கின்றது. அந்தச் சட்டத்தைத்தான் நான் சொன்னேன்.

முற்பகல் 11–45

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 69 சதவிகிதம் என்ற அந்தச் சட்டத்தை இந்த அவையிலே அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கொண்டுவந்ததாகச் சொன்னார்; உண்மை. அந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்காக, திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும் எனக்குத் தெரியும். அந்த முயற்சியினுடைய வெற்றிக் கனியாக அந்தச் சட்டம் இங்கே வந்தது. அந்தச் சட்டம் வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும்கூட அதை ஆதரித்து, இங்கு மாத்திரமல்ல; எல்லா

மாநிலங்களிலும் அந்தச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்று, எல்லா
மாநில முதலமைச்சர்களுக்கும் நான் அப்பொழுது எதிர்க்கட்சியிலே
இருந்து கடிதம் எழுதினேன். எழுதியது மாத்திரமல்ல; எல்லா
மாநிலங்களிலும் சாதி அடிப்படையிலே, சமூக அடிப்படையிலே
பெரும்பான்மையாக இருக்கின்ற சமூகத்தினருக்குப் பிரதிநிதித்துவம்
கொடுப்பதற்கு, மத்திய சர்க்கார் மாத்திரம் போதாது; ஒவ்வொரு
மாநில அரசும், அந்த அரசுகளேதான் அந்த உரிமையை
எடுத்துக்கொள்ளவேண்டும்; அப்படிச் சட்டத்தைத் திருத்தவேண்டும்
என்றுகூட நான் அதில் எழுதினேன். 69 சதவிகிதம்
கொண்டுவரப்பட்டபோது, ஆதரித்தேன், கழகத்தின் சார்பில்
ஆதரித்தோம். எல்லோரும் ஆதரித்தார்கள். இங்கே அமர்ந்திருக்கின்ற
எல்லாக் கட்சித் தலைவர்களும் ஆதரித்தார்கள். ஆனால், உச்ச
நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தபோது, அந்த வழக்கு 69 சதவிகிதம்
என்பதை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளப்பட்டு, 69—ஐ adjust செய்கின்ற
நிலைமை, இன்றைக்குப் பல ஆண்டுக் காலமாக தமிழ்நாட்டிலே
இருந்துவருவதை மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள்
நன்கு அறிந்திருப்பார்கள் என்றே நான் நம்புகின்றேன். அது ஏன்
ஏற்பட்டது என்பதுதான் ஒரு தமாஷ். எப்படி ஏற்பட்டது என்றால்,
அந்த 9-வது Schedule திருத்தப்பட்டது, அதை உச்ச நீதிமன்றத்திலே
அன்றைய தமிழக அரசினுடைய வழக்கறிஞர் எடுத்துச்சொல்ல
மறந்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி மறந்துவிட்ட
காரணத்தால், எவ்வளவு வேடிக்கையான மறதி பாருங்கள்.
மறந்துவிட்ட காரணத்தால் அந்த 69 சதவிகிதம்
நிலைநாட்டப்படவில்லை என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க
வேண்டுமென்று முன்னாள் கல்வி அமைச்சர் அவர்களை நான்
கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்
(குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவான
விளக்கத்தை உங்கள் point-க்குச் சொல்லிவிட்டார்கள். அடுத்த
உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்
திரு. பன்னீர்செல்வம்.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத்
தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 34 நிமிடங்கள் நீங்கள்
எடுத்திருக்கிறீர்கள். உங்கள் பேச்சிலே 34 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம்.



***திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
வர்களே, (குறுக்கீடு) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில்,
காழி தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக வருவதற்கு...
றுக்கீடு)

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே...

**திரு. எம். பன்னீர்செல்வம்:** சீர்காழி தொகுதியிலிருந்து இரண்டாவது
றையாக வருவதற்கு வாய்ப்பினை அளித்திட்ட...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், ஒரே வார்த்தையில்
முடியுங்கள். ஒரே வார்த்தையிலே சொல்லிவிட்டுப் போங்கள். (குறுக்கீடு)
ஒரே வார்த்தையிலே முடியுங்கள். திரு. சண்முகம், ஒரே வார்த்தையிலே
முடியுங்கள். (குறுக்கீடு) இப்போது time என்ன ஆகிறது என்று பாருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான்
இதுவரையிலும் தவறாக எதையும் சொல்லவில்லை. இருக்கிறதைத்தான்
நான் சொல்கிறேனேதவிர, தவறாக எதையும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 34 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக
அவர் புரிந்துகொண்டு பேசினதால்தான் நான் எதிர்த்தேன். 69
சதவிகிதத்தை ஏன் இதுவரையிலும் கடைப்பிடிக்கவில்லை என்று
சொல்லுகின்றார்கள். உச்ச நீதிமன்றத்திலே இன்றைக்குச்
சொல்லப்பட்டிருக்கின்ற தீர்ப்பு, 50%—க்கு மேலாக இட ஒதுக்கீட்டை
எந்த அரசாங்கமும் தரக்கூடாது என்ற உச்ச நீதிமன்றத்
தீர்ப்பின் அடிப்படையிலே, 9—வது அட்டவணையிலே இது
சேர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அம்மா அவர்கள், உச்ச
நீதிமன்றத்திலே அந்த வழக்கு சட்டச் சிக்கல்களுக்குள்ளே போகாமல்,
அந்த மாணவர்களுக்கு 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு
கிடைக்கவேண்டுமென்று உறுதி செய்யவேண்டுமென்ற காரணத்தால்,
ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக, அந்த 69 சதவிகிதத்திற்கான
கூடுதலான இடங்களை ஒதுக்கீடு செய்து, இன்றுவரை புரட்சித்
தலைவி அம்மா அவர்கள் அந்த 69 சதவிகிதம் ஒதுக்கீட்டைக்
கடைப்பிடித்து வந்தார்கள்; வந்திருக்கின்றார்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்...(குறுக்கீடு) இருங்கள், நான் பேசுகிறேன், உட்காருங்கள், (குறுக்கீடு) தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன்; அவரை உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், திரு. சண்முகம், முதல்வர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அடுத்தது, அமைச்சரும் சொல்லிவிட்டார்கள். நீங்கள் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருந்தீர்களானால், நான் allow பண்ணமாட்டேன். அமைச்சர் சொல்லுங்கள், அமைச்சர் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லிவிடுகிறேன், திரு. பீட்டர் அல்போன்ஸ், இருங்கள். சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு' பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், அமைச்சர் நிற்கிறார். அமைச்சர் பேசட்டும். அமைச்சர் பேசட்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது சொன்னார்கள். அதிகாரிகளையெல்லாம் கேட்டுப்பாருங்கள் என்று சொன்னார். என்ன சொன்னார்? '2003—லே எங்கள் அம்மா G.O. போட்டார்கள்' என்று சொன்னார். அடுத்து உடனே, நான் 'நிர்வாக ஒதுக்கீட்டில் போட்டிருக்கிறார்களா' என்று கேட்டவுடனே, 'எங்கள் அம்மா 1997—லே 69 சதவிகிதம் கொடுத்தார்கள்' என்று சொல்கிறார். ஒரு உறுப்பினர் பேசுகின்றபொழுதே, இவ்வளவு contradictory-யாக, தெளிவில்லாமல் பேசினால் என்ன பண்ணமுடியும்? நான் கேட்ட கேள்வி, 'தனியார் கல்லூரிகளுக்கும் இட ஒதுக்கீடு கொடுக்கச்சொல்லி எங்கள் அம்மா ஆட்சியிலே, 2003—லே போட்டுவிட்டோம் என்று சொன்னீர்கள் அல்லவா; அதிலே தனியார் கல்லூரிகளிலே அரசு ஒதுக்கீட்டில் இட ஒதுக்கீடு எல்லாம் சொல்லியிருக்கிறீர்களே தவிர, management quota -க்கு என்று கிடையாது; போடவில்லை; அதுதான் நடந்தது' என அதைத்தான் நான் கேட்டேன். அதை விட்டுவிட்டு, உடனே அதை அப்படியே பண்ணிவிட்டு, 'நாங்கள் 1993—இல் 69—க்குப் போனோம்' என்று சொன்னது — உங்களுக்கு இருக்கிற பதிலை ஒழுங்காகச் சொல்லுங்கள்; தெளிவாகச் சொல்லுங்கள்.



**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான விவாதம். அட்டவணை 9—ல் சேர்க்கப்பட்டது, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாப்பதற்காக என்று அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரேயொரு கேள்விதான் கேட்டார். அந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றிய தகவலை, உச்ச நீதிமன்றத்தில் சொன்னீர்களா, சொல்லவில்லையா என்று கேட்டார். அதற்கு பதில் சொல்வதைவிட்டுவிட்டு, 'கும்பகோணத்திற்கு வழி கேட்டால், கொட்டைப்பாக்கு இன்ன விலை' என்று சொல்லி, இவர்கள் யாரை ஏமாற்ற நினைக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் குறிப்பிட்டதுபோல, அன்றைக்கு 1993 ஆம் ஆண்டில் இதே அவையிலிருந்து கேட்டேன். நீங்கள் ஏன் இதை உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்று கேட்டபோது, அன்றைக்கிருந்த அமைச்சர், 'இப்போது என்னிடம் விவரம் இல்லை; நாளை சொல்கிறேன்' என்று சொன்னார். அப்போதே சொன்னேன்; 'இன்று போய் நாளை வா!' என்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம்.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. நான் உங்களுக்கு நிறைய time கொடுத்துவிட்டேன். Not allowed. (குறுக்கீடு) 40 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. (குறுக்கீடுகள்) திரு. பன்னீர்செல்வம், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் சீர்காழி தொகுதியிலிருந்து, இரண்டாவது முறையாக வருவதற்கு வாய்ப்பினை அளித்திட்ட உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழினத்தின் ஒரே தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உறுதுணையாக இருக்கும் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், வருங்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும்..(குறுக்கீடுகள்) எனது அரசியல் வழிகாட்டி சோழமண்டலத்தின் தளபதி மாண்புமிகு...

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) அனுமதியில்லை.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நாகை மாவட்டக் கழகச் செயலாளர், நாகை பாராளுமன்ற உறுப்பினர், திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கும்..(குறுக்கீடுகள்) எனது வெற்றிக்காக அரும்பாடுபட்டு, வெற்றி பெறச் செய்த...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** ஜனநாயகக் கூட்டணிக் கட்சியினுடைய முன்னணி நிர்வாகிகளுக்கும்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) எனக்குத் தெரியும், உட்காருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எம். பன்னீர்செல்வம்:** இயக்கத்தினுடைய சகோதரர்களுக்கும், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், ஒரே வார்த்தையிலே முடியுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலே, நிர்வாக ஒதுக்கீட்டிலே, இட ஒதுக்கீடு



கடைப்பிடிக்கப்பட்டதா என்று கேட்கின்றார். அதற்கு அரசாணை இருக்கிறது. நான் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன். உங்களுக்கு தைரியம் இருந்தால் நீங்கள் பொறுப்பேற்க தயாரா என்று நான் கேட்கின்றேன். நிர்வாக ஒதுக்கீட்டிலே 2003—லே,. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். கையை நீட்டிப் பேசினால் என்ன அர்த்தம் இது? என்ன மிரட்டல் அது? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இவ்வாறு கையை நீட்டிப் பேசுவது எல்லாம் வேண்டாம் திரு. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கையை நீட்டிப் பேசாதீர்கள் நீங்கள். முதலில் உறுப்பினர் கையை நீட்டிப் பேசக் கூடாது உட்காருங்கள். அமைச்சராக இருந்தவர்கள் நீங்கள் எல்லாம். (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், திரு. சண்முகம், கையை நீட்டிப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) முதலில் அந்தக் கையை மடக்குங்கள்.

*(மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் கையை மடக்கிவைத்துக் காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அப்படி வையுங்கள். (கூச்சல்—குழப்பம்) திரு. எம். பன்னீர்செல்வம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) பேசுங்கள். இதோ பாருங்கள், நான் அவையை அமைதியாக நடத்த வேண்டுமென்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். இதோ பாருங்கள், திரு. சண்முகம், இவ்வாறு கையை நீட்டிப் பேசுகிற வேலை வேண்டாம். உட்காருங்கள் முதலில். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவையை அமைதியாக நடத்த வேண்டுமென்று நினைக்கிறேன். (கூச்சல்—குழப்பம்) குழப்பம் செய்தீர்கள் என்றால், நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) நீங்கள் பேசி கிட்டத்தட்ட 43 நிமிடம் உங்களுடைய time ஆகியிருக்கிறது. பார்த்துக்கொள்ளுங்கள். தெரிகிறதா? (குறுக்கீடு) ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று சொல்லி பத்து நிமிடமாகிவிட்டது. (குறுக்கீடு) சொல்லி முடியுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மற்ற பிரச்சினைகளுக்குச் செல்லவில்லை. எது எதற்கோ அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தீர்கள். எது எதற்கோ அவசரமாக சட்டங்களைக் கொண்டு வந்த இந்த அரசு, சுயநிதிக் கல்லூரிகளிலே கட்டணங்களைக் குறைப்பதற்கு ஏன இதுவரை அவசரச் சட்டம்

கொண்டு வரவில்லை? அக்கறை இருந்திருந்தால், இந்த அரசு கொண்டு வந்திருக்கலாம். ஏனென்றால், கால அவகாசம் இல்லை என்று சொல்வீர்கள். ஆனால், பக்கத்திலே இருக்கின்ற கேரள மாநிலம் ஜூலை 2 ஆம் தேதி, புதிதாக அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குப் போனார்கள். உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள். மீண்டும் உயர் நீதிமன்றத்திற்குப் போனார்கள். அதற்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு, மீண்டும் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே, இன்றைக்கு அதிலே தீர்ப்பு வழங்குகிற நாளாக இருக்கிறது. ஆனால், இந்த அரசுக்கு மாணவர்கள்மீது அக்கறை இருந்திருந்தால், இந்த அரசு...

*முற்பகல் 11—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். பன்னீர்செல்வம் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக் கட்டண நிதியைப்பற்றி மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பேசுகிறார். நான் புள்ளிவிவரத்தோடு சொல்கிறேன். கடந்த கால ஆட்சியிலே பொறியியல் கல்லூரிகளிலே வாங்கப்பட்ட நிதி, கலைஞர் ஆட்சியிலே இருக்கிறபோது, பேராசிரியர் கல்வி அமைச்சராக இருக்கிறபோது 2001—2002-ல் அரசுக் கல்லூரிகளில் வாங்கப்பட்ட நிதி 2,550 ரூபாய். (குறுக்கீடு) Fees — கட்டணம். ஆனால் கடந்த கால ஆட்சியிலே, மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சருடைய காலத்திலே இது எவ்வளவு உயர்த்தப்பட்டது தெரியுமா? அரசுக் கல்லூரிகளிலே, 12,550 ரூபாயாக உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆயிரம் ரூபாய் அதிகம். மிக வேகமாக அவசரச் சட்டம் கேட்கிறீர்களே, 12,550 ரூபாய அரசுக் கல்லூரிகளிலே கட்டணம்.

அதுமட்டுமல்ல; இதே அரசுக் கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே— self-financing என்ற ஒன்றை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டார்கள்; அந்த self-financing-ஐ ஆரம்பித்து, அந்த self-financing கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே— வசூலிக்கப்பட்ட தொகை மட்டும் 37 ஆயிரம் ரூபாய்க்கு மேலே. Self-financing என்று போட்டு, ஒரு course அங்கே அரசுக் கல்லூரிகளிலே ஆரம்பித்து நடத்தச் சொல்லி, 37ஆயிரம் ரூபாய் வாங்கப்பட்டது. 2,550 ரூபாய் கல்லூரிக் கட்டணத்தை விதித்த தலைவர் கலைஞர் எங்கே? 12,550 ரூபாயை ஆதரித்துவிட்டு, நீங்கள் வந்து கட்டணத்தைப் பற்றிப் பேசலாமா? ஆனால், அதே தலைவர் கலைஞர்தான் தேர்தல்



அறிக்கையிலே சொன்னதைப்போல, இப்போது ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு—கட்டணத்தைக் குறைத்ததாக உங்களுக்கு வரலாறே கிடையாது—ஆனால் கலைஞர் அவர்கள், 12,550 ரூபாயிலிருந்து 5,550 ரூபாய் இன்று 7,550 ரூபாயாக, அந்தக் கட்டணத்தை குறைத்திருக்கிறார் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். பன்னீர்செல்வம், பேசுங்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் சீர்காழி தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக வருவதற்கு வாய்ப்பினை அளித்திட்ட, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழினத்தின் ஒரே தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்திட்ட கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், வருங்காலத் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசியல் வழிகாட்டி, சோழமண்டலத்தினுடைய தளபதி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நாகை மாவட்டக் கழகச் செயலாளர், நாகை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கும், எனது வெற்றிக்காக அரும்பாடுபட்டு உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளினுடைய முன்னணி நிர்வாகிகளுக்கும், இயக்கங்களினுடைய சகோதரர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியினை அவர்கள் பாதந்தொட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நடைபெறும் பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கைகளில் கலந்துகொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்திட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய வரலாற்றில், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்தின் அனைத்து சமூக மக்களின் நலனுக்காக ஒரு மிகப் பெரிய நிதிநிலை அறிக்கையைத் தந்து, அனைத்து சமூக மக்களும் பாராட்டும்வண்ணம் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்த

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை எனது சீர்காழி தொகுதி மக்களின் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், நான் சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தேர்தல் வாக்குறுதிகளைச் சொல்லி வாக்குகளைச் சேகரித்த சமயத்தில், சிலபேர், உங்களால் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி போட முடியுமா, முடியவே முடியாது என்றுகூட சொன்னார்கள். மாறாக, தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிதிநிலை அறிக்கையாகத் தந்து, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்திற்கு இரண்டு முட்டை; விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் அறவே இரத்து; ஏழைப் பெண்களினுடைய திருமண உதவித் தொகை 15,000 ரூபாயாக உயர்வு; கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் 1,000 வீதம் 6,000 ரூபாய்; வேலையில்லா படித்த பட்டதாரிகளுக்கு மாதா மாதம் உதவித் தொகை; முதியோர் உதவித் தொகை 400 ரூபாயாக உயர்வு; ஊனமுற்றோர் உதவித் தொகை 500 ரூபாயாக உயர்வு; விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் பல்வேறு சலுகைகள்; அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்கள்; இதுபோன்று பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து அனைத்து சமூக மக்களின் பாராட்டுக்களைப் பெற்றார்கள்.

நண்பகல் 12–00

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையைத் தொடர்ந்து, ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, "தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை" என்ற நிலையைப் போக்க, அனைத்து மாணவர்களும் கட்டாயமாகத் தமிழ் மொழியைக் கற்பதற்கான சட்டத்தை இயற்றி, அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதலாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிப்படியாக, தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக வெளிப்படையான கலந்தாய்வு முறையினைக் கொண்டுவந்து மாறுதல் வழங்குவதால் ஆசிரியர்கள் பாராட்டுகிறார்கள்.

கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மாணவர்கள் இலவச bus pass திட்டத்தையும், கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தையும் நமது தலைவர் கலைஞர் அரசு



தொடர்ந்து நிறைவேற்றுவதைப் பள்ளி மாணவ மாணவிகளின் பெற்றோர்கள், மாணவ மாணவிகளும் பாராட்டுகிறார்கள். கடந்த கால ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து வேலை கிடைக்காமல் செய்தார்கள். ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இரண்டு மாதத்திற்குள்ளாகவே, அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள கிட்டத்தட்ட 8,468 ஆசிரியர் பணியிடங்களைக் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்புவதற்கு ஆணையிட்டு, நடவடிக்கை எடுத்து, வேலைவாய்ப்பு வழங்குவதை அனைத்து சமூக மக்களும் பாராட்டுகிறார்கள்.

மேலும், ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் பள்ளிகள் ஏதும் இல்லாமலிருந்து, 300–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ள சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளி அமைக்க இருப்பது, எதிர்கால சந்ததியினர், கல்வி அறிவினைப் பெற்றிட வழிவகை செய்திருப்பது, பாராட்டுக்குரிய திட்டமாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே நூறு விழுக்காடு மாணவர் சேர்க்கை என்ற இலக்கை எய்திய முதல் மாநிலம் என்ற குறிக்கோளை அடையும் நோக்கில், அனைத்துக் குழந்தைகளையும் 2007 ஆம் ஆண்டுக்குள் பள்ளியில் சேர்க்க உறுதி எடுத்துக்கொண்டிருப்பது, நாட்டு மக்கள் அனைவராலும் பாராட்டப்படக்கூடிய முன்னோடி திட்டமாகும்.

2006–2007 ஆம் ஆண்டு திட்டத்தில், 126 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட இருப்பதும், 234 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த இருப்பதும், பள்ளியே இல்லாத குடியிருப்புகளில் 234 கல்விக் காப்புறுதி மையங்களை ஆரம்பிக்க இருப்பதும், தலைவர் கலைஞர் அவர்கள், எல்லாக் குழந்தைகளும் கல்வியைப் பெறவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உடையவர் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளிகள் எதுவுமே இல்லாமல் இருந்து, அந்த எல்லைக்குள் செயல்படும் நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது என்பது, தலைவர் கலைஞர் அவர்கள் எல்லோரும் கல்வியைப் பெறவேண்டும், யாரும் விடுபட்டுவிடக்கூடாது என்பதிலே தெள்ளத் தெளிவாக உள்ளார்கள் என்பதை உணர்த்துகிறது. அதிக அளவு கிராமப்புற மாணவர்கள், ஆங்கிலப் பாடத்திலே தோல்வி அடைவதால, தங்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ள மாணவர்களுக்குப் பயனளிக்கும்வகையில், ஆங்கில அறிவைப் பெருக்கிட 900 ஆங்கில

மொழி ஆய்வகங்களை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைவர் கலைஞர் அரசு நிறுவியுள்ளது என்பது மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடியது. கிராமப்புற மாணவர்களின் திறனை மேம்படுத்த, ஒவ்வோராண்டும் ஒவ்வோர் மாவட்டத்திற்கும் திறனறிவு தேர்வு நடத்தப்பட்டு, 50 மாணவர்கள், 50 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் ஆயிரத்தை நான்கு ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து வழங்கப்பட இருப்பது, மாணவர்களை ஊக்கப்படுத்தி, படிக்க வழிவகை செய்கிறது.

உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரை, பொறியியல் கல்லூரி படிப்புகளுக்கான சேர்க்கை முறையில், கடந்த ஆட்சியில் நிலவிவந்த குழப்பத்தைத் தடுத்து நிறுத்தி, ஒற்றைச் சாளர முறையில் முன்பிருந்த 39,000 இடங்களைவிட, இப்போது கூடுதலாக 13,000 இடங்களைப் பெற்றுத் தந்து, மொத்தமாக 52,000 மாணவர்களுக்கு இடம் கிடைக்கச் செய்தது, மாணவர்களுக்கு மேலும் பல ஆயிரம் பேர் பயனடைவதற்கு வழி வகுத்தது, பாராட்டுக்குரியது.

அதேபோன்று தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது, மாணவர்களுக்குப் பயனை அளிக்கிறது. கடந்த கால ஆட்சியில், அரசுப் பொறியியல் கல்லூரிகளில் பலமடங்காக உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணத்தைக் குறைத்து ஆணையிட்டிருப்பது, மேலும் ஏழை மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வசதியாக உள்ளது.

கிராமப்புற மாணவர்கள் படிக்கிறவகையிலே ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் அமைந்திட தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பது, பாராட்டுக்குரியது.

மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியதில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சீர்காழி தொகுதியில் கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய திட்டுப்படுகை நடுநிலைப் பள்ளி, தொடுவாய் நடுநிலைப் பள்ளி ஆகிய இரண்டையும் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திக் கொடுத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர்



அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், சீர்காழி தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—05

தொகுதிப் பிரச்சினை ஒருசிலவற்றைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். சீர்காழி நகராட்சியில் 24 வார்டுகள் உள்ளன. ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டது. சீர்காழி நகராட்சிப் பகுதியில் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளிகூடம் இன்றுவரை இல்லை. எனவே, அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்றை இந்த ஆண்டே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப, படிக்கும் மாணவர்களுக்கு சீர்காழி தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியிலே, நாகை மாவட்டத்திலேயே, மயிலாடுதுறையில் மட்டும்தான் ஒரு மகளிர் அரசுக் கலைக் கல்லூரி இருக்கிறது. ஆண்கள் கலைக் கல்லூரியோ அல்லது வேறு எந்த கலைக் கல்லூரியுமே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதி, பனங்காட்டாங்குடியில் (மணியடிக்கப்பெற்றது) உள்ள இராஜாத்தி அண்ணி உதவிபெறும் நடுநிலைப் பள்ளியை, அப்பள்ளியின் தாளாளரால் நடத்த முடியாமல், தாளாளரும் அரசிடம் ஒப்படைப்பதற்கு ஒப்புதல் கடிதம் தந்தும், இதுவரை அரசு, அந்த இராஜாத்தி அண்ணி உதவி பெறும் நடுநிலைப் பள்ளியை அரசுப் பள்ளியாக அறிவிக்கவில்லை; அதையும் அரசுப் பள்ளியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான், சென்ற முறை நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாவட்ட அரசு இசைப் பள்ளியைத் தந்தார்கள். அப்பள்ளி இன்னும் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. எனவே, ஒரு இடம் தேர்வு செய்து இசைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

சீர்காழி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் தொடங்க வேண்டுகிறேன். சிதம்பரத்திலிருந்து சீர்காழி,

மயிலாடுதுறையிலிருந்து சீர்காழி, தரங்கம்பாடியிலிருந்து சீர்காழி ஆகிய சாலைகள் அனைத்திற்கும் சீர்காழி மையப் பகுதியாக இருப்பதாலும், வாகன விபத்துகள் அதிகமாக சீர்காழி தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படுவதாலும், அவசியமாக அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இரண்டு, சீர்காழியிலிருந்து சென்னைக்கு விட வேண்டுகிறேன். இன்னும் இரண்டு, மூன்று மாத காலத்தில் இரயில் போக்குவரத்துகூட நிறுத்தப்பட இருப்பதால், சீர்காழியிலிருந்து சென்னைக்கு இரண்டு விரைவுப் பேருந்துகள் அவசியம் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

மேலும், கடந்தகால ஆட்சியில் சீர்காழி தொகுதியில் ஓடிக்கொண்டிருந்த பல அரசுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுவிட்டன. சீர்காழியிலிருந்து மாதானம் வழியாக சிதம்பரம் செல்லும் பேருந்து, சீர்காழியிலிருந்து புத்தூர் வழியாக பழையார் சென்ற நகரப் பேருந்து, சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்லும் நகரப் பேருந்துகள் இரண்டு, சீர்காழியிலிருந்து மகேந்திரப்பள்ளி செல்லும் நகரப் பேருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** கல்வி மானியம் மிகப் பெரிய மானியம். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் கல்வி சம்பந்தமாக மட்டும் இந்த மானியத்திலே பேசி, மற்றவற்றை அவர்கள் எழுதித் தருவார்களேயானால், அந்த வேண்டுகோள் அனைத்தும் அரசாங்கத்தால், அமைச்சர்களால் உரிய முறையில் பரிசீலிக்கப்படும். ஆகவே, அவற்றைப் பேசுவதற்கு நேரம் எடுத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னவருடைய கருத்தைக் கேட்டு, எழுதி வைத்திருக்கிறீர்கள் அல்லவா? அதைக் கொடுங்கள். அடுத்து... (குறுக்கீடு) முடியுங்கள், நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள், சீக்கிரம். நன்றி சொல்லுங்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பொறியியல் கல்லூரிகள் மேலும் இரண்டு மண்டலமாகப் பிரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அப்படிப் பிரிக்கின்றபோது அதன்



பெயரை அண்ணா பல்கலைக்கழகம் எனவும், அதன் நிர்வாகத்தின்கீழ் வருமாறு அறிவிக்க வேண்டும். ஏனென்றால் உலக அளவில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம். கோரிக்கை இருந்தால் எழுத்துமூலமாகக் கொடுத்து விடுங்கள், (குறுக்கீடு) Time இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர். (குறுக்கீடு)

**திரு. எம். பன்னீர்செல்வம்:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன். எனவே, சீர்காழி பகுதியில் இருக்கக்கூடிய, இன்னும் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளை விரிவாக்கம் செய்ய அவசியமாக... (குறுக்கீடு) இன்று எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 12—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர். உங்களுக்கு 7 நிமிடங்கள். நிறையப் பேருக்கு பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

**திரு. விடியல் எஸ். சேகர்:** 15 நிமிடங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கட்டுமே!

***திரு. விடியல் எஸ். சேகர்:** கல்வி ஒரு கடல். கல்வியைப் பற்றி அந்தக் கல்விக் கடலிலே நீந்தி வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஏற்படும். எனவே கருணைகூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள் கன்னிப் பேச்சுக்குக் கருணை காட்டவேண்டுமென்று கேட்டு, என் உரையைத் தொடங்குகின்றேன். தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் என்ற மாமனிதர், தான் படிக்காவிட்டால்கூட பரவாயில்லை; தான் வாழ்ந்த தமிழக மக்கள் படிக்க வேண்டுமென்பதற்காக, தமிழகத்திலே கல்விக் கண்ணைத் திறந்தார்கள். இப்போது தலைவர் கலைஞர் அவர்கள், கல்விக்குப் பொன்னைத் தந்திருக்கிறார்கள். கல்விக்கு இரண்டு பொன்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் உயர் கல்விக்குப் பொன்முடி, மறுபுறத்திலே பள்ளிக் கல்விக்குத் தங்கம் என்ற பொன்னைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி நல்ல பொன்னைக் கொடுத்திருக்கிற தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது தமிழகத்திலே, ஆரம்பக் கல்வியைத் தொடக்கப் பள்ளிகளிலேயே தரமான கல்வியாக வழங்கப்படவேண்டும். ஒரு கட்டடம் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு அஸ்திவாரம் பலம் பொருந்தியதாக அமையவேண்டும். கிராமப் பள்ளிகள், ஆசிரியர்கள் இல்லாமல், கட்டடங்கள் இல்லாமல், தரமற்ற கல்விக் கூடங்களாக பல ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். கிராமங்களிலே ஆசிரியர்களுக்குத் தக்க பயிற்சிகள் அளிக்கவேண்டும். கிராமப்புற மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியும் போதிய அளவு அளிக்கவேண்டும். கிராமங்களில் அரசுப் பள்ளிகளில், தரமான கல்வியைக் கொடுத்து, அவர்களை ஊக்குவித்து, பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 தேர்விலே அதிக மதிப்பெண்கள் பெற வைத்து, நகர்ப்புற மாணவர்களோடு, தனியார் பள்ளிகளிலே படிக்கிற வசதியான மாணவர்களோடு, போட்டியிடும் அளவுக்கு அவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்குப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆசிரியர்களின் வேலையைப் பயன்படுத்தாத எந்த நாட்டிலும் சிறைச்சாலைகள் அதிகம் இருக்கவேண்டும் என்று பாரதி எச்சரித்தார். எனவே, ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதிலே கருணை காட்டவேண்டும். 'அன்ன சத்திரம் ஆயிரம் கட்டலைக் காட்டிலும், ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம்' என்றார் பாரதி. அந்த பாரதியின் வாக்கிற்கு ஏற்ப, ஏழை மக்கள், எளிய மக்கள் காடுகளிலே, மேடுகளிலே, கழனிகளிலே கஷ்டப்படுகிற ஏழை எளிய விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், ஆதி திராவிட தலித் மக்கள் ஆகியோரின் குழந்தைகளுக்கு ஆண்டாண்டுக் காலமாக ஓர் ஏக்கம் இருந்துவருகிறது. தனியார் பள்ளி மாணவர்கள், coat-உம், suit-உம், shoe-வும் போட்டுக்கொண்டு போகிறபோது, அரசுப் பள்ளிகளிலே படிக்கிற மாணவர்கள் பார்க்கிற பார்வை; Road-இன் ஓரத்திலே ஓர் ஏழை, bus-க்காகக் காத்திருக்கிறபோது, சொகுசு A.C. Car-இலே செல்லுகின்ற தொழிலதிபரைப் பார்க்கிறபோது, ஏக்கப் பார்வையோடு பார்க்கிறான். அந்த ஏக்கத்தைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், ஏழை எளிய மாணவர்களின் வாட்டம் போக்குகின்ற அளவிலே, தரமான கல்வியை அஸ்திவாரமாக இருக்கிற ஆரம்பக் கல்விக்கு அளிக்க வேண்டும்.

ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பு வகிக்கின்ற, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக்குப் பொறுப்பு வகிக்கின்ற மாவட்டக் கல்வி அதிகாரிகள்தான், 25 ஆண்டுகளாகியும் 65 கல்வி மாவட்டங்களுக்கு இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு ஒரு மாவட்டத்திலே 40 பள்ளிகள் இருந்தபோதும், 65 D.E.O.-க்கள்தான்.



இன்றைக்கு 150, 160 பள்ளிகள் இருக்கிறபோதும், அதே D.E.O.-க்கள்தான் இருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய இரத்தத்தை உறிஞ்சுகின்றவகையிலே, A.E.O.-க்கள் தொடக்கக் கல்வி அலுவலர்கள் செயல்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்குத் தீர்வு காணவேண்டும். இன்றைக்கு ஒரு இலட்சம் மாணவர்களுக்கு, ஒரு இலட்சம் மக்களுக்கு 13 பள்ளிகள்தான் இருக்கின்றன. இது அதிகப்படுத்தப்பட வேண்டும். கல்வி ஏழைகளுக்கு எட்டாக் கனி ஆகிவிட்டது. அரசுப் பள்ளிகளை அதிகரிக்க வேண்டும். அதன் தரங்கள் உயர்த்தப்படவேண்டும். இந்த ஆண்டு நல்ல அறிவிப்பைத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 100 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும், 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது போதாது, இதை இரட்டிப்பாக்கவேண்டும். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று பேசுகிறோம். 1964 டிசம்பர் 29, கல்வி வரலாற்றில் முக்கிய நிகழ்வு. அன்றைக்கு தலைவர் காமராஜர் ஓர் அரசாணையை வெளியிட்டார்கள். அரசாணை எண் 250—ன்படி பள்ளிகளிலே ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இருக்கிற சதவிகித எண்ணிக்கையை 1:20 என்று தரமான கல்விக்கு வித்திட்டார்கள். அது காலப்போக்கிலே தடம் மாறி, தடுமாறி, இப்போது ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம் 1:40 ஆக இருக்கிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருக்கிற ஒரு கிராமப் பள்ளியிலே 40 மாணவர்கள் படித்தால், ஒன்று முதல் ஐந்து வகுப்புகளும் சேர்ந்து ஒரே ஒரு ஆசிரியர் என்று சொன்னால், எப்படி அவர்கள் கல்வி கற்பது? எப்படி அவர்களுடைய எதிர்காலத்தை வளர்த்துக்கொள்வது? எனவே, குறைந்தபட்சம் ஆசிரியர்கள் மாணவர்கள் எண்ணிக்கையை 1:30 ஆக ஆக்கி, தமிழ்வழிக் கல்வியை வாழ வைக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களிலே, 1—க்கு 20 என்ற சதவிகிதத்திலே உள்ளது. ஆனால் சென்னையிலே, கடந்த வாரத்திலே பத்திரிகையிலே ஒரு செய்தியைப் படித்தேன். சென்னை எழும்பூரிலே, டாக்டர் அம்பேத்கர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே, 100 மாணவர்கள் படிக்கின்ற பள்ளிக்கு 30 ஆசிரியர்கள். அதிலும் ஒரு வகுப்பிலே ஒரு மாணவனுக்கு ஓர் ஆசிரியர். ஏன் இந்த நிலை? ஏன் இந்த மாறுபாடு? களைய வேண்டுகிறேன். எனது தொகுதியிலே, கிராமங்களுக்குச் செல்லுகின்றபோது, பல ஆசிரியர்கள் திருநெல்வேலியிலிருந்தும், கன்னியாகுமரியிலிருந்தும் தொகுப்பூதிய ஆசிரியர்களாக 400 கி.மீ. தள்ளி

வந்து பணியாற்றுகிறார்கள். பக்கத்து மாவட்டத்திலேயே பணியமர்த்தினால், அவர்கள் வாழ்வுக்கு வழிவகுத்தமாதிரி இருக்கும். அரசுப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஏழை மாணவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்கும். கிராமப் பள்ளிகளிலே கட்டடங்கள் இல்லை. கழிப்பிடங்கள் இல்லை. நூலகங்கள் உண்டு. ஆனால், படிக்க இடம் இல்லை. நூலகங்களுக்கு இடம் இல்லாத காரணத்தாலே, அரசு வழங்குகின்ற நூல்கள், burcau-விலே தூசி படிந்து, தூங்கிக் கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். அந்த நூலகங்கள், அந்த நூல்கள் எப்பொழுது துயில் எழும் என்பதற்கு அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று பறை சாற்றி, நம் தமிழ் மொழியைச் செம்மொழியாக்கிய தியாகத் தலைவி அன்னை சோனியா காந்திக்கும், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், அதற்கு வித்திட்ட தலைவர் கலைஞருக்கும் உலகத் தமிழ் மக்கள், பலகோடி நன்றிகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தருணத்திலே Plus 2 மாணவர்கள். தாய்த் தமிழ்ப் பாடத்தில் மதிப்பெண்ணுக்குரிய மதிப்பு இன்றைக்கு 0 தான். நுழைவுத் தேர்வில் தமிழுக்கு உரிய மதிப்பெண்ணைக் கூட்டுவதில்லை. இதுகுறித்து சிந்திக்க வேண்டும். தமிழ் வளர்க்கும் முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தச் சிந்தனையை மனதிலே ஏற்ற வேண்டும் என்று இந்த மன்றத்திலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–15*

விளையாட்டைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். 'உடலை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்றார் திருமூலர். எனவே 250 மாணவர்கள் இருந்தால்தான், ஓர் உடற்கல்வி ஆசிரியர் என்ற நிலையை மாற்றி 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்காமல், ஓர் உடற்கல்வி ஆசிரியர் என்று நியமித்து அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டிலே கட்டாயப் பயிற்சி, தியானம், யோகா போன்ற பயிற்சி அளித்து இளமையில் செம்மையாக்கிட வேண்டுகிறேன்.

கடந்த ஆட்சியிலே காவல் துறைக்கு அதிக நிதி, புதிய காவல் நிலையங்கள். ஆனால் காமராஜர், தன்னுடைய "ஆட்சியிலே, கல்வி நிலையங்களைத் திறந்தார்; இது வரலாறு. அ.தி.மு.க. ஆட்சியிலே bar–உடன்கூடிய பிராந்திக் கடைகளை, இரவு 12 மணி வரை திறந்து வைத்து குடிக்கச் சொன்ன கொடுமையை இம்மாமன்றத்திலே பதிவு செய்கிறேன்.



அ.தி.மு.க. ஆட்சியிலே, எந்தத் தகுதியும் இல்லாமல், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், 250 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கும், 100 B.Ed. கல்லூரிகளுக்கும் அனுமதி கொடுத்தார்கள். அதிலே நடந்த பேரங்கள் எத்தனைக் கோடி? அதிலே நடந்த தில்லுமுல்லுகள் என்ன? எங்கே பணம் கையாடப்பட்டது? விசாரணைக் கமிஷன் அமைத்து, அரசு விசாரணை நடத்திட வேண்டும். 10 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்த, 10 B.Ed. கல்லூரிகள் இருந்த தமிழகத்தில், ஒரே ஆண்டிலே 250 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை வியாபார நோக்கோடு, விலை பேசுகிற நோக்கோடு விற்ற ஆட்சி, கடந்த அ.இ.அ.தி.மு.க.–வினுடைய ஆட்சி.

*1991 முதல் 1996 வரை கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே...(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் கன்னிப் பேச்சு பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், திரு. விடியல் எஸ். சேகர்.*

**திரு. விடியல் எஸ். சேகர்:** 1991 முதல் 1996 வரை கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே 100 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறந்து, அதிலே படித்த மாணவர்களை நடுத் தெருவிலே நிற்க வைத்து அலங்கோலம் செய்த ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி. அவர்களைக் கரை சேர்த்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கரை சேர்த்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு மறுவாழ்வு அளித்தார்கள். விசேஷப் பயிற்சி வைத்தார்கள். அதிலே விட்டுப்போனவர்கள், 750 பேர் இருக்கிறார்கள் Plus 2–விலே 45 சதவிகித மதிப்பெண்களுக்குக் குறைவாக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் விடுபட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் என்ன மறுவாழ்வு என்பதுதான் நம்முடைய கேள்வி. தமிழ்நாட்டிலே மேல்நிலைப் பள்ளிகளிலே தொழில் பயிற்சி ஆசிரியர்கள், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலே, காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. விடியல் எஸ். சேகர்:** அவர்களுக்கு, அந்தத் தொகுப்பூதிய காலத்தைக் கூட்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஒப்புதல் பெறாத பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் மூலமாக, தொழில் கல்வியிலே, 1996 முதல் பணியாற்றி வருகிற 500 காலமுறை ஊழியர்களுக்கு, பணி வாய்ப்பு வழங்கிட வேண்டுகிறேன்.

தொழில் கல்விக்கு உரிய புத்தகப் பற்றாக்குறையை நீக்க வேண்டுகிறேன். மாவட்டத்திலே தொடக்கக் கல்வி திட்டத்தின்மூலம் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாகப் பணியாற்றி வருகிற காது கேளாத, வாய் பேசாத, பார்வையற்ற, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கிற பயிற்றுநர்களுக்குப் பணி நியமனம் வழங்கிட வேண்டுகிறேன். மழலையர் பள்ளி ஆசிரியப் பயிற்சி முடித்தவர்களுக்கு, ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு ஆசிரியர்களாக நியமிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்கு, வேளாண்மை மானியத்திலே அறிவித்தபடி, பள்ளிகளிலே வேளாண்மைப் பாடத்தைக் கட்டாயமாக ஆக்க வேண்டுகிறேன். 'கைத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கிலை ஒத்துக்கொள்' என்பது முதுமொழி. அந்த முதுமொழிக்கேற்ப ஓவியம், தையல், இசை, கலை போன்ற தொழில் துறை ஆசிரியர்களைப் பள்ளிகளிலே நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலம் முழுவதும் ஆசிரியர்களுக்கு, அரசு ஆசிரியர்களுக்கு சம்பளத்தை, சலுகைகளை வங்கிகளின்மூலம் வழங்குவதைப்போல, தனியார் பள்ளிகளிலே, கட்டாயமாக வங்கிகள்மூலம் சம்பளம், சலுகைகள் அளிக்கிற திட்டத்தைக் கட்டாயமாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியிலே, சிறுபான்மை விரோத அ.தி.மு.க. அரசால் சிறுபான்மை பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிப்பது மறுக்கப்பட்டது. மறுக்கப்பட்ட முன்னுரிமைகளை, சலுகைகளைத் தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் வழங்குமாறு பணிவோடு இந்த மன்றத்திலே பதிவு செய்கிறேன்.

தமிழ்க் கல்வி போதிக்கும் சுயநிதிப் பள்ளிகளுக்கு, அரசு அனுமதி அளிக்கிறது. ஆனால், ஆசிரியர்களுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை. இதுகுறித்து தலைவர் கலைஞர் அவர்கள் யோசித்து, ஒரு நல்ல முடிவை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இது கணினி யுகம். தலைவர் கலைஞர், தமிழ் இலக்கியம், நாடகம், திரைக் கதை வசனம் என்று தமிழை வளர்த்தார். இப்போது அவருடைய பேரனோ, கணினி யுகத்தில் இந்தியாவின் வளர்ச்சியை, உச்சாணிக் கொம்பிலே கொண்டு போய் நிறுத்தி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய மகனோ, மாநகரக் கல்வியினுடைய தரத்தை உயர்த்திப் பெருமை சேர்த்திருக்கிறார்.



(மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட கணினி ஆசிரியர்கள், 'எல்காட்' ஒப்பந்தத்தின் அடிப்படையிலே தேர்வு செய்யப்பட்டவர்கள், இப்போது பணியற்று நிற்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். 1997–1999–ல் முழு கல்வித் தகுதியோடு இடைநிலை ஆசிரியர்களாகப் பணியில் சேர்ந்து பணியாற்றிவரும் S.C., S.T. இன ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2,394 பேர்கள் பணி நியமனம் செய்யப்படாமல்

ஓரே ஒரு செய்தி. கடந்தகால கும்பகோண சம்பவம். நூற்றுக்கணக்கான குழந்தைகள், ஏதும் அறியா பிஞ்சுத் தளிர்கள், கொடிய தீயில் கருகிச் செத்தனவே, அந்தப் பழி பாவத்திற்கு யார் காரணம்? கடந்த ஆட்சியாளர்கள் காரணமா? ஆட்சியாளர்களின் அதிகாரக் கட்டுப்பாட்டிலிருந்த கல்வி அதிகாரிகளா? இல்லை, இவர்களுக்கு எல்லாம் தலைமையேற்ற முன்னாள் முதல்வரா? மக்கள் சிந்தனைக்கே விடுகிறேன். இந்தக் கொடுமைகள் இனிமேல் நடைபெறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

அடுத்து, உயர் கல்வியிலே, பொறியியல் கல்லூரிகள் சேர்க்கை முறையிலே, கடந்த ஐந்தாண்டுகள் குழப்பத்தை நீக்கி, ஒற்றைச் சாளர முறை— Single Window System—மூலமாக, இன்றைக்கு 52 ஆயிரம் இடங்களைப் பெற்றுத் தந்தமைக்காகத் தமிழக அரசுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

கிராமப்புற மாணவர்களைப் பாதுகாக்க, நுழைவுத் தேர்வை அகற்றி, கல்வியாளர்கள் குழு அமைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரசுப் பொறியியல் கல்லூரிகளிலே பன்மடங்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணங்களைக் குறைத்து ஆணையிட்டு, ஏழை எளிய மாணவர்களுடைய வாழ்க்கைக்கு வழி செய்த தலைவர் கலைஞர் அவர்களை, இந்த நேரத்திலே பாராட்டி வணங்கி, பொறியியல் கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள் பெருகி வருவதாலே அக்கல்லூரிகளிலே மாணவர்களை நியமிக்க, சிறப்புமிக்க பட்டப் படிப்புகளின் அவசியத்தை உணர்ந்து, சென்னை அண்ணா பல்கலைக்கழகம்போல், சோழ மண்டலத்திலே திருச்சியிலும், கொங்கு மண்டலத்திலே கோவையிலும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்க முடிவு எடுத்ததை வரவேற்கிறேன். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜூலை 15 ஆம் நாள், பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த நாள். அந்த நல்ல நாளில் முட்டை போடும் திட்டத்தை அறிவித்து, பெருந்தலைவர் காமராஜரின் படத்தை வைத்து, எல்லாப் பள்ளிகளிலும் பூஜிக்கச் செய்த, பெருந்தலைவர் காமராஜரின் புகழ் பாடச் செய்த, அவர் புகழுக்கு மகுடம் சூட்டிய தலைவர் கலைஞரே, காங்கிரசே நன்றி கூறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காமராஜர் தொண்டர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கூறுகிறார்கள். அந்த நாளிலே கல்வி ஆய்வு மையம் அமைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். திராவிட ஆய்வு மையம் அமைத்ததைப் போல, தேசிய வரலாறுகளோடு பின்னிப் பிணைந்திருக்கிற தேசியத் தலைவர்கள் வரலாற்று ஆய்வு மையத்தைத் தொடங்குமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அரசுக் கல்லூரிகளுக்கு, ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கிற செய்திக்கு நன்றி. 20 கண் பார்வையற்ற, உடல் ஊனமுற்றவர்களுக்கு அளித்த முன்னுரிமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கான கட்டடங்கள் கட்டுவதற்கு 5 கோடி ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தருடைய நியமனத்திலே, விதிமுறைகளை மீறி, தகுதியில்லாத ஒரு நபர் அந்தப் பதவியில் அமர்ந்திருப்பதாகக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கு ஒரு விசாரணை கமிஷன் அமைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

அதைப்போல, வேலூரிலே, திருவள்ளுவர் பெயரிலே ஒரு பல்கலைக்கழகம், பெட்டிக் கடைபோல, நான்கு ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதற்கு என்று ஒரு சொந்த இடம்கூட இல்லை.

**திரு. சி.வி. சண்முகம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சேகர் நன்றி சொல்லி முடியுங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) அடுத்த உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி. (குறுக்கீடு) முடியுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. விடியல் எஸ். சேகர்:** வேலூரில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில்... (குறுக்கீடு) வேலூரில் பல்கலைக்கழகம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) திரு. சண்முகம் நீங்கள் சொல்வது அவைக் குறிப்பில் ஏறாது. யாரையோ திருப்திபடுத்த வேண்டுமென்று சொல்ல வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், திரு. விடியல் சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** வேலூரில் இருக்கிற திருவள்ளுவர் பல்கலைக்கழகம், கடந்த ஆட்சிக் காலத்திலே, நான்கு ஆண்டுகளாகப் பெயருக்கு இயங்கி வருகிறது. அதற்கு என்று சொந்தக் கட்டடம் இல்லை. இன்னும் U.G.C. அங்கீகாரம்கூட பெறப்படவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இதுகுறித்து நீதி விசாரணை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

உயர் கல்வியிலே, Plus 2 படித்து தொழிற்கல்வி பயின்ற மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளிலே 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. தற்போது 700 சீட்டுகள் மட்டும் இருக்கின்றன என்பதை மறு ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். பொறியியல் கல்லூரிகளிலே சேர, கலந்தாய்வு மையத்தை ஈரோட்டில் இருந்து தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவுளி துறையும், கைத்தறியும் புகழ்பெற்று இருக்கின்ற சென்னிமலையிலே, ஜவுளி உற்பத்தி உயர் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்திட அரசைக் கேட்டுக்கொள்கிறேன். காங்கேயத்திலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. விடியல் எஸ். சேகர்] [2006 ஆகஸ்ட் 4

அரசு ஆண்கள், பெண்கள் இணைந்து பயிலும் ஓர் அரசுக் கலைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு, தமிழகத்து முதலமைச்சருடைய குருகுலம். குருகுலத்தில் இருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர், நீங்கள் வேறு ஏதாவது point இருந்தால், எழுதிக் கொடுத்துவிடுங்கள். முடியுங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** முடித்துவிடுகிறேன். ஈரோடு, தலைவர் கலைஞருடைய குருகுலம். ஈரோடு மாவட்டத்திலே அரசுக் கலைக் கல்லூரிகளே இல்லை. அங்கு அரசுக் கலைக் கல்லூரிகளை, பள்ளிகளைத் திறந்துவைத்துப் பெருமை சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதையெல்லாம் தாண்டி, கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே இரண்டு கொடுமைகள் நடைபெற்றன. புகழ்பெற்ற இராணி மேரி கல்லூரியை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி. (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள், திரு. மணி பேசுங்கள். திரு. மணி, நீங்கள் தலைவர் என்பதால் 10 நிமிடங்களில் முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரே ஒரு வரி. கடந்த ஆட்சியின் இரண்டு திட்டங்களைப் பற்றிப் பதிவு செய்ய விரும்புகிறேன். இராணி மேரி கல்லூரியிலே நடைபெற்ற அவலங்களையும், அண்ணா பல்கலைக்கழகத்தை அபகரித்த அவலங்களையும், கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறுகளையும் மக்கள் ஒரு காலத்திலும் மன்னிக்கமாட்டார்கள் என்பதை நினைவுகூர்ந்து, அவற்றைப் பதிவு செய்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த். (குறுக்கீடு)

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே, கோவையிலே நடைபெறுகின்ற சிங்கள police அல்லது இராணுவத்தினர் பயிற்சியைப் பற்றிய விவாதம் நடைபெற்றது. 2 ஆம் தேதியன்று நம்முடைய



2006 ஆகஸ்ட் 4] [கலைஞர் மு. கருணாநிதி]

தலைமைச் செயலாளர்மூலம், மத்திய அரசினுடைய உள் துறைச் செயலாளருக்கு இந்த அவையிலே எழுந்த அந்த உணர்வுகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. 3 ஆம் தேதி அன்று, மத்திய உள் துறைச் செயலாளருக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க, அந்தப் பயிற்சி பெறுகின்றவர்கள் நேற்று இரவே கோவையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–25*

## 7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை ஆகிய இரண்டு துறைகளிலும் இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன். அதற்கு முன்னதாக... (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** நன்றி சொல்லி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகளைச் சரியான விதத்திலே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, சிங்களக் காவல் வீரர்களைத் தமிழக மண்ணிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தற்காக, விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக வைக்கப்பட்ட கோரிக்கையை வெற்றிபெறச் செய்ததற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தமிழக மக்களின் சார்பிலே பதிவு செய்து கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்ல வந்தேன். இந்தக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பு, நம்முடைய ஒட்டுமொத்த தமிழர்கள் உணர்வை, இங்கே எடுத்துவைக்கிற வேளையில், அதைத் தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு, தன்னுடைய ஆழ்ந்த எண்ணத்தை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், இதற்கு முன்பே, உரிய நேரத்தில், "காலம் கருதி இடத்தாற் செயின்" என்று சொல்வார்களே, அதைப்போல உரிய நோத்தில் மத்திய அரசுக்குத் தகவல் கொடுத்து, இந்தச் சீரிய நடவடிக்கை எடுத்து, அந்தப் பயிற்சி பெற்ற இலங்கை இராணுவத்தை அல்லது காவல் துறையைச் சார்ந்தவர்களை மீண்டும் திருப்பி அனுப்பி, தமிழர்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறவகையில் அரிய காரியத்தைச் செய்த, நம்முடைய முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் சார்பில், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களின் சார்பில், நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. மேட்டூர் அணையின் நீர்மட்டம் மற்றும் உறுதித் தன்மை குறித்து

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போல இன்னொன்று; தொடர்ந்து முக்கியமான சம்பவம். நல்லவர்கள் காலத்தில் நல்லதே நடக்கும். அந்த அடிப்படையில் இந்த மேட்டூர் தொகுதியினுடைய பிரதிநிதி என்ற முறையில், மேட்டூர் அணை அடிக்கடி நிரம்புவது சொற்ப நாட்களிலே. அந்த வரிசையில் இதுவரையிலே இல்லாத அளவுக்கு 100 அடிக்கு மேல் ஓராண்டுக் காலம் நாளையோடு நிறைவு பெறுகிறது. ஆகவே, ஓராண்டுக் காலம் 100 அடிக்கு மேல் தண்ணீர் இருந்த காலம், இந்த ஆண்டு நாளைய நாள் என்பதையும்; இது யார் காலத்தில் என்று சொன்னால், நம்முடைய தமிழினக் காவலர் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலே, ஓராண்டுக் காலத்திற்கு மேல் நிரம்பியிருக்கிறது என்பதை... (குறுக்கீடு) ஒரு வருஷம், ஒரு வருஷம் இல்லை. (குறுக்கீடு) ஒரு வருஷத்திற்கு மேல் நிரப்பியது இல்லை. இதுதான் முதல்முறை. (குறுக்கீடு) அது 280 தான்; இது 365 நாட்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அமைதி, அமைதி (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** அதையும் இந்த நேரத்திலே பதிவு செய்து, அதேபோல் ஓர் ஊடகம்—கடந்த சில நாட்களுக்கு முன்பு ஓர் ஊடகத்திலே வந்த செய்தி. மேட்டூர் அணையிலே நீர்க் கசிவு ஏற்பட்டிருக்கிறது; அது அணைக்குப் பாதிப்பு என்ற ஒரு தவறான, பீதியான செய்தி வெளிப்படுத்தப்பட்டது. அந்தச் செய்தி வந்தவுடனே, நானும் அதிகாரிகளை அழைத்துக் கொண்டு அந்த அணையின் உள் பகுதியை எல்லாம் சுற்றிப் பார்த்தோம். எவ்வித நீர்க் கசிவும் இல்லை. ஆகவே, மேட்டூர் அணை பலமாக இருக்கிறது. ஸ்திரமாக இருக்கிறது. ஸ்திரத் தன்மை குறையவில்லை. அதற்காக யாரும் அச்சப்படத் தேவையில்லை என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஒரு செய்தி அப்படி வந்தது. அடுத்து கல்வித் துறை. இந்தக் கல்வி மிக முக்கியமானது. (குறுக்கீடு)

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ராமகிருஷ்ணன். சொல்லுங்கள், சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவே கோவையில் பயிற்சி பெற்ற அந்த சிங்கள இராணுவ வீரர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்த செய்தியை மாண்புமிகு முதல்வர் மூலமாகக் கேட்டறிந்து கொண்டோம். மகிழ்ச்சி. முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12—30*

## 7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கு, நாட்டினுடைய மேம்பாட்டுக்குக் கல்வி மிக முக்கியமானது.

அதைத்தான்

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்றார் திருவள்ளுவர். ஆகவே, இந்தக் கல்வியை நெருப்பால் அழிக்க முடியாது, வெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாது, கயவர்களால் திருட முடியாது என்ற நிலையெல்லாம் இருக்க, இப்படிப்பட்ட இந்த உயர்ந்த கல்வித் துறைக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில், கல்வித் துறைக்கென தனியாக அமைச்சர் இல்லை. தனியாகக் கல்வித் துறைக்கு அமைச்சர் இல்லை என்று சொன்னால், அந்தக் கல்வித் துறை எப்படி இருந்திருக்கும் என்பது, கடந்த ஐந்தாண்டுக் காலத்தினுடைய ஆட்சிதான் சாட்சி என்பதை இங்கே ஆதாரத்தோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேண்டுமென்றால், எந்த ஆதாரமும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நேரம் கொடுக்க வேண்டும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள். அங்கே வருமான வரித் துறை அமைச்சர்' பொறுப்பேற்றுக் கொண்டார். பொறுப்பு அமைச்சராகவே இருந்து, கல்வித் துறையை வழி நடத்தினார் அப்போது. (குறுக்கீடு) வணிக வரித் துறை அமைச்சர்—Commercial. ஆக அப்படி, பொறுப்பு அமைச்சர் பொறுப்பேற்றிருந்த துறை எப்படி இருக்கும் என்பதெல்லாம் கடந்தகால வரலாறு. கல்வி முக்கியத்துவம் வாய்ந்தது என்ற அந்த உயரிய நோக்கத்தின் அடிப்படையில், குறைந்த நாட்களே பொறுப்பேற்றிருக்கிற நமது ஆட்சிக் காலத்தில், கல்விக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கிற பணிகள், சீர்திருத்த நடவடிக்கைகள் ஒன்றிரண்டை நான் ஆதாரத்தோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், கல்வித் துறை முக்கியமானது; ஆகவே, ஓர் அமைச்சர் போதாது; உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை என்று, இதுவரை தமிழக வரலாற்றில் இல்லாத அளவுக்கு இரண்டு அமைச்சர்களை, இரண்டு துறைகளை உருவாக்கிய பெருமை நம்முடைய கலைஞர் அவர்களையே சாரும். அதுமட்டுமல்ல; கட்டண விகிதம் அதிகமாக இருந்தது, அரசுக் கல்லூரிகளில், அரசு உதவிபெறும் கல்லூரிகளில், தனியார் கல்லூரிகளில். ஆகவே, ஏழை எளிய மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் கல்விக் கட்டணத்தைக் குறைத்து, சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொண்ட அரசு, நம்முடைய அரசு. (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு சொல்லுங்கள். நேரம் இல்லை. நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) அது தொடரும். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லப் போகிறீர்களா?

**திரு. ஜி.கே. மணி:** அதேநேரத்தில்—இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் நன்றி சொல்ல வேண்டும். எந்த நோக்கத்திற்காக வெளியேறினார்களோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உள்ளபடியே தமிழர்கள்மீது அக்கறை இருக்கும் என்று சொன்னால், கட்டாயம் நன்றி சொல்லியே ஆகவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். நன்றி சொல்வதாக இருந்தால் ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் எப்போது எடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும், ஒரு நிமிடம் என்றுதான் சொல்கிறார். பேரவைத் தலைவர் வேண்டுமானால் இதற்கு நன்றி சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. எங்களுக்குத் தமிழகத்தின்மேல் அக்கறை இருக்கிறது. (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் பேசியாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதுமட்டுமல்ல; இதுவரையிலே கல்வித் துறையிலே நிர்வாக ஒதுக்கீட்டிலே இட ஒதுக்கீடே இல்லை. ஆணை என்று சொல்வதெல்லாம் கானல் நீர். ஆனால் நிர்வாக ஒதுக்கீட்டிலே இட ஒதுக்கீடு வழங்கும் முறையைக் கொண்டுவந்த அரசு, நம்முடைய கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் தமிழகத்திலே முதன்முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதுவரையில் எப்போதும் கிடையாது, இதுதான் முதல்முறை. நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. அதிக நேரம் நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

அதுமட்டுமல்ல; கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, எல்லா நிலைகளிலும் உள்ள ஆசிரியர்கள் 45 ஆயிரம் பேர் குரல் கொடுத்தார்கள்; போராடினார்கள். கோரிக்கைக்காகப் போராடிய ஆசிரியர்கள், அதிலும் பெண்கள் உட்பட, தடியடிபட்ட காலம், கடந்த கால ஆட்சியிலே. பெண்களை எவ்வளவு கொடுமைப் படுத்தினார்கள் என்று தெரியும். ஆனால், அப்படித் தொகுப்பூதியத்தில்

பணியாற்றிய 45 ஆயிரம் ஆசிரியர்களுக்குத் தொகுப்பூதியத்தை மாற்றி, காலமுறை ஊதியமாக வழங்கியதுதான் நம்முடைய அரசு என்பதை நான் பாராட்டிச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழகத்தில் இருக்கிற எல்லா ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் பாராட்டுகிறார்கள். முன்னாள் முதலமைச்சர், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றே குறிப்பிட்டார்கள். ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், அன்று நிதி நெருக்கடியின் காரணமாக நான் சற்று கசப்பு மருந்தைக் கொடுத்தேன்; மீண்டும் இந்தத் தாயிடம் வந்து சேருவார்கள் என்று சொன்னார்கள். இங்கே நான் ஒன்றைச் சொல்கிறேன். அன்று அவர்களே ஒத்துக்கொண்டது. கழக அரசு விட்டுச் சென்ற கடன் 28 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னார்கள். 28 ஆயிரம் கோடி கடனை வைத்துக்கொண்டு தொகுப்பு ஊதியத்திலே அமர்த்தினீர்கள். இங்கே பணி நியமனத் தடைச் சட்டம் கொண்டுவந்தீர்கள். ஆனால், நீங்கள் விட்டுச்சென்ற கடன் தொகை, இப்பொழுது 56,000 கோடி ரூபாய். 56,000 கோடி ரூபாய் கடனிலே இருக்கிற கழக அரசு, 45,000 ஆசிரியர்களைக் காலமுறை ஊதியத்திற்கு மாறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு சலுகைகள்! பாராட்ட வேண்டுமா? வேண்டாமா? இவையெல்லாம் ஆதாரங்கள். இப்படிக் கல்வித் துறைக்குப் புத்துயிரூட்டிக் கொண்டிருக்கிற அரசுதான் கலைஞர் அரசு என்பதை இங்கே நான் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 12—35*

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள் — ஆசிரியர்கள் எல்லாம் நிறைய பேர் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தினாலே இதையும் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்—கடந்த ஆட்சிக் காலத்தில் 400 கோடி ரூபாய் கடன் விவசாயிகளிடமிருந்து திரும்பப் பெறப்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் காலத்தைப் பற்றி அன்றைய முதலமைச்சர் ஒன்றைச் சொன்னார்; வறட்சியான நேரம், சுனாமி வந்த நேரம், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரம் என்று அந்த ஆட்சிக் காலங்களைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி நெருக்கடியான நேரத்திலேதான், விவசாயிகளிடமிருந்து 400 கோடி ரூபாய்க் கடனை நீங்கள் திரும்பப் பெற்றீர்கள். எவ்வளவு கொடுமையிலே இருந்த விவசாயிகளிடமிருந்து பறித்தீர்கள்! அந்தக் கடனை, பெற்ற கடனுக்கு நீங்கள் தொகையைத் திருப்பிக் கொடுப்பீர்களா என்று கேட்டார்கள். ஆனால், இப்போதும் சொல்கிறேன். அந்த நெருக்கடியான நேரத்தில் விவசாயிகளை வாட்டி



வதைத்து, 400 கோடி ரூபாயை நீங்கள் கடனைப் பெறச் செய்யவில்லை என்று சொன்னால், கலைஞர் அவர்கள் இப்பொழுது அந்த 400 கோடி ரூபாயையும் சேர்த்துத் தள்ளுபடி செய்திருப்பார். 400 கோடி ரூபாய் கடன் வசூலிக்காமல் இருந்தீர்கள் என்றால், விவசாயிகளை வாட்டி வதைக்காமல் இருந்தீர்கள் என்று சொன்னால், விட்டிருந்தால், இந்த 6,866 கோடி ரூபாயோடு அந்த 400 கோடி ரூபாயையும் சேர்த்துத் தள்ளுபடி செய்திருப்பார்கள். ஆகவே, யார் நல்லது செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் உணர வேண்டும் என்பதற்காக நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அடுத்து, தமிழ்வழிக் கல்வி. கடந்த ஆட்சிக் காலத்திலே நாங்கள் பேசினோம். பேசிய நேரத்திலே, தமிழ்வழிக் கல்வி வேண்டும்; வளர்ந்த நாடுகளிலெல்லாம் இருக்கிறது என்று எடுத்துக்காட்டிய நேரத்தில், பேசிய நேரத்தில், அன்றைய முதலமைச்சர், ஆளுங்கட்சிக்காரர்கள் எல்லாம் எங்களை அவமானப்படுத்தினார்கள்; கொச்சைப்படுத்தினார்கள். அதிலும் குறிப்பாக, எங்களுடைய இயக்கத்தை, எங்களுடைய இயக்கத்தின் தலைவர்களை மனம் நோகும்படி பேசினார்கள். எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் பேசியதற்கு இந்தப் பழி பாவமா எங்களுக்கு? ஆனால், அந்தக் காலம் எல்லாம் மாறி, இப்பொழுது ஒன்றாம் வகுப்பு முதல் தமிழ் கட்டாயப் பாடம் என்று தமிழினத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) காலத்திலே, வருகை தந்திருப்பது, அறிவித்திருப்பது, பாராட்டுக்குரியது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில், நான் நம்முடைய அரசுக்கு ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஆங்கிலப் பாடம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு மொழிப் பாடமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்துவிட்டு மாணவன் வெளியே போகின்ற நேரத்தில் அவன் ஆங்கிலத்திலே பேசுவதற்குக்கூட முடிவதில்லை; சரியாக எழுத முடிவதில்லை. தமிழ்வழிப் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதேவேளையில், அந்த 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்து முடித்துவிட்டு செல்லக்கூடிய மாணவன், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடிய வகையில், எழுதக்கூடிய வகையில், புலமை பெறக்கூடிய வகையில் ஆங்கில வழிக் கல்வியையும் கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அந்தச் சூழலையும் இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தேர்ச்சி விகிதம்; இன்றைய அரசினுடைய புள்ளிவிவரப்படி, பள்ளிகளில் தேர்ச்சி விகிதம் 10 ஆம் வகுப்பிலே, திருவள்ளூர் மாவட்டம் 66.41 விழுக்காடு, காஞ்சிபுரம் மாவட்டம் 66.39 விழுக்காடு, திருவண்ணாமலை மாவட்டம் 66.70 விழுக்காடு, கிருஷ்ணகிரி மாவட்டம் 65.14 விழுக்காடு, தருமபுரி மாவட்டம் 66.88 விழுக்காடு, சேலம் மாவட்டம் 66.51 விழுக்காடு, கடலூர் மாவட்டம் 70.07 விழுக்காடு, புதுக்கோட்டை மாவட்டம் 65.51 விழுக்காடு. இது 10 ஆம் வகுப்பிலே. அதைப்போல, 12 ஆம் வகுப்பிலேயும் +2 வகுப்பிலேயும் இந்த 12 மாவட்டங்கள்தான் 60, 65 விழுக்காட்டிற்குக்கீழே இருக்கின்றன. ஆகவே, இந்த 12 ஆம் வகுப்பிலே 60, 65 விழுக்காட்டிற்குக்கீழே இருக்கக்கூடிய மாவட்டங்கள், — நேரம் இல்லை சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன் — வேலூர், திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, பெரம்பலூர், சேலம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர், விழுப்புரம், உதகமண்டலம் ஆகிய இந்த மாவட்டங்களில் தேர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது. ஆகவே, கல்வியிலே தேர்ச்சி விகிதம் குறைவு என்று சொன்னால், அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை எந்த அளவிற்கு உயரும் என்பதற்கு இது ஒரு சான்று. ஆகவே, கல்வி வளர்ச்சியிலே பின்தங்கியிருக்கிற இந்த மாவட்டங்களினுடைய கல்விப் பணிக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும். கூடுதல் கல்வி நிறுவனங்கள் வேண்டும். இந்த மாவட்டங்களுக்கு, கல்வி வளர்ச்சிக்குக் கூடுதலான நிதி ஒதுக்க வேண்டும் என்று சொல்லி, சிறப்புக் கவனம் தேவை என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 12—40*

நான் கடந்த காலங்களிலேகூட சொன்னேன். இங்கே ஏழைக்கு ஒரு மாதிரியான கல்வி, பணக்காரனுக்கு ஒரு மாதிரியான கல்வி என்று சொன்னேன். அந்த நிலை தொடரக் கூடாது. மேலை நாடுகளில், வளர்ந்த நாடுகளில் இருப்பதைப்போல, ஒரே பாடத் திட்டம்; அதைப் பொதுப் பள்ளி முறை என்று சொல்கிறார்கள்; Common School System; அந்த முறை நம்முடைய நாட்டிலே வர வேண்டும். இங்கே அரசுப் பாடத் திட்டம், State Board என்று சொல்கிறோம். அப்புறம் அதைப்போல, Matriculation syllabus—Matriculation பள்ளிப் பாடத் திட்டம்—என்று 4, 5 முறையான பாடத் திட்டங்கள் இருக்கின்றன. இவ்வாறு வேறுபட்ட பாடத் திட்டங்கள் இருக்கும் என்று சொன்னால்,



மாணவர்களுடைய கல்வித் தரமும், கல்வி வளர்ச்சியும் வேறுபட்டிருக்கின்ற காரணத்தினாலேதான், அரசுப் பள்ளிகளாக இருந்தாலும், தனியார் Matriculation பள்ளிகளாக இருந்தாலும், ஒரேமாதிரி பாடத் திட்டத்தை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இப்பொழுது அரசுப் பள்ளிகளிலே மாணவர் சேர்க்கை குறைகிறது; தேர்ச்சி விகிதம் குறைவு என்று சொல்கிறாம். தனியார் பள்ளிகளிலே தேர்ச்சி விழுக்காடு கூடுதலாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக் காரணத்தால், ஏழை எளிய குழந்தைகள்கூட தனியார் பள்ளிக்குப் போகக்கூடிய அவல நிலை. ஆகவே, அரசுப் பள்ளிகளில், தரமான கல்வி கிடைக்கக்கூடிய வகையில், கூடுதலான ஆசிரியர்களை நியமிப்பது, கட்டட வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி எல்லாம் செய்து கொடுத்து, அரசுப் பள்ளிகளில், அரசுக் கல்லூரிகளில் தரமான கல்வி கிடைக்கக் கூடிய வகையிலே வழிவகை காண வேண்டும். அந்தவகையில், இப்பொழுது ஒரு பள்ளியாக இருந்தாலும், அது கல்லூரியாக இருந்தாலும், அதற்கு ஓர் எல்லையை வரையறுக்க வேண்டும். அது அரசுப் பள்ளி, தனியார் பள்ளி என்ற இரண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: உங்களுக்கு ஏற்கெனவே தொண்டையிலே புண் என்று அடிக்கடிச் சொல்வீர்கள்! (சிரிப்பு) சீக்கிரம் முடித்துக் கொண்டால் நல்லது. நீங்கள் நல்லா இருக்க வேண்டும் என்று இந்த அவை விரும்புகிறது. அதனால் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி**: முக்கியமான பிரச்சினை. சீக்கிரம் முடித்து விடுகிறேன். ஆகவே, இந்தப் பொதுப் பள்ளி திட்டத்திற்கு அடுத்து, அண்மை பள்ளித் திட்டம் — Neighbourhood School System — என்று சொல்கிறார்கள். டெல்லியிலேகூட, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, ஏழைக் குழந்தைகள் தனியார் பள்ளிக்கூடங்களிலே சேர வேண்டும் என்று சொன்னால், எந்த ஏழையும் படிக்கக்கூடிய வகையில், ஏழைகளுக்காக 25 விழுக்காடு இடத்தை ஒதுக்கி, சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே படிக்கலாம். ஏழைகள் போனால், எந்தக் கட்டணமும் இல்லாமல் உடனடியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும், 25 விழுக்காடு இடத்திலே. அதைப்போல கொண்டு வர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் ஒரு 10 நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *10 நிமிடங்களா?* முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இங்கே கல்லூரிகளிலே, தனியார் பள்ளிகளிலே நன்கொடை வசூலிக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்திலே பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்தார்கள், வசூலிக்கக் கூடாது என்று சொல்லி. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களிலே கடந்த ஆட்சிக் காலத்திலே வசூலிக்கப்படவில்லையா? அதற்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை? ஆதாரத்தோடு சொல்ல முடியுமா? ஒன்றுகூட இல்லை. கடந்த ஆட்சிக் காலத்தில், தனியார் கல்வி நிறுவனங்கள், கட்டணங்கள் வசூலிப்பதற்கு ஊக்குவித்த அரசு, கொள்ளையடிப்பதற்கு வழிவகுத்த அரசுதான் அந்த அரசு. இங்கே அ.தி.மு.க. உறுப்பினராலே சொல்லப்பட்டது, 10, 12 கல்லூரிகளிலே கூடுதல் கட்டணம்; கல்விக் கொள்ளை; இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று நான் கேட்கிறேன். பக்கத்திலே இருக்கிற வேலூரிலே, ஒரு பொறியியல் கல்லூரி இருக்கிறது. அங்கே அரசாங்கமே இடம் கொடுத்தது. ஆனால் அங்கே படிக்கிறவர்கள் எல்லாரும் வெளிநாட்டுக்கார மாணவர்கள். கல்விக் கொள்ளை!

நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவன், உள்ளூர் மாணவன் படிக்கவே முடியாது. பக்கத்திலே ஜேப்பியார் கல்லூரி இருக்கிறது. அவர்களுக்கு அரசாங்கம்தான் நிலம் கொடுத்தது. அங்கே எவ்வளவு வசூலிக்கப்படுகிறது; இதற்காகக் கடந்தகால அ.தி.மு.க. அரசு, முன்னாள் கல்வி அமைசசர் எடுத்த நடவடிக்கை என்ன என்பதை இந்த மாமன்றத்திற்கு, தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்லியாக வேண்டும். அப்படி பதில் சொல்லாமல் அந்த அரசில் அங்கம் வகித்தவர்கள் கேள்வி கேட்கக் கூடாது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்தது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்புறம் இந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகம்; தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்—Deemed University—அதை இப்பொழுது அவர்கள் விருப்பத்திற்கு நடத்திக் கொள்கிறார்கள். பாடத் திட்டம், கட்டண



நிர்ணயம், தேர்ச்சி விகிதம் எல்லாமே அவர்கள் வைத்துக்கொள்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு, நம்முடைய நாட்டிலே இருக்கிற அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு, நெறிப்படுத்துவதற்கு, அதை ஓர் ஒழுங்கின்கீழே, கட்டுப்பாட்டின்கீழே கொண்டு வரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம், ஆசிரியர் மாணவர் விகிதம் நிரம்ப கூடுதலாக இருக்கிறது; 1:40 என்று இருக்கிறது. அதை 1:25 என்றாவது கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—45*

அதைப்போல, இப்பொழுது சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன். கல்விக் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கும், அதைப்போல இட ஒதுக்கீட்டை, இடங்களை நிர்ணயிப்பதற்கும் கடந்தகால ஆட்சியிலே இராமன் குழு, சுப்பிரமணியன் குழு நியமிக்கப்பட்டது. அந்த ஆட்சியினுடைய குளறுபடிக்கு அது ஒரு சான்று. ஆகவே, அந்தக் குழுவை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும். சமூக நீதியிலே அக்கறையுள்ளவர்களை, ஏழைக் கல்வி நலனிலே அக்கறையுள்ளவர்களை அந்தக் குழுவிலே நியமிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஆட்சி வந்தவுடனே, நூறு உயர்நிலைப் பள்ளிகளாக, நூறு மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளபடியே வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனாலும், நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே, நிறைய தொகுதிகளினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வேண்டுகோள் வைத்தார்கள்; என்னிடத்திலேகூட சொன்னார்கள். ஆளுங்கட்சி தரப்பிலேயும், தி.மு.க. சார்பிலேயும், தோழமைக்கட்சிகள் சார்பிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது—ஆக, இன்னும் கூடுதலாக உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக்கூடிய வகையில், இன்னுமொரு ஐம்பதாவது வழங்கவேண்டுமென்று, நான் முதலமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நெய்வேலி நிறுவன இடத்திலே பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே, கல்லூரியிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் திடீரென வேலை நீக்கம்.

மாணவர்கள், கல்விக் கட்டணம் உயர்ந்துவிட்டது என்று குரல் கொடுத்தார்கள், கல்லூரியே மூடப்பட்டிருக்கிறது. அதிலே அரசு கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு முக்கியமான, பணிவான வேண்டுகோள். இடைநிலை ஆசிரியர்களை எல்லாம் பதிவு மூப்பு அடிப்படையிலே இங்கே நியமனம் செய்கிறோம். ஆனால் இந்த இளநிலை, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் நியமனம் செய்யப்படுகிறார்கள். அங்கே நிறைய பேர் உண்ணாவிரதம்கூட இருந்தார்கள், நாங்கள் எல்லாம் உண்ணாவிரதத்திற்குப் போகமாட்டோம் என்றுகூட சொன்னோம். வரவில்லை என்று சொன்னால் எங்களை முதலமைச்சரிடம் கூட்டிக்கொண்டு போங்கள்; நாங்கள் முதலமைச்சரிடம் வந்து வாதாடுகிறோம் என்று சொல்லி எங்களையெல்லாம், தோழமைக் கட்சிகளையெல்லாம் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று முறையிட்டார்கள். அங்கே போய்விட்டு வருவதற்கே விடமாட்டேன் என்றார்கள். முதலமைச்சரிடம் அழைத்துச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். அதைக் கனிவோடு பரிசீலித்து—இன்னொன்றும்கூட அதிலே இருக்கிற சிக்கலைச் சொன்னார்கள்; தேர்வு வாரியத்திலே அந்தப் பட்டதாரி ஆசிரியர் மாணவர்களுக்கு விண்ணப்பம் எல்லாம் கொடுத்தாகிவிட்டது என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட, அதைத் திரும்பப் பெறுவதற்கு அரசு மனது வைத்தால் வாய்ப்பு இருக்கும்; அந்த நிலையில், அதை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொல்லுவதுபோல தேர்வு வாரியத்திலே தேர்வு செய்வதற்குப் பதிலாக மூப்பு அடிப்படையிலேயே முதுநிலை ஆசிரியர்கள் உட்பட எடுக்கலாம் என்று சொல்லுகிறபோது, பல்வேறு விதமான பாடங்கள், அதிலே அவர்கள் பெற்றிருக்கிற தகுதி, வெவ்வேறு தகுதி. இரண்டாவது, அதிக அளவுக்குப் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இடம்பெற வேண்டுமென்றால், அந்த வேலையிலே அண்மைக் காலத்திலேதான் பின்தங்கிய மக்களும், மற்றவர்களும் வருவார்கள். முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் மூத்தவர்களாக இருப்பார்கள், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் இளைஞர்களாக இருப்பார்கள்.



ஆக, அதனுடைய விளைவு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெற வேண்டுமென்றாலும், communal G.O. இடம்பெற வேண்டுமானாலும் வகுப்புவாரி உரிமை காப்பாற்றப்பட வேண்டுமானாலும், தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகள் உரிய அளவுக்கு இடம்பெற வேண்டுமானாலும், ஆசிரியர் வாரியத்தின்மூலமாக எடுப்பதன் மூலமாகத்தான் அவர்களைப் பொறுக்கி எடுத்து பணியிலே சேர்க்கமுடியும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் மனது வைப்பார்கள் என்றால், அதிலேகூட இட ஒதுக்கீடு கொடுக்கிற வகையிலே—பேராசிரியர் அவர்கள் பதிலுக்கு நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை; அடக்கத்தோடு பேசுகிறேன்; இருப்பினும்—அதைக் கருணை உள்ளத்தோடு சீர்தூக்கி ஆராய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, 1997—லிருந்து 2000 வரை இங்கே தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இளநிலை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். ஆக, தொடர்ந்து இன்னும் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கக்கூடிய வகையில் ஊதிய நிர்ணயம் வேண்டும், நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம், பள்ளிகளில் எல்லாம், நீண்டகாலம் உடற்கல்வி ஆசிரியர்களே இல்லை, விளையாட்டு ஆசிரியர்கள் இல்லை. அதிலும், கைத்தொழில் ஆசிரியர்கள், விவசாயம், நெசவு, தையல் போன்றவற்றிற்கும் நீங்கள் நியமிப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் காங்கிரஸ் உறுப்பினர்கூட சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அப்போது, கடந்த இரண்டு முறைக்கு முன்னால் இருந்த அ.தி.மு.க. ஆட்சியிலே ஆசிரியர் பயிற்சி பள்ளிகள்கூட இயங்காத நிலையில், மாணவர்களுக்கு, இடைநிலை ஆசிரியர் தேர்ச்சி பெற்றதாகச் சான்று வழங்கினார்கள், மிகப் பெரிய குளறுபடி. ஆனால், அந்தக் குளறுபடிகளையெல்லாம் போக்கக்கூடிய வகையில் கடந்தகால தி.மு.க. அரசு காலத்தில் முதலமைச்சர் அவர்களும், நம்முடைய இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் மனது வைத்து, அவர்களையெல்லாம் மீண்டும் ஆசிரியர்களாக எடுத்த பெருமை, கழக அரசுக்கும், முதலமைச்சருக்கும், பேராசிரியருக்கும் உண்டு. அதிலே விடுபட்டுப் போனவர்கள் 850

பேர்கள். அவர்கள் பெற்ற 45 விழுக்காடு மதிப்பெண், குறைவு என்று சொல்கிறார்கள். அவர்களுள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகம் என்கிற காரணத்தினாலே அவர்களுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

அடுத்து, பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் மூலமாகப் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் 10 வருடங்களாக, 15 வருடங்களாகப் பணியாற்றுகிறார்கள். பட்டதாரி ஆசிரியர்களான அவர்களுக்கு 500 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளம். இப்போது தேர்வு வாரியத்திலே தேர்வு செய்கிற நேரத்தில் இவர்களையும் பாசீலிக்க வேண்டும்.

அதைப்போல, கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களாகக் குறைந்த சம்பளத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். கணினி ஆசிரியர்கள் நீண்ட காலமாகக் குறைந்த சம்பளத்தில் பணியாற்றி, இப்போது அந்தச் சம்பளமும் கிடைக்கவில்லை. அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும், விடுபட்ட காலத்திற்குச் சம்பளத்தையும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பிலே இப்போது நிறைய கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் எல்லாவற்றையும் செய்வீர்கள். ஆசிரியர்கள் நேற்று என்னிடம் வந்தார்கள். நான்கூட சொன்னேன்: "நீங்கள் தயவுசெய்து இப்போது கோரிக்கை வைக்காதீர்கள்; 56,000 கோடி ரூபாய் கடன்: உங்களுக்கு எவ்வளவு சலுகைகள், பறிக்கப்பட்ட சலுகைகளையெல்லாம் வாரி வழங்கியிருக்கிறார் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்; ஆகவே, கோரிக்கையே இப்போது வைக்க வேண்டாம், சிறிது காலத்திற்கு" என்று நான்கூட சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஆசிரியர்கள் சொல்கிறார்கள்; அரசு ஊழியர்கள் சொல்கிறார்கள். இந்த அரசு எங்களுடைய அரசு; இது நம்முடைய அரசு என்று அவர்கள் எல்லாம் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு என்பது நம்முடைய தோழமைக் கட்சிகளினுடைய அரசு, இது ஆசிரியர்கள் அரசு, அரசு ஊழியர்களின் அரசு, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்கள் நலன் காக்கும் அரசு, இதில் நல்லதே நடக்கும், இந்த ஐந்தாண்டுக் காலம் கல்வித் துறைக்குப் பொற்காலம் என்பதைச் சொல்லி, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கும் கூடுதலாக நிதியொதுக்கி, நல்ல சீர்திருத்தப் பணிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிற முதலமைச்சர்



அவர்களையும், கல்வி அமைச்சர்கள் இருவரையும் பா.ம.க. சார்பிலே பாராட்டி, வரவேற்று, நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விடுதலைச் சிறுத்தைகளும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக வெளிநடப்புச் செய்தார்கள். சிலர் ஏன் நீங்கள் வெளிநடப்புச் செய்யவில்லை என்று கேட்டார்கள். தமிழக முதலமைச்சரைப் பற்றி எனக்கு நன்கு தெரிந்ததால்தான் நான் வெளிநடப்புச் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இல்லாமல், வெளிநடப்புச் செய்த சிறிது நேரத்திற்குள்ளேயே தமிழக முதல்வர் அவர்கள் சொன்ன அறிக்கையை, இங்கேயுள்ள உறுப்பினர்கள் அனைவரும் கேட்டார்கள். நேற்று இரவே கோவையிலே இலங்கையைச் சேர்ந்த இராணுவத்தினரோ அல்லது police அதிகாரிகளோ வெளியேற்றப்பட்டார்கள் என்பதைக் கேட்டு நிரம்ப சந்தோஷம். தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் சார்பாகவும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. விஜயகாந்த்:** ஒரு நாட்டின் முன்னேற்றம் கல்வியைப் பொறுத்தது. அந்தக் கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். ஒரு காலத்தில் ஒரு சாராருக்கு மட்டுமே கிடைத்த கல்வி, இன்று எல்லோருக்கும் பொதுவானது என்ற கொள்கை, எல்லோராலும் ஏற்கப்பட்ட ஒன்றாகும். திறமைகள் ஒரு சிலரிடத்தில் மட்டுமே குவிந்திருப்பதில்லை; சமுதாயத்தில் எங்கெல்லாமோ ஒளிந்துகொண்டிருக்கும். அறிவியல் மேதை அப்துல் கலாம் போன்றவர்களும், சட்ட மேதை அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களும், வாய்ப்புக் கிடைக்கப் பெற்றதாலேயே

நம் கண்ணுக்கு அரிய சாதனையாளர்களாகத் தெரிகின்றனர். ஆகவே, அனைத்து மக்களுக்கும் கல்வியில் சமவாய்ப்பு அளிக்கப்பட்டால்தான் பல சாதனையாளர்களைப் பெற்று, இந்தச் சமுதாயம் முன்னேற முடியும். அனைத்துத் தரப்பினருக்கும் கல்வியில் சம வாய்ப்பு அளிக்கப்படுகிறதா என்பதே இன்று முக்கியமான கேள்வி.

இந்தியாவின் கல்விக் கொள்கையைப் பற்றி ஆய்வு செய்த உலக வங்கியின் அறிக்கை கூறுவதாவது:– "கிராமப்புறங்களில் ஐந்தாம் வகுப்பு படித்த மாணவர்களின் தரம், தரமான பள்ளியில் இரண்டாம் வகுப்பின் தரத்திற்குக்கூட சமமாக இல்லை. மூன்றில் இரண்டு பங்கு மாணவர்களுக்கு கூட்டல், கழித்தல் கணக்குக்கூட தெரியவில்லை. ஆசிரியர்கள் பாதி நாட்களுக்குமேல் பள்ளிக்கு வருவதில்லை. இதன் விளைவாக பாதிக்கும் மேற்பட்ட, மாணவர்கள் ஆரம்பக் கல்விக்காக, வசதி படைத்த பெற்றோர்களால் நகரங்களில் உள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள். மேலும், அரசின் உதவி பெறாத, ஒழுங்குபடுத்தப்படாத, அளவுக்கு மீறிய கல்விக் கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகள், புற்றீசல் போல் பெருகி வருகின்றன. ஆரம்பக் கல்வி அளிப்பதில் அரசின் அக்கறையற்ற தன்மையால், தரமான கல்வி மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஒவ்வொரு மாணவனுக்கும் கல்வியை, அடிப்படை உரிமையாக்குகின்ற சட்டம், இன்றுவரை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் சில சக்திகள் தடுத்து வருகின்றன. சமுதாயத்தில் ஒரு பிரிவினர் நல்ல கல்வி பெறுவதும், பெரும் பகுதியினர் கல்வியில் புறக்கணிக்கப்படுவதும், தென் ஆப்ரிக்காவில் கடைபிடிக்கப்பட்டதைப் போல, ஒரு புதிய சமுதாய இன ஒதுக்கல் கொள்கையாக ஆகிவிட்டது."

*பிற்பகல் 12–55*

உலக வங்கியின் இந்த அறிக்கையைவிட, தத்ரூபமாக, ஆரம்பக் கல்வி பற்றி வேறு யாரும் படம் பிடித்துக் காட்ட முடியாது. எனினும், நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் அவர்கள், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், தான் நிறுவிய Pratichi அறக்கட்டளை சார்பில், ஆரம்பக் கல்வி நிலைபற்றிக் குறிப்பிடுவதாவது: "தற்போதைய ஆரம்பக் கல்வி நிலை மிகவும் வருந்தத்தக்கது, பெற்றோர்களுக்கும் திருப்தி இல்லை; பிள்ளைகளும் பள்ளிக்குச் செல்வதில்லை. வசதி படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தனியார் கல்விமூலம் பயிற்றுவிக்கின்றனர். பெரும் அளவிற்கு ஆரம்பக் கல்விக்குத் தனியாரைச் சார்ந்திருக்கும் நிலைமை, இந்தியாவைத் தவிர வேறெங்கும் இல்லை. வங்கதேசத்தில்கூட இதில் நம்மைவிட மேம்பாடாக உள்ளனர்.



ஆரம்பக் கல்வி என்பது அடிப்படை உரிமையாகும். ஓர் அரசாங்கம் தரமான கல்வியைத் தர வேண்டியது கடமையாகும். பள்ளிகளை ஆய்வு செய்யும் முறையைக் கட்டாயமாக்க வேண்டும். பெற்றோர்—ஆசிரியர் கழகங்கள் திறம்படச் செயல்பட வேண்டும். இதற்கான கல்வித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்" என்கிறார். இவற்றிலிருந்து இன்றைய பள்ளிகளின் நிலைமை, குறிப்பாக கிராமப்புறப் பள்ளிகளின் நிலைமை, மிகவும் மோசமாக உள்ளது என்பதை அறிவோம். இந்நிலையை மாற்றி, ஏழை வீட்டுப் பிள்ளைகளும், கல்விபெற என்ன வழிவகைகள் உள்ளன? ஆரம்பப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் இடைநிற்றல் குறைய எத்தகைய வழிகளை அரசு கையாளப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கல்விப் பணியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசினர் முக்கிய அங்கம் வகிக்கின்றனர். குறிப்பாக, தான் பெற்ற பிள்ளையைப் படிக்க வைப்பதில் தாய்க்கு இருக்கும் அக்கறை, வேறு யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், தாங்கள் ஆசைப்பட்ட பள்ளியில் குழந்தைகளைச் சேர்த்து படிக்க வைக்க ஏழைத் தாய்மார்களுக்கு வழியே இல்லை. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்த்துவிட்டு, படிப்பைத் தொடர முடியாமல் அவதிப்படுகிறார்கள். இலவசக் கல்வி என்று உள்ளதே தவிர, நடைமுறையில் ஏழை நடுத்தர மக்கள் செலவு செய்தே தீர வேண்டியது உள்ளது. பிரேசில் நாட்டில் உள்ளதைப்போல, பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பினால், ஏழை, நடுத்தரக் குடும்பங்களுக்கு மாதந்தோறும் கல்விச் செலவை ஈடுகட்ட ஒரு குறிப்பிட்ட உதவித் தொகையை மத்திய, மாநில அரசுகள் வழங்குகின்றன. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, இந்தத் தொகை குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்படுகிறது. 15%–க்கு மேலாக, பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகாமல் இருந்தாலோ, அல்லது ஒரு வகுப்பில் இரண்டு முறை தேர்ச்சி பெறாவிட்டாலோ, அந்தத் தொகை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்மூலம் பள்ளியில் சேரும் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் இதைப் பாராட்டியுள்ளார். இத்தகைய ஒரு திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளில் நல்ல ஆசிரியர்கள் கிடைக்க, ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்கள், வேறு வேலைக்குப் போகாமல் ஆசிரியர் வேலைக்கு வருவார்கள். மாணவர்கள் தேர்ச்சி விகிதத்தைப் பொறுத்து ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும். சரியாகப் பாடம்

நடத்தாத ஆசிரியர்களைக் கண்காணித்து, ஆசிரியர் பணியிலிருந்து விடுவித்து, வேறு அரசுப் பணியில் அமர்த்த அரசு திட்டமிடலாம்.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தை இந்திய அரசு கொண்டுவந்துள்ளது. இதற்காக மத்திய அரசால் கல்வி வரி விதிக்கப்படுகிறது. இதன் காரணமாக, கல்வித் துறைக்கு ஏற்கெனவே வழி வழியாக ஒதுக்கப்பட்ட தொகையை, இந்திய அரசு நிறுத்திவிட்டது. இந்திய அரசு, அந்தத் தொகையை மீண்டும் ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதன்மூலம், எல்லோருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசு கூடுதல் நிதி உதவியைப் பெற முடியும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடுதல் பள்ளிக்கூடங்கள் திறத்தல், பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல், கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல், ஆய்வகங்கள் கட்டுதல், குடிநீர், கழிப்பிட வசதிகள் அமைத்தல் போன்ற வசதிகளைப் பெருமளவில் நிறைவேற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய விருத்தாசலம் தொகுதியைப் பொறுத்தவரையில், விருத்தாசலம் நகரத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு உள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் 2,500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயில்கின்றனர். மேலும் ஒரு பெண்கள் பள்ளியைத் துவக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தில், மங்கலம்பேட்டை, முதலை, கருவேப்பிலைக்குறிச்சி, ஆலடி, இருப்பு, கீரனூர் ஆகிய இடங்களில் ஆறு உயர்நிலைப் பள்ளிகளும், தர்மநல்லூரில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக ஒரு பள்ளியும் உள்ளன. இவற்றில் plus 2 வரை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் குறைவாக இருப்பதால், அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒத்திமேடு, கங்கைகொண்டான், சேப்பாக்கம், வேப்பங்குறிச்சி, மேலக்குப்பம், கம்மாபுரம், மாத்தூர், எம். பரூர், நடியப்பட்டு ஆகிய ஊர்களிலுள்ள பள்ளிகளில் பத்தாம் வகுப்பு வரைதான் வகுப்புகள் உள்ளன. இந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றினால், விருத்தாசலத்திலுள்ள பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து தரமான கல்வி கற்க வாய்ப்பு ஏற்படும்.



பிற்பகல் 1-00

அரசு கொளஞ்சியப்பர் கல்லூரி மிகப் பழமை வாய்ந்தது. இங்கு ஆண், பெண் இருபாலரும் இணைந்து கல்வி கற்கின்றனர். இதனால் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. எனவே, அரசு இங்கு பெண்களுக்கு ஒரு கல்லூரியைப் புதிதாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண் பிள்ளைகள், ஏழைக் குடும்பங்களில் பெரிதும் வீட்டு வேலைகளில் பயன்படுத்தப்படுகின்றனர். பள்ளிகளில் சேர்ந்தாலும், கடைசிவரை படிக்க முடிவதில்லை. கிராமங்களில் 100 பெண் பிள்ளைகள் முதலாம் வகுப்பில் சேர்ந்தால், 12 ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெறுவது ஒரே ஒரு பெண்தான் என்று புள்ளிவிவரம் கூறுகிறது. பொதுவாக பெண் பிள்ளைகள் படிப்பதற்குச் சரியான பெண்கள் பள்ளிக்கூடங்கள் இல்லை. இருக்கின்ற பள்ளிகளும் வெகுதூரத்தில் உள்ளன. இவற்றைக் கவனத்தில்கொண்டு, கிராமப் புறங்களில் பெண்கள் பெருமளவு சேர, bus வசதிகள் போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலை நேரத்தில் பள்ளிக்குச் செல்ல இயலாத மாணவ, மாணவிகளுக்கு மாலை நேரப் பள்ளிகளை இயக்கினால், அவர்கள் கல்வி கற்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கற்கும் திறன் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே உருவாகிறது. குறிப்பாக, மூன்று வயது வரை மூளை வளர்ச்சி அதிகம். மூன்று வயதில் பணக்கார வீட்டுக் குழந்தை 1200 சொற்களைக் கற்கிறது. ஆனால், ஏழை வீட்டுக் குழந்தை 600 சொற்களைத்தான் கற்கிறது. ஆரம்பத்திலேயே இந்த ஏற்றத்தாழ்வுகளைப் போக்க, nursery பள்ளிகளைப் பெருமளவில் துவக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

படித்தால் மட்டும் போதாது; கைத்தொழில் திறனும் தேவை. அப்போதுதான் எதிர்காலத்தில் வேலை கிடைக்கும். அதைக் கருத்தில்கொண்டு, இடைநிலைக் கல்விக் கொள்கையை வகுக்கக் கேட்டுக்கொள்கிறேன். Plus 2 வரையிலான தற்போதைய படிப்பில் மிகக் குறைந்த அளவிலேயே தொழிற் பயிற்சி பெறுகின்றனர். இந்த நிலையை மாற்றி, எட்டாம் வகுப்பு முதலே தொழிற் கல்வித் திட்டத்தை, ஒரு பாடமாக மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கவேண்டும். வகுப்புகளை அதிகப்படுத்தி, தற்போது தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகளைத் தந்து கல்வி அறிவோடு, கைத்திறனையும் வளர்ப்பதன்மூலம், தாங்களாகவே தொழில் தொடங்கும் தன்னம்பிக்கை

வளரும். மேலும், தொழில் நிறுவனங்களின் துணைகொண்டு இத்தகைய பயிற்சித் திட்டங்களை வகுத்தால், படிப்பு முடிந்தபின் அத்தகைய தொழில் நிறுவனங்களில் வேலையில் சேருவது எளிதாக இருக்கும். இதற்கான நிதி ஆதாரங்களை அரசும், தொழில் நிறுவனங்களும் பகிர்ந்துகொள்ளலாம். மாணவர்களுக்கும் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை வழங்கலாம். இத்தகைய தொழில்நுட்பப் பிரிவுகளைப் பெருமளவில் துவங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

பள்ளிகள்தோறும் தேசிய மாணவர் படையும், சாரண சாரணியர் இயக்கமும் கட்டாயமாக்கப்பட்டு, நாட்டுப் பற்றையும், கட்டுப்பாட்டையும் வளர்க்க நடவடிக்கை தேவை. தனியார் பள்ளிகளில் வசூலிக்கப்படும் வரம்புமீறிய கட்டணங்களைத் தவிர்க்கும் வகையில், ஒழுங்குமுறை வாரியம் வைத்து, பள்ளிகளைத் தர நிர்ணய அடிப்படையில், கட்டணங்களை வகுக்கக் கேட்டுக்கொள்கிறேன். நோட்டுப் புத்தகம் போன்ற இதர வகையில் வசூலிக்கப்படும் தொகையையும் கண்காணிக்க வகை செய்யக் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய தனியார் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்குத் தாராளமாக உதவித் தொகை வழங்கவேண்டும். தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் உரிய சம்பளத்தை நிர்ணயம் செய்து பெற்றுத்தர அரசு ஆவன செய்யவேண்டும்.

இந்தியாவையும், சீனாவையும் ஒப்பிட்டு, இந்தியாவைவிட சீனா முன்னேறுவதற்கான காரணத்தை ஆராய்ந்தனர். சீனாவினுடைய மிகப்பெரிய சாதனை, ஆரம்பம் மற்றும் இடைநிலைக் கல்வித் துறையில் சாதனை செய்ததாகும். 1986-ல் ஒன்பது ஆண்டுக் கால இலவசக் கட்டாயக் கல்வித் திட்டத்தை சீனா அமல்படுத்தியது. அதுவரை எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 23 சதவிகிதமாக இருந்ததை 2000 ஆம் ஆண்டில் 6 சதவிகிதமாகக் குறைத்தது. மேலும், நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து மாணவர்கள் பள்ளிகளில் சேர்ந்து படிக்கிறார்கள். 21 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் நியமிக்கப்படுகின்றனர். இதைப் பார்க்கும்போது, கல்வியில் நாம் எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்பதற்கு இந்தப் புள்ளிவிவரமே போதுமானது. உயர் கல்வி தரமுள்ளதாகவும், கட்டுப்படியாகக்கூடிய செலவில் கிடைப்பதாகவும் அமையவேண்டும். அரசே முதலீடு செய்து அனைவருக்கும் உயர் கல்வி அளிப்பது இயலாத ஒன்று. தனியார்



பங்கு இத்துறையில் தவிர்க்க இயலாது. எனினும், அரசு தனியார் கல்லூரிகளை முறைப்படுத்துவது அவசியம். தரமான கல்வி அளிக்கவும், ஆசிரியர்களுக்கு ஊதியம், இதர சலுகைகள் போன்றவை நியாயமாகக் கிடைக்கவும், மாணவர்கள் செலுத்தவேண்டிய கட்டணத்தை நிர்ணயிக்கவும் நடவடிக்கைகள் தேவை. தற்போது பணம் படைத்தவர்கள் குறைவான mark-கள் எடுத்தாலும் தனியார் கல்லூரிகளில் பணம் கொடுத்து சேரமுடிகிறது. அதிக mark வாங்கினாலும் ஏழைகளாக இருந்தால் பிள்ளைகளை மருத்துவக் கல்லூரிகளிலும், Engineering கல்லூரிகளிலும் சேர்க்க முடியவில்லை. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடம். இந்த நிலையில் தகுதிக்கு எங்கே இடமுண்டு? தகுதியுள்ள மாணவர்கள் அனைவரும், தாங்கள் விரும்பும் படிப்பில், தனியார் நடத்தும் நிறுவனங்களாக இருந்தாலும், அரசே நடத்தும் நிறுவனங்களாக இருந்தாலும், சேருவதற்குச் சம வாய்ப்பு கிடைக்கச் செய்யவேண்டும். ஏழை மாணவர்களுக்கான படிப்புச் செலவை அரசே மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான், கல்வியில் சம நீதி கிடைக்கும். தனியார் கல்வி நிறுவனங்களில், இலாப நோக்கமின்றி நடத்த முன்வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பதில் முன்னுரிமை வழங்கவேண்டும்.

பிற்பகல் 1-05

அதேபோன்று, பெரிய தொழில் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களைத் தொடங்க முன்வந்தால், அரசு ஊக்கம் அளிக்கவேண்டும். அரசுக் கல்லூரிகளில் மற்றும் பல்கலைக்கழகங்களில் பகுதிநேர ஆசிரியர்கள் பல ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். அவர்களும் முழுநேர ஆசிரியர்களைப்போல, எல்லாப் பணிகளையும் செய்து வருவதால், அவர்களை முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் படிக்கிற காலத்திலேயே மாணவர்களுக்குத் தொழில் நிறுவனங்களில் பகுதிநேர வேலை செய்ய, அரசு வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும். வேலையில்லாத பட்டதாரி ஆசிரியர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளனர். அதை அரசு பரிவுடன் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

உயர் கல்வி நிறுவனங்களில் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துவதை வரவேற்கிறேன்.

காலங்காலமாகப் பின்தங்கிய நிலையிலும், தாழ்த்தப்பட்ட நிலையிலும் உள்ள மக்களுக்குச் சம வாய்ப்பு கிடைக்கும்வரை, இந்தச் சலுகைகள் அவசியம். I.I.T., I.I.M. போன்ற உயர் கல்வி நிறுவனங்களிலும் இத்தகைய ஒதுக்கீடு அவசியம். இந்திய அரசு உடனடியாக இதைச் செயல்படுத்த, தமிழ்நாடு அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துவதன்மூலமே, எல்லா பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உரிய கடமையைச் செய்து விட்டதாக எண்ணும் போக்கு... (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டே இரண்டு பக்கங்கள்தான்; முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிச்சத்தைக் கொடுத்துவிடுங்கள். அதிலே எழுதியிருக்கிற அனைத்தையும் அவர்களே செய்து தந்துவிடுவார்கள்.

**திரு. விஜயகாந்த்:** இட ஒதுக்கீட்டு முறை என்பது ஒரு இடைக்கால திட்டமேதவிர, அதுவொரு சர்வரோக நிவாரணி ஆகாது. அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள்கூட, அதனாலே அதற்கொரு கால வரையறை விதித்தார். அதற்குள், அரசுகள் இந்த நலிவுற்ற மக்களுக்கு எல்லா வகையிலும் உதவிகளைச் செய்யும் என்று அவர் நம்பினார். சுமார் 2 கோடி பின்தங்கிய மக்கள் உள்ளனர் என்றால், அதில் உள்ள 40 இலட்சம் குடும்பங்களுக்கு இட ஒதுக்கீட்டின்மூலம், ஆண்டுக்கு 1000 பேர் உயர் கல்வியில் பயன்பெறமுடியும் என்றால், எல்லோரும் பயன்பெற எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்று எண்ணிப் பார்த்தால், இந்த உண்மை புலனாகும். அந்தக் காலக்கட்டத்தில், சலுகை பெற்ற தலைமுறையினரே தொடர்ந்து சலுகைகளைப் பெறுவார்களேயானால், அதே சமுதாயத்தைச் சேர்ந்த மற்றவர்களின் நிலை என்னவாகும்? பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரையும் கல்வியில் முன்னுக்குக் கொண்டுவர இமாலய முயற்சியை மத்திய, மாநில அரசுகள் கடைப்பிடிக்க வேண்டும். மாறாக, இட ஒதுக்கீட்டுத் திட்டத்தில் மட்டும் மறைந்து கொள்வது, இத்தகைய முயற்சியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் தந்திரமாகவே கருதப்படும். சாலையிடையே பாலம் கட்டுவதைப் போன்றது, தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் அனைவரையும் உயர் கல்வித் தரத்திற்குக் கொண்டுவருவது; பாலம் கட்டுகிற காலத்தில் அமைக்கப்படும் Bye-pass போன்றதுதான் இட ஒதுக்கீடு. Bye-pass–ஐயே நிரந்தரமாக்கும் செயல், இந்த மக்களை வஞ்சிப்பதாகும்.



ஜனநாயகம் என்பது சமத்துவம் என்பது மட்டுமல்ல; எல்லோருக்கும் சம வாய்ப்பும் தருவதாகும். அந்தச் சம வாய்ப்பை உருவாக்கும் வகையில், அடித்தளத்து மக்களுக்குரிய சூழ்நிலைகளை உருவாக்கித் தருவதும், அதற்கான உத்தரவாதம் அளிப்பதும் ஓர் அரசின் கடமையாகும். எல்லோரையும் சமமாக நடத்துவது என்பது ஒன்று; எல்லோரையும் சமமாக்கும் முயற்சியில் ஈடுபடுவது என்பது வேறு. எல்லோரையும் சமமாக்க, அடித்தளத்து மக்களின் வசதிகளையும், வாய்ப்புகளையும் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனது மகன் Engineer–ஆகவோ, Doctor–ஆகவோ ஆகவேண்டுமென்று கனவு காணும் ஏழைத் தாய்மார்களின் கனவு நிறைவேறுமா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்

எண்தேர் செய்யும் தச்சன்

திங்கள் வலித்த கால் அன்னோனே"

என்ற அந்தப் புறநானூற்று வரிகளுக்கு இலக்கணமாக, எங்களுக்கு ஒரு தலைவர் இருக்கின்றார். ஒரு நாளைக்கு 8 தேர்களைச் செய்ய வல்லமை படைத்திருக்கக்கூடிய ஒரு தச்சன், ஒரு மாத காலம் உழைத்து, ஒரே ஒரு தேர்ச் சக்கரத்தை உருவாக்கினான் என்று சொன்னால், அந்தத் தேர்ச் சக்கரம் எந்த அளவிற்கு வலிமையுடையதாக இருக்குமோ, அந்த அளவிற்கு உள்ள உறுதி படைத்த எங்கள் ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தாயும், தந்தையுமாக விளங்கி, அவர் வாழ்கிற காலத்திலே நாங்கள் வாழ்கிறோம் என்ற அந்த ஒரே பெருமையை மட்டும் போதும் என்று கருதக்கூடிய எங்களை, அதற்குப் பின்னாலே, இன்றைக்கு இந்த மன்றத்திலே உறுப்பினராக்கி, அமைச்சராக்கி அழகு பார்த்திருக்கக்கூடிய எங்கள் உயிர்த் தலைவர், ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே நான் முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எனது வெற்றிக்காக அயராது பாடுபட்டு கொட்டும் மழையையும், கொளுத்துகிற வெயிலையும் பொருட்படுத்தாமல் அருப்புக்கோட்டை தொகுதிக்கு ஓடோடிவந்து பிரச்சாரம் மேற்கொண்டு என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் நம்முடைய இளைஞர்களுடைய எழுஞாயிறு அன்பிற்குரிய அண்ணன் தளபதி அவர்களுக்கும், என்னுடைய தந்தையினுடைய மறைவிற்குப் பிறகு, எனக்குத் தந்தையாக இருந்து என் குடும்பத் தலைவராக இருந்து என்னை ஆட்கொண்டு அருளி, என் வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஒவ்வொரு படியிலும் என் உணர்விலே ஒன்றாகக் கலந்து என்னை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற எங்களில் ஒருவராக விளங்கக்கூடிய ஆருயிர் அண்ணன் அஞ்சா நெஞ்சன் மு.க. அழகிரி அவர்களுக்கும், என்னுடைய தேர்தல் வெற்றிக்குப் பாடுபட்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னோடிகள், கூட்டணிக் கட்சிகளுடைய அன்பிற்குரிய தலைவர்கள், தோழர்கள், தொண்டர்கள் ஆகிய அத்தனை பேருக்கும், அதைப்போல இந்தமுறை தலைவர் கலைஞருடைய நல்லாட்சி தமிழகத்திலே மலர்ந்திட வேண்டும் என்ற அந்த ஒரே நோக்கோடு என்னை அருப்புக்கோட்டை தொகுதியிலே வெற்றிபெறச் செய்து, தங்களுக்குப் பணியாற்ற பணித்திருக்கக்கூடிய அருப்புக்கோட்டை தொகுதியினுடைய வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் நான் முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள், திரு. சீர்காழி பன்னீர்செல்வம் அவர்கள், திரு. விடியல் சேகர் அவர்கள், மதிப்பிற்குரிய திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. விஜயகாந்த் அவர்கள் ஆகியோர் தங்களுடைய மேலான கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய ஒவ்வொரு கருத்தையும் குறிப்பாக எடுத்துக்கொண்டு, அவற்றிற்கு விரிவான விடையினைச் சொல்ல வேண்டுமென்று விரும்பினாலும்கூட, காலத்தின் அருமை கருதி அவற்றையெல்லாம் நான் விரிவாக இங்கே விளக்கிட இயலாவிட்டாலும்கூட, அவற்றை எங்களுடைய நெஞ்சிலே பதிய வைத்துக்கொண்டு எதிர்வரக்கூடிய காலக் கட்டங்களில் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகளுக்கு



உரிய நடவடிக்கைகளை, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு மேற்கொள்ளும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மதிப்பிற்குரிய அண்ணன் ஜி.கே. மணி அவர்களும், விடியல் சேகர் அவர்களும் குறிப்பிட்டதைப்போல ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே கடந்த முறை அங்கீகாரம் இரத்து செய்யப்பட்டு மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டுமென்று காத்திருக்கக்கூடிய அந்த மாணவர்களிலே முழுத் தகுதி படைத்திருக்கக்கூடிய 1,134 பேருக்கு இந்த முறை அந்த வாய்ப்பு வழங்கி, அவர்களுக்கு அனுமதி வழங்கும் என்ற ஒரு செய்தியை நான் முதற்கண் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, அவர்கள் பேசுகிறபோது, அந்தப் பள்ளியினுடைய தரத்தினை உயர்த்திட வேண்டும். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அடிப்படை வசதிகளை மேம்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நிச்சயம் அவற்றையும் நாங்கள் செய்து கொடுப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பன்னீர்செல்வம் அவர்கள் பேசுகிறபோது இராஜாத்தி அண்ணி பள்ளியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுகுறித்து அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றையும் இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். அவருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், அரசு அந்தப் பள்ளியைக் குறித்து முழுக் கவனம் செலுத்துகிறது; நீங்கள் மனம் மகிழத்தக்க அளவிற்கு விரைவிலே அரசு அதிலே நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது, எழுத்தறிவிலே குறைந்திருக்கக்கூடிய மாவட்டங்களை, தேர்ச்சி விழுக்காட்டிலே குறைவாக இருக்கக்கூடிய மாவட்டங்களை எடுத்துச் சொல்லி, இந்த மாவட்டங்களிலே இருக்கக்கூடிய மாணவர்களுடைய தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே இது சுட்டிக்காட்டப்பட்டு, நாங்கள் தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே முதல்வரிடத்திலே எடுத்துச் சொல்கிறபோது, இந்த முறை, பகுதி-2 திட்டத்தின்கீழே அப்படிப்பட்ட மாவட்டங்கள், குறிப்பாக வட மாவட்டங்களிலே, விழுப்புரம் மாவட்டம், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, பெரம்பலூர்,

கடலூர் ஆகிய மாவட்டங்களிலே பயிலக்கூடிய மாணவர்களுக்குச் சிறப்புக் கல்விச் சலுகைகள் வழங்கி அவர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் எடுப்பதற்காக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த முறை 78 இலட்ச ரூபாய் அதற்காகத் தனியாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, common schools system; அதுகுறித்துகூட திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள், நான் அதற்குப் பிறகு வருகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் விஜயகாந்த் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இந்த இடைநிற்றலைக் குறைப்பதற்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இடைநிற்றலைப் பொறுத்தமட்டிலே, தமிழகத்திலே அது மிகவும் குறைந்து, இப்போது மூன்று சதவிகித அளவிற்குத்தான் அது இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மாணவர்களுடைய இடைநிற்றலை முழுமையாகக் குறைத்து, அதை zero percentage என்று கொண்டு வருவதற்காகத்தான் அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கிறது. குறிப்பாக, மாணவர்களுக்கு இலவச bus pass வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், மாணவர்களுக்கு இலவச சீருடை, அதைப்போல, சத்துணவு வழங்கக்கூடிய திட்டங்கள் ஆகிய அத்தனை திட்டங்களுமே மாணவர்களைத் தங்கள்பால் ஈர்க்கக்கூடிய அந்த முறைக்கும், படிப்படியாக நம்முடைய பள்ளிகளிலே இருக்கக்கூடிய கல்வியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமாக, இந்த இடைநிற்றல் முழுமையாக அறவே நீக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

பேரவைத் தலைவர் அவர்களே,

"என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால், அன்பால்,
உன்னத இமம லைபோல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல்எந் நாளோ?"

என்று சொன்னார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். இந்த இலட்சிய வரிகளைத்தான் தலைவர் கலைஞருடைய தலைமையிலே



இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசினுடைய பள்ளிக் கல்வித் துறை, தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு, இந்த 80 நாட்களுக்குள், இங்கே மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களெல்லாம் சுட்டிக்காட்டியதைப்போல, பள்ளிக் கல்வித் துறைக்கென்று அள்ளி வழங்கிய வள்ளலாக, தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது எண்ணற்ற நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் கட்டாய மொழி, அன்னைத் தமிழ் மொழியைப் பயிலாமல், தமிழகத்திலே உயர்நிலைக் கல்வி வரை சென்றுவிட முடியும்; மேல்நிலைக் கல்விவரை சென்றுவிட முடியும் என்ற அந்த இழிநிலையை மாற்றி, அன்னைத் தமிழை அனைத்து வகுப்புகளிலும், ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை படிப்படியாக, தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமொழியாகக் கொண்டுவரப்பட்ட ஒரு மகத்தான திட்டம். அதிலும், குறிப்பாக மொழிச் சிறுபான்மையினர் விட்டுப்போய் விடக்கூடாது என்று, அவர்களுடைய தாய்மொழியையும் கற்றுக் கொள்வதற்கு வசதி. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாள், கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என்ற அறிவிப்போடு, அதை இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டமாகக் கொண்டுவரப்படும் என்றும் தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, தமிழ்நாடு அரசிலே ஒப்பந்த முறையிலே பணியாற்றிய, தொகுப்பூதிய முறையிலே பணியாற்றிய 56,537 ஆசிரியப் பெருமக்களுக்குக் கடந்த ஜூன் மாதம் ஒன்றாம் தேதி முதல், காலமுறை ஊதியம் வழங்கி சிறப்பித்தவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக நான் ஒன்றைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், புதிய ஆசிரியர்கள் காலிப் பணியிடம் வருகிறபோது, புதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள், 8,468 காலிப் பணியிடங்களிலே புதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அவர்களே எழுதிய, "சிந்தனையும் செயலும்" என்ற அந்த நூலிலே, 'கணக்காயர் இல்லாத ஊர்' என்ற ஓர் அத்தியாயத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, ஒன்றைச் சொன்னார்கள்: "ஊர் மக்கள் கல்வியாளர்களாக, குறைந்தபட்சம் கல்வி கற்றவர்களாகவாவது இருந்திடப் பாடுபட்டு, முயற்சி மேற்கொள்ள வேண்டும். எந்த ஓர் ஊரிலும் எழுத்தறிவு இல்லாதவரே இல்லை என்ற நிலை ஏற்பட, எழுத்தறிவிக்கின்ற இறைவன்களாகிய கணக்காயர்கள்

ரனப்படும் ஆசிரியர்கள் போதுமான அளவிற்கு இருக்க வேண்டும் அல்லவா?" என்று அவர்கள் வினா எழுப்பினார்கள். தலைவராக இருந்து அவர் எழுப்பிய அந்த வினாவிற்கு, இன்றைக்கு முதல்வராகவும் வந்து அவர் அளித்த விடைதான், அந்த 8,468 காலிப் பணியிடங்களிலும் ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்கள் என்ற அந்த அறிவிப்பு. மேசையைத் தட்டும் ஒலி) காரணம், அவரே ஆசிரியர். முரசொலிக்கு ஆசிரியராக மாத்திரமல்ல. இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் அவரே ஆசிரியராக இருந்து வழிநடத்தக்கூடியவர் என்ற காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர் அவர்கள், இன்றைக்கு அந்த ஆசிரியர் பணியிடங்களை வழங்கினார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, எண்ணற்ற திட்டங்கள். இங்கே நான் அவற்றையெல்லாம் குறிப்பிட விரும்பினாலுங்கூட, காலத்தின் அருமை கருதி, நான் அவற்றை[ய ய ய] இந்த அவையிலே படித்ததாக நீங்களெல்லாம் கருதிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டிலே, இந்த ஆண்டு தலைவர் கலைஞருடைய அரசு, பள்ளிக் கல்விக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கக்கூடிய தொகை மாத்திரம் 5,438 கோடி ரூபாய். அது கடந்த ஆண்டிலே, அதாவது 2005–2006 ஆம் ஆண்டு பள்ளிக் கல்விக்கென ஒதுக்கப்பட்ட 4,348 கோடி ரூபாயைக் கணக்கிடுகிறபோது, இந்த ஆண்டு 1,090 கோடி ரூபாயைக் கூடுதலாகப் பள்ளிக் கல்விக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, தொடக்கக் கல்வி என்று எடுத்துக்கொண்டால், தமிழகத்திலே 42,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 62 இலட்சம் மாணவர்கள் அதிலே கல்வி கற்கிறார்கள். அந்தத் தொடக்கக் கல்விதான், கல்வி அறிவுடைய அடிப்படையாக, ஆணி வேராக இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுதான், இந்த முறை 2,758 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது. இது கடந்த ஆண்டைக் கணக்கிடுகிறபோது, 601 கோடி ரூபாய் அதிகமாக இந்த முறை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடக்கக் கல்வித் துறைக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[ய ய ய] 609 முதல் 612 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அதைப்போல, அனைவருக்கும் கல்வித் திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலே, பல நல்ல புதிய திட்டங்களெல்லாம் இந்த ஆண்டிலே செயல்படுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றன. உதாரணத்திற்கு, 'படிப்பும் இனிக்கும்' என்ற ஒரு திட்டம். இன்றைய சூழ்நிலையிலே, நிதர்சனமான உண்மை என்னவென்று சொன்னால், 3, 4 அல்லது 5 ஆம் வகுப்பிலே படிக்கக்கூடிய குழந்தைகள், தமிழைச் சரியாக வாசிக்கமுடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, குறிப்பாக, அங்கே படிக்கக்கூடிய ஏழை எளிய மக்களின் குழந்தைகள் தமிழைச் சரியான முறையிலே வாசிப்பதற்கு, ஒரு முறையான பயிற்சி அளிக்கவேண்டுமென்ற இந்த உணர்வோடு, நம்முடைய 'அனைவருக்கும் கல்வித் திட்ட'-த்தினுடைய சார்பில் இந்தப் 'படிப்பும் இனிக்கும்' என்ற ஒரு திட்டம், இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாணவர்களுடைய பன்முகத் திறனை அறிந்து, அவற்றையெல்லாம் மேம்படுத்தக்கூடிய ஒரு நல்ல திட்டம். மாணவர்கள் தாங்களே கற்றுக்கொள்ளக் கூடியவகையில் self-learning என்ற வகையிலே, அதற்கு ஒரு சிறப்புத் திட்டம். தொடக்கக் கல்வியிலே, கணினிவழிக் கல்வி வேண்டுமென்று Microsoft நிறுவனமான, Azis Premji Foundation, அதைப்போல Intel போன்ற நிறுவனங்களோடு சேர்ந்து, தொடக்கக் கல்வியிலேயே கணினிக் கல்வியைக் கொண்டுவரக்கூடிய முறை, ஆகிய அத்தனையும் இந்தத் திட்டத்தின்மூலமாகச் செய்ல்படுத்தப்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், தீவிர மாணவர் சேர்ப்பு இயக்கத்தின்மூலமாக, தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளான ஜூன் மாதம் 3 ஆம் தேதி துவங்கி, இந்த ஜூலை மாதம் 15 ஆம் தேதிக்குள்ளாக நம்முடைய தமிழகத்திலே, 94,000 குழந்தைகளை, பள்ளி செல்லக்கூடிய அந்த வயதிலே இருக்கக்கூடிய குழந்தைகளை, தலைவர் கலைஞருடைய அரசு, இப்போது பள்ளிக்கு ஈர்த்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு புதிதாக 126 தொடக்கப் பள்ளிகளும், அதைப்போல, 234 கல்விக் காப்புறுதி மையங்களும், அதைப்போல, 234 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், தரம் உயர்த்தப்பட இருக்கின்றன.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், பள்ளிச் சீரமைப்பு மாநாடு. இந்தப் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டின் ஒரு முக்கியமான நோக்கம், சமுதாயத்திலே இருக்கக்கூடிய மக்களுடைய பங்களிப்பு, கல்வி நிறுவனங்களுக்கு வேண்டுமென்ற உணர்வோடுதான் நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு, கடந்தமுறை இருந்தபோது பல்வேறு மாவட்டங்களிலே கல்விச் சீரமைப்பு மாநாடுகளை நடத்தி, அதன்மூலமாக அசையும், அசையா சொத்துகளாக, நம்முடைய கல்வித் துறைக்கு அன்றைக்கு 41.5 கோடி ரூபாய் திரட்டப்பட்டது. அது, கடந்த காலத்திலே எவ்வளவு திரட்டப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் 15.4 கோடி ரூபாய் மட்டும்தான் இருந்தது என்பதையும், இந்த ஆண்டு 7 மாவட்டங்களிலே பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சமச்சீர் கல்வி முறை தேவை என்பதை உணர்ந்துதான் நம்முடைய தேர்தல் அறிக்கையிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். சமச்சீரான, தரமான கல்வி அனைவருக்கும் வழங்கப்படவேண்டும். அதுதான் இந்த அரசினுடைய குறிக்கோள் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுது இருக்கக்கூடிய அந்தக் கல்வி அடிப்படையிலே பார்த்தோமென்று சொன்னால், 1 முதல் 10 ஆம் வகுப்புகளிலே மாநிலப் பாடத் திட்டம், Matriculation பாடத் திட்டம், Anglo Indian பாடத் திட்டம், அதைப்போல Oriental Board என்று சொல்லக்கூடிய கீழ்த்திசைப் பாடத் திட்டம் என்று பல்வேறு பாடத் திட்டங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழக மாணவர்களுடைய நலன் கருதி, அனைவரும் அந்தச் சமமான கல்வியைப் பெறும்பொருட்டு, மேற்காணும் அனைத்துவகை பாடத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஆய்வு செய்திட, ஓர் உயர்மட்டக் குழுவினை அமைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உயர்மட்டக் குழு ஆய்வு செய்து, அது அளிக்கக்கூடிய அறிக்கையின் அடிப்படையில், இந்த அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பாடநூல்களைப் பொறுத்தமட்டிலே, அது கடினமாக இருக்கிறதென்று ஒருபுறமும், அதிலே பல்வேறு குறைபாடுகள் இருக்கிறதென்றும் இந்த மன்றத்திலேகூட கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் களைந்து,



வரக்கூடிய கல்வி ஆண்டிலேயே, சிறந்த பாடநூல்கள் அமையக்கூடிய வகையிலே, அதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு குழு அமைத்து அந்தப் பாடப் புத்தகங்களிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய கருத்துகளையெல்லாம் ஆராய்ந்து, அந்தக் குறைபாடுகளைப் போக்கிடுவதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு அறிவிப்புகளுக்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்காகக் கூடுதலாக இந்த ஆண்டு 7,979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்த, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இன்றைக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே உறுப்பினர்கள், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி போன்றவர்கள், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த இதற்கு முன்னாலே பேசிய நம்முடைய திரு. சிவபுண்ணியம் போன்றவர்கள், நம்முடைய திரு. கோவிந்தசாமி போன்றவர்கள், இங்கே இந்த அவையிலே பலமுறை குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள், வேலையில்லாத பட்டதாரி ஆசிரியர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவோடு, பரிவோடு, பரிசீலித்து அவர்களுடைய வேதனையை, வாட்டத்தைப் போக்கிடவேண்டுமென்ற உணர்வோடு அவர்களுடைய கோரிக்கையைப் பரிவோடு ஏற்று, இந்த 7,979 பணியிடங்கள் அனைத்தும், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். இந்த ஆசிரியர்கள், உரிய புத்தாக்கப் பயிற்சி பெற்று அவற்றிற்குரிய பணியிடங்களிலே பணியமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1–25

அதைப்போல, பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்; கடந்த சில ஆண்டுகளில், தொடங்கப்பட்ட 525 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இது ஒரு பெரும் குறையாக உணரப்பட்டது. எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், 2006–2007 ஆம் கல்வியாண்டில், இந்த

525 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்கிட அனுமதி அளித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணிபுரியக்கூடிய வட்டார வள மைய ஆசிரியர்களின் கோரிக்கையினை இவ்வரசு ஏற்று, நடப்புக் கல்வியாண்டில், 500 வட்டார வள மைய ஆசிரியர்களை, அவர்களுடைய பணி மூப்பு அடிப்படையில், தற்பொழுது அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் மாற்றம் செய்ய ஆணையிடவுள்ளது.

உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களின் பணி மாறுதலைப் பொறுத்தமட்டில், தொடக்கக் கல்வித் துறையில் பணிபுரியும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள், இதுவரை அவர்கள் கடைசியாக நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்த கல்வி மாவட்டத்தில் பணிபுரிய அனுமதிக்கவில்லை. இவர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் கடைசியாகப் பணிபுரிந்த ஒன்றியத்தைத் தவிர, மற்ற ஒன்றியங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையிலே பலமுறை எழுப்பப்பட்ட கோரிக்கை, மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய தொழிற்கல்வி ஆசிரியர்களுடைய நலன் கருதியது. தற்போது அரசு மற்றும் அரசு நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கழகம், நிர்வாகத்தால் முற்றிலும் தற்காலிக அடிப்படையில், பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்று பணிபுரிபவர்களில், முழுக் கல்வித் தகுதி பெற்ற 213 தொழிற்கல்வி ஆசிரியர்கள், அரசால் அனுமதி வழங்கப்பட்டு காலியாக உள்ள தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் முன்னுரிமைப்படி நியமனம் செய்ய, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று: நீங்கள் கேட்டதையெல்லாம் அள்ளி, அள்ளி தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கணினி ஆசிரியர்களுடைய நலன். அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்பொழுது தொகுப்பூதியத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் கணினி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வாசிரியர்களின்



கோரிக்கையை அரசு ஏற்று, முழுக் கல்வித் தகுதியோடு பணிபுரியும் கணினி ஆசிரியர்களைப் போட்டித் தேர்வின்மூலமாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய, பரிவுடன் பரிசீலனை செய்ய, இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நம்முடைய நபார்டு வங்கித் திட்டத்தின் மூலமாகவும், அதைப்போல, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலமாகவும், பல்வேறு பணிகள் இங்கே நடைபெறவிருக்கின்றன. நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பொறுத்தமட்டில், இதுவரை 5 கட்டங்களில் 1,154 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.413.87 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி அமைத்துத் தரப்பட்டிருக்கின்றன. இந்த நடப்புக் கல்வியாண்டில் நபார்டு 6, 7 ஆம் பகுதி கட்டங்களில், 429 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.293 கோடி மதிப்பில் இந்த வசதிகள் செய்து தரப்படும் என்பதையும் 8–வது கட்டத்திற்கான பணிகளில், இதுவரை நபார்டு வங்கி அனுமதிக்கப்படாத அறிவியல் உபகரணம், மாணவர்களுக்கான Benches, Desks, இருக்கைகள், பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகளையும், 8–வது கட்டத்திலிருந்து பள்ளிகளுக்கு அளித்திட நபார்டு வங்கி முன்வந்திருக்கின்ற காரணத்தினால், இந்த வசதிகள் எல்லாம் வரக்கூடிய 8–வது கட்டத்தின்கீழாக எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே முதல் 7–வது கட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 1,583 பள்ளிகளுக்கும் கூடுதலாக அறிவியல் உபகரணங்கள் மற்றும் இருக்கை வசதிகள் செய்து தரப்படும்.

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ், 1,075 பள்ளிகளில் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் நடைபெறுவதற்கான கட்டடங்கள் ரூ.21.75 கோடி மதிப்பில் கட்டப்படும். அதைப்போல 14,354 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் ரூ.281.28 கோடி மதிப்பில் நடப்பாண்டில் கட்டப்படும்.

அதைப்போல "10–K Project" என்ற திட்டத்தின் அடிப்படையில், தொடக்கக் கல்விக்கு மாத்திரம், இந்த ஆண்டு 10 ஆயிரம் கணினிகள், அந்தத் தொடக்கக் கல்வியினுடைய கணினி மேம்பாட்டிற்காக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதைப்போல, நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு

உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே, எடுத்துச் சொன்னதன் அடிப்படையில் இந்த 12 ஆம் வகுப்பு மற்றும் C.L.I.S.....

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு :** 12 ஆம் வகுப்பு மற்றும் C.L.I.S. தகுதி பெற்று, மாதம் ரூ.1,500 தொகுப்பூதியத்தில் பணியாற்றக்கூடிய 207 பேர், பகுதிநேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பணி மூப்பின் அடிப்படையில், இவர்களை மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்புகளுடைய இறுதியாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே, என்னைச் சந்தித்திருக்கக்கூடிய பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த மன்றத்திலே எழுப்பப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் சந்தித்து, இந்த ஆண்டு 100 பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, அதேபோல 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றி ஆணை வழங்கியிருக்கிறீர்கள்; இன்னும் பல்வேறு கோரிக்கைகள் பொதுமக்களிடமிருந்து, குறிப்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வந்து கொண்டே இருக்கின்றன; எனவே அவற்றையும் நீங்கள் கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அவரிடத்திலே கேட்டுக்கொண்டேன். உங்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியும். அவருக்கு இருக்கக்கூடிய நிதிச் சுமை. அந்த நிதிச் சுமைக்கும் நடுவிலே, 'தொந்தரவுக்கும் உள்ளே தோழி, சுகம் கண்டேன் நான்' என்று சொல்வதைப்போலே, தொல்லைகளுக்கும் இடையே, இருக்கக்கூடிய அந்த முல்லைச் சிரிப்போடு, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த முறை மேலும் 20 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 20 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் (மேசையைத் தட்டும் ஒலி) தரம் உயர்த்தித் தருவதற்கு ஆணை



வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அளித்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை நான் முழுமையாகப் படித்துப் பார்த்து, அவற்றையெல்லாம் என்னுடைய நெஞ்சத்திலே பதிய வைத்துக் கொண்டிருக்கிறேன். அவற்றை எல்லாம் நிச்சயமாக இந்த அரசு, வரக்கூடிய கால கட்டங்களிலே படிப்படியாக நிறைவேற்றுவதற்கு முழு முயற்சியினை மேற்கொள்ளும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இறுதியாக என்னுடைய நெஞ்சத்திலே பூட்டி வைத்துக் கொள்ள முடியாத ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் நான் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டிலே என்னுடைய தந்தையார் தங்கபாண்டியன் அவர்கள் இந்த மன்றத்திலே வணிக வரித் துறை அமைச்சராக, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருக்குப் பின்னாலே அமர்ந்திருக்கக்கூடிய தம்பிமார்களில் ஒருவராக இடம் பெற்றிருந்தார்கள். அன்றைக்கு அவர்கள் வணிக வரித் துறையினுடைய அமைச்சராக இந்த மன்றத்திலே மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்கிறபோது, இதே மன்றத்தினுடைய மாடத்திலே அமர்ந்துகொண்டு நான் அவர் பேசுகிற அழகைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் கனவிலும் நினைக்கவில்லை; என்னை இந்த மன்றத்திலே பேசவைத்துவிட்டு, அவர் இவ்வளவு சீக்கிரம் போவார் என்று. அன்றைக்கு அவர் பேசிய அழகை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்றைக்கு என்னையும் அறியாமல் என் கண்கள் அவரைத் தேடுகின்றன. அவர் இன்றைக்கு இல்லாவிட்டாலும்கூட, இங்கே அமர்ந்திருக்கிறாரே, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர்; அவருடைய வடிவிலே நான் என் தந்தையை என்றைக்கும் கண்டு கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லி, நான் வந்திருக்கக்கூடிய விருதுநகர் மாவட்டத்திலே இருந்து ஆறாம் நூற்றாண்டிலே உதித்த ஆண்டாள் பாடினாரே திருப்பாவையிலே,

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு

உற்றோமே யாவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்

மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!'

என்று, அந்த உணர்வினை மாத்திரம் தலைவர் கலைஞருடைய காலடியிலே சமர்ப்பித்து நன்றியோடு அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) பொறுங்கள். அடுத்த அமைச்சர் பேசப் போகிறார். (குறுக்கீடு) அடுத்தாற்போல், கடைசியிலே நீங்கள் பேசலாம். உட்காருங்கள். கடைசியிலே பேசலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஒரு குக்கிராமத்தில் ஒரு சாமானிய விவசாய, ஆசிரியர் குடும்பத்தில் பிறந்த... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். அமைச்சர் பதிலுரை முடித்த பிறகு, நீங்கள் உங்கள் கேள்வியைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது என்ன? அவரும் இங்கே இருக்கிறார், நீங்களும் இங்கே இருக்கிறீர்கள், பிறகு என்ன? உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** எனக்கு விழுப்புரம் தொகுதியில் 5 முறை போட்டியிட வாய்ப்பினை அளித்து, 4 முறை வெற்றிபெறச் செய்து, 3 முறை அமைச்சரவையிலே இடம் கொடுத்து, என்னை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்திய என் குடும்பத் தலைவர், வளரும் இளைஞர்கள், பகுத்தறிவுச் சிந்தனையோடு வளர வேண்டும் என்பதற்காகச் சமூக சீர்திருத்தத் துறையை உருவாக்கி, அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கிய தந்தை பெரியாரின் மறு உருவாய் வாழும் தலைவர், பசித்த வயிறே இருக்கக்கூடாது என்பதற்காக கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கி, ஏழைகளின் வயிறைக் குளிர வைத்த அறிஞர் அண்ணாவாய் வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக என்றென்றும் திகழ்ந்து, இந்தக் கல்வித் துறையின் வளர்ச்சிக்குக் கடந்த காலங்களில் வித்திட்ட இனமானப் பேராசிரியர் அவர்களையும், பொருளாளர் அவர்களையும், இன்றைய இளைஞர் பட்டாளத்தை ஈட்டிமுனைகளாகத் தீட்டி வருகிற, என்றென்றும் எனது கழகப் பணிக்குத் தட்டிக் கொடுத்து, எனக்கு வழிகாட்டியாகத் திகழும் தளபதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்



வெற்றிக்குப் பாடுபட்ட தோழமைக் கட்சித் தலைவர்களையும், உழைத்த கழகத் தோழர்களையும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களையும் வணங்கி, நன்றி கூறி, உயர் கல்வித் துறையின் மீதான என்னுடைய பதிலுரையைத் துவக்குகின்றேன்.

பிற்பகல் 1–35

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திராவிட இயக்கமே, கல்வியின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட இயக்கம்தான். அனைவருக்கும் கல்வி கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்திலே உருவாக்கப்பட்டதுதான் நீதிக் கட்சி. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள் சொன்னதைப்போல, 'Education is the right of privileged few', ஏதோ சிலருக்கு மட்டுமே இருந்த கல்வி கற்கிற உரிமையை, அனைவருக்கும் பரவலாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்டதுதான் இந்த திராவிட இயக்கம். அந்த இயக்கத்தினுடைய தலைவராக இன்று வாழ்ந்து கொண்டிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள், அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் ஆரம்பக் கல்வியாக இருந்தாலும், உயர் கல்வியாக இருந்தாலும், அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்ற சமூக நீதித் திட்டத்தின் அடிப்படையிலே கொள்கைகளை வகுத்திருக்கிறார்கள். இந்த Policy Note—கொள்கைக் குறிப்பு—என்பது, இந்த உயர் கல்வித் துறையானது எந்தக் கொள்கைகளைப் பின்பற்றப் போகிறது; இந்த 5 ஆண்டுகளில், என்ன மாற்றங்களைக் கொண்டுவர இருக்கிறது என்ற கொள்கைகளையும், அதற்கான செயல் திட்டங்களையும் கோடிட்டுக் காட்டுவதாகவே இந்த கொள்கைக் குறிப்பு விளக்கத்தினை நாங்கள் இங்கே அளித்திருக்கிறோம்.

குறிப்பாக, இந்த உயர் கல்வியைப் பொறுத்தவரையில், quantity— எண்ணிக்கையை அதிகப்படுத்துதல், quality – தரத்தை உயர்த்துதல், relevance – அந்த எண்ணிக்கையும் தரமும் வளர்கிறபொழுது, அது இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கும் சமுதாயத்திற்கும் ஒப்புடையதாக இருக்க வேண்டும் என்ற மூன்றின் அடிப்படையிலேயே இங்கே எங்களுடைய கொள்கையை வகுத்திருக்கிறோம். குறிப்பாக, எண்ணிக்கையை வளர்க்க வேண்டும் என்று சொல்கிறபோது, பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் 18 வயதிலேயிருந்து 20 வயதிலே இருக்கிற இளைஞர்கள்– U.K.–விலே 52 சதவிகிதம் பேர் உயர் கல்வி பெற்றவர்களாக இருக்கிறார்கள், கனடாவிலே 88 சதவிகிதம் பேர், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 81 சதவிகிதம் பேர், ஆஸ்திரேலியாவிலே 80 சதவிகிதம் பேர், பின்லாந்திலே 74 சதவிகிதம் பேர்; வளர்ச்சி பெற்ற

நாடுகளிலே எல்லாம் கிட்டத்தட்ட 62 சதவிகிதம் பேர் சராசரியாக உயர் கல்வி பெற்றவர்களாக இருக்கிறார்கள். வளரும் நாடுகளில் 22 சதவிகிதம் இருக்கிறார்கள். ஏழை நாடுகளில் 12 சதவிகிதம் இருந்தாலும்கூட, இந்தியாவினுடைய இந்த சராசரியைக் கேட்டால் நமக்கு மிகவும் வருத்தம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்திய நாட்டினுடைய சராசரி 7 சதவிகிதம்; உயர் கல்வி பெறுபவர்கள் 7 சதவிகிதம். நீதிக் கட்சி, திராவிடக் கட்சி இயக்கங்களினுடைய வளர்ச்சிக்குப் பிறகும்கூட, இன்றும் இந்திய நாட்டிலே 7 சதவிகிதம் பேர்தான் உயர் கல்வி பெறுகிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்கிறபொழுது, இந்த உயர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்; பெறுபவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் தலைவர் கலைஞர் அவர்கள் உயர் கல்வித் துறையைத் தனித் துறையாக உருவாக்கி, அதற்காக ஒரு அமைச்சகத்தையும் உருவாக்கி இருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எண்ணிக்கையை உருவாக்குவதிலே, குறிப்பாக உயர் கல்வியைப் பொறுத்தவரையில், இந்த 7 சதவிகிதத்தை 2010–க்குள்ளாக, குறைந்தபட்சம் இந்த 5 ஆண்டுகளில், 15 சதவிகிதமாக உயர்த்திக் காட்டவேண்டும் என்பதை இந்தத் துறை தன்னுடைய கொள்கை முடிவாக எடுத்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறது. நான் தனியாக அறிவிப்புகளைச் சொல்லாமல், அவ்வப்போது இந்த அரசின் கொள்கையின் அடிப்படையிலே, ஊடுருவலாக எங்களுடைய அறிவிப்புகளையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த எண்ணிக்கையை உயர்த்துவதற்காக, இந்த அரசு என்ன திட்டங்களைக் கையில் வைத்திருக்கிறது; என்ன நடைமுறைகளைப் பின்பற்றப் போகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, கலைஞர், ஆட்சியிலே இருக்கிறபோதுதான், அரசுக் கலைக் கல்லூரிகள் அதிகமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதைப் புள்ளி விவரங்களோடு என்னால் நிரூபிக்க முடியும். குறிப்பாக, 1967–லே இருந்து 1976 வரை கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், 25 அரசுக் கல்லூரிகள் திறக்கப்பட்டன என்பது வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 25 அரசுக் கல்லூரிகள் இருந்தன. தமிழகத்திலே இருக்கிற மொத்த அரசுக் கல்லூரிகளே 67. அதிலே காங்கிரஸ் காலத்திலே துவக்கப்பட்டவை 27; 9 ஆண்டு கால கலைஞருடைய ஆட்சியிலே,



57–லே இருந்து 1977 வரை 25. மீண்டும் 1989–லே இருந்து 1991 வரை, லைஞருடைய ஆட்சியிலே துவக்கப்பட்டவை 2. 1996–லே இருந்து 001 வரை துவக்கப்பட்ட கல்லூரிகள் 2. ஆக மொத்தம் 29 ல்லூரிகளைத் துவக்கி வைத்த பெருமை, தலைவர் கலைஞர் தல்வராக இருந்தபோதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ு.தி.மு.க. ஆட்சியிலே அவர்கள் கிட்டத்தட்ட 22 ஆண்டுகள் ஆட்சி சய்து, அவர்களுடைய காலத்திலே துவக்கப்பட்டிருக்கிற அரசுக் ல்லூரிகளுடைய எண்ணிக்கை மொத்தமே 5 தான் என்பதை நீங்களும் ணர்ந்துகொள்ள வேண்டும்; அரசுக் கல்லூரிகளின்மீது அவர்களுக்கு ருந்த நம்பிக்கையையும் தெரிந்துகொள்ள வேண்டும். தனியார் ல்லூரிகள் வளர்ந்திருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால் அடித்தளத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்குக் கல்வி சென்றடைய வேண்டுமானால், அது அரசுக் கல்லூரிகளின் மூலமாகத்தான் முடியும் ன்ற உணர்வோடுதான் இவை எல்லாம், கடந்த காலங்களிலே தலைவர் அவர்கள்—ஏனென்றால், தனக்குக் கிடைக்காத கல்வி இந்தச் சமுதாயத்திலே இருக்கிற அடித்தளத்து மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடைய தலைவர் என்ற காரணத்தினாலேதான்—அந்தக் கல்விக் கொள்கையை வகுத்து, கல்லூரிகளினுடைய எண்ணிக்கையை வளர்த்துக் காட்டியிருக்கிறார்கள். அதேபோல்தான், இந்த அடிப்படையிலேதான், இந்த ஆண்டும்கூட பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2 கல்லூரிகளை வழங்கி இருக்கிறார்கள். ஒன்று, வால்பாறையிலேயும், மற்றொன்று மேட்டூரிலேயும் வழங்கியிருக்கிறார்கள். வால்பாறையில் அங்கே இடத்தையும் கொடுத்திருக்கிற காரணத்தினால், அந்த உறுப்பினர் கோவை தங்கம் அவர்களுடைய கோரிக்கைக்கேற்ப, இந்த ஆண்டே 3 பட்டப் பிரிவுகளோடு அந்தக் கல்லூரி செயல்படத் தொடங்கும் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு அறிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

அதுமட்டுமல்ல; மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், இன்று காலையிலே ஓர் அறிவிப்பைச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களில் பலவற்றிலே கோரியிருப்பது, இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிற, பல சூழல்களில் கொடுத்திருக்கிற கோரிக்கைகள் எல்லாம், அவர்களுக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்பதுதான். திரு. வேல்முருகன்கூட பார்க்கிறபோதெல்லாம், பண்ருட்டிக்கு ஒரு

கல்லூரி வேண்டும் என்று கேட்பார். நான்கூட சொன்னேன்;
பக்கத்திலே விழுப்புரம், பக்கத்திலே கடலூர், நடுவிலே ஒன்று
வேண்டுமா என்றுகூட கேட்டாலும். 25, 25 கிலோ மீட்டர் இருக்கிற
காரணத்தால் உடனடியாக வேண்டும் என்று கோரிக்கை
வைத்திருக்கிறார்கள். இங்கே இருக்கிற பல சட்டமன்ற உறுப்பினர்களும்
அதுபோன்ற கோரிக்கையை வைத்திருக்கிற காரணத்தினால், கலைஞர்
அவர்கள், காலையிலே ஓர் அறிவிப்பைச் செய்யச் சொன்னார்.
என்னவென்றால், எந்தத் தொகுதியிலேயிருந்து ஒரு கோடி ரூபாய்
பணமும். 5 ஏக்கர் நிலமும் அவர்களாக வந்து கொடுக்கிறார்களோ,
முன்னுரிமை அடிப்படையிலே அவர்களுக்கெல்லாம் கல்லூரி
வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) சாதாரணம்தான்.
இது ஒன்றும் இல்லை. இப்போதே B.Ed. படிப்பிற்கான
கல்லூரிகளுக்கெல்லாம், மற்ற கல்லூரிகளுக்கெல்லாம் இப்போதும்
பணம் கட்டித்தான் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.
தயாராகவும் இருக்கிறார்கள். ஏனென்றால், பல போட்டி இருக்கிற அதற்குத்
இந்தக் காலக்கட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தத்
தொகுதியிலிருந்தோ, எந்தத் தொகுதியிலிருந்தாவது இந்தத்
தொகையையும் கட்டி, 5 ஏக்கர் நிலத்தையும் கொடுப்பார்கள் என்று
சொன்னால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த
ஆண்டிலேயிருந்துகூட கல்லூரிகளைத் தொடங்குவதற்கு, அரசுக்
கல்லூரிகளைத் தொடங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மேலும், கல்லூரியினுடைய இந்த வசதிகள் அனைவருக்கும்
சென்றடைய வேண்டும்; இந்த உயர் கல்வி அனைவருக்கும் கிடைக்க
வேண்டும் என்ற எண்ணத்தோடுதான், அரசுக் கல்லூரிகளிலே shift
முறையைக் கொண்டு வரலாம் என்றும் இந்த அரசு முடிவு
செய்திருக்கிறது. குறிப்பாக, பல்வேறு கல்லூரிகளிலே, இன்று பல
இடங்களிலே, காலைக் கல்லூரி, மாலைக் கல்லூரி என்று
இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் இங்கே
பேசுகிறபோதுகூட சொன்னார்; பள்ளிகள் காலையிலேயும்,
மாலையிலேயும் வேண்டும் என்று சொன்னார். அதை முதல்முறையாக,
ஒரு பரீட்சார்த்தமாக இந்த ஆண்டு 10 கல்லூரிகளிலே, காலை, மாலை
என்று shift முறையில், காலையில் 7—30 மணிக்குக் கல்லூரி தொடங்கி,
5 மணி நேரம், 12—30 மணிக்கு ஒரு shift—உம்—ஏனென்றால் அங்கே
இருக்கிற infrastructure, அங்கே இருக்கிற computers அனைத்தையுமே
அடுத்தவேளை பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள்
இருக்கின்றன. அதிகமாக ஆசிரியர்களை மட்டுமே நாம் நியமிக்க



வேண்டியிருக்கும். அதுவும் கிராமப்புறத்திலே இருக்கிற
மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு வசதி
வாய்ப்பற்றவர்கள், அரசுக் கல்லூரிகளிலேதான் படிக்க வேண்டுமென்ற
கட்டாயம் உள்ளவர்கள், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க
வேண்டுமென்ற எண்ணத்தோடு, தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு
செய்து, shift முறையை, இந்தக் கல்லூரிகளிலே, அரசுக் கல்லூரிகளிலே
கொண்டு வருவதற்கும், அதுவும் எந்தப் பாடப் பிரிவுகளிலே அதிக
வேட்புகள், அதிக விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவோ, அந்தக்
course-களை மட்டும், மாலைக் கல்லூரிகளிலே தொடங்கலாம் என்று
சொல்லி, காலையிலே 7—30—லிருந்து 12—30 மணி வரை, 5 மணி நேரம்
காலைப் பிரிவுக் கல்லூரியும், 1—30 மணியிலிருந்து 6—30 மணி வரை, 5
மணி நேரம் மாலைக் கல்லூரி அதாவது இரண்டாவது shift-ஆகவும்
நடத்த வேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறோம். இதிலே, 10
கல்லூரிகள் இந்த ஆண்டு முதலே நடத்துவதற்காக அவை
தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு
உறுப்பினர்கள் விரும்பினால், அரசுக் கல்லூரிகளிலே, அரசுக்
கல்லூரிகள் மட்டுமல்ல; தனியார் கல்லூரிகளிலே இருப்பவர்களும்,
அவர்களும் விண்ணப்பித்தால், முறையாக இருக்குமானால், அதற்கான
அனுமதியும் வழங்கி, இரண்டு shift முறைகளிலே பயில்வதன்மூலமாக—
—எங்களைப்போன்றவர்கள் உள்ள விழுப்புரம் போன்ற பகுதிகளில்
இருக்கின்ற கல்லூரிகளிலே, mofussil கல்லூரிகளிலே இருப்பவர்கள்
எல்லாம், B.Sc. (Computer Science) என்று எடுத்துக்கொண்டால், 50
இடங்கள் என்றால், 500 விண்ணப்பங்கள் வருகின்றன. இங்கே இருக்கிற
பாரதியார் கலைக் கல்லூரியிலே, 100 இடங்களுக்கு 1500
விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. இதுபோன்ற சூழல்கள் இருக்கிற
காரணத்தினால்—நமக்கு அதிக செலவும் இல்லாமல், ஆசிரியர்களை
மட்டும் நியமித்து, உயர் கல்விபெறுபவர்களினுடைய எண்ணிக்கையைப்
பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்த முடிவை எடுத்து,
அரசுக் கல்லூரிகளிலே shift முறைகளைக் கொண்டு வரவேண்டுமென்று
இந்த அரசு முடிவெடுத்து, இந்த ஆண்டு முதல் செயல்படுத்த இருக்கிறது.

அதுமட்டுமல்ல; இங்கே பேசிய முன்னாள் அமைச்சர் அவர்கள்,
கடந்த காலங்களிலே இங்கே உயர் கல்வி வளர்ச்சி பெற்றது, வளர்ச்சி
பெற்றது என்றெல்லாம் சொன்னார்கள். வளர்ச்சி பெற்றிருக்கிறது; நான்
இல்லை என்று சொல்லவில்லை. இன்னும்கூட அதிகமாக அவர்கள்
முயற்சி எடுத்திருந்தால், வளர்ச்சி பெற்றிருக்க முடியும். அவர்கள் முயற்சி
எடுக்கவில்லை என்று சொல்வதற்கு ஒரேயொரு ஆதாரத்தைமட்டும்

நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 500 கோடி ரூபாய் செலவில் தேசிய அறிவியல் நிறுவனம் ஒன்று நிறுவுவதற்காக, மத்திய அரசிலே அனுமதி அளிக்கப்பட்டு, 2003–லே 4 நகரங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். பூனா, கொல்கத்தா, அதிலே சென்னையும் ஒன்று, தென் இந்தியாவிலே. சென்னையிலே தொடங்குவதற்காக 500 கோடி ரூபாய்—ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல, மத்திய அரசாங்கம் கொடுக்கிற பணம் 500 கோடி ரூபாய்—அதற்காக அவர்கள் அனுமதித்து, அதற்குக் காரணம் எதையும் சொல்லாமல் விட்டுவிட்ட பிறகு, 21–10–2005–ல் டாக்டர் இராஜசேகரன் பிள்ளை என்பவர், சென்னைக்கு வந்து—அவர் தான் அப்போது U.G.C.-யினுடைய துணைத் தலைவராக இருந்தார்—அவர் இங்கே வந்து சொன்னபிறகு, ஒரு கடிதம் இந்த அரசிலே எழுதப்படுகிறது. 1–12–2005–லே ஒரு கடிதம், துறையிலிருந்து கல்வி அமைச்சருக்கு அனுப்பப்படுகிறது. அன்றைய கல்வி அமைச்சர், இன்றைய உறுப்பினர், 13–12–2005–லே கையெழுத்திட்டிருக்கிறார். கையெழுத்திட்டு முதலமைச்சருக்கு அனுப்பப்படுகிறது. என்ன நிலைமை தெரியுமா? அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தால், குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். 13–12–2005–லே கல்வி அமைச்சரிடமிருந்து முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதம், கடைசிவரை கையெழுத்துப் போடாமலேயே அதை வைத்து விட்டுப்போய், இன்று தலைவர் கலைஞர் கையெழுத்துப் போட்டு, மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆறு மாத காலமாக, முக்கியமான ஒரு 500 கோடி ரூபாய் கிடைக்கவேண்டியதற்குக் கையெழுத்துப் போடாமலேயே, பதிலே அனுப்பாமல் விட்டுவிட்டிருக்கிறார்கள். ஆக, இதுபோன்ற முயற்சிகளிலே இந்த அரசு மேலும் முற்பட்டு, மத்திய அரசினுடைய நிதியும் இங்கே கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–45

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், 65 சதவிகிதம், 35 சதவிகிதம் ஒதுக்கீடு என்று சுட்டிக்காட்டினார்கள். இதனை இன்று மாணவர்கள், படித்தவர்கள் இன்னும் பத்திரிகையாளர்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே சட்டம்கூட போட முடியாமல் இருக்கிறார்கள். ஏனென்றால், Supreme Court–ல் 100–க்கு 100 நடத்தலாம் என்று சொல்லிவிட்டார்கள். தனியார் கல்லூரிகள் நடத்துவதற்குத் தயாராக இல்லை. நாம் ஒன்றை நடைமுறை ரீதியாகச்



சிந்தித்துப் பார்க்கவேண்டும். தனியார் கல்லூரிகளுக்கு அரசு எந்தவிதமான உதவியும் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுக்காத காலக் கட்டங்களில் அவர்களும் கல்லூரியை நடத்த வேண்டும். அதற்காக அவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைவிட, ஒரு compromise ஏதாவது செய்துகொண்டு, நம்முடைய மாணவர்களுக்கும் கல்வி வசதிகள் கிடைப்பதற்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன்தான், அவர்களுக்கு N.R.I. போக, கிட்டத்தட்ட 20% அவர்களுக்கு என்ற அடிப்படையில்தான் இருக்கிறது. 65 சதவிகிதத்தை அரசு ஒதுக்கீடாகப் பெற்றுக் கொடுத்ததன்மூலமாக, கடந்த ஆண்டு 43,299 இடங்கள்தான் இருந்தன. இந்த ஆண்டு அது 57,126 இடங்களாக, 13,827 இடங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், காலியிடங்கள் இருக்கலாம் என்று சொன்னார்; இருக்கலாம். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு—Engineering—பொறியியல் கல்லூரிகளுக்குப் போட்டி அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? கல்வியினுடைய தரம். சில கல்லூரிகள்மட்டுமே வேண்டுமென்று மாணவர்கள் கேட்கின்ற சூழ்நிலையின் காரணமாக, இதுபோன்ற நிலைமைகள் உருவாகின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையையும் இந்த அரசு மறுபடியும் மேற்கொள்ளும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முன்பே குறிப்பிட்ட அந்த shift முறை கல்லூரிகள், இந்த ஆண்டு எந்தெந்தக் கல்லூரிகள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்:

காயிதே மில்லத் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி, சென்னை;

அரசு ஆண்கள் கலைக் கல்லூரி, நந்தனம்;

மாநிலக் கல்லூரி, சென்னை;

டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரி, வியாசர்பாடி;

அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரம்;

இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி;

குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்;

அரசு ஆண்கள் கலைக் கல்லூரி, கும்பகோணம்;

அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, கும்பகோணம்;

அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, செய்யாறு.

ஆக இந்த 10 கல்லூரிகளிலேயும், இந்த ஆண்டு முதலே shift முறை செயல்படுத்தப்படுகிறது. இன்னும் எங்கேயாவது அதிகமாக விண்ணப்பங்கள் இருந்து, உங்களிடமிருந்து விண்ணப்பம் வருமேயானால், அவை பற்றியும் பரிசீலிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

அதுமட்டுமல்ல; கட்டணங்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கடந்தகால ஆட்சியிலே கட்டணங்கள் எப்படி இருந்தன என்பதை நான் அப்பொழுதே விடையாக அளித்திருக்கிறேன். அதிலும் குறிப்பாக, பொறியியல் கல்லூரிகளில் மட்டும், அந்த அரசு 42,000 ரூபாய், சுயநலக் கல்லூரிகளுக்காக, சுயஉதவிக் கல்லூரிகள் என்று சொல்லி, சில பிரிவுகள் என்று சொல்லி, அரசுக் கல்லூரிகளில் தொடங்கி 42,000 ரூபாய் வசூலித்தார்கள். தனியார் கல்லூரிகளிலே வசூலித்த தொகையைவிட, கட்டணத்தைவிட இங்கே கட்டணம் அதிகமாக இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள், இன்று, இதையும் குறைத்து, அரசுக் கல்லூரிகளில் இதுபோன்ற சுயநிதிப் பிரிவுகளே இருக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக மட்டும் 20 கோடி ருபாய் ஆண்டுக்கு அரசே வழங்கி, அந்தப் பிரிவுகளை இன்று மாற்றியமைத்திருக்கிறார்கள். அரசில் உள்ள மற்ற பிரிவுகளுக்கு எவ்வளவோ, அதேதான் அவற்றுக்கும் பெற முடியும் என்றும் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் எண்ணிக்கையை வளர்ப்பதற்காக. இவையெல்லாம் கிராமப்புறப் பகுதிகளிலே கல்லூரியை உருவாக்குவதன்மூலமாக, கிராமப்புறப் பகுதிகளிலே இருக்கிற கல்லூரிகளுடைய எண்ணிக்கையை உருவாக்குவதற்காக கலைஞர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற முயற்சிகள்.

அதுமட்டுமல்ல; மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், பல் மருத்துவமனையாக இருந்தாலும், மற்ற nursing போன்ற பயிற்சியாக இருந்தாலும், கலைஞர் அவர்கள், கிராமப்புறங்களிலே, அவை வளர வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்தக் கல்லூரிகள் இல்லாத கிராமங்கள் இருக்குமேயானால், அவற்றையும் அங்கே தொடங்கிக் கொள்ளலாம் என்றும், தனியார் முன்வந்தால், அவர்களுக்கும் அனுமதி அளிக்கலாம் என்றும் கலைஞர் அரசு முடிவு செய்திருக்கிறது என்று சொன்னால், இந்த உயர் கல்வி அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாகக் கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் எடுத்திருக்கிற முடிவுகள். ஆக, எண்ணிக்கையை உயர்த்துகின்ற அதேநேரத்தில், அதனுடைய தாத்தையும் உயர்த்த வேண்டிய அவசியத்தையும் இந்த அரசு



உணர்ந்திருக்கிற காரணத்தால், இப்பொழுது அண்ணா பல்கலைக்கழகம், அனைத்து தனியார் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்த ஒரு பல்கலைக்கழகமாக இருக்கிறது. அதனால் அங்கே கல்வியின் தரம் குறைகிறது; அவர்கள் முழுமையாக மற்ற கல்லூரிகளை மேற்பார்வையிடுவதிலேயே கவனத்தைச் செலுத்துகிறார்கள் என்ற குற்றங்களையெல்லாம் பத்திரிகைகளும், முன்னாள் துணை வேந்தர்களும் சுட்டிக்காட்டியதன் விளைவாக, இந்த அரசு ஒரு முடிவை எடுத்திருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் என்ற பெயரிலேயே அந்தத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் இயங்கும் என்ற வகையில், அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி, அண்ணா பல்கலைக்கழகம், கோவை என்ற இரண்டு புதிய பல்கலைக்கழகங்கள் இந்த ஆண்டு முதலே துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சியிலே, School of Technology என்ற இடத்திலே, பாரதிதாசன் பல்கலைக்கழகம் உள்ள அந்த இடத்திலே இந்தப் பல்கலைக்கழகம் இந்த ஆண்டு முதல் துவக்கப்படும்.

அதேபோல, கோவையிலே C.I.T. – Coimbatore Institute of Technology – அதே இடத்திலேயே, அண்ணா பல்கலைக்கழகம், கோவை துவங்கப்பட இருக்கிறது.

பிற்பகல் 1–50

அதுமட்டுமல்ல; இந்தத் தரம் உயர வேண்டுமானால்–infrastructure–கல்விக் கட்டடங்கள் எண்ணிக்கை உயர வேண்டும்; தரமாக இருக்க வேண்டும். பொதுவாக அரசுக் கல்லூரிகளில், 67 கல்லூரிகளிலுமே இன்று கட்டடங்கள் பற்றாக்குறை இருப்பதை அந்தந்தக் கல்லூரி உள்ள தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் வந்து கோரிக்கை வைத்தவண்ணம் இருக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்யும்வகையில், கலைஞர் அவர்கள், கட்டடங்களுக்காக மட்டும் இந்த ஆண்டு 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) 13 கல்லூரிகளில் 80 வகுப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அந்த அனுமதியின் அடிப்படையில், திரு.வி.க. அரசுக் கலைக் கல்லூரியில் 8 வகுப்பறைகளும், இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலியில் 8 வகுப்பறைகளும், கடலூர், பெரியார் அரசுக் கலைக் கல்லூரியில் 8 வகுப்பறைகளும், உடுமலைப்பேட்டை அரசுக் கலைக் கல்லூரியில் 6 வகுப்பறைகளும், காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை–2–ல் 6 வகுப்பறைகளும், புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் 5 வகுப்பறைகளும், அறிஞர் அண்ணா அரசுக்

கலைக் கல்லூரி, செய்யாறில் 5 வகுப்பறைகளும், மன்னார்குடி மன்னை இராஜகோபாலசுவாமி அரசுக் கலைக் கல்லூரியில் 5 வகுப்பறைகளும், அரசுக் கலைக் கல்லூரி, முசிறியில் 5 வகுப்பறைகளும், அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரத்தில் 10 வகுப்பறைகளும் கட்டுவதற்கு, இந்த ஆண்டு 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சென்னை மாநிலக் கல்லூரி. இந்தச் சென்னை மாநிலக் கல்லூரி, ஆங்கிலேயர் காலத்திலேயிருந்து வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு கல்லூரி. இந்தக் கல்லூரியினுடைய தரத்தை உயர்த்துவதற்காகவும் இந்தக் கல்லூரியினுடைய கட்டடங்களின் நிலையை உயர்த்துவதற்காகவும்—இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் உ.வே. சாமிநாத ஐயர், சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம், அந்தக் கல்லூரியிலேயே ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள். அந்தக் கல்லூரியிலேயே மாணவர்களாக இருந்து பல பரிசுகளைப் பெற்றவர்கள்தான் சர்.சி.வி. இராமன் போன்றவர்கள், சந்திரசேகரன் போன்றவர்கள் எல்லாம். ஏன்? இங்கே இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதிகூட, அதே-Presidency-மாநிலக் கல்லூரியிலே படித்தவர்தான் என்பது, மாநிலக் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கக்கூடிய விஷயங்கள்—அந்த மாநிலக் கல்லூரியிலே, கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காகவும், 3 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரத்தநாடு கல்வியியல் கல்லூரியில், இந்த ஆண்டு, அங்கே கல்வியியல் கல்லூரியின் பொன்விழாவைக் கொண்டாட இருக்கிற காரணத்தினால், அந்தக் கல்லூரியினுடைய கட்டட வளர்ச்சிக்காக 50 இலட்ச ரூபாய் செலவிடப்படவிருக்கிறது.

அண்ணா பல்கலைக்கழகம். அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய தரத்தை உயர்த்துவதற்காக, அங்கே 34 ஏக்கர் நிலம், Highways துறையிலிருந்து பெறப்பட்டு, 100 கோடி ரூபாய் செலவிலே அங்கேயும் புதிய கட்டடங்களை உருவாக்கி, அங்கே தொழில் கல்வி வளருவதற்கான வாய்ப்பினையும் உருவாக்க, இந்த அரசு நிதி ஒதுக்கி இருக்கிறது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் புதிய வளாகம் கட்டுவதற்காக 10 கோடி ரூபாய் செலவில், சைதாப்பேட்டையில், விரைவில்—ஏனென்றால், இந்தத் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டதேதவிர,



அவையெல்லாம் செயல்படுத்த முடியாத சூழ்நிலையில் இருந்த காரணத்தினால், அதற்கும் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரைவில்—அதற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி துவங்கப்பட இருக்கிறது.

பொது பல்கலைக்கழகச் சட்டங்கள். குறிப்பாக பல்கலைக்கழகங்கள் அதிகமாக இருந்தாலும்கூட—13 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன—இந்த ஆண்டு 2 புதிய பல்கலைக்கழகங்கள் வரவிருக்கின்றன. இந்த 15 பல்கலைக்கழகங்கள் செயல்பட்டாலும்கூட, பல்கலைக்கழகங்களுக்கிடையிலே அதை நிர்வகிப்பதிலேயும், கல்வித் தரத்தை உருவாக்குவதிலேயும் வேறுபாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு இடத்திலே பார்த்தால் Academic Council இருக்கும். இன்னொரு இடத்திலே Senate இருக்கும்; Syndicate இருக்கும் எப்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதிலே, அவர்களுக்குள்ள அதிகாரங்களிலே, பல்வேறு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலே, பிரச்சினைகள் எதுவும் நேராதவண்ணம் பொதுவான ஒரு பல்கலைக்கழகச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று இந்த அரசு முடிவெடுத்து, இந்த ஆண்டிலேயே ஒரு Common University Act பொதுவான ஒரு பல்கலைக்கழகச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறது. அதையும் இந்த அரசு இந்த ஆண்டிற்குள்ளாகவே முடிக்கும்.

அதுமட்டுமல்ல; தேசிய தர நிர்ணயம்—NAAC— மதிப்பீட்டுக் குழு பற்றி இங்கே எல்லாம் சொன்னார்கள், ஒவ்வொரு கல்லூரியையும் தரம் பிரிக்க வேண்டும்; பள்ளிகளைத் தரம் பிரிக்க வேண்டும் என்று. அதற்காகவே, இந்த NAAC என்ற குழு உருவாக்கப்படும் அந்தத் தரச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற எண்ணம் பல கல்லூரிகளிடம் இல்லாமல் இருக்கிறது. அரசுக் கல்லூரிகளிலே, 67 அரசுக் கல்லூரிகளிலே, 55 அரசுக் கல்லூரிகள் தரச் சான்றிதழைப் பெற்றிருக்கின்றன. அரசு உதவிபெறும் கல்லூரிகள் 162; அவற்றிலே 97 கல்லூரிகள்தான் தரச் சான்றிதழைப் பெற்றிருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகள் 441; அவற்றில் 23 கல்லூரிகள் மட்டுமே தரச் சான்றிதழைப் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம், மீண்டும் தரச் சான்றிதழைப் பெறுவதற்கு NAAC—யிடம் விண்ணப்பித்து உடனடியாக அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று, இந்த அரசு அவர்களை வற்புறுத்தும். அவ்வாறு வற்புறுத்துவதன் மூலமாக, இந்தக் கல்லூரிகள் தங்களுடைய தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு அது வாய்ப்பாக அமையும்.

அதுமட்டுமல்லாமல், உயிர் தொழில்நுட்பத் துறை. உயிர் தொழில்நுட்பத் துறையில், bio-technology பிரிவு ஒன்று உருவாக்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு, bio-technology என்ற இந்த ஆராய்ச்சி மையமானது தொழில் துறை. அதேபோல், அண்ணா பல்கலைக்கழகம் அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து இதை உருவாக்குவதற்கான, TICEL Park என்ற அந்த இடத்திலேயே உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

அதுமட்டுமல்ல; கடந்தகால ஆட்சியிலே உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் என்று ஒன்று சொல்லப்பட்டது. ஆனால், அந்தப் பல்கலைக்கழகம் என்று சொல்லப்பட்டதே தவிர, அதற்கான V.C. நியமிக்கப்பட்டாரே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத ஒரு காலக்கட்டத்தில், அந்த உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்காக 12.5 ஏக்கர் நிலத்தைப் பெற்று, கேளம்பாக்கம், வண்டலூர் பகுதியிலே, முழுமையாக இங்கே இருக்கிற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கின்ற வகையில், விளையாட்டிற்கான பயிற்சிகளை அதிகப்படுத்துகின்றவகையில் அதனை அமைக்க இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், குறிப்பாக, இங்கே தரம் உயர வேண்டுமானால் ஆசிரியர்களுடைய எண்ணிக்கை இருக்க வேண்டும். கடந்தகால ஆட்சியிலே சொன்னார்கள், எங்கள் ஆட்சியில்தான் எல்லாம் வளர்ந்தது, வளர்ந்தது என்று. ஆனால் என்ன நிலைமை தெரியுமா? அரசுக் கல்லூரிகளிலே மட்டும் கிட்டத்தட்ட 2500 பணியிடங்கள் காலியாக இருந்தன. வாத்தியாரே இல்லை; பிறகு எப்படிப் பாடம் நடக்கும்? கல்லூரிகள் இருந்தன. 'நாங்கள் வந்து Elementary Schools–இன் எண்ணிக்கையை அதிகமாக்கிவிட்டோம்; எல்லாம் அதிகமாக்கிவிட்டோம்' என்று அங்கே போனால், ஆசிரியர்களே இல்லை. ஏனென்றால், ஐந்து ஆண்டுக் காலமாக, பணி நியமனத் தடைச் சட்டம். வாத்தியாரே இல்லாமல், பள்ளிக் கூடத்திற்குப் போய் என்ன செய்வது? அந்தச் சூழ்நிலையை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஏன்? தேர்தல் அறிக்கையிலேயே அவர் சொன்ன வாக்குறுதி ஆசிரியர் காலியிடங்களை உடனடியாக நிரப்புவோம் என்று; அவ்வாறே ஆணையிட்டதனுடைய



அடிப்படையிலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆசிரியர்களே இல்லாமல், 'எங்கள் ஆட்சியிலே தரம் உயர்ந்தது, தரம் உயர்ந்தது' என்றால், எப்படி உயர முடியும்? அது முடியாத ஒரு சூழ்நிலை. உயர்ந்திருக்கிறது, எது உயர்ந்திருக்கிறது தெரியுமா? ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளினுடைய எண்ணிக்கை மட்டும் ஒரே வருடத்தில் 204 பயிற்சிப் பள்ளிகள் உயர்ந்திருக்கின்றன. 204 பள்ளிகளில் படித்துவிட்டு வருகிறவர்களுக்கு வேலை உண்டா என்றால், வேலை கிடையாது. ஏனென்றால் பணி நியமனத் தடைச் சட்டம். நீங்கள் உருவாக்குங்கள்; பள்ளிகளுக்குக்கூட அனுமதி கொடுங்கள். அவர் சொன்னார், மத்திய அரசாங்கம்தான் கொடுத்திருக்கிறது என்று. மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை. Court–ல் Order வாங்கி வந்து, 13 கல்லூரிகளை இவர்கள் கொடுத்திருக்கிறார்கள். Court Order–ஏ இல்லாமல் No Objection கொடுக்கிறார்கள். நீங்கள் ஏன் No Objection கொடுக்கிறீர்கள்? ஒரே ஆண்டில் அதுவும் 204 கல்லூரிகளுக்கு எப்படிக் கொடுக்க முடியும்? இதனை ஐந்து ஆண்டுகளில் பரவலாகக் கொடுத்திருந்தாலும் பரவாயில்லை. இவ்வளவும் கொடுத்துவிட்டு கடைசியில் என்ன பண்ணுகிறார்கள்? மாணவர்களைச் சேர்க்க முடியவில்லை என்று சொன்னால், அப்புறம், Teachers Training, ஏன்? இதுகூட சொல்கிறார், Teachers Training அந்தமாதிரிதான் என்று. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, அதாவது என்னமோ இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த Teachers Training, B.Ed. College–லே மட்டும் அவ்வளவு அக்கறையாக, ரொம்ப கவனமாக எடுத்து 100, 200 என்று உருவாக்குகிறார்கள். இந்த அக்கறை அரசுக் கலைக் கல்லூரிகளை உருவாக்குவதிலோ அல்லது பொறியியல் கல்லூரிகளை உருவாக்குவதிலோ காட்டியிருப்பார்கள் என்று சொன்னால், மேலும், இன்னும் தொழிற்கல்வி வளர்ந்திருப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும். ஆனால், அவற்றையெல்லாம் செய்யாத காரணத்தினால், ஏதோ Mushroom போல இன்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், இன்னும் இரண்டு வருடம், மூன்று வருடம் இருக்கும்; Demand அவ்வளவுதான். அந்தக் கல்லூரிகள் போய்விட்டால், அடுத்து வேறு துறைகளுக்கு மாற வேண்டிய சூழ்நிலைகள்கூட ஏற்படும். ஆகவே, இதுபோன்ற கல்லூரிகளை உருவாக்கி, அரசுக் கல்லூரிகளையும், B.Ed. கல்லூரிகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். இதற்காகத்தான் ஒரு குழுகூட நியமிக்கப்பட்டு, இவற்றிற்கெல்லாம் சரியாக இடம் இருக்கிறதா—எங்கள் ஊரிலே ஒரு கல்லூரி இருக்கிறது. போய்ப் பார்த்தீர்கள் என்றால், நான்கு சுவர்கூட கிடையாது; அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம்

இருக்கிற காலக்கட்டத்தில்—அவற்றையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டுமென்ற உணர்வோடுதான் ஒரு குழுவைக்கூட இந்த அரசு நியமித்திருக்கிறது. அதுபோல, ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக, கல்லூரிப் பேராசிரியர்கள் இரண்டாயிரம் பேர் என்ற அந்த vacancy-களை நிரப்புவதற்காக, 1020 கல்லூரி ஆசிரியர்களை உடனடியாக நியமிப்பதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களும் உடனடியாக நியமிக்கப்படுவார்கள். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 600 ஆசிரியர்களை நியமிப்பதற்காகவும் உத்தரவிட்டிருக்கிறார்கள். அவர்களும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். ஆகவே, கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் கட்டடங்களானாலும், ஆசிரியர் நியமனங்களானாலும், அனைத்தையும் இந்த அரசு செய்து கொடுப்பதற்கு முழு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

ஆவணக் காப்பகத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட ஆவணக் காப்பகம் என்பது 97 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம். அதிலே 2.2 இலட்சத்திற்கு அதிகமான பழைய, மிகுந்த தொன்மையான ஆவணங்களும், புத்தகங்களும் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்த அரசு, 7.71 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இவையெல்லாம் உயர் கல்வி வளர்ச்சிக்காக, இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள். இந்த நடவடிக்கைகள் எல்லாம் தொடர்ந்து நடைபெறுவதற்கு நீங்கள் அனைவரும் உங்களுடைய ஆலோசனைகளை அவ்வப்போது வழங்குங்கள்.

இப்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் எல்லாம், தனியார் கல்லூரிகளிலே அதிகமாக நிதி வசூலிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுதான். நான் இந்தத் தனியார் கல்லூரிகளை அவையின் மூலமாகவே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குழுக்கள் நியமித்த தொகையான 31 ஆயிரம் ரூபாய், 32 ஆயிரம் ரூபாய், 40 ஆயிரம் ரூபாய் இவற்றை மட்டும்தான் வசூலிக்க வேண்டும். நானும், என்னுடைய துறையின் செயலாளர் அவர்களும்கூட கோவைக்கு counselling சென்றிருந்தபோது, அங்கிருந்த மாணவர்கள், எங்களிடம் அளித்த குறைகள், 'Sir, நீங்கள் சொல்கிறீர்கள்; 40 ஆயிரம் ரூபாய் என்று, 32 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிறீர்கள்; ஆனால் அங்கே போனால், சில கல்லூரிகளில் 60 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள், 70 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள்' என்று குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். நான் அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக எச்சரிக்கையாகவே சொல்லக்



கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்கு, இந்த அரசுக்கு, No Objection கொடுப்பதற்குக்கூட அதிகாரம் இல்லை என்று நீங்கள் நினைக்கலாம்; ஆனால், எங்களால் எப்படி இதைக் கட்டுப்படுத்த முடியும் என்பதும் கலைஞர் அவர்களுக்கும் தெரியும்; இந்த அரசிற்கும் தெரியும். ஆகவே, அவர்களுக்கு வைக்கிற அன்பான வேண்டுகோள், அங்கே குழு நியமித்த தொகையை மட்டும்தான் நீங்கள் வசூலிக்க வேண்டும். 32,000 ரூபாய், 40,000 ரூபாய்; இதுகூட நீங்கள் சொன்னது மாதிரி, அந்த 10, 15 கல்லூரிகளில்தான். இன்னும் இருக்கிற மற்ற கல்லூரிகளில், இதற்குக் குறைவாக வசூலிப்பதற்குகூட, பல கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளுடைய தரத்தையும் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

பிற்பகல் 2-00

இவ்வளவு சிக்கல்களும் இந்தத் தனியார் கல்லூரிகளிலே இருப்பதற்கு முதல் காரணமே, மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரங்கள், கல்வித் துறையைப் பொறுத்தவரையில் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதுவும்—Concurrent List—பொதுப் பட்டியலிலே இந்தக் கல்வித் துறை இருக்கிற காரணத்தினாலேதான், பல சங்கடங்கள். மத்திய அரசிடத்திலே இருக்கிற U.G.C., பொறியியல் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய குழு, இவற்றிற்கிடையிலே விதிமுறைகளை வகுத்துக்கொண்டு. அந்த விதிமுறைகளுக்குள்ளேயே முரண்பாடுகள் ஏற்படுகிறபொழுது, அவற்றிற்கும், மாநில அரசாங்கங்களுக்கும் இடையிலே அதிகாரமே இல்லை என்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டுதான், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்றவுடன், மத்திய அரசாங்கத்திற்கு, இதை Concurrent List-லேயிருந்து—பொதுப் பட்டியலிலிருந்து—மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிற அந்தக் கருத்தை, மத்திய அரசாங்கத்திற்குக் கடிதமாகவும் எழுதி இருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலைகள் எல்லாம் விரைவில் வருமானால், நம்முடைய மாநிலத்திலே இருக்கிற பல்கலைக்கழகங்கள் எல்லாம் உண்மையிலேயே Centre of Excellence, அடுத்த பன்னாட்டுக் கல்வி நிறுவனங்களோடு போட்டியிடுகிற அளவுக்கு நம்முடைய உயர் கல்வி நிறுவனங்கள் வளர்வதற்கு வாய்ப்புகள் இருக்கும். அப்படி இந்தக் கல்வி நிறுவனங்களை எல்லாம் உயர் கல்வியிலே தரம் மிக்க கல்வி நிறுவனங்களாக மாற்றுவதற்கும், பன்னாட்டிலே போட்டியிடுகிற அளவிற்கு வளர்வதற்கும்—அதுவும் குறிப்பாக, இன்று எண்ணிக்கையைச் சொன்னோம்; தரத்தைச் சொன்னோம்; இது accountability; சமுதாயத்திற்கு ஒத்திருக்க

வேண்டுமென்ற எண்ணத்தோடுதான்—இந்த அரசு மேலும் சில முடிவுகளை எடுத்திருக்கிறது. எப்படி மருத்துவக் கல்லூரியிலே படிக்கிற மாணவர்கள் ஓராண்டு காலம் House Surgeon செய்ய வேண்டுமோ, அதைப்போல, பொறியியல் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களும் கண்டிப்பாக, தொழிற்சாலைகளிலே ஊதியத்தோடு கூடிய பயிற்சி பெறுகிற அந்த முறையையும் உருவாக்க வேண்டுமென்று இந்த அரசு திட்டமிட்டு, அதற்காகத் தொழிலதிபர்களோடும், தொழில் வல்லுநர்களோடும் பேசிக்கொண்டிருக்கிறோம்; கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, துணைவேந்தர்கள் அவற்றையும் செய்வார்கள். புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற பல்கலைக்கழகங்களிலெல்லாம் இன்று துணைவேந்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். திருவள்ளுவர் பல்கலைக்கழகம் எப்படி இருந்தது என்று இங்கே நண்பர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதற்கும் துணைவேந்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். விரைவிலே அவையெல்லாம் சரி செய்யப்பட்டு, கூடிய விரைவில் கடந்த காலங்களில் ஏற்பட்ட தேக்க நிலைகள்— ஆசிரியர் பணியிடங்கள் இல்லாமல் இருந்தது— கட்டண உயர்வின் காரணமாக மாணவர்கள் அல்லலுற்ற நிலைகள் இந்த அல்லல்களெல்லாம் நீக்கப்பட்டு, ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை நிச்சயமாக வளர்ச்சி பெறும். ஆரம்பக் கல்வியிலே நமக்கு இருக்கிற நோக்கம், அனைவருக்கும் கல்வி; Compulsory Education to All — அனைவருக்கும் கட்டாயக் கல்வி — என்பது; இந்தக் கொள்கையை இந்த அரசு கடைப்பிடிக்கிறது.

உயர் கல்வியைப் பொறுத்தவரையில், உயர் கல்வி படிக்க நினைக்கிற அனைவருக்கும் வாய்ப்பு; Opportunity to All என்ற அடிப்படையிலே, இந்தக் கொள்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. நிச்சயமாக, வருங்காலங்களிலே இவற்றை உங்களுடைய ஆதரவோடு உங்களுடைய ஆலோசனைகளோடு நிறைவேற்றுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்பதைச் சொல்லிக்கொள்வதோடு, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடு) கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கக்கூடிய ஏராளமான சலுகைகள்



உண்மையிலேயே தமிழகத்தினுடைய கல்வி வளர்ச்சிக்கு மிகப் பெரிய பயனளிக்கும் என்றவகையிலே வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நீண்ட காலமாக பதிவு செய்திருந்த இளநிலை, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களை வேலைக்கு எடுப்பது சம்பந்தமாக, பதிவு அடிப்படையில் எடுக்க வேண்டுமென்ற அந்த நீண்டநாள் கோரிக்கையும் இன்றைக்கு இந்த அரசின் மூலமாக நிறைவேறியிருப்பது மற்றும் தொழிற் கல்வி, கணினி ஆசிரியர்கள் பணி நிரந்தரப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், இவை உண்மையிலேயே பாராட்டுக்குரியன; நன்றி. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு, திருப்பூரிலே கடந்த ஆட்சிக் காலத்திலே நிறைய ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக மாற்றிவிட்டார்கள். ஆனால் அதிலிருந்து வெளியே வருகிற மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளியும், மேல்நிலைப் பள்ளியும் போதுமானதாக இல்லாமல், இடம் இல்லாமல் சிரமப்படுகிறார்கள்; அந்தப் பட்டியலில் அதையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடைய பட்டியலை அமைச்சர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள். சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார்.

பிற்பகல் 2–05

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இரண்டு கேள்விகள் நான் கேட்க விரும்புகின்றேன். அதாவது உலகிலேயே ஒரு மிகப் பெரிய நூலகம் என்று சொன்னால், ரஷ்யாவிலுள்ள, மாஸ்கோவிலே உள்ள நூலகம்; ஒரு கோடி புத்தகங்களைப் பெற்றிருக்கின்றது. அதேபோன்று, நம்முடைய கன்னிமாரா Library; சென்னையிலே உள்ள அந்த Library, மிகச் சிறப்புப் பெற்ற ஒரு Library. எனவே, அதற்கு

இணையாக புத்தகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? ஒன்று. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 867 கிராமப்புறங்களில் நூலகங்கள் அமைக்கப்பட்டன. எனவே, மற்ற கிராமங்களிலும் நூலகம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு. ஏற்கெனவே British High Commission-ஓடு—தமிழோடு, ஆங்கில அறிவும் வளர வேண்டும் என்பதற்காக அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, புரிந்துணர்வு ஒப்பந்தம், British High Commission—ஓடு—ஒப்பந்தம் போடப்பட்டது. அது தற்போது செயல்படுத்தப்படுகின்றதா? அப்படி செயல்படுத்தப்படும்போது, மற்ற அரசுக் கல்லூரிகளிலும் ஆங்கில அறிவைப் பெறுவதற்காக இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, கன்னிமாரா நூல்நிலையம், நம்முடைய Heritage Building-ஆக இப்போது முழுமையாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நூலகத்திலே நிறைய நூல்கள் வைக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான், இந்த முறை தமிழ்நாட்டிலே தமிழ் எழுத்தாளர்களின் நூல்களையும், நூலகங்களிலே 750 படிகள்தான் வாங்கப்பட்டிருந்த நூல்களை, 1,000 படிகளாக வாங்கிக் கொடுத்தவர், உயர்த்திக் கொடுத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நிச்சயமாக நூலகங்களிலே, சிறந்த முறையிலே அதிகமான நூல்கள் வாங்கி வைக்கப்படுவதற்கு, உரிய முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்துகொண்டு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். அதைப்போல, ஊர்ப்புற நூலகங்களைப் புதிதாக உருவாக்குவது குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்துகொண்டு, அந்தந்த ஊரிலே இருக்கக்கூடிய தேவையினுடைய அடிப்படையிலும், அங்கே இருக்கக்கூடிய இட வசதிகளைப் பொறுத்தும் அவற்றை அரசு பரிசீலிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன்.



***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற முதலமைச்சரைப் புகழ்ந்து பேசவேண்டும் என்கிற அடிப்படையிலே அடிக்கடி இந்த அவையிலே ஆளுந்தரப்பிலே எழுந்து பேசுகின்ற உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்கள், இன்றைய முதல்வர் ஆட்சிக் காலத்தில்தான், அதிக, புதிய கல்லூரிகள் துவங்கப்பட்டன என்று சொன்னார். அதுவும் 1967 என்று சொல்கிறார். 1967—லிருந்து அண்ணா மறைகிறவரை, அண்ணாதான் முதலமைச்சராக இருந்தார். அந்தக் காலத்தையும் இன்றைய முதலமைச்சர் காலம் என்று கூறியுள்ளார். வரலாறு தவறாக பதியப்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். அண்ணாவின் கட்சியைத்தான் அபகரித்தீர்கள், அண்ணாவின் ஆட்சியையுமா அபகரிக்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே. 1969 லிருந்து 1976 வரை 7 ஆண்டுகளில் உருவாக்கப்பட்டவை 25 கல்லூரிகள். அது போகட்டும். ஆனால் அவர் சொன்னார், நாங்கள் எப்போதுமே புள்ளிவிவரங்களை correct ஆகத்தான் சொல்வோம் என்று. உங்களைப்போல் 193 marks வாங்கிவிட்டு, 200—க்கு 200 வாங்கினோம் என்று சட்டமன்றத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) சொல்கிற பழக்கம் எல்லாம் இல்லை; Correct ஆகத்தான் சொல்கிறோம். 193 marks; ஏனென்றால், Entrance-இல் 0.5—ல்கூட, பாதி section போய்விடுகிறது. 193 மார்க் அதிக marks-தான்; நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், 193 marks வாங்கினோம் என்று சொல்ல வேண்டும். 200—க்கு 200 வாங்கினோம் என்று சொல்ல வேண்டிய அவசியம் எல்லாம் எங்களுக்குக் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அண்ணாவின் கட்சியை அபகரித்துவிட்டீர்கள் என்று கேட்டிருக்கிறீர்களே, அண்ணாவினுடைய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று நீங்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. எங்களிடத்திலே அண்ணாவினுடைய கட்சி மாத்திரம் அல்ல; அண்ணாவின் இதயமே மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் இடத்திலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது, வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 'அவர்களுடைய தலைவி 193 marks வாங்கினார்' என்று சொன்னார்கள். அதற்கு முன்னால் உட்கார்ந்திருந்த மாணவி 200 marks வாங்கினார்; ஒருவேளை அவரைப் பார்த்துதான் அவர் அப்படிச் சொன்னாரா என்று தெரியவில்லை!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசின் சார்பிலே, நமது பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான உத்தரவு வழங்கப்படும் என்று இங்கே அறிவித்ததை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று, பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கணினி ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு மிகப் பெரிய மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அதற்கும் எங்கள் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மன்னார்குடி அரசினர் கலைக் கல்லூரியில் 5 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தரப்படும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு, மன்னார்குடி தொகுதி மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடற் கல்வி ஆசிரியர்கள் பணியிடம் நிரப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விரிவுரையாளர் பணி நியமனம் செய்யப்படும் என்ற அறிவிப்பு மகிழ்ச்சிக்குரியது. அதையும் நான் வரவேற்கிறேன். அவர்களையும் பணி மூப்பு அடிப்படையிலேயே நியமனம் செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 2–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி. கேள்விமட்டும் கேளுங்கள். கேள்விமட்டும் ஏதாவது இருந்தால் கேளுங்கள்.



**திரு. ஜி.கே மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் சங்கங்களிடமிருந்து, கல்வி வல்லுநர்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் இந்த அரசுக்கு வைத்தோம். அதிலும் குறிப்பாக, அடிப்படையில் நான் ஓர் ஆசிரியன் என்ற காரணத்தால், பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் பெற்ற நிலையிலே மட்டுமல்ல; எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், கடந்த ஆண்டு, 'காலத்திற்கேற்ற கல்விக் கொள்கை கருத்தரங்கம்' என்ற நிலையில், ஏறக்குறைய, ஓய்வுபெற்ற 22 துணை வேந்தர்களைக் கொண்டும், கல்வியாளர்கள், ஓய்வுபெற்ற அதிகாரிகளைக்கொண்டும் 3 நாட்கள் கருத்தரங்கங்களை நடத்தி, அவற்றினுடைய கோரிக்கைகளையெல்லாம் கடந்த காலத்திலேயிருந்த அரசுக்குக் கொடுக்கப்பட்டன; ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மத்திய அரசுக்கும் கொடுக்கப்பட்டது. இப்பொழுது மருத்துவர் அய்யா அவர்கள், இந்த அரசுக்குக் கோரிக்கைகளைக் கொடுத்தார்கள். கொடுத்த கோரிக்கைகளில் பெரும்பாலானவை, இங்கே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொன்னார்கள். கேட்டதும் கிடைத்திருக்கிறது; கேட்காததும் கிடைத்திருக்கிறது. ஆகவே, தாயுள்ளத்தோடு கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் முக்கியமான ஒன்று. நுழைவுத் தேர்வு இரத்து. அது இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிற அதேவேளையில், பகுதி நேரக் கல்லூரிகள், காலை, மாலை நேரம் என்று சொன்னார்கள்; அப்படி அந்தக் கல்லூரிகளில், பகுதி நேரமாகப் பொறியியல் பாடப் பிரிவுகளும் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு, அனைத்து நிலைகளிலும், தாயுள்ளத்தோடு வழங்கிய, வாரி வழங்கிய, அள்ளி வழங்கிய கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) துறை அமைச்சர்களுக்கும் பா.ம.க. சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நுழைவுத் தேர்வைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். நுழைவுத் தேர்விற்காக முன்னாள் துணைவேந்தர் திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதில் இரண்டுமுறை அவர்கள் அமர்ந்து

பேசியிருக்கிறார்கள். இன்றைக்குக்கூட பொதுமக்களுடைய கருத்துக்களைக் கேட்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றால், அங்கே தள்ளுபடி செய்யாத அளவிற்கு உண்மையிலேயே உள்ளெண்ணத்தோடு, அதை நீக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு முறையாக அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக பல அற்புதமான அறிவிப்புகளையெல்லாம் அறிவித்திருக்கின்ற டாக்டர் கலைஞருடைய அரசிலே, பங்கேற்றிருக்கின்ற உயர் கல்வி அமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே என் நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, ஊரக நூலகர்கள் என்றவகையில் பல்லாண்டு காலமாக கிராமங்களிலே நூலகர்களாக வேலை பார்த்து வருகின்ற அவர்களை, 1,000 ரூபாய், 1,200 ரூபாய் சம்பளத்திலே வேலை பார்த்துவருகின்ற அவர்களை, நிரந்தரமான காலமுறை ஊதியத்திலே அமர்த்த வேண்டும் என்கிற கோரிக்கையினை வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்த கோரிக்கையினை, நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்று, அதனை அவர்கள் இன்று அனுமதித்திருக்கிறார்கள். அதற்கும் நன்றி சொல்லி, ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைக்க ஆசைப்படுகிறேன்.

1991—லிருந்து தமிழகத்திலே பல்வேறு பள்ளிகள், சிறுபான்மைப் பள்ளிகள் உட்பட வெறுமனே அங்கீகாரம் பெற்று, அரசு உதவி பெறாமல் நடந்துவருகின்ற பள்ளிகளுக்குப் பணியிடங்கள் வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் பள்ளிக் கல்வி அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டிலே இனிமேல் நிதி உதவி எதுவும் கோரமாட்டோம் என்ற ஒரு undertaking-இனுடைய அடிப்படையிலே, அதற்குப் பிறகு நிதி உதவி கோரப்படாமல் நடந்துகொண்டிருக்கக்கூடிய பள்ளிகளுக்கு, பணியிடங்கள் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பிலிருந்தும் நம்முடைய அரசுக்கு வரப்பெற்றிருக்கின்றன.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இதுகுறித்தெல்லாம் பேசுவதற்கு என்னைப் பணித்திருக்கிறார்கள். அதற்குள்ளாக கல்வி மானியமும் இப்போது வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களோடு கலந்து பேசி, அரசினுடைய நிதிநிலைமையையும் நாங்கள் கருத்தில்கொண்டு, இதற்கு அரசு ஆவன செய்யும்; பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி. க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த. அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு. ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை. திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.



**முனைவர் கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பாண்டுரங்கன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

*பிற்பகல் 2—15*

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ. கே. சின்னராஜ்.

**திரு. ஓ. கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி. வி. சண்முகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்மும் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை. திரு. கே. எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 876,85,68,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 15,14,76,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை, திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த. அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. **திரு. சி. ஞானசேகரன்.**



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

V2, 31 ...
227419
சென்னை-600 008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை. திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. குமரகுரு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேசரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை. திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. பரஞ்ஜோதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.



**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 5,287,96,16,000, மூலதனக் கணக்கில் ரூ. 150,84,26,000 மற்றும் கடன் கணக்கில் ரூ. 5,50,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பிற்பகல் 2-20

## 9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2006), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 1-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 07–08–2006 அன்று (திங்கட்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

11. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்)

12. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டுக் கணக்கு அறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 104 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

27. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

28. மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

29. புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பங்கள், 2005 என்னும் சிறு நூல். (தமிழ்)

❖❖❖❖

## இணைப்பு I

(389ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

**முன்னுரை:**

ஒவ்வொரு மாநிலத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் உயர் கல்வி இன்றியமையாத இடம் வகிக்கின்றது. தமிழ்நாட்டில் உயர் கல்வியை மிகச் சிறந்த இடத்திற்குக் கொண்டு செல்ல தமிழக அரசு உறுதி கொண்டுள்ளது.

1.2 நமது மாநிலத்தில் தகுதியுடைய இளைஞர்களில் 7 விழுக்காடு வரைதான் உயர் கல்வியைத் தொடரக்கூடிய நிலைமை உள்ளது. மேலைநாடுகளில் இந்த விகிதம் 80 விழுக்காடு வரை உள்ளது. 1976–1977 ஆம் ஆண்டில் 1.5 விழுக்காடு என்ற நிலைமையில் இருந்த சீனா, 2005 ஆம் ஆண்டில் 25 விழுக்காடு என்ற நிலைமைக்கு உயர்ந்துள்ளது. ஆகையால், தகுதியுடைய இளைஞர்களில் 7 விழுக்காடு வரைதான் உயர் கல்வியைத் தொடர முடியும் என்ற நிலையை மாற்றி, 2020 ஆம் ஆண்டிற்குள் 25 விழுக்காடாக உயர்த்திட இவ்வரசு பாடுபடும்.

1.3 கிராமப்புறங்களிலிருந்தும், சமூக மற்றும் கல்வியறிவில் பின்தங்கிய வகுப்புகளிலிருந்தும் வரும் இளைஞர்களுக்கு உயர் கல்வி குறைந்த செலவில் பெற நமது மாநிலம் பெரிதும் முக்கியத்துவம் அளிக்கிறது. ஒருபுறம் உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்து வருகிறநிலையில் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் உயர் கலவியினைத் தொடர, சமவாய்ப்பு அளிக்கவேண்டிய அவசரத் தேவை உள்ளது.

1.4 படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவது எனபது முக்கியமான ஒன்றாகும். இதனை எந்த அரசும் ஒதுக்கிட இயலாது. தமிழகத்தில் படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பு நிலை குறித்து இந்திய தொழில்களின் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) நடத்திய சமீபத்திய ஆய்வில், சுமார் 70 விழுக்காடு வரை கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகள் படித்து முடித்து மூன்று ஆண்டுகள் வரை

வேலையில்லாமல் இருக்கின்றனர் எனவும், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் படித்த 40 விழுக்காடு பட்டதாரிகள் பட்டம் பெற்று இரண்டு ஆண்டுகள் வரை வேலைவாய்ப்பினைப் பெறமுடியாமல் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய பாடப்பிரிவுகளை, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அறிமுகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. மேலும், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் உதவியுடன் பொறியியற் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்குத் திறன் மேம்பாடு பயிற்சி வழங்குவது குறித்தும் ஆலோசித்து வருகிறது. படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கி, வேலை இல்லா நிலையைக் குறைப்பது இவ்வரசின் நோக்கமாகும்.

1.5 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் உயர் கல்வி எளிதாகவும், குறைந்த பொருட்செலவிலும் கிடைப்பதற்கும், உயர் கல்விமூலம் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் இந்த அரசு பாடுபடும். மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(i) ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களின் பொருளாதார சுமையைக் குறைக்கின்ற வகையில், அரசுப் பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வந்த சுயநிதிப் பாடப் பிரிவுகள் அனைத்தையும், பொதுப் பாடப் பிரிவுகளாக இந்த அரசு மாற்றியமைத்துள்ளது.

(ii) அரசுப் பொறியியற் கல்லூரிகளில் இதுவரை வசூலிக்கப்பட்டு வந்த கல்வி மற்றும் இதர கட்டணம் ரூ.12,550/–லிருந்து ரூ.7,550/–ஆக 2006–2007 ஆம் கல்வியாண்டு முதல் குறைக்கப்பட்டுள்ளது.

(iii) தொழிற்படிப்புகளில் சேர்வதற்காக பொது நுழைவுத் தேர்வு எழுதுவதன்மூலம் மாணவர்கள் அதிக அளவு சுமையையும், துன்பத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. இதனைக் குறைப்பதற்காக பொது நுழைவுத் தேர்வினை 2007–2008 முதல் இரத்து செய்வதற்கு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்ய, கல்வி நிபுணர்கள் கொண்ட குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.



(iv) ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக, காலியாகவுள்ள ஆசிரியப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1.6 மேலே கூறியவற்றுடன், கீழ்க்கண்ட நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவுள்ளது:—

(i) அரசு கல்வியியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் அரசு கல்வியியல் கல்லூரிகள் தொடங்கப்படும். இதன்மூலம் ஆசிரியர் கல்வி ஏழை, எளிய மாணவர்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை ஏற்படும்.

(ii) ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் மேற்படிப்பு தொடர ஏதுவாக, அம்மாணவர்களின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களுக்காகும் செலவை, அரசுப் பொறியியற் கல்லூரி கட்டண விகிதப்படி, அரசே ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

1.7 பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை எளிதாக்கவும், எவ்விதக் குழப்பமும் இன்றி மாணவர் சேர்க்கை நடைபெறுவதற்கு ஏதுவாகவும், இட ஒதுக்கீடு முறையை முழுமையாக பின்பற்றிடவும் ஒரு புதிய சட்டத்தினை இந்த ஆண்டு கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது. மேற்கண்ட சட்டம், சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை முறையைக் கண்காணிப்பதற்கும், கல்விக் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கும் வழிவகை செய்யும். மேலும், இச்சட்டம் பொறியியற் கல்லூரி சேர்க்கைக்கு மட்டுமல்லாது, எம்.பி.ஏ., எம்.சி.ஏ. மற்றும் பி.எட். படிப்புகளுக்கும் பொருந்தும். இச்சட்டத்தின்மூலம், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே பொறியியற் கல்லூரிகள் சேர்க்கை தொடர்பாக கடந்த சில வருடங்களாக இருந்துவந்த குழப்பமான நிலை முடிவுக்கு வரும் எனக் கருதப்படுகிறது.

1.8 2006–2007 ஆம் ஆண்டில் சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் தாமாகவே முன்வந்து அரசின் ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கைக்கு இடங்களை அளித்துள்ளன. இதில் சிறுபான்மை அல்லாத கல்லூரிகள் 65% இடங்களையும், சிறுபான்மை கல்லூரிகள் 50% இடங்களையும், அரசுக்கு ஒப்படைத்துள்ளன. இதனால், ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கைக்கு 13,000–க்கும் மேற்பட்ட இடங்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன. இதன்மூலம் தகுதிவாய்ந்த ஏழை, எளிய மாணவர்கள் பயன்பெறுவர்.

[2006 ஆகஸ்ட் 4

1.9 உயர் கல்வியின் சீரான வளர்ச்சிக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ள "கல்வியை", மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவருவது அவசியமெனக் கருதப்படுகிறது. இதன்மூலம் மேல்நிலைக் கல்விக்குப் பிறகு, உயர் கல்வியைத் தொடரவிரும்பும் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்குமென அரசு கருதுகிறது. இதனால் கல்வித் தரத்தை சிறப்பாகக் கண்காணிக்க இயலும். பொதுப் பட்டியலில் உள்ள "கல்வியை" மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். இதற்கான முயற்சிகளை மாநில அரசு மேற்கொள்ளும்.

1.10 தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தலைவர் காமராசர் காட்டிய ஈடுபாட்டையும், பங்களிப்பையும் இந்த அரசு கருத்திற்கொண்டு, அவருடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது. மேலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென, அவருடைய பிறந்த நாளான ஜூலை 15 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் கல்வி ஆராய்ச்சியில் முனைப்பான கவனம் செலுத்தப்படும்.

1.11 தமிழ்ச் சமுதாயத்திற்கு திராவிட இயக்கம் கொடுத்துள்ள எழுச்சியையும், வளமையையும் கருத்தில்கொண்டு திராவிட இயக்க வரலாறு அதன் தொடர்பான அரசியல், சமூக சிந்தனைகள், சமூக சீர்திருத்தங்கள், பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றைப்பற்றி உயர்நிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் எதிர்கால தமிழக மக்களுக்கு தொடர்ந்து எழுச்சியும், வாய்ப்பும் ஏற்படுத்தும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகம் தனது 150 ஆவது ஆண்டுவிழா நடைபெற இருக்கின்ற இந்த ஆண்டில் சென்னை பல்கலைக்கழகத்தில் திராவிட இயக்க ஆய்வு மையம் ஒன்றை நிறுவிட இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. இதனை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும்.

**நிதி ஒதுக்கீடு:**

*மானியக் கோரிக்கை–20, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ. 892.00 கோடி ஆகும். இதில் ரூ. 88.90 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ. 803.10 கோடி, திட்டத்தில் சேராத செலவினமாகும்.*



2006 ஆகஸ்ட் 4]

**நிதி ஒதுக்கீடு 2006 – 2007**

| கணக்குத் தலைப்பு (1) | | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 2059 | பொதுப்பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | -- | 1987.00 | 1987.00 |
| 2202<br>03 | பொதுக்கல்வி<br>பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 1458.87 | 63550.20 | 65009.07 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 4841.20 | 14140.09 | 18981.29 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 710.77 | -- | 710.77 |
| 2205<br>104 | கலையும் பண்பாடும்<br>ஆவணக் காப்பகங்கள் | 134.94 | 366.26 | 501.20 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | -- | 38.95 | 38.95 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூக நலப் பணிகள் | -- | 195.66 | 195.66 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 229.35 | -- | 229.35 |
| 3454<br>110 | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரம்<br>விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | -- | 32.41 | 32.41 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 1514.75 | 0.01 | 1514.76 |
| | **மொத்தம்** | **8889.88** | **80310.58** | **89200.46** |

## 2006–2007 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி நிலை செலவு | 2006–2007 செலவு |
|---|---|---|---|
| | **கல்லூரிக் கல்வி** | | |
| 1 | புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில் குறைதீர் நடவடிக்கைகள் மற்றும் நூலகத்திற்குப் பழுது பார்ப்புப் பணிகள். | 28.00 | 28.00 |
| 2 | ஐந்து அரசுக் கல்லூரிகளில் செயற்கைக்கோள் வசதியுடன் கூடிய முனையங்களை நிறுவுதல். | 16.50 | 16.50 |
| 3 | அரசுக் கல்லூரிகளில் மின்னணு நூலகத்தை ஏற்படுத்துதல். | 21.00 | 21.00 |
| 4 | இராணி மேரி கல்லூரியில் பார்வையற்ற மாணவர்களுக்கான கணினி மையம். | 3.40 | 3.40 |
| 5 | ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் ஆகியவை அடங்கிய பொன்விழா நினைவு கட்டடத் தொகுதிகள் கட்டுதல். | 50.00 | 20.00 |
| 6 | வகுப்பறைகள் தேவைப்படுகிற அரசுக் கல்லூரிகளில் வகுப்பறைகள் கட்டுதல். | 340.00 | 136.00 |
| | **தொழில்நுட்பக் கல்வி** | | |
| 7 | பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் – கோயம்புத்தூர் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் வகுப்பறைகள் கட்டுதல். | 40.00 | 16.00 |
| 8 | உதகமண்டலம் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரியில் வரவேற்புக் கூடம் கட்டுதல். | 40.00 | 16.00 |



(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி நிலை செலவு | 2006–2007 செலவு |
|---|---|---|---|
| | **தொழில்நுட்பக் கல்வி**—*தொடர்ச்சி* | | |
| 9 | பொறியியல் கல்லூரிகள் – வேலூர் தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கட்டட பொறியியலுக்கான கட்டடத் தொகுதி கட்டுதல். | 150.00 | 60.00 |
| 10 | வேலூர் தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் உள்ள மாணவியர் இல்லத்தில் முதல்தள கட்டடம் கட்டுதல். | 60.00 | 24.00 |
| 11 | சேலம் அரசுப் பொறியியற் கல்லூரியில் அனைத்து அறைகலன்கள் மற்றும் மைய சீர்வளி வசதியுடன் கூடிய நூலகம் கட்டுதல். | 100.00 | 40.00 |
| 12 | திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் மாணவர் இல்லம் கட்டுதல். | 100.00 | 40.00 |
| 13 | தொழில்நுட்ப கல்வியின் கட்டுமானப் பிரிவிற்கு கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் வாங்குதல். | 5.00 | 5.00 |
| | **தமிழ்நாடு ஆவணக் காப்பகம்** | | |
| 14 | மாவட்ட பதிவுரு மையத்திற்கு கணினி வன்பொருள் பாகங்கள் வழங்குதல். | 4.80 | 4.80 |
| 15 | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு பாதுகாப்பு நடைமுறைகள். | 3.00 | 3.00 |
| 16 | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கரையான் அரிப்பைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள். | 2.20 | 2.20 |

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி நிலை செலவு | 2006–2007 செலவு |
|---|---|---|---|
| | **தமிழ்நாடு ஆவணக் காப்பகம்**—*தொடர்ச்சி* | | |
| 17 | தமிழ்நாடு ஆவணக் காப்பகங்களின் நூலகத்தில் புத்தகங்கள் வைக்க காட்சி மேசை வாங்குதல். | 0.50 | 0.50 |
| 18 | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள அரசிதழ் பராமரிப்புப் பிரிவிற்கு சில நவீன வசதிகள் செய்து தருதல். | 1.25 | 1.25 |
| 19 | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில் பாதுகாப்புப் பெட்டக வசதிகள் செய்து தருதல். | 1.00 | 1.00 |
| 20 | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் அகத்தொலைபேசி இணைப்புகள் நிறுவுதல், | 0.25 | 0.25 |
| | **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்** | | |
| 21 | அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திட்டங்கள். | 15.00 | 15.00 |
| | **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்** | | |
| 22 | பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் உள்ள காட்சிக் கூடங்களை நவீனப்படுத்துதல் (ஒவ்வொன்றும் ரூ.1.50 இலட்சம் வீதம் 8 காட்சிக் கூடங்கள் அமைத்தல்). | 12.00 | 12.00 |
| 23 | புதிய தொலைநோக்காடிகள் வாங்குதல். | 4.00 | 4.00 |



(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி நிலை செலவு | 2006–2007 செலவு |
|---|---|---|---|
| | **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்**—*தொடர்ச்சி* | | |
| 24 | பி.எம்.பிர்லா கோளரங்கத்தை நவீனப்படுத்துதல். | | |
| | அ. சீர்வளி வசதி சாதனங்கள் வழங்குதல். | 9.00 | 9.00 |
| | ஆ. நாற்காலிகள் வழங்குதல். | 7.00 | 7.00 |
| | இ. தேவையான துணை பாகங்களுடன் எல்.சி.டி. ப்ரொஜக்டர்கள் வழங்குதல் | 3.00 | 3.00 |
| | **அறிவியல் நகரம்** | | |
| 25 | கோடைகாலப் பயிற்சி திட்டங்கள் | 4.50 | 4.50 |
| | **மொத்தம்** .. | 1021.40 | 493.40 |

[2006 ஆகஸ்ட் 4

## 2. கல்லூரிக் கல்வி

2.1 கல்லூரிக் கல்வித் துறையைத் தனியாக நிர்வகிப்பதற்காக முன்னர் செயல்பட்டு வந்த பொதுக் கல்வி இயக்ககத்தினைப் பள்ளிக் கல்வி இயக்ககம் என்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என்றும் பிரித்து 1965 ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி உயர் கல்வித் துறையில் மிகுந்த முன்னேற்றமடைந்த மாநிலமாக தமிழகத்தை உருவாக்க அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறையானது, உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாக இருப்பதால், அத்துறையில் அதிக கவனம் செலுத்தப்படும்.

2.2 கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் தற்போது கீழே குறிப்பிட்டுள்ளதுபோல் மொத்தம் 670 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன:—

| கல்லூரிகள் வகை | அரசு கல்லூரிகள் | தனியார் கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | உதவி பெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | |
| 1. கலை மற்றும் அறிவியல் | 60 | 133 | 297 | 490 |
| 2. உடற்கல்வி | – | 3 | 5 | 8 |
| 3. கீழ்த்திசை | – | 10 | – | 10 |
| 4. சமூகப் பணி பள்ளி | – | 2 | – | 2 |
| 5. கல்வியியல் | 7 | 14 | 139 | 160 |
| மொத்தம் | 67 | 162 | 441 | 670 |



2006 ஆகஸ்ட் 4]

### அரசுக் கல்லூரிகளுக்கான தகுதியை மீளவும் அளித்தல்:

2.3 அனைத்து அரசுக் கல்லூரிகளையும் 16–10–2002 முதல் அவை இணைவு பெற்றிருந்த பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக முந்தைய அரசு மாற்றியது. இருப்பினும் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த இயலாமல் இக்கல்லூரிகள் அனைத்தும் அரசாலேயே தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் எதிர்பார்த்த பயன்களை அடைய முடியவில்லை. தற்போது நிலவிவரும் குழப்பமான சூழ்நிலைகளைச் சரிசெய்யும் முகத்தான் அரசுக் கல்லூரிகளுக்கு முன்னர் இருந்த தகுதியினை மீளவும் அளிப்பதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. உறுப்புக் கல்லூரிகள் என்ற கருத்தியல் மீளப்பெற்று அனைத்துக் கல்லூரிகளையும் மீண்டும் முழு அளவிலான அரசுக் கல்லூரிகளாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### அரசுக் கல்லூரிகளிலுள்ள சுயநிதிப் பாடப் பிரிவுகளை முறையான பாடப் பிரிவுகளாக மாற்றுதல்:

2.4 தமிழகத்திலுள்ள அனைத்து அரசுக் கல்லூரிகளும் அவை இணைவு பெற்ற பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட பின்பு, அக்கல்லூரிகளில் 2003–2004 ஆம் கல்வி ஆண்டு முதல் அதிக எண்ணிக்கையில் இளங்கலை மற்றும் முதுகலை பாடப் பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் 76 புதிய இளங்கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளும், 148 முதுகலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளும் இந்த அரசு உறுப்புக் கல்லூரிகளில் சுயநிதி திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளன. கல்லூரிகளில் நடத்தப்படும் முறையான பாடப் பிரிவுகளுக்கு வசூலிக்கப்படும் கல்விக் கட்டணத் தொகையைவிட, இந்த சுயநிதி அடிப்படையிலான பாடப் பிரிவுகளுக்கு அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும், இக்கட்டணங்கள் ஒரு கல்லூரிக்கும் மற்றொரு கல்லூரிக்கும் இடையே வேறுபடுகின்றன. தற்போதைய நடைமுறையில் கல்விக் கட்டணங்களில் உள்ள சமச்சீரின்மையைச் சரிசெய்யும் நோக்கத்துடனும், ஏழை மாணவர்களின் சுமையைக் குறைக்கும் வகையிலும், அரசுக் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்பட்டு வரும் அனைத்துப் பாடப் பிரிவுகளையும் முறையான பாடப் பிரிவுகளாக மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

**கல்லூரிகளை தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழு மதிப்பீடு செய்தல் (NAAC):**

2.5 தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் உயர் கல்வி நிறுவனங்கள் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 175 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் கல்வியியல் கல்லூரிகளும் இக்குழுவால் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. விவரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| அரசுக் கல்லூரிகள் | : | 55 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | : | 97 |
| சுயநிதிக் கல்லூரிகள் | : | 23 |
| மொத்தம் | .. | 175 |

2.6 முந்தைய மூன்றாண்டுகளில் மேற்கொண்ட செயல்பாடுகள் குறித்து கல்லூரிகள் தன்னாய்வு செய்ய இம்மதிப்பீடு உதவியாக இருக்கும். பாடத் திட்டம், இதர செயல்பாடுகள், வேலை அளித்தல், கல்வித் தரம் மற்றும் மாணவர் திறன் ஆகியவற்றை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், மாணவர்கள் பணித் தகுதி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் நிலைமையைக் கண்டறிய இது உதவும்.

2.7 தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளையும் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவின் தர நிர்ணயத்திற்கு விரைவில் உட்படுத்துவது என இந்த அரசு முடிவு செய்துள்ளது.

**அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலை வழங்குதல்:**

2.8 கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலை வழங்குவது தமிழகத்தில் 1978–1979 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழகத்தில் 67 கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலை வழங்கப்பட்டுள்ளது. அதில் 15 அரசுக் கல்லூரிகளும், 45 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் 7 சுயநிதிக் கல்லூரிகளும் அடங்கும். இவ்வாறு தன்னாட்சி நிலை வழங்கப்படுவதால் அக்கல்லூரிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், புதுமைகளைப் புகுத்தவும், மாணவர்களின் அறிவுத் தரத்தை உயர்த்தவும் வாய்ப்பு கிடைக்கிறது. தன்னாட்சிக் கல்லூரிகளில் அக்கல்லூரிகளின் பாடப் பிரிவுகளுக்கான பாடத் திட்டத்தினை அவர்களே



முடிவு செய்யவும், தேர்வுகள் நடத்தி மாணவர்களை மதிப்பீடு செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் கல்வி கற்பதில் மாணவர்கள் ஊக்கம் கொள்வார்கள். இதன் விளைவாக கல்வித் தரம் உயரும். மாணவர் குறித்து தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுவதால், மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவார்கள் எனவும், சுய மேம்பாடு அடைவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய அரசு இன்னும் அதிக அளவிலான கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கும். இதனால் இக்கல்லூரிகளின் கல்வித் தரம் மேம்படும்.

**அரசுக் கல்லூரிகளில் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள்:**

2.9 அரசுக் கல்லூரிக் கட்டிடங்களில் இன்றியமையாத சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.8.72 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டிலும் அரசுக் கலலூரிக் கட்டடங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய இன்றியமையாத பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென அரசு ரூ.11.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கல்லூரிகளில் உள்ள பழுதடைந்த கழிவறைகள், கல்லூரி வளாகத்தில் உள்ள பழுதடைந்த சாலைகள், பழுதடைந்த குடிநீர்க் குழாய்கள், மேலும் நீர் ஒழுக்கு உள்ள மேற்கூரைகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்க முன்னுரிமை அளிக்கப்படும். அரசுக் கல்லூரிகளுடன் இணைந்த விடுதிகளிலும், அவசியமாகத் தேவைப்படும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**கல்லூரிகள் குழாம் திட்டம் : மின்னணுவியல் முறை கல்வி:**

2.10 மின்னணுவியல் முறை கல்வி வசதி பெற்ற 7 அல்லது 8 அரசுக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து கல்லூரிகள் குழாம் திட்டம் இக்கல்வியாண்டில் உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், மேற்சொன்ன கல்லூரிகள் ஒன்றில் படிக்கும் மாணவர்கள், கல்வி செயற்கைக்கோள் (EDU–SAT) வழியாக மற்றொரு கல்லூரியுடன், பாடங்கள், நூல்கள், இதழ்கள் போன்றவற்றை மின்னணு வடிவில் பரிமாறிக் கொள்ளலாம். இதனால், பிற கல்லூரி மாணவர்களின் அறிவினைப் பெற்று கல்வி குறித்த கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளமுடியும். இதன் விளைவாக மாணவர்கள் தங்கள் அறிவினைப் பெருக்கிக் கொள்ளலாம்.

[2006 ஆகஸ்ட் 4

**கிராமப்புறப் பகுதிகளில் உள்ள அரசுக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்:**

2.11 நபார்ட் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் உள்ள அரசுக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.1.00 கோடி கேட்டுப்பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**நாட்டு நலப் பணித் திட்டம் (என்.எஸ்.எஸ்.):**

2.12 தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மானியத்தை 7 : 5 என்ற விகிதத்தில் மைய அரசும், மாநில அரசும் பகிர்ந்து அளித்து வருகின்றன. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2005 2006 ஆம் ஆண்டில் பயிலும் மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை 2,78,000 ஆகும். இது 2006–2007 ஆம் கல்வியாண்டில் 3,00,000 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுள் 1,52,000 தொண்டர்கள் 2006–2007 ஆம் ஆண்டில் சிறப்பு முகாமில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். தற்போது பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 3,058 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டு நலப் பணித் திட்டம், கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. அவரே தமிழகத்தில் இத்திட்டத்திற்கு மாநில ஒருங்கிணைப்பாளர் ஆவார். 2006–2007 ஆம் ஆண்டில் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு மைய அரசின் பங்கு ரூ.385.45 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.275.32 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.660.77 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இந்திய ஆட்சிப் பணி / இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான இலவசப் பயிற்சி:**

2.13 அகில இந்திய அளவில் நடைபெறும் இந்திய ஆட்சிப் பணி / இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பெண்கள் சிறப்பாகப் பங்குபெறும் பொருட்டு சென்னை, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ஆகிய இரு அரசு மகளிர் கல்லூரிகளில் பயிற்சி மையங்கள்



2006 ஆகஸ்ட் 4]

அமைக்கப்பட்டு பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் 60 மாணவிகள் இந்திய ஆட்சிப்பணி / இந்தியக் காவல் பணித் தேர்வு எழுத இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்ட செயல்பாட்டிற்கென அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**தமிழ்வழி பயிலும் மாணவ / மாணவியர்க்கு ஊக்கத் தொகை:**

2.14 இத்திட்டம் 1971–72–ல் தொடங்கப்பட்டது. இதன்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில், பட்ட வகுப்புகளைத் தமிழ்வழி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் உதவித் தொகை ரூ.180/– மொழி, இனம் மற்றும் பெற்றோர் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் வழங்கப்பட்டது. 1997–1998 ஆம் கல்வியாண்டு முதல் இந்த அரசு இவ்வுதவித் தொகையை ரூ.180/–லிருந்துரூ.400/– ஆக உயர்த்தியது.

**படிப்புதவித் தொகை திட்டங்கள்:**

2.15 கல்லூரிக் கல்வி இயக்ககத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன:

(i) தேசிய படிப்புதவித் தொகை திட்டம் (மத்திய அரசு திட்டம்).

(ii) பள்ளி ஆசிரியர் பிள்ளைகளுக்கான மாநில படிப்புதவித் தொகை.

(iii) மாநில தகுதி படிப்புதவித் தொகை.

(iv) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தனித் தகுதி மானியம்.

(v) மாநில கல்லூரிக் கல்விப் படிப்புதவித் தொகை.

(vi) புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கல்வி பயிலும் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை.

(vii) டேராடூன் இராஷ்டிரிய இந்திய மிலிடரி அகடமியில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை.

(viii) பூனா கடக்வாசலாவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகடமியில் பயிலும் தமிழ்நாட்டு மாணவ மாணவிகளுக்குப் படிப்புதவித் தொகை.

(ix) இராணுவத்தில் பணிபுரிவோர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்.

(x) முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்.

(xi) அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் முழு நேர ஆராய்ச்சிப் படிப்புப் பயிலும் மாணவ / மாணவிகளுக்குப் பயிற்சிகால உதவித் தொகை வழங்கும் திட்டம்.

(xii) வேளாண் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளது கல்விச் செலவிற்கு நிதியுதவித் திட்டம்.

**பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவசப் படிப்புத் திட்டம்:**

2.16 பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் 1989-1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நலத் திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்டப் படிப்பு பயிலும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஏழை மாணவிகள் இலவசக் கல்வி பெறுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும். 2005–2006 ஆம் ஆண்டில் 8,936 மாணவிகள் பயன்பெற்றனர். 2006–2007 ஆம் நிதி ஆண்டில் ரூ.65.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களின் கல்வித் தகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

2.17 அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஆராய்ச்சிப் படிப்பை மேம்படுத்திடவும், வளர்ந்து வரும் தற்கால போக்கிற்கேற்ப ஆசிரியர்கள் தங்களைத் தயார் செய்துகொள்ளவும், பல்கலைக்கழக நிதியுதவியுடன் கல்லூரி ஆசிரியர்கள் மேற்கண்ட ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

**தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்:**

2.18 அரசுக் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காகச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.



## 3. தொழில்நுட்பக் கல்வி

**தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சி:**

3.1 சென்னையில் 1794–ல் கிழக்கிந்தியக் குழுமம் நிறுவிய நில அளவியல் பள்ளி, நமது நாட்டிலேயே முதன்முதலாக தோற்றுவிக்கப்பட்ட பொறியியல் கல்வி நிறுவனம் என்பது தமிழ்நாட்டுக்குப் பெருமையளிப்பதாகும்.

3.2 அகில இந்திய அளவில் பொறியியற் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில், அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற மொத்த 248 பொறியியற் கல்லூரிகளில் 2006–2007 ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கைக்காக மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 90,698 ஆகும். 2006–2007 ஆம் கல்வியாண்டில் மொத்த 236 பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஓட்டல் மேனேஜ்மெண்ட் பயிலகங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை 65,999.

3.3 2006–2007 ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்காக ஒற்றைச் சாளர முறையில் அரசு நுழைவுத் தேர்வு நடத்தியது. அரசுப் பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் தவிர அரசுதவி பெறாத சிறுபான்மையினரல்லாத பொறியியற் கல்லூரிகளில் 65% இடங்களுக்கும், அரசுதவி பெறாத சிறுபான்மையினர் பொறியியற் கல்லூரிகளில் 50% இடங்களுக்கும் மாணவர் சேர்க்கையினை ஒற்றைச் சாளர முறையில் அரசு மேற்கொள்ளும்.

3.4 அரசுதவி பெறாக் கல்லூரிகளில், கல்லூரி நிர்வாகத்திற்கும் அரசுக்கும் இடப்பங்கீடு மற்றும் கட்டண அமைப்பு குறித்த பொருத்தமானதும், விரிவானதுமான சட்டம் ஒன்றினை அரசு இயற்றும். இச்சட்டம் 2007–2008–ல் இருந்து நடைமுறைக்கு வரும்.

**தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்:**

3.5 அண்ணா பல்கலைக் கழக திருத்தச் சட்டம் (20[illegible] இயற்றப்பட்டபின் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளும் அப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. மாநில முழுவதுமுள்ள அதிக எண்ணிக்கையிலான அனைத்து கல்லூரிகள் தொடர்பான அனைத்துப் பொருட்கள் குறித்து செயல்பாடுகள் மேற்கொள்வது, இப்பல்கலைக்கழகத்திற்கு

கடினமானதொன்றாக உள்ளது. எனவே, அண்ணா பல்கலைக்கழகம் தவிர, திருச்சி மற்றும் கோவையில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கக் கருதப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுச் செயல்திட்டம் (TEQIP):**

3.6 இந்திய அரசு ரூ.1555 கோடி ஒதுக்கீட்டுடன், தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுச் செயல்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. பொறியியற் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் ஆய்வுக் கூடங்களை நவீனப்படுத்துதல், ஆசிரியர் மற்றும் பணியாளர் மேம்பாடு, பாடத் திட்டத்தை மேம்படுத்துதல், தொழில் நிறுவனங்களோடு தொடர்பு, ஆராய்ச்சி, மேலாண்மைத் திறன் மேம்பாடு, தனிச் சிறப்பு மையங்கள், தகுதி அடிப்படையில் தேர்வு ஆகிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் இரண்டாம் சுற்றில் இடம் பெற்றுள்ள ஏழு மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று. இத்திட்டம் ஏப்ரல் 2004–ல் தொடங்கி பாதியளவு நிறைவேறியுள்ளது. திட்ட ஒதுக்கீடாக ரூ.96.1627 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



## 4. பல்கலைக்கழகக் கல்வி

உயர் கல்வித் துறையின் ஆளுகையில் கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:—

1. அண்ணா பல்கலைக்கழகம்
2. சென்னைப் பல்கலைக்கழகம்
3. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அழகப்பா பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்
10. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
11. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
12. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
13. தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

## சென்னைப் பல்கலைக்கழகம்

4.1 சென்னைப் பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லை சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ளது. ஆற்றல்சால் பல்கலைக்கழகம் என்ற தனிச் சிறப்பினைப் பெற்ற முதல் ஐந்து பல்கலைக்கழகங்களுள் இதுவும் ஒன்றாகும். கற்பித்தல், கற்றல், ஆய்வு ஆகியவற்றை வளப்படுத்த, பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெற்ற சிறப்பு மானியத்தை இப்பல்கலைக்கழகம் பயன்படுத்தியுள்ளது.

4.2 வேலைவாய்ப்பு மிகுந்த உயர் கல்வியினைப் பொறுத்தவரை, பல்கலைக்கழகம் பல புதுமையான படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சியில் பல்கலைக்கழகம் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளது.

4.3 தரமான கல்வியினை அளிக்க கல்லூரிகளை ஊக்கப்படுத்தும் வகையில், நவீன பாடத் திட்டம், செமஸ்டர் திட்டத்தின்கீழ் பின்பற்றுவதற்கான ஒரே சீரான காலக் குறிப்பேடு, நேரப்படியான தேர்வுகள் மற்றும் முடிவு வெளியீடுமூலமாக மாணவர்களை மதிப்பீடு செய்யும் திறன்வாய்ந்த திட்டம் ஆகியவற்றைப் பல்கலைக்கழகம் விதித்துள்ளது. இணைவு பெற்ற கல்லூரிகளில் தரமேம்பாட்டிற்கான கல்லூரிக் குழாம் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 ஆடவர் கல்லூரிகளும், 7 மகளிர் கல்லூரிகளும் தாமாகவே முன்வந்து தங்களிடம் உள்ள வசதிகளைப் பகிர்ந்துகொண்டு, மாணவர்களுடைய கல்வி வாய்ப்புகளைக் கூடுதலாக்கவும், சிறந்த ஆசிரியர்களை அணுகி பயன்பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.4 குளிர்சாதனம் கொண்ட வகுப்பறைகள், ஒளி ஒலி சாதனங்கள், கணினி உதவியுடன் கூடிய ஆய்வகங்கள், கணினி உதவியுடன் கூடிய மொழி ஆய்வுக் கூடங்கள், இணையதளம், மின்னணு நூலகங்கள், ஆராய்ச்சிகள் ஆகியவை கொண்ட, கற்பிக்கவும், கற்கவும் ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்குச் சுய சிந்தனையை வளர்ப்பதோடு தொழில் முனைவராக உருவாகவும் வழிவகுக்கின்றது.

4.5 இப்பல்கலைக்கழகம் தனது 150 ஆம் ஆண்டு விழாவினை செப்டம்பர் 2006-ல் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.6 1966-ல் நிறுவப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 72 துறைகளை உள்ளடக்கிய 18 புலங்கள் (Schools) உள்ளன. பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி இயக்ககம் சுமார் 1.20 இலட்சம் மாணவர்களைக் கொண்டுள்ளது. இந்த இயக்ககம் 29 தகவல் மையங்கள், 11 கல்வி அனுமதி மையங்களைத் தமிழ்நாட்டிலும், 53 மையங்களைப் பிற மாநிலங்களிலும், 7 மையங்களை அயல் நாடுகளிலும் கொண்டுள்ளது.





பல்கலைக்கழக மானியக் குழுவினால் மதுரை காமராசர்
4.7 பல்கலைக்கழகம் 'ஆற்றல்சால் பல்கலைக்கழகம்' என்ற தகுதியினைப் பெற்றுள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு தேசிய தர நிர்ணய குழுமம் (NAAC), பெங்களூர் 'A' தகுதியினை வழங்கியுள்ளது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'நந்னோ' மையத்திற்கு
4.8 (Centre for Nanotechnology) மத்திய அரசுமூலம் ரூ.2.5 கோடி நிதியைப் பெற்றுள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் நேருவியல் மையத்திற்காக பல்கலைக்கழக மானியக் குழு ரூ.8.20 இலட்சம் எபோக் (EPOCH) திட்டத்தின்கீழ் வழங்கியுள்ளது.

"கடல் சூழல் மற்றும் நச்சு மரபணுக்கூறுத் தொகுவியல்" என்ற
4.9 புதிய முதுநிலை பட்டப்படிப்பு, பல்கலைக்கழகத்தின் ஆற்றல் சூழல் இயற்கை வளப்புலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் இணைவிக்கப்பட்டுள்ள கல்லூரி
4.10 ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிப்பதற்காக மிகச் சிறந்ததோர் கல்வியாளர் மேம்பாட்டுக் கல்லூரி இப்பலைக்கழகத்தில் உள்ளது. முதியோர் கல்வித் துறை, தமிழக அரசின் பெண்கள் முன்னேற்றத் திட்டங்களுடன் ஒத்திசைந்து பெண்களுக்குச் சுய வேலைவாய்ப்பு, தொழில் முனைவோரியியல் பயிற்சி அளித்து வருகிறது. இளைஞர் நலத் துறை இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகளுக்குச் சிறுபான்மை இன மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தது. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்கும் இப்பிரிவு வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

4.11 மதுரை காமராசர் பல்கலைக்கழகம் கல்வியியல் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

## பாரதியார் பல்கலைக்கழகம்

4.12 பாரதியார் பல்கலைக்கழகம் தமிழக அரசால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் கோவையில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்கள் உள்ளன.

4.13 இப்பல்கலைக்கழகமானது 50 இளநிலை பட்டப் படிப்புகளும், 60 முதுநிலை பட்ட மேற்படிப்புகளும், 10 சான்றிதழ் படிப்புகளும், 15 பட்டயப் படிப்புகளும், 28 முதுநிலை பட்டயப் படிப்புகளையும் இணைப்புக்

கல்லூரிகளுடன் சேர்ந்து பயிற்றுவிக்கின்றது. இப்படிப்புகளில் வேலைவாய்ப்பைச் சார்ந்த பட்டப் படிப்புகளாக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்புகளாக கணினித் துறையிலும், உணவு மற்றும் உணவு விடுதி நிர்வாகம், மின்னணுவியல், உணவுக் கட்டுப்பாடு மற்றும் ஆடை வடிவமைப்பு பற்றிய படிப்புகளும் அடங்கும். இப்பல்கலைக்கழகமானது இதனுடைய இணைப்புக் கல்லூரிகளுக்கு அவர்களுடைய இளநிலை பட்டப் படிப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மேலும் பல சான்றிதழ், பட்டயம் மற்றும் பட்ட மேற்படிப்புகளைக் கற்றுத்தர அனுமதி வழங்கியுள்ளது.

4.14 இப்பல்கலைக்கழகமானது தேசிய மற்றும் உலகளவிலான கல்வி நிறுவனங்களுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான பல உடன்படிக்கைகளைச் செய்யவுள்ளது. வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள தகுதியுள்ளதாக இப்பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்பு உதவிபெறும் திட்டத்திலும் (UGC SAP) மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் துறை மேம்பாட்டுத் திட்டத்திலும் (DST FIST) அங்கீகாரம் பெற்றுள்ளது.

## பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.15 பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் தோற்றுவிக்கப்பெற்றது. திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஏழு மாவட்டங்கள் இப்பல்கலைக்கழக ஆட்சி எல்லையில் அடங்கியுள்ளன.

4.16 பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்த வேண்டி, பல்வேறு கல்விசார் சீர்திருத்தங்களைப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவியல், கலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்பங்களில், புதுமையான பல படிப்புகளை இப்பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்படிப்புகளுக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டு அவை சி.பி.சி.எஸ். திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்றன.

4.17 இப்பல்கலைக்கழகம் தெரிவுசெய் திறன் முறையினை நடைமுறைப்படுத்தி வருகிறது. அத்துடன் பல வேலைவாய்ப்பு மிக்க படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.



## அழகப்பா பல்கலைக்கழகம்

4.18 சிறந்த கொடையாளரான டாக்டர் ஆர். அழகப்ப செட்டியார் அவர்களால் உருவாக்கப்பெற்ற அழகப்பா கல்வி நிறுவனங்களிலிருந்து 1985 மே திங்கள் அழகப்பா பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப் பெற்றது. இப்பல்கலைக்கழகம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமைந்துள்ளது. தமிழக அரசு 2002 ஆம் ஆண்டில் அழகப்பா பல்கலைக்கழகத்தினை இணைப்புப் பல்கலைக்கழகமாக மாற்றி அமைத்தது. சிவகங்கை மற்றும் இராமநாதபுர மாவட்டங்களில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அழகப்பா பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் அதன் இணைப்புக் கல்லூரிகளாகின்றன.

4.19 இப்பல்கலைக்கழகத்தில் 16 துறைகள் / மையங்கள் உள்ளன. தேசிய தர நிர்ணயக் குழு அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு 'A' தரம் வழங்கியுள்ளது.

**தொலைதூரக் கல்வி:**

4.20 தொலைதூரக் கல்வி இயக்ககத்தின்மூலம் 57 புதிய மற்றும் வேலைவாய்ப்புக் கல்வித் திட்டங்கள் இளங்கலை, முதுகலை பட்டயம் மற்றும் இளம் முனைவர் நிலைகளில் வழங்கப்பட்டு வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககத்தின்மூலம் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 52,000 ஆகும். கப்பல் மற்றும் துறைமுக மேலாண்மை, மருத்துவ மேலாண்மை, வங்கி மற்றும் காப்பீடு, முதலீட்டு மேலாண்மை, சர்வதேச வர்த்தகம், திட்ட அறிக்கை மேலாண்மை போன்ற எட்டு பிரிவு சிறப்பு மேலாண்மைத் திட்டங்கள் 2005-2006 கல்வி ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4.21 சமூகத் தேவைக்கேற்ப வேலைவாய்ப்பு நல்கக்கூடிய மரபு வழி சாராச் சிறப்புப் பாடத்திட்டங்கள், உடன்பாட்டு கல்வித் திட்டங்கள் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம் பின்தங்கிய கிராமிய சூழலில் அமைந்துள்ளது.

4.22 'நேனோ மையம்' மற்றும் ஸ்ரீராமானுஜம் உயர் கணிதவியல் மையம் ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

## அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.23 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர்

மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன. மகளிர் அரசுக் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை மற்றும் எம்.வி. முத்தையா பெண்கள் அரசுக் கலைக் கல்லூரி, திண்டுக்கல் இரண்டும் 2002 முதல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக ஆயின. திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள ஐந்து கல்லூரிகளும் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக ஆயின.

**தொலைதூரக் கல்வி:**

4.24 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி முறையின் குறிக்கோள், உயர்கல்வி வாய்ப்புக்காக ஏங்கும் பெண்களின் கல்வித் திறனையும், வேலைவாய்ப்பினையும், சமுதாய முன்னேற்றத்தையும் உயர்த்தும் பொருட்டு கல்வி வாய்ப்பினை வழங்குவதே ஆகும். இந்தக் குறிக்கோளினை மனதில் கொண்டு இந்தக் கல்வி ஆண்டில் பெரிய நகரங்களில் மட்டுமின்றி சிற்றூர்களில் 39 கல்வி மையங்களையும், 75 மருத்துவம் சார்ந்த படிப்பினை வழங்கும் மையங்களையும் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது.

## மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.25 மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மூன்று தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக 1990 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி மாவட்டத்தில் அபிசேகபட்டி என்னும் ஊரில் அமையப்பெற்றுள்ளது. பாளையங்கோட்டை, ஆழ்வார்குறிச்சி மற்றும் இராஜாக்கமங்கலம் ஆகிய இடங்களில் இப்பல்கலைக்கழகத்தின் துணை வளாகங்கள் உள்ளன. மேலும் இப்பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி முறை மூலமாகவும், கல்விப் பணி ஆற்றி வருகிறது.

4.26 இப்பல்கலைக்கழகம் 24 துறைகளைக் கொண்டுள்ளது. 39 பட்டப் படிப்புகள், 30 பட்ட மேற்படிப்புகள், 79 சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகள், 16 எம்.ஃபில். படிப்புகள், 108 முனைவர் படிப்புகள் ஆகியவற்றை அளித்து வருகிறது.

4.27 தொலைதூரக் கல்வி மற்றும் தொடர்கல்விக்கான இயக்ககம் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. இதன்மூலம் 61 படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.



4.28 +2 பயின்ற, 25 வயது நிறைந்த கிராமப்புற மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறும்வகையில், சமுதாயக் கல்லூரி திட்டத்தை 1999-ல் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 38 சமுதாயக் கல்லூரிகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இவற்றில் வேலைவாய்ப்பளிக்கப்படும் 20 படிப்புகள் கற்றுத்தரப்படுகின்றன. பட்டயங்கள் வழங்கப்படுகின்றன.

## பெரியார் பல்கலைக்கழகம்

4.29 பெரியார் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டில் சேலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் 117 இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. இப்பல்கலைக்கழக ஆளுகையின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் அடங்கியுள்ளன.

4.30 இப்பல்கலைக்கழகத்தில் ஆறு துறைகள் உள்ளன. தற்பொழுது இணைவு பெற்ற கல்லூரிகளில் 122 பாடப் பிரிவுகளை இப்பல்கலைக்கழகம் நடத்தி வருகின்றது. பெரியார் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி நிறுவனம் (PRIDE) 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இந்த திட்டம் தற்பொழுது 41 கல்வி மையங்களில் நடைபெறுகிறது. அவற்றுள் துபாய் மற்றும் குவைத்திலுள்ள இரண்டு மையங்களும் அடங்கும். தொலைதூரத் திட்டத்தின் வழியாக இரண்டு பட்டப் படிப்புகளை ஒரே நேரத்தில் படிக்கும் முறையை இப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தினால் முறையான பாடத் திட்டத்தில் படிக்கும் மாணவர்கள் தொலைதூரக் கல்வியின் மூலமாக மற்றொரு பட்டப் படிப்பை ஒரே நேரத்தில் படிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.31 தேர்ச்சித் திறன் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று 2002-2003 ஆம் கல்வியாண்டிலிருந்து வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பிரிவினர் முன்னேற்றத்திற்காகவும், கல்லூரியில் படிக்க முடியாதவர்களுக்காகவும் ஒரு வருட பட்டயப் படிப்பு பல்வேறு பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பாடத் திட்டங்களும், வரைமுறைகளும் பணியமர்த்துவோர் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன: கணினி, விவசாயம், மூலிகை, மேலாண்மை, ஆடை வடிவமைத்தல், உடல் நலம், நூலகம் மற்றும் ஆசிரியப் படிப்பு போன்ற பிரிவுகள் பட்டயப் படிப்புகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.32 வேலூரில் 2002 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு வேலூர் கோட்டை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கென சொந்த நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 53 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. நடப்புக் கல்வியாண்டில் மேலும் மூன்று கல்லூரிகள் புதிதாக இணைவு பெற்றுள்ளன. தற்போதுள்ள கல்லூரிகளில் புதிய பாடத் திட்டங்களுக்கு ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.

4.33 உணவு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கூடம் அமைப்பதற்கும், பல்கலைக்கழகத்தின் உணவியல் மற்றும் சத்துணவுத் துறைக்கான ஒரு மாதிரி முன்னோடி தொழிற்கூடம் அமைப்பதற்கும் ரூ.33 இலட்சம் நிதியுதவியினைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. மேலும், உணவு ஆராய்ச்சி மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம், நவீனக் கருவிகளைக் கொண்டுள்ளது.

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.34 உயர்கல்வி வாய்ப்பு பெறமுடியாதவர்களுக்குப் பொருளாதார சமூக நிலைக்குப் பொருத்தமான தொலைதூரக் கல்வி அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது.

4.35 தற்பொழுது 60 பாடப் பிரிவுகளை இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. பணியிலுள்ள பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்குத் தொலைதூரக் கல்விமூலம் இளங்கலை கல்வியியல் (B.Ed.) படிப்பினையும், தமிழ்நாட்டின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் தொழிற்பயிற்சி சார்ந்த 15 பட்டயப் படிப்புகளையும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வழங்கிவருகிறது. மேலும் 173 கற்றல் ஆதார மையங்களும், 549 பயிற்சி மையங்களும் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.

4.36 தமிழ்நாட்டில் சர்வதேச அளவில் போற்றப்படும் சுய கற்பித்தல் முறைப்படி பாடங்களை எழுதி மாணவர்களுக்கு வழங்கும் முதல் பல்கலைக்கழகம் என்ற பெருமையையும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் சில பாடநூல்கள், டெல்லியிலுள்ள இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தாலும், கொடைக்கானல் மதர் தெரசா பெண்கள் பல்கலைக்கழகத்தாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன.



4.37 தாய்மொழி வளர்ச்சிக்கு தன் பங்களிப்பினை நல்கும் வகையில் தமிழ் மற்றும் பண்பாட்டுவியல் பள்ளியினை (School of Tamil & Cultural Studies) 2006 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் தோற்றுவித்துள்ளது. தமிழ் இளநிலை மற்றும் முதுநிலை பட்ட வகுப்புகளை மாணவர்களுக்கு வழங்குவதோடு, தமிழ் மொழி மற்றும் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, நாட்டுப்புறக் கலை, ஒப்பிலக்கியம் மற்றும் இவை தொடர்பான ஆய்வுப் பணிகளையும் தமிழ் மற்றும் பண்பாட்டுவியல் பள்ளி மேற்கொள்ளும்.

4.38 இப்பல்கலைக்கழகத்திற்கு நிரந்தர வளாகம் அமைப்பதற்கான இடத்தை, சென்னை-சைதாப்பேட்டையில் தமிழக அரசு ஒதுக்கீடு செய்து தந்துள்ளது. கட்டடம் கட்டுவதற்காக அரசு ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இதற்கான நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகம் எடுத்து வருகிறது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

4.39 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் தோற்றுவிக்கப்பட்டது. கடந்த 76 வருடங்களாக உடனுறை பல்கலைக்கழகமாக சிறப்பானதொரு வளர்ச்சியை அடைந்து மாணவர்களுக்குக் கல்வி அளிப்பதிலும் ஆராய்ச்சித் துறையிலும் மேம்பாடு அடைந்து இந்திய தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார குழுவினரால் நான்கு நட்சத்திரத் தகுதி பெற்றுள்ளது. ஒன்பது புலங்களையும் 48 துறைகளையும் கொண்டு 1,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலப்பகுதியில் இயங்கி வருதல் இப்பல்கலைக்கழகத்தின் தனிச் சிறப்பாகும். இதில் 21,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

### தொலைதூரக் கல்வி:

4.40 அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் தனது கல்விச் சேவையை இந்தியாவில் மட்டுமின்றி அண்டை நாடுகளிலும் சிறப்பாகச் செய்து வருகிறது. இது 369 பல்வேறு பாடப் பிரிவுகளை முறைசார் வழியிலும் மற்றும் திறந்தவெளி வழியிலும் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் சுமார் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் மாணவர்கள் படித்துப் பயன்பெறுகின்றனர். இம்மாணவர்களுக்கு உதவும்பொருட்டு சுமார் 77 தொலைதூரக் கல்வி மையங்கள் நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் செயல்பட்டு

வருகின்றன. மேலும் சிங்கப்பூர், மலேசியா, கத்தார், அபுதாபி, துபாய், மொரிஷியஸ், தாய்லாந்து மற்றும் நேபாளம் போன்ற நாடுகளிலும் இப்பல்கலைக்கழகம் கல்விப் பணி ஆற்றி வருகிறது.

## தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

4.41 தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வரைவு சட்டம் 2004 ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வரைவு சட்டத்திற்கு 4-8-2005 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததும், இது சட்டமாக ஆனது. இச்சட்டம் 15-9-2005 முதல் நடைமுறைக்கு வந்தது. இபபல்கலைக்கழகம் தற்போது சென்னை-6, கல்லூரி சாலையில் உள்ள ச.வே.சி. சம்பத் மாளிகையில் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கு நிரந்தர கட்டடங்கள் அமைக்க ஏதுவான நிலம் அளிக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து தன் செயல்பாட்டைத் தொடங்குகிறது.

## 5. அண்ணா பல்கலைக்கழகம்

5.1 (1) பொறியியல் கல்லூரி, கிண்டி, (2) அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, (3) சென்னை தொழில்நுட்ப நிறுவனம், குரோம்பேட்டை மற்றும் (4) கட்டடக் கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி ஆகியவற்றை ஒருங்கிணைத்து 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் நாள் அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இணைவு பல்கலைக்கழகமாக (Affiliating) மாற்றப்பட்டு, 4 உறுப்புக் கல்லூரிகள், 225 சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள், 3 அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், 6 அரசுப் பொறியியல் கல்லூரிகள் ஆகியவை அத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

5.2 அண்ணா பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட அன்றாடப் பணிகளைச் செய்து வருகிறது:-

(1) தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வை ஒவ்வொரு வருடமும் சீரிய முறையில் நடத்தி வருகிறது. 284 மையங்களில் ஏறக்குறைய 1.50 இலட்சம் மாணாக்கர்கள் இதன்மூலம் தேர்வை எழுதுகின்றனர்.



(2) பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான மாணாக்கர்களின் சேர்க்கையை ஒற்றைச் சாளர முறையின்மூலம் செவ்வனே நடத்தி வருகிறது.

(3) 238 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ள இந்தப் பெரிய பல்கலைக்கழகத்தில் தேர்வினை நடத்தும் பணியானது மிகப் பெரிய ஒன்றாகும். 2005 ஆம் ஆண்டில் 29 இளநிலை மற்றும் 80 முதுநிலை பொறியியல் பட்டப் படிப்பின்கீழ் வரும் 2,164 பாடப்பிரிவுகளில் தோராயமாக 1,84,852 இளநிலை பொறியியல் பட்டப்படிப்பு மாணாக்கர்களும், 15,700 முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு மாணாக்கர்களும் தேர்வெழுதினர். 1.5 மில்லியன் விடைத்தாள்கள் 10 மையங்களில் 6,000 மதிப்பீட்டாளர்களால் திருத்தம் செய்யப்பட்டன.

(4) அதுமட்டுமல்லாமல் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட பல்வேறு கல்லூரிகளின் கல்வி மற்றும் நிர்வாகப் பணிகளிலும் அண்ணா பல்கலைக்கழகம் தனக்கு உரித்தான பங்கை நாளும் அளித்து வருகிறது.

5.3 அண்ணா பல்கலைக்கழகம், உலகத் தரத்தோடு ஒப்பிடத்தக்க வகையில் மேலும் ஒரு பல்கலைக்கழக வளாகத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது. புதிதாக நிறுவப்படும் பல்கலைக்கழக வளாகத்தில் பல துறைகளைச் சார்ந்த ஆராய்ச்சி மையங்கள், அறிவுசார் தகவல் மையங்கள், மேம்படுத்தப்பட்ட பல்வேறு அறிவியல் தொழில்நுட்பக் கருவிகளின் மையம், தொழில்நுட்ப அடைகாக்கும் மையங்கள், அறிவுசார் சொத்துரிமை மையங்கள், நேனோ தொழில்நுட்ப மையங்கள் மற்றும் விண்வெளி தொழில்நுட்பங்கள் போன்ற பல்வேறு மையங்கள் இந்த வளாகத்தில் இடம்பெறும். பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி மற்றும் மேம்படுத்தப்படும் அறிவு நிலைப் பயிற்சி அளிப்பதற்காகத் தனி பொறியியல் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தவும், வளர்ந்துவரும் நாடுகளில் சர்வதேச பொறியியல் விரிவாக்க மையங்களை உருவாக்கி, உயர் தரமான கல்வி அளிக்கவும் அண்ணா பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

5.4 அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளில் பெண்களுக்காகவும், மாணாக்கர்களுக்காகவும் சில குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. குறிப்பாக புகார்களை நிவர்த்தி செய்யும் குழு, பாதுகாப்புக் குழு, ஒழுங்குமுறைக் குழு, நலத்திட்டக் குழு, எயிட்ஸ் விழிப்புணர்வுக் குழு போன்ற பல்வேறு விதமான குழுக்களை அமைக்க உள்ளது.

[2006 ஆகஸ்ட் 4

## 6. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

6.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் தமிழக அரசால், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக இயங்கி வருகின்றது. மக்களிடையேயும் குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடையேயும், அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னையில் கோளரங்கத்துடன்கூடிய பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தை நிறுவியுள்ளது. பி.எம். பிர்லா கோளரங்கம், சென்னையில் 11-05-1988 அன்று நிறுவப்பட்டது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், 17-09-1990 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. பார்வையாளர்களே கையாண்டு புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட 700 காட்சிப் பொருட்கள் இக்காட்சிக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

6.2 இம்மையத்தின் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளில் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த தற்காலிக கண்காட்சிகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், குறுகியகால வகுப்புகள், வானியல் முகாம்கள், வினாடி வினா, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, வரைகலைப் போட்டி, கணிதத் திறன் தேர்வு, வானியல் ஒலிம்பியாட், வானியல் திறன் தேர்வு, 'அறிவியல் அறிஞரைச் சந்தியுங்கள்' மற்றும் 'மருத்துவத் துறை அறிஞரைச் சந்தியுங்கள்' நிகழ்ச்சிகள், குறுகியகால வானவியல் பயிற்சி வகுப்புகள், கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் ஆகியனவும் அடங்கும். மேலும், அரிய வானியல் நிகழ்வுகளின்போது சிறப்பு வான்நோக்கு நிகழ்ச்சிகள், ஒவ்வொரு இரண்டாம் சனிக்கிழமைதோறும் பொதுமக்களுக்கான இரவு வான் நோக்குதல் நிகழ்ச்சிகள் எனப் பல நிகழ்ச்சிகளை அறிவியல் தொழில்நுட்ப மையம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. 24 நேரிடையாகப் பழகிடும் காட்சிப் பொருட்கள் அடங்கிய ஒரு நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்தும், சிறிய கோளரங்கமும் கிராமப்புற ஊர்களுக்குச் சென்று அப்பகுதி மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப அறிவைப் பரப்பி வருகின்றன.



2006 ஆகஸ்ட் 4]

6.3 நடப்பு நிதியாண்டில் சென்னை-பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் பின்வரும் அமைப்புகள் உருவாக்கப்பட உள்ளன:—

(அ) மைய அரசின் தேசிய கடல்சார் கழகத்துடன் இணைந்து ரூ.40 இலட்சம் செலவில் "கடல்சார் காட்சிக் கூடம்" ஒன்று நடப்பு ஆண்டில் அமைக்கப்பட இருக்கிறது.

(ஆ) மைய அரசின் மரபு சாரா எரிசக்தித் துறை அமைச்சகத்தின் நிதியுதவியுடனும், தமிழக அரசின் நிதியுதவியுடனும் ரூ.124 இலட்சம் மதிப்பில் மாநில அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா ஒன்று அமைக்கப்பட உள்ளது.

(இ) சங்கத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களின் மாதிரியும், புதிய விளையாட்டுக் காட்சிப் பொருட்கள் கொண்ட இரண்டாம் கட்ட அறிவியல் பூங்காவும் விரைவில் பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்படவுள்ளன.

6.4 திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மையம் 10-06-1999 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இம்மையத்தில் கோளரங்கம், அறிவியல் பூங்கா, மரபு சாரா எரிசக்திப் பூங்கா மற்றும் சுற்றுச் சூழலியல் காட்சிக் கூடம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

6.5 தமிழகத்தின் பிற மாவட்ட மக்களின் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன:—

(அ) வேலூரில், ரூ.230 இலட்சம் உத்தேச செலவில் இயல் அறிவியல், தொழிற்சாலை, உயிர் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் ஆகிய நான்கு காட்சிக் கூடங்கள் கொண்ட மாவட்ட அறிவியல் மையம்.

(ஆ) கோயம்புத்தூரில் கோளரங்கம் மற்றும் அறிவியல் காட்சிக் கூடங்களுடன்கூடிய மண்டல அறிவியல் மையம், மைய அரசின் நிதியுதவியுடன் விரைவில் அமைக்கப்படும்.

(இ) சுமார் 40,000 பள்ளி மாணவர்கள் பங்குகொள்ளும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதார விழிப்புணர்வு ஆகியவற்றை முன்நிறுத்தி மாநிலம் தழுவிய வினாடி வினாப் போட்டி.

## 7. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

7.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமானது மாணவர்களிடத்தில் அறிவியல் உணர்வு உருவாகவும், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களிடையே ஆராய்ச்சிகள் செய்ய ஊக்குவிப்பதற்கும், தமிழக அரசினால் ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி நிறுவனமாகும். மாநில அரசு வழங்கிவரும் மானியம் தவிர, மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையும் இம்மன்றத்தின் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

7.2 2006 2007 ஆம் ஆண்டு பின்வரும் திட்டங்களை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் நிறைவேற்ற உள்ளது:

**அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள்:**

7.3 இந்தத் திட்டத்தின்கீழ் வேளாண்மை, சுற்றுப்புறச் சூழல், மருத்துவவியல், சமூகவியல் மற்றும் பொறியியல், தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளில் நம் மாநிலத்திலுள்ள தகுதி வாய்ந்த அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் வரை ஆராய்ச்சி செய்வதற்கு ரூ.2.00 இலட்சங்கள் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி மையங்களில் பணிபுரியும் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் திட்டங்களுக்கு ரூ.15.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும்.

**மாணவர் ஆராய்ச்சித் திட்டம்:**

7.4 மாணவர்களிடையே இருக்கும் திறமைகளை அறிவியல் தொழில்நுட்பத்திற்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவவியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவவியல் போன்ற துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கும், முதுநிலை பட்டப் படிப்பில் அறிவியல் பயின்றுவரும் மாணவர்களுக்கும் தங்களது பாடத் திட்டத்தின்கீழ் வரும் சமூக சம்பந்தமுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் 200 மாணவர் ஆய்வுத் திட்டங்களுக்கு ரூ.12 இலட்சங்கள் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.





**கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு ஒரு பகுதி நிதியுதவி அளித்தல்:**

7.5 இந்திட்டம் கருத்தரங்குகள், சூழியங்கள், அறிவியல் முகாம்கள் நடத்தி அறிவியல் அறிவுப் பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அமைப்புகளுக்குப் பகுதி நிதியுதவி அளிக்கப்படுகிறது. அறிவியலறிஞர்கள், கல்லூரி ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என மொத்தம் 2,000 பேர் பயனடையும் வகையில் சுமார் 20 நிகழ்வுகளுக்கு சுமார் ரூ.3.50 இலட்சங்கள் 2006–2007-ல் நிதியுதவி வழங்கப்படஉள்ளது.

**இளம் அறிவியலறிஞர்களுக்குப் பயண நிதி உதவி அளித்தல்**

7.6 இத்திட்டத்தின்கீழ், 2006–2007 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள பல்க்லைக்கழகங்கள்/ கல்லூரிகள்/ ஆராய்ச்சி மையங்களில் பணிபுரிந்து வரும் இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்க செல்லுவதற்குத் தேவையான விமானப் பயணத் தொகையில் 50 விழுக்காடும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு முதல் வகுப்பு இரயில் பயணக் கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

**இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல் (YSFS):**

7.7 35 வயதுக்குட்பட்ட இளம் அறிவியலறிஞர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் தற்போதைய நுணுக்கங்களை தெரிந்துகொள்வதற்கு ஊக்கப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக அவர்கள் தாங்கள் பணிபுரியும் நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக மாதம் ரூ.3000/– ஆதரவு ஊதியமாக இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படும் அறிவியலறிஞர்கள் இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதேனும் ஒன்றில் ஒரு முதுநில்ல அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும் நவீன ஆராய்ச்சி முறைகள் அல்லது நுண்கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும், பயிற்சி பெறவும் முடியும். இத்திட்டத்தின்கீழ் 2006–2007 ஆம் ஆண்டில் 5 இளம் அறிவியலறிஞர்களுக்கு மொத்தம் ரூ.50,000 நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

**தமிழக அறிவியலறிஞர்கள் விருது:**

7.8 தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக தங்களது ஆற்றல் மற்றும் முதன்மையான அல்லது தலைசிறந்த செயல்முறை ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் இதர பணிகள்மூலம் தாங்கள் சார்ந்த துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்து பெருமைப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியலறிஞர்களுக்கு ரூ.10,000/- ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்படும். வேளாண்மை, உயிரியல், வேதியியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுப்புறச் சூழலியல், மருத்துவம், கணிதவியல், இயற்பியல், சமூகவியல் மற்றும் கால்நடை மருத்துவவியல் போன்ற பல்வேறு துறைகளில் ஆண்டுதோறும் மொத்தம் 10 விருதுகள் வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.1.20 இலட்சம் செலவில் 10 அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

**அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்:**

7.9 அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் அறிவியல் கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி முகாம்கள், பிரபலமான விரிவுரைகள், கண்ணொலி ஒளிக்காட்சி, காட்சிவில்லைகள், வினாடி வினா போட்டிகள் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அறிவியல் தொழில்நுட்பத்தை மக்களிடையேயும், மாணவர்களிடையேயும் பரப்புவதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.7.50 இலட்சங்கள் செலவில் 50 கல்வி மற்றும் தன்னார்வ நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயனுறுவர்.

**இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்:**

7.10 நமது மாநிலத்தில் ஒன்பதாம் வகுப்பு பயின்று வரும் திறமை வாய்ந்த இளம் மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிபற்றி போதனை செய்து அவர்களிடையே அறிவியல் மற்றும்



தொழில்நுட்பப் படிப்பை தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு நுழைவுத் தேர்வுமூலம் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 40 மாணவர்களுக்கு உரிய வசதிகள் மற்றும் பயிற்சியாளர்களைக் கொண்ட பெயர் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் ஒரு மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.10 இலட்சம் செலவில் பத்து கல்வி மாவட்டங்களில் உள்ள 5 மையங்களில் ஒரு மாத காலத்திற்கு 800 ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

**காப்புரிமை தகவல் மையம்:**

7.11 இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன், காப்புரிமை தகவல் மையம் சுமார் ரூ.14.62 இலட்சங்கள் மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது. தமிழகம் மற்றும் இம்மையத்தின் அருகில் உள்ள பகுதிகளில் அறிவுசார் சொத்துரிமை, முக்கியமாக காப்புரிமை மற்றும் வழிகாட்டுதல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். பல்கலைக்கழகங்கள், அரசுத் துறைகளை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்களைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் தங்களது புதிய கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை பெறுவதற்கு இயலும்வகையில் இம்மையத்தின் வழிகாட்டுதல் அமையும்.

**மருத்துவமனை கழிவுப் பொருள் மேலாண்மை:**

7.12 மருத்துவமனை கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவது குறித்த பிரச்சனைக்கு பிளாஸ்மா வெப்பமிதவு தொழில்நுட்பம் ஒரு பதிலாக அமையும். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சென்னையில் உள்ள ஒரு மருத்துவமனையில் பிளாஸ்மா வெப்பமிதவு தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை எடுத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது. இதன்மூலம் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அப்புறப்படுத்த இயலுவதோடு, பாதுகாப்பாக மருத்துவமனைக் கழிவுகளை அப்புறப்படுத்துவது குறித்து பொதுமக்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முடியும். இதற்காக ரூ.25 இலட்சங்கள் மானியமாக மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை வழங்கவுள்ளது.

[2006 ஆகஸ்ட் 4

## 8. அறிவியல் நகரம்

8.1 சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் 60-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), அறிவியல் மையம் போன்ற நிறுவனங்கள் உட்பட மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களும் அமைந்த இப்பகுதி அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்ப்பதாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்காக அறிவியல் நகரம் பல அரிய அறிவியல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது.

8.2 கீழ்க்கண்ட பணிகள் அறிவியல் நகரத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

**புள்ளி விவரங்களைக் கொண்ட அடிப்படைத் தளங்களை உருவாக்குதல்:**

8.3 இந்த அடிப்படைத் தளமானது அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தன்னார்வமிக்க நிறுவனங்களுக்கு அறிவியலறிஞர்களை இனம் காண உதவும். இந்த அடிப்படைத்தளத்தில் அறிவியலாளர்களை இனம் காண சில முக்கிய வழிவகைகளான இணையம்மூலம் பெயரையோ, துறையையோ மையமாக வைத்துத் தேடுவதற்கு வழிவகைகள் செய்யப்படும். இப்புள்ளிவிவரங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும். அறிவியல் சமுதாயம் இதனால் பயனடையும்.

**செய்தி மடல் மற்றும் புகைப்படம்:**

8.4 அறிவியல் நகரத்தின் செய்தி மடல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றங்கள் குறித்த செய்தியை வெளியிடுகிறது. இச்செய்தி மடலில் தலைசிறந்த அறிவியல் நிபுணர்களின் பொதுமக்களுக்கான செய்தியும் மற்றும் இந்நிபுணர்கள் எழுதும், சமீப காலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய கட்டுரைகளும் இடம் பெறும்.

**அறிவியலைப் பிரபலப்படுத்துதல்:**

8.5 இத்திட்டத்தில் அறிவியல் சார்ந்த தலைசிறந்த விரிவுரைகள், பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் நிபுணர்களைச் சந்தித்தல் மற்றும் இணைய தளத்தின்மூலம் வினாடி வினா நிகழ்ச்சி, அறிவியல் நகர உறுப்பினர் நிறுவனங்களுடன் சேர்ந்து அறிவியல் கூட்டங்கள் நடத்துதல். அறிவியல் கண்காட்சிகள் நடத்துதல். பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வு திட்டங்கள் ஆகியவை அடங்கும். 2005 ஆம் ஆண்டில் கிராமப்புறத்தைச் சேர்ந்த 48 பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் விருதுகள் வழங்கப்பட்டன.



2006 ஆகஸ்ட் 4]

**மகளிர் ஆற்றல் மேம்பாடு:**

8.6 தமிழக அரசின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று, பெண்களை மேம்படுத்துதல் ஆகும். இதை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் நகரமும் தொழில்முனைவோர் வளர்ச்சி திட்டம் (EDP) மற்றும் தொழில்முனைவோர் விழிப்புணர்வு திட்டம் (EAP) நிகழ்ச்சிகள் வழியே பெண்களிடத்தில் உள்ள செயல்திறன்களை வெளிக்கொணர்ந்து அவர்கள் சுயமாக செயல்பட்டு தம் சொந்தக் கால்களில் நிற்பதற்கு வழிவகுக்கிறது. பெண் அறிவியல் நிபுணர்களின் நிலையைக் கண்டறிய அறிவியல் நகரம் நாடு முழுவதும் உள்ள பெண் நிபுணர்களின் புள்ளிவிவரங்களைச் சேகரிக்கிறது. இப்புள்ளிவிவரங்கள் இணைய தளத்தின்மூலம் எல்லோருக்கும் கிடைக்க வழிவகுக்கப்பட்டு வருகிறது. பெண் அறிவியல் நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக அறிவியல் நகரம் இளம் பெண் விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் பெண் சாதனையாளர் விருது ஆகிய விருதுகளை வழங்குகிறது. 2005 ஆம் ஆண்டில் 5 பெண் அறிவியலறிஞர்களுக்கு இளம் பெண் விஞ்ஞானி விருதுகள் வழங்கப்பட்டன.

**நூலகங்களை இணைத்தல்:**

8.7 நூலகங்களின் முக்கியத்துவத்தைக் கருதி அறிவியல் நகரத்தில் உள்ள 40 நூலகங்களையும் இணைக்க, அறிவியல் நகரத்தில் உள்ள அனைத்து நூலகங்களில் உள்ள புத்தகங்களைப் பற்றிய கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவையல்லாது எல்லா நூலகங்களையும் இணைக்க முதல் கட்டமாக கணினிமயமாக்கப்படுகின்றன. அறிவியல் நகரத்தின் உறுப்பினர் நிறுவனங்கள் இதன் பயனாளிகளாக இருப்பர்.

**தகவல் மையம் ஏற்படுத்துதல்:**

8.8 பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி போன்ற உயர் கல்வி வழங்கும் நிறுவனங்களின் புள்ளிவிவரங்கள் அறிவியல் நகரத்தின் இணைய தளமான www.tamilnaduscientists.com-இல் வழங்கப்பட்டுள்ளன. காப்புரிமை பற்றிய தகவல்களும் சேவைகளும் இவ்விணையதளத்தில் காணலாம். scicity@md3.vsnl.net.in. என்ற மின்னஞ்சல் மூலமும் இத்தகவல்களைப் பெறலாம். உலகிலுள்ள அறிவியல் சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் முகமைகள், உலகிலுள்ள ஆய்வு நிறுவனங்கள், அறிவியல் மன்றங்கள் மற்றும் அறிவியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி பற்றிய குறிப்புகளை இவ்விணைய தளத்தில் காணலாம். இத்தகவல்களால் மாணவ சமுதாயம், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பயன் பெறுவர்.

[2006 ஆகஸ்ட் 4

## 9. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

9.1 தலைமைச் செயலகம் மற்றும் இதர சில துறைகள் சார்ந்த 30 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் காப்பகமாகவும், ஐந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட தலைமைச் செயலகம் சார்ந்த ஆவணங்களின் இடைநிலைக் காப்பகமாகவும், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல் தொகுதிகளைக் கொண்டிருக்கும் நூலகமாகவும் ஆவணக் காப்பகம் விளங்குகிறது.

9.2 காலத்தால் போற்றப்படும் முறைகளைப் பயன்படுத்தி ஆவணக் காப்பகத்தில் ஆவணங்கள் வகைப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, அரசும், ஆராய்ச்சியாளர்களும் கோரும்போது அளிக்கப்பட்டு வருகின்றன. அண்மைக் காலமாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இத்துறையில் பணித்திறனை மேம்படுத்த அரசு ஊக்குவித்து வருகின்றது. சிப்பாய்க் கலகம் எனப்படும் முதல் விடுதலைப் போருக்கு முந்தைய காலத்து ஆவணங்களை நுண்படமாக்கும் திட்டம் அறுபது விழுக்காடு முடிவுற்றிருக்கின்றது. நூலகத்தில் உள்ள அட்டவணைகளைக் கணினிமயமாக்கும் முதல் நிலை முடிவுற்று, இரண்டாம் நிலை முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் நூற்றாண்டு நிறைவினைக் (2009) குறிக்கும் வகையில், மூன்று தளங்கள் அடங்கிய நூற்றாண்டு நினைவுக் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 4]

## 10. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

10.1 மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நல்கை நிதிக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் வகையிலும் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி அமைப்பாக 1992 ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில இயற்றப்பட்ட சட்ட வாயிலாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநில உயர்கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

10.2 உயர்கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவை அணுகும்போது அவற்றுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குதல், உயர்கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும் அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல், மாநில அளவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்து மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு அனுப்புதல் மற்றும் திட்டப் பணிகளில் செயலாக்கத்தைத் கண்காணித்தல், உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையே பணிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்தல், ஒத்துழைப்பினை உயர்த்துதல், ஒருங்கிணைத்தலை மேம்படுத்துதல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்புகொள்வதற்கான வசதி வாய்ப்புகளைக் கண்டறிதல், மாநிலத்தில் உயர்கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல், உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளில் பாடத் திட்டத்தைச் செழுமைப்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் தரத்தை சீரமைக்கவும் உதவுதல், கல்வித் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு தேவையான உதவி புரிதல் ஆகியவை இம்மன்றத்தின் முக்கியப் பணிகளாகும்.

10.3 இம்மன்றம் திட்டப் பணிகளின்கீழ் மானியத்தைப் பெற்று, கீழ்க்காணும் செயல்களைத் துவக்கவும்/ தொடரவும் திட்டமிட்டுள்ளது:

- கல்லூரிகளைத் தன்னாட்சி கோரி விண்ணப்பிக்க ஊக்குவித்தல், தன்னாட்சி நிலை பெற உதவி செய்தல்.
- பாடத்திட்டத்தினை மேம்படுத்த பல்கலைக்கழகங்களுக்கு உதவிடுதல்.
- தேர்வு முறையினை மேம்படுத்த பல்கலைக்கழகங்களுக்கு உதவிடுதல்.
- மாநிலத்திலுள்ள பல்கலைக்கழக நூலகங்களை இணைத்தல்.
- பாடநூல்களைத் தமிழ் மொழியில் உருவாக்குதல்.

## தொழில்நுட்பக் கல்வித் துறை

### அட்டவணை – 1

### மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை (2006–2007)

| வ. எண் | கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 22 |
| 2 | அரசு மானியம் பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 34 |
| 3 | இணைப்புப் பயிலகம் | 5 |
| 4 | சுயநிதி பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 153 |
| 5 | பாண்டிச்சேரி பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 5 |
| 6 | உணவக மேலாண்மை மற்றும் விருந்தோம்பல் பயிலகம் | 14 |
| 7 | பாண்டிச்சேரி உணவக மேலாண்மை மற்றும் விருந்தோம்பல் பயிலகம் | 1 |
| 8 | திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிலகம் | 1 |
| 9 | மண்டல தொழிலாளர் பயிலகம் | 1 |
| | மொத்தம் | 236 |



### அட்டவணை – 2

### மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை (2006–2007)

| வ. எண் | கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக்கழகம் | 4 |
| 2 | அரசு பொறியியற் கல்லூரிகள் | 6 |
| 3 | அரசு மானியம் பெறும் பொறியியற் கல்லூரிகள் | 3 |
| 4 | சுயநிதிக் கல்லூரிகள் | 235 |
| | மொத்தம் | 248 |

## கல்லூரிக் கல்வித் துறை

### அட்டவணை – 3

### கல்லூரிகளின் எண்ணிக்கை விவரம் (2006–2007)

| வ. எண் | கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 |
| 2 | உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 133 |
| 3 | சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 297 |
| 4 | அரசுக் கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| 5 | உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| 6 | சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் | 139 |
| 7 | உதவிபெறும் உடற்கல்வியியல் கல்லூரிகள் | 3 |
| 8 | சுயநிதி உடற்கல்வியியல் கல்லூரிகள் | 5 |
| 9 | உதவிபெறும் கீழ்திசை மொழிக் கல்லூரிகள் | 10 |
| 10 | உதவிபெறும் சமூகப் பணி பள்ளிகள் | 2 |
| | மொத்தம் | 670 |

## அட்டவணை - 4

### 2005 ஆம் கல்வி ஆண்டில் தேர்வெழுதிய மற்றும் தேர்ச்சி பெற்ற கல்லூரி மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை விவரம்

| பாடங்களின் பெயர் | தேர்வெழுதியவர்களின் எண்ணிக்கை | | | தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | மொத்தம் | ஆடவர் | மகளிர் | மொத்தம் |
| **இளங்கலை** | | | | | | |
| பி.ஏ | 18230 | 18488 | 36718 | 8634 | 12427 | 21061 |
| பி.எஸ்.சி. | 34342 | 41873 | 76215 | 18103 | 31660 | 49763 |
| பி.காம். | 18765 | 18332 | 37097 | 12666 | 14976 | 27642 |
| பி.பி.ஏ. | 5459 | 3006 | 8465 | 3337 | 2416 | 5753 |
| பி.பி.எம். | 1319 | 1576 | 2895 | 1115 | 1394 | 2509 |
| பி.லிட். | 189 | 681 | 870 | 157 | 594 | 751 |
| பி.சி.ஏ. | 3674 | 3215 | 6889 | 2558 | 2763 | 5321 |
| **முதுகலை பட்டப்படிப்பு** | | | | | | |
| எம்.ஏ. | 2514 | 3526 | 6040 | 1801 | 2840 | 4641 |
| எம்.எஸ்.சி. | 10356 | 11762 | 22118 | 7077 | 8911 | 15988 |
| எம்.காம். | 2827 | 2942 | 5769 | 1558 | 2001 | 3559 |
| எம்.சி.ஏ. | 4544 | 2127 | 6671 | 4121 | 1979 | 6100 |
| எம்.பி.ஏ. | 2739 | 1076 | 3815 | 2338 | 1030 | 3368 |
| **ஆராய்ச்சிப் படிப்பு** | | | | | | |
| எம்.பில்./ பிஎச்.டி. | 806 | 1392 | 2198 | 552 | 1230 | 1782 |
| **கல்வியியல் படிப்பு** | | | | | | |
| பி.எட். | 934 | 1804 | 2738 | 929 | 1784 | 2713 |
| எம்.எட். | 61 | 90 | 151 | 59 | 89 | 148 |
| பி.ப்பி.எட். | 178 | 86 | 264 | 126 | 69 | 195 |
| எம்.ப்பி.எட். | 47 | 61 | 108 | 47 | 59 | 106 |
| இதரப் படிப்புகள் | 94 | 74 | 168 | 86 | 72 | 158 |
| மொத்தம் | 107078 | 112111 | 219189 | 65264 | 86294 | 151558 |



# இணைப்பு II

*(389 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை"*

*—அய்யன் திருவள்ளுவர்*

ஒருவருக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்ற பொருட்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழகம் பள்ளிக் கல்வி வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. பள்ளிக் கல்வித் துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

- பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்
- பள்ளிகளில் சேர்ந்த அனைவரையும் 8 ஆம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து பயிலச் செய்தல்
- இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல்
- தரமான கல்வியை வழங்குதல்
- குறைந்தபட்சக் கல்வித் திறன்களை அனைத்து மாணவர்களும் பெறுவதை உறுதி செய்தல்
- ஈடுபாட்டுடனான சமூகப் பங்கேற்பு வாயிலாக கல்வி மேலாண்மையைப் பரவலாக்குதல்

- தரமான கல்வியை அனைவருக்கும் வழங்குதல்
- ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற வழிவகை செய்தல்
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் கல்வியை நிறைவு செய்ய உதவுதல்
- பயிற்சிகளின்மூலம் ஆசிரியர்களிடம் படைப்பாற்றல், பங்கேற்றல், தொழில்நுட்பம் போன்ற திறன்களை வளர்த்து, தரமான தொடக்கக் கல்வி அளித்தல்
- முழு எழுத்தறிவுத் திட்டத்தை அடைதல்
- எழுத்தறிவில் நிலவும் பாலியல் வேற்றுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை செயல்படுத்துதல்
- பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
- பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்
- பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி அளித்தல்

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், அனைவர்க்கும் கல்விக்கான மாநிலத் திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி. ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திடப் பாடுபடுகின்றன.



## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2006–2007 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.5438.87 கோடி ஆகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.515.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| கணக்குத் தலைப்பு | | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப்பணிகள்—அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | – | 2916.97 | 2916.97 |
| 2202 | பொதுக்கல்வி | | | |
| | 01 தொடக்கக்கல்வி | 25809.77 | 250005.16 | 275814.93 |
| | 02 இடைநிலைக் கல்வி | 7924.70 | 236801.30 | 244726.00 |
| | 04 முதியோர் கல்வி | .02 | 65.87 | 65.89 |
| | 05 மொழி வளர்ச்சி | 3.01 | 388.17 | 391.18 |
| | 80 பொதுவானவை—ஏனைய செலவு | – | – | – |
| | மொத்தம் | 33737.50 | 487260.50 | 520998.00 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப்பணிகளும் | 268.97 | 138.25 | 407.22 |
| 2205 | கலையும் பண்பாடும் – பொது நூலகங்கள் | – | 1571.36 | 1571.36 |
| 2225 | ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் | 2416.21 | 20.59 | 2436.80 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | – | 184.36 | 184.36 |
| 2251 | தலைமைச் செயலகம்—சமூகப் பணிகள் | – | 282.50 | 282.50 |
| 2505 | ஊரக வேலைவாய்ப்பு | – | – | – |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதன செலவு | 15084.26 | – | 15084.26 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | – | 5.00 | 5.00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | – | 0.50 | 0.50 |
| | சேர்க்க—திரும்பி வசூலிக்கப்பட்டவை | – | – | – |
| | பெருமொத்தம் | 51506.94 | 492380.03 | 543886.97 |

[2006 ஆகஸ்ட் 4

## 2006–2007–ல் பகுதி–2 புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 100 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கணினி வழங்குதல் | | 50.00 |
| 2 | 15 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு நகலெடுக்கும் எந்திரங்கள் வழங்குதல் | | 9.00 |
| 3 | 4 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலக கட்டடங்கள் கட்டுதல் | 30.72 | |
| 4 | 5 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலக கட்டடங்கள் கட்டுதல் | 35.00 | |
| 5 | பள்ளிக் கல்வி இயக்ககத்தை கணினிமயமாக்கல் | | 10.00 |
| 6 | பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு 3 ஒளி நகலி இயந்திரங்கள், 5 நிகரி எந்திரங்கள் மற்றும் 3 படிபெருக்கி எந்திரங்கள் ஆகியவற்றை வழங்குதல் | | 3.15 |
| 7 | 34 மாவட்ட கல்வி அலுவலகங்கள் மற்றும் ஒரு ஆங்கிலோ இந்திய பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம் ஆகியவற்றை கணினிமயமாக்கல் | | 17.50 |
| 8 | 33 மாவட்ட கல்வி அலுவலங்களுக்கு ஒளி நகலி இயந்திரங்கள் வழங்குதல் | | 20.00 |
| 9 | புதிதாக உருவாக்கப்பட்ட 8 மாவட்ட கல்வி அலுவலகங்களுக்கு வாகனங்கள் வழங்குதல் | | 38.40 |
| 10 | 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 100 மேனிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் சாதனங்கள் வழங்குதல் | 120.00 | |
| 11 | 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 75 மேனிலைப் பள்ளிகளுக்கும் பாடம் கற்பிப்பதற்கான கற்பிப்பு துணை கருவிகள் அளித்தல் | 25.00 | |
| 12 | 150 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மொழிப் பயிற்று ஆய்வகங்களை ஏற்படுத்துதல் | 150.00 | |
| 13 | இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி திட்டம் | 50.00 | |
| 14 | 120 மேனிலைப் பள்ளிகளுக்கும் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக பயன்பாட்டு வாய்ப்பை அதிகரித்தல் | 38.00 | |
| 15 | கல்வியில் பின்தங்கியுள்ள 5 மாவட்டங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சியளித்தல் | 78.00 | |
| 16 | தேர்வுகள் தொடர்பான பொருட்கள் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களை சேமித்து வைப்பதற்காக, அரசு தேர்வுகள் இயக்ககத்தில் இரண்டு மாடி கட்டடம் கட்டுதல் | 92.00 | |
| 17 | கன்னிமாரா பொது நூலகம் – அரியவகை மற்றும் பழைய புத்தக பிரிவுகளுக்கு சீர்வளிசாதனம் அமைத்தல் | | 20.00 |
| 18 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை கணினி மயமாக்கல் மற்றும் இணை இயக்குநருக்கு (திட்டங்கள்) நிகரி எந்திரம் வாங்குதல் | | 2.00 |
| 19 | ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக இணை இயக்குநர், ஆசிரியர்கள் மற்றும் பிரிவு பணியாளர்களுக்கு இடவசதி அளிப்பதற்காக கூடுதல் கட்டடங்கள் அமைத்தல் | 38.00 | |
| 20 | கல்வித் தொலைக்காட்சி படப்பிடிப்பு தளத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடு | 6.25 | |
| 21 | ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தில் பழையவற்றுக்கு பதிலாக புதிதாக ஒளி நகலி ஒன்று வாங்குதல் | | 0.60 |
| 22 | ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தை நவீனப்படுத்த 4 கணினிகள் வாங்குதல் | | 2.00 |
| 23 | ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தில் கணினி அறையில் பொருத்த ஒரு சீர்வளி சாதனம் வாங்குதல் | | 0.40 |
| 24 | ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தில் புதிய நிகரி எந்திரம் ஒன்று வாங்குதல் | | 0.07 |
| 25 | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்த அடிப்படை தகவல் விவர தொகுப்பினை உருவாக்குதல் மற்றும் மென்பொருளை மேம்படுத்தல் | | 0.50 |
| | மொத்தம் | 662.97 | 173.62 |
| | | | 836.59 |



2006 ஆகஸ்ட் 4]

[2006 ஆகஸ்ட் 4

## அரசின் சாதனைகள்

➢ "இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும்
நிலை எய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும் சுகம் வரும்"

என்ற பாவேந்தர் பாரதிதாசனாரின் கனவை நிறைவேற்றிடும் வகையில் ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாகத் தமிழைக் கற்றுக் கொள்வதற்கு வகை செய்வதற்கான 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டத்தினை இவ்வரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்படி தமிழ், அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் ஒரு பாடமாக 1 ஆம் வகுப்பிற்கு 2006–2007 ஆம் கல்வியாண்டில் இருந்தும் 1 மற்றும் இரண்டாம் வகுப்புகளுக்கு 2007–2008 ஆம் கல்வியாண்டில் இருந்தும் தொடங்கி 10 ஆம் வகுப்பு வரை படிப்படியான முறையில் கற்பிக்கப்படும்.

➢ "ஆசிரியப் பணியே அறப்பணி; அதற்கே உன்னை அர்ப்பணி"

என்ற பெருநோக்கம் கொண்டு அகவிருள் அகற்றி, அறிவொளி பெருக்கும் ஆசிரியப் பெருமக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அரசுப் பள்ளிகளில் தற்போது ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இனி ஒப்பந்த முறை மாற்றப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்துக் காலிப் பணியிடங்களும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும் என்றும் ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கிணங்க 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து இளநிலைதரத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1–6–2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. இனி வருங்காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலிப் பணியிடங்கள் அனைத்தும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும் எனவும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

➢ ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, மாநகராட்சி தொடக்க, நடுநிலை, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1–6–2006 அன்றைய நிலவரப்படி காலியாகவுள்ள 8408 ஆசிரியர் பணியிடங்களை காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்ப அரசு ஆணையிடப்பட்டு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



➢ இந்த ஆண்டு 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

➢ "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"

என்ற குறள் வழி, ஒளிவு மறைவற்ற பொது மாறுதல் வேண்டுமென்ற ஆசிரியர்களின் உள்ளக்கிடக்கைக்கு மதிப்பளித்து ஊராட்சி ஒன்றிய / மாநகராட்சி / அரசு / தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக வெளிப்படையான கலந்தாய்வு முறையில் பொது மாறுதலுக்கான வழிகாட்டும் நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2006–2007 கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

➢ தமிழ்நாட்டில் கல்லாமை இருளை நீக்க, பள்ளிகள் பல திறந்து கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுக் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலைத் திங்கள் 15 ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என அரசு அறிவித்து ஆணையிட்டுள்ளது. அந்நாளில் பள்ளிகளில் மாணவர்கள் விழா எடுத்து காமராஜர் திருவுருவப் படத்தை அலங்கரித்து மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வண்ணம் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

➢ "இல்லாமை என்னும் பிணி இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லி கொட்டு முரசே"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். எழுத்தறிவு விழுக்காட்டில் பின் தங்கியுள்ள தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மாநிலத் தேர்ச்சிக்கும் குறைவாக தேர்ச்சி காட்டியுள்ள சுமார் 200 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளைக் கண்டறிந்து 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பள்ளி நேரம் முடிந்த பிறகு சிறப்பு வகுப்புகள் நடத்தி மாணவர்களைப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.75 இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் இயங்கும் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 1,28,514 மாணவ / மாணவியருக்கு அனைத்துப் பாடநூல்களையும் 2006–2007 கல்வியாண்டிலிருந்து இலவசமாக வழங்க இந்த அரசு ஆணையிட்டு செயல்படுத்தி வருகிறது.

- நவில்தொறும் நயம் தரும் நூல்களின் கருவூலமான பொது நூலகங்களுக்கு வாங்கப்படும் தமிழ் நூல்களின் எண்ணிக்கையை 750 படிகளிலிருந்து 1000 படிகளாக உயர்த்தி ஆணையிட்டுள்ளது இந்த அரசு.

- அரசுப் பள்ளிகளில் கட்டடம் கட்ட நன்கொடை அளித்தவரின் பெயரை அக்கட்டடத்திற்குச் சூட்ட அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.



# கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

## 1. தொடக்கக் கல்வி

இந்திய அரசியலமைப்புச் சட்டம், கூறு 21–ன்படி, ஆறு முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அரசு அளிக்க வேண்டும். பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேரச் செய்வதற்காக கட்டாய ஆரம்ப கல்விச் சட்டம், 1994ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. "அனைவர்க்கும் கல்வி" என்ற இலக்கினை அடைய மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநில அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாட்டினால், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையிலும் மற்றும் மாணவர்களை பள்ளிகளில் தக்கவைத்துக் கொள்வதிலும் மட்டுமல்லாமல், இடைநிற்றலைக் குறைப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

### 1.1 குறிக்கோள்:

1. பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்
2. பள்ளிகளில் சேர்ந்த அனைவரையும் 8 ஆம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து பயிலச் செய்தல்
3. இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல்
4. தரமான கல்வியை வழங்குதல்
5. குறைந்தபட்சக் கல்வித் திறன்களை அனைத்து மாணவர்களும் பெறுவதை உறுதி செய்தல்
6. ஈடுபாட்டுடனான சமூகப் பங்கேற்பு வாயிலாக கல்வி மேலாண்மையைப் பரவலாக்குதல்

### 1.2 புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடங்குதல்:

வருகையும், தொடர்ந்து கற்றலும் வாழ்விடத்திற்கருகில், பள்ளி அமைவதைப் பொறுத்துள்ளது. இதனை உறுதி செய்ய ஒரு கி.மீ. தூரத்திற்குள் பள்ளிகள் ஏதும் இல்லாமலிருந்தால், மக்கள் தொகை 300-ம் அதற்கு மேற்பட்ட சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளி அமைக்கப்படுகிறது. 2006–2007 ஆம் கல்வியாண்டில் 126 கல்வி காப்புறுதி மையங்கள் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்பட உள்ளன.

### 1.3 ஆசிரியர்கள் நியமனம்:

தொடக்கக் கல்வித் துறையின்கீழ் இயங்கி வரும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வித் தரத்தினை மேம்படுத்தும் வகையில், 2006-2007 ஆம் ஆண்டில் 2,353 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களையும், 2,435 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்பிட அரசு ஆணை பிறப்பித்து அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொடக்கக் கல்வித் துறையின்கீழ் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் நலத்தினைக் கருத்தில்கொண்டு 2006-2007 ஆம் ஆண்டு - பொது மாறுதல் மூலம் ஆசிரியர்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு முறையில் மாறுதல் ஆணைகள் வழங்க அரசு ஆணை வெளியிட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 1.4 தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துதல்:

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்படி அனைத்துத் தொடக்கப் பள்ளிகளும் இரண்டு ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்படுகின்றன. மாநிலத்தில் ஓராசிரியர் பள்ளி என்பதே இல்லை. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ.500/- வீதம் கற்றல் கற்பித்தல் உபகரணம் வாங்க வழங்கப்படுகிறது. பள்ளி மானியமாக ரூ. 2000/- தரப்படுகிறது. பள்ளி பராமரிப்பு மானியமாக ரூ. 5000/- அளிப்பதுடன் கற்றல் கற்பித்தல் உபகரணம் வாங்க புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 10,000/-மும் மற்றும் புதிய நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ. 50,000/-மும் வழங்கப்படுகிறது. கல்வியின் தரத்தை உயர்த்த அடைவுத் தேர்வுகள் மற்றும் செயல் வழி கற்றல் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.5 அடைவுத் தேர்வு:

தொடக்கக் கல்வியின் தரத்தை அறியும் பொருட்டு அனைவருக்கும் கல்வி இயக்க நிதி உதவியுடன் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 15 விழுக்காடு பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு, ஐந்தாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் ஏப்ரல் 2006-ல் அடைவுத் தேர்வு நடத்தப்பட்டது. மைய மதிப்பீடு மூலம் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் பாடத்தரம் கண்டறியப்பட்டது. கற்றல் அடைவு சிறக்க "குறை தீர்வு" கற்பித்தல் வழிமுறையில் மாதந்தோறும் தொகுப்புக் கருத்தாய்வு மையங்களில் அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



### 1.6 செயல் வழி கற்றல்:

தரமான கல்வி என்பது வகுப்பறைகளில் ஆசிரியர்களால் கையாளப்படும் கற்பித்தல் உத்திகளையே சார்ந்துள்ளது. குழந்தைகளுக்கு முதன்மை அளிப்பதுடன் அவர்களின் ஆர்வமான பங்கேற்புக்கு வழி செய்யும் கற்பித்தல் முறையே செயல்வழி கற்றல் திட்டத்தில் கையாளப்படுகிறது. குழுக் குழுவாகக் கற்றல், சிறு செயல்கள், நடனம், கதைகள், நாடகம், பாடல்கள் மூலமாகக், கற்றல் ஆகியன இத்திட்டத்தில் முதன்மைப் பெறுகின்றன. இளஞ்சிறார்களிடையே இத்திட்டம் நல்ல பலனை அளித்துள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் நிதியுதவியுடன் இச்செயல்வழி கற்றல் முறையில் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆறு நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 1.7 தொகுப்புக் கருத்தாய்வு மையம்:

ஒரு நாட்டின் எதிர்காலமானது வகுப்பறைகளில் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பறையின் தரமும் தொகுப்புக் கருத்தாய்வு மையத்தின்மூலம் உயர்த்தப்படுகிறது. தரமான கல்வி அளிப்பதிலும், அதனை உறுதி செய்வதிலும் இம்மையம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆதாரமான குறிக்கோள்களை அடைய புதிய முயற்சிகள் தேவைப்படுகின்றன. தரமான கல்விக்கு வித்திடும் வகையில் தொகுப்புக் கருத்தாய்வு மையத்திற்குட்பட்ட பள்ளிகளில் மாதந்தோறும் அடைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர்களின் ஆங்கில உரையாடல் திறன் வளரவும் இம் மையம் உதவும்.

அந்த மாதத்திற்குரிய பாடத்தில் பயிற்சி அளிப்பதுடன் ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும். உடற்பயிற்சி மற்றும் யோகா பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. தொகுப்புக் கருத்தாய்வு மையத்தின் மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் தேவையின் அடிப்படையில் உண்மையான முழுமையான முன்னேற்றத்தை அடைவர் என்பது உறுதி.

### 1.8 தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 2006:

தமிழறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களின் நீண்ட கால கனவானது தமிழகச் சட்டமன்றத்தில் சட்ட வடிவம் கொடுக்கப்பட்டு நிறைவேறி உள்ளது. இதன்மூலம் 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் படிப்படியாக தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்று முதல் பத்து வகுப்புகளுக்கு தமிழ்மொழி கட்டாயப் பாடமாக்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள அரசுப் பாடத் திட்டத்தைப் பின்பற்றும் அனைத்து

வகைப் பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள், சிறுபான்மைப் பள்ளிகள், தனியார் கல்வி நிறுவன அமைப்பைச் சார்ந்த பள்ளிகள் அனைத்திலும் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது.

தமிழ் அல்லது ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிராத மாணவர்கள், தங்கள் தாய் மொழியை விருப்பப் பாடமாக எடுத்துப் படிக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

## 1.9 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்:

தொடக்கக் கல்வி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் 5,693 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. மாணவர்கள் நலன் மற்றும் பாதுகாப்பினைக் கருத்தினில்கொண்டு விதிமுறைகளின் அடிப்படையில் அங்கீகாரம் உடனுக்குடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.10 நலத் திட்டங்கள்:

### இலவச மதிய உணவுத் திட்டம்

பள்ளிச் சிறார்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவதில் தமிழ்நாடு இந்தியாவுக்கே முன்னோடியாக உள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 1982 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

### இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் இயங்கும் பிரிவுகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 2006–07 ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்று மாநிலப் பாடத் திட்டத்தினைப் பின்பற்றி சுயநிதி அடிப்படையில் இயங்கும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ/மாணவியருக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.



### இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டம்

1985–86 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8 வகுப்புகளில் மதிய உணவு உண்ணும் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொடர்ந்து இத்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படுகிறது.

### இலவசப் பேருந்து பயணச் சலுகை

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் தங்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளிக்கும், பள்ளியிலிருந்து இருப்பிடத்திற்கும் இலவசமாகப் பேருந்து மூலம் செல்லும் திட்டமே இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் வாயிலாக தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் பயன்பெறும்விதத்தில் 2006–2007 ஆம் கல்வியாண்டிற்கும் செயல்படுத்தப்படுகிறது.

### நடமாடும் நூலகங்கள்

பள்ளிக் குழந்தைகளிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக "நடமாடும் நூலகங்கள்" மூலம் தரமான நூல்கள் மாணவர்களைத் தேடிச் செல்கின்றன. பொது நூலகத் துறை இயக்ககத்தின் ஒத்துழைப்புடன், இரு மாதங்களுக்கொருமுறை, சுழற்சி அடிப்படையில் 50–100 நூல்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் இயங்கும் அறிவியல் ஊர்திமூலம் மாவட்டம் முழுமைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

### சிறந்த பள்ளிகளுக்கு விருது வழங்கல்

மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்குவிக்கும் முகத்தான் ஆண்டுதோறும் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் சிறந்த மூன்று பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு "சிறந்த பள்ளி" விருது வழங்கப்படுகிறது. கீழ்க்காணும் சாதனைகளின் அடிப்படையில் அந்தந்த மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களால் சிறந்த பள்ளிகள் தேர்வு செய்யப்படுகின்றன:

1. மாணவர் சேர்க்கை அதிகரிப்பு.
2. தாழ்த்தப்பட்ட/மலைவாழ் மக்கள் இன மாணவர்கள் மற்றும் குறிப்பாக பெண் குழந்தைகளை அதிக அளவில் பள்ளியில் சேர்த்தல்.

[2006 ஆகஸ்ட் 4

3. மாணவர்களைத் தக்க வைத்து 8 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி கற்கச் செய்தல் மற்றும் இடைநிற்றலைக் குறைத்தல்.

4. பெற்றோர் ஆசிரியர் கழகச் செயல்பாடுகள்.

5. கல்விப் பணி சார்ந்த பிற செயல்பாடுகள்.

### 1.11 அனைவருக்கும் கல்வி இயக்கம்:

கல்வி அளிப்பதில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைத்தெறிந்து அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை அளிப்பதற்காக தீட்டப்பட்ட திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டம் ஆகும். தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பக் கால கட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 2002–2007 முடிய ஐந்தாண்டு காலத்திற்கு ரூ.1,649 கோடி அளவிலான திட்டங்களுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும். இத்திட்டம் 2010 வரை தொடரும்.

### 1.12 அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்கள்:

மாற்றியமைக்கப்பட்ட அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்கள் பெருமாறு:

❖ அனைத்துக் குழந்தைகளும், பள்ளிகள், கல்வி காப்புறுதி மையங்கள், மாற்றுப் பள்ளிகள், பள்ளி முகாம்களில் இருக்கச் செய்தல்.

❖ ஆண், பெண் இன வேறுபாட்டினாலோ, சமூகப் பிரிவுகள் அடிப்படையிலோ கல்வி செயல்பாடுகளில் குழந்தைகளிடையே நிலவும் இடைவெளியைத் தொடக்கக் கல்வி நிலையில் 2007 ஆம் ஆண்டிற்குள்ளும், நடுநிலைக் கல்வி நிலையில் 2010 ஆம் ஆண்டிற்குள்ளும் முற்றிலுமாக நீக்குதல்.

❖ பள்ளியில் சேர்ந்த அனைவரையும் 2010 ஆம் ஆண்டிற்குள் இடைநிறுத்தமின்றி தக்க வைத்தல்.

❖ அனைவருக்கும் வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை உறுதி செய்தல்.



2006 ஆகஸ்ட் 4]

தமிழகத்தில் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப் பள்ளி வசதியும், மூன்று கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளி வசதியும் 100 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து 1,274 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. புதிய குடியிருப்புப் பகுதிகள் அதிக அளவில் உருவாகுவதாலும், இரண்டு தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி என்ற வரையறுத்தலாலும், நடப்பு ஆண்டான 2006–2007 ஆம் ஆண்டில் 126 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும், 234 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

திட்ட ஆரம்ப காலத்திலிருந்து மாணவர் சேர்க்கையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வி நிலையில் மாணவர் சேர்க்கையானது 98.48 விழுக்காடு அளவுக்கு அதிகரித்தும், நடுநிலைக் கல்வி அளவில் 97.73 விழுக்காடு அளவுக்கு அதிகரித்தும் உள்ளது. இடைநிற்றல் விகிதமும் பெருமளவுக்குக் குறைந்து, தொடக்கப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் 3.81 விழுக்காடாகவும், நடுநிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் 7.58 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. நாட்டிலேயே "நூறு விழுக்காடு மாணவர் சேர்க்கை" என்ற இலக்கை எய்திய முதல் மாநிலம் என்ற குறிக்கோளை அடையும் நோக்கில் அனைத்துக் குழந்தைகளையும் 2007–க்குள் பள்ளியில் சேர்க்க அரசு உறுதி பூண்டுள்ளது.

கற்பிக்கும் வகுப்பறையானது குழந்தைகளைக் கவரக் கூடிய, ஆடல் பாடல் நிறைந்து இனிமையாக அமைய வேண்டுமெனக் கருதி, வகுப்பு 1 மற்றும் 2 வகுப்புகளுக்கு தானே சுயமாகக் கற்றல் அட்டைகள் மற்றும் பயிற்சி ஏடுகள் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குழந்தைகளைப் பள்ளிக்கு ஈர்க்கும் பொருட்டு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், கழிப்பிட வசதி, குடி தண்ணீர் வசதி ஆகியவை அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் செய்து தரப்படுகிறது.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தில் புதுமைத் திட்டமாக கணினி வழிக் கல்வி கற்றல் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் பள்ளியில் கற்றல் சூழல், குழந்தைகளை ஈர்ப்பதோடு கணினி மூலம் கற்றல் திறனை மேம்படுத்த உதவுகிறது. கற்றல் அடைவு திறன்களை மேம்படுத்தியும், அறிவுசார் திறன் வளர்ச்சி மற்றும் நினைவாற்றலையும்

ஏற்படுத்தி பள்ளிகளில் குழந்தைகளின் வருகையை அதிகப்படுத்துவதும், பள்ளி செல்லாக் குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்ப்பதுமே கணினி வழிக் கற்றலின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டமானது "மைக்ரோசாப்ட்", "அசீம் பிரம்ஜி பவுண்டேசன்", "இண்டெல்" ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்படும் திட்டமாகும். மேலும் வட்டார அளவில் தொடங்கப்படும் "எடுசாட்" செயற்கைக்கோள் வசதிமூலம், திட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுவதிலும், கண்காணிப்பதிலும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் பயன்படுத்தப்படவுள்ளது.

**1.13 2006–2007 ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் 723.18 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கியமான செயல்பாடுகளின் விவரம் வருமாறு:**

**புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்**

- 126 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும்; 234 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.
- புதிய தொடக்க மற்றும் நிலை உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு 2,201 ஆசிரியர் பணியிடங்கள்.
- பள்ளியே இல்லாத குடியிருப்புகளில் 234 கல்வி காப்புறுதி மையங்கள்.

**மழலையர் முன்பருவ நலக் கல்வி**

- 19,974 நர்சரி பள்ளிகள், 5,040 தரம் உயர்த்தப்படாத அங்கன்வாடி மையங்களுக்குக் கற்றல் அட்டைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

**பள்ளியில் சேராத குழந்தைகள்**

- 1,11,989 பள்ளி செல்லாக் குழந்தைகளை 4,890 இணைப்பு மையங்கள் மற்றும் 436 உறைவிட முகாம்களில் சேர்த்தல்.

**உதவித் தொகைகள்**

- 2,10,624 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 500 வீதம் கற்றல் கற்பித்தல் சாதனங்களுக்கான உதவித் தொகை.



- 37,253 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 13,761 நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000 வீதம் பள்ளி உதவித் தொகை.
- 30,533 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 10,324 நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 வீதம் பராமரிப்பு உதவித் தொகை.
- 126 புதிய தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்க ரூ. 10,000 உதவித் தொகை; நிலை உயர்த்தப்பட்ட 234 நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 50,000 உதவித் தொகை.

**இயலாதோருக்கான ஒருங்கிணைந்த கல்வி**

- 1,13,009 இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்.
- மொத்தமுள்ள 412 வட்டார வள மையங்களிலும் விளையாட்டுப் பூங்கா.
- சிறப்புக் கவனம் தேவைப்படும். 51,080 இயலாக் குழந்தைகளுக்கு கோடைக் கால முகாம்; 40,847 குழந்தைகளுக்கு வாழ்க்கைக்கு உகந்த தொழில் திறன் பயிற்சி.
- ஒவ்வொரு வட்டாரத்திலும் மருத்துவ முகாம்கள்; தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவி சாதனங்கள் மற்றும் அறுவை சிகிச்சை உதவிகள்.

**பயிற்சி**

- 2,10,624 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி.
- 1,55,710 கிராமக் கல்விக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி.
- இயலாதோருக்கான ஒருங்கிணைந்த கல்வியில் 1,05,833 ஆசிரியர்கள் மற்றும் கிராம கல்விக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி.
- 29,000 ஆசிரியர்களுக்கு தொழில் திறன் பயிற்சி.
- நடுநிலை வகுப்புகளில் பயிலும் 1,16,000 மாணவிகளுக்குத் தொழில் திறன் பயிற்சி.

[2006 ஆகஸ்ட் 4

- கல்வியில் பின்தங்கியுள்ள 1,16,000 குழந்தைகளுக்கு நேரடியான சிறப்புக் கவனப் பயிற்சி.
- 412 பள்ளித் தொகுப்பு வள மையங்களில் கணினி வழிக் கற்றல் கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**கட்டடப் பணிகள்**

- 1,075 பள்ளித் தொகுப்பு வள மைய கட்டடங்கள்.
- 14,354 வகுப்பறை கட்டடங்கள்.
- 3,910 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதி.

**தேசிய தொடக்க நிலை பெண் கல்வித் திட்டம்**

- 688 மாதிரி தொகுப்புப் பள்ளிகள்.
- 688 மாதிரி பள்ளித் தொகுப்புப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் சாதனங்கள்.



2006 ஆகஸ்ட் 4]

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

### 2.1 தொலைநோக்குப் பார்வை:

- தரமான கல்வியை அனைவருக்கும் வழங்குதல்.
- ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற வழிவகை செய்தல்.
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் கல்வியை நிறைவு செய்ய உதவுதல்.
- பல்வேறு பாடங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் தொழில் திறனை மேம்படச் செய்தல்.

### 2.2 பாடத் திட்டம் மேம்படுத்துதல்–ஆசிரியர்களின் திறமைகளை வளர்த்தல்:

பாடத் திட்டத்தை நவீனப்படுத்துவதால் நல்ல தரமான மாணாக்கரை உருவாக்க முடியும். உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி, தமிழக அரசு பாடத் திட்டத்தை, தேசிய தரத்திற்கு (NCERT) இணையாக மேம்படுத்தியுள்ளது. பாடத் திட்டத்தை மேம்படுத்தும்போது ஆசிரியர்களையும் பயிற்றுவிக்க வேண்டியதாகிறது.

1 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கட்கு அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கட்குப் பின்வரும் முறையில் பயிற்சியளிக்கப்பட்டது:

1. பாடநூல் குழுத் தலைவர், கல்லூரிப் பேராசிரியர் இணைந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள 5 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பர்.
2. இப்பயிற்சி பெற்ற 5 ஆசிரியர்கள் அவரவர் மாவட்டத்திலுள்ள பிற ஆசிரியர்களைப் பயிற்சி பெறச் செய்வர்.

2006–2007 ஆம் கல்வியாண்டிற்காக சுமார் 50.00 இலட்சம் ரூபாய் செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் பணியிடைப் பயிற்சி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 4

### 2.3 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பித்தல்:

அரசின் தொலைநோக்கு இலக்கின்படி ஐந்து கிலோ மீட்டர் தூரத்துக்குள் உயர்நிலைப் பள்ளிகள் எதுவுமே இல்லாமல் இருந்து, அந்த எல்லைக்குள் செயல்படும் நடுநிலைப் பள்ளியில் 50 மாணவர்கள் பயின்று வருவார்களாயின் அத்தகைய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது.

மேலும் பத்தாம் வகுப்பில் 100 மாணவர்கள் கல்வி பயிலும் உயர்நிலைப் பள்ளிகள் அப்பள்ளிகளுக்கு எட்டு கி.மீ. தொலைவில் வேறு மேல்நிலைப் பள்ளிகள் எதுவும் இல்லாமல் இருந்தால் அப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2006–2007 ஆம் ஆண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### 2.4 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்:

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் பள்ளியின் அடிப்படைத் தேவைகளான வகுப்பறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, மின்வசதி, கற்பித்தல் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுத் திடல்கள் முதலியவை கிடைக்க வழிவகுக்கின்றன. தாமாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு மேற்கண்ட தேவைகள் நிறைவேற்றப்பட்டன. கல்வித் துறை அதிகாரிகள் அனைவரும் முழுமனதுடன் ஈடுபட்டு இத்திட்டத்தை நிறைவேற்றும்படி அறிவுறுத்தப்பட்டனர். 2006–2007 ஆம் ஆண்டில் ஏழு மாவட்டங்களில் இம்மாதிரியான 'பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்' நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.5 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கணினி கல்வி:

**உயர்நிலைப் பள்ளிகள்**

அடிப்படை கணினி அறிவுத் திட்டத்திற்காக ஏற்கெனவே 500 அரசு உயர்நிலைப் பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் தேவையான கணினிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் கல்வி ஆண்டில் ICT திட்டத்தின்மூலம் 1,000 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கி கணினிக் கல்வி கற்பிக்கப்படும்.



2006 ஆகஸ்ட் 4]

**மேல்நிலைப் பள்ளிகள்**

தமிழ்நாட்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம், அனைவருக்கும் கணினி அறிவு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

### 2.6 நூலக வசதிகளை மேம்படுத்துதல்:

'கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடரும் நிகழ்வு'. பாடப் புத்தகங்களுடன் நூலகப் புத்தகங்களைப் படித்தல் மாணவர்களின் திறமைகளை வளர்க்கத் தேவையானது. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தரமான புத்தகங்களுடன் நூலக வசதி இருத்தல் வேண்டும்.

2006–2007 ஆம் கல்வியாண்டில் ரூபாய் 38.00 இலட்சம் செலவில் 220 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.7 ஆங்கில மொழி ஆய்வகங்கள்:

பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வின் முடிவுகளை ஆராய்ந்தவிடத்து 10 முதல் 15 விழுக்காடு கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலத்தில் தோல்வி அடைவதனால் தங்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர். மேலும் உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் நிறைந்த தற்போதைய சூழ்நிலையில் வேலை வாய்ப்புகளை உருவாக்க ஆங்கில மொழி அறிவு தேவை. இதனைக் கருத்தில் கொண்டு இதுவரை 900 ஆங்கில மொழி ஆய்வகங்களை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அரசு நிறுவியுள்ளது.

150 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பல்நோக்கு மொழி ஆய்வகங்கள் ரூ. 150 இலட்சம் செலவில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மாணாக்கரின் நலன் கருதி பல்நோக்கு மொழி ஆய்வகங்களில் கணினி மென்பொருள் பயன்படுத்தப்படவுள்ளது.

### 2.8 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி:

தற்போது 1,506 பள்ளிகளில் 1,48,684 மாணவர்களுக்குத் தொழிற்கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றன. தொழிற்கல்வியின் நோக்கம் மாணாக்கருக்குத் தொழில் அனுபவமும், பயிற்சியும், பொதுக் கல்வியுடன் சேர்த்து வழங்கி தொழில் துறைக்கும், தொடர் கல்விக்கும் வழிவகை செய்வதாகும்.

[2006 ஆகஸ்ட் 4

கல்வி உலகத்திற்கும், தொழில் உலகத்திற்கும் உள்ள இடைவெளியை இணைக்கவும், பள்ளியை விட்டு இடையில் நிற்கும் மற்றும் தோல்வி அடையும் மாணாக்கரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் தொழிற் கல்வி 1978–79 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

மேல்நிலைக் கல்விக்குப் பிறகு வேலைவாய்ப்பினை உருவாக்கவும், சுய தொழிலில் ஈடுபடத் தேவையான தொழில் சார்ந்த திறமையினை வளர்க்கவும், அருகிலுள்ள தொழிற்கூடங்களுடன் தொடர்பு கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.9 இலவச மிதிவண்டி திட்டம்

ப்ளஸ் 1 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

## 2.10 நாட்டு நலப் பணித் திட்டம்

தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, தானாக நாட்டு நலனில் அக்கறை கொள்ளுதல், சமூக சேவை மனப்பான்மை போன்ற அரிய பண்புகளை மாணவர்கள் அடையத் துணை செய்வதே நாட்டு நலப் பணித் திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு மைய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. மாநிலத்தில் தற்சமயம் 1,620 அமைப்புகளில் 81,000 மாணவ, மாணவியர் தொண்டர்கள் பயன் அடைந்து வருகின்றனர். 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 255.75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்தில் தொடர்ந்து செயல்படவும், இத்திட்டம் செயல்படாத இதர மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இப்பயன் கிடைப்பதற்கும் இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## 2.11 சாரண சாரணியர் இயக்கம்

தமிழ்நாட்டில் 5,845 பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 1,10,803 மாணவர்களும், 50,637 மாணவிகளும் உள்ளனர். கோவில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி செய்தல் போன்ற சமூகநலச் செயல்பாடுகளை இவ்வமைப்பு செய்து வருகிறது. ஒவ்வோராண்டும் சிறந்த நூற்றுக்கணக்கான சாரணர்களுக்கு ஒப்பற்ற 'ராஜ்ய புரஸ்கார்' என்ற விருது வழங்குவது 1998–1999 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.



2006 ஆகஸ்ட் 4]

மாணவர்களிடையே நல்லெண்ணத்தை உண்டாக்கும் பொருட்டு இவ்வமைப்பு அரசு உதவி பெறும், உதவி பெறாத மற்றும் மெட்ரிகுலேஷன் போன்ற அனைத்து வகைப் பள்ளிகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. 2006–2007 ஆம் ஆண்டில் சாரண சாரணியர் இயக்கத்தை அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.12 இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்:

தமிழ் நாட்டில் பெரும்பான்மையான பள்ளிகளில் இந்திய இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்டத்தின் ஆட்சித் தலைவர், மாவட்டத்தின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார். இதில் பல ஆசிரியர்கள், ஆலோசகர்களாகவும் மாணவர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

தமிழ்நாட்டில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் 5,462 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றது. இதில் 2,21,211 மாணவர்களும், 2,70,369 மாணவிகளும் சேர்ந்துள்ளனர்.

2006–2007 ஆம் ஆண்டில் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் துவக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

## 2.13 திடகள விளையாட்டு மற்றும் யோகா பயிற்சிகள்:

அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7, 8 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கரின் சிறப்புத் தன்மைகளைக் கண்டறிய ஐந்து தொடர் தேர்வுகள் நடத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது குழந்தைகளின் வேகம், சகிப்புத் தன்மை, வலிமை, திறனை வெளிப்படுத்தும் ஆற்றல் உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றை அறியவும் மற்றும் ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் குழந்தைகளின் உள்ளார்ந்த ஆற்றலைச் சுட்டிக்காட்டவும் உதவுகிறது. இளைஞர் நல மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இத்திட்டத்தின்மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களைக் கண்டறிகிறது.

ஆசிரியர்கள் மன மற்றும் உடல் ரீதியான அழுத்தத்திற்கு உள்ளாவதால் அவர்களின் கற்பிக்கும் ஆற்றல் குறைகிறது. மாணவர்களிடமும், உடல்நலக் குறைவு, செயல்திறன் ஆற்றல், நினைவாற்றல், புத்திக்கூர்மை ஆகியவை குறைகின்றன. இவற்றை

[2006 ஆகஸ்ட் 4

மேம்படுத்தவும், மாணவர்களிடம் பொதுவான மற்றும் பண்பாட்டு ஒழுக்கங்களை உருவாக்கவும், ஆசிரியர் மற்றும் மாணவர்களிடம் உள்ள குறைகளிலிருந்து மீளவும் 'யோகா' உதவுகிறது. உடற்கல்வி ஆசிரியர்களுக்கு இதற்கான பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பர்.

**2.14 ஆசிரியர்களுக்கான மாநில விருது:**

தமிழக அரசு 1960-லிருந்து ஆண்டுதோறும் நல்லாசிரியர் விருது வழங்கி வருகின்றது. 1997 ஆம் ஆண்டிலிருந்து இவ்விருது "டாக்டர் இராதாகிருட்டிணன் விருது" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி அன்று வழங்கப்பட்டு வருகிறது.

மிகச் சிறப்பான வகையில் பணியாற்றும் ஆசிரியர்களைக் கண்டறிந்து சிறப்பு மிக்க இவ்விருது வழங்கப்படுகிறது.

பல்வேறு மேலாண்மையின்கீழ் இயங்கும் அனைத்து வகைப் பள்ளிகளிலிருந்தும் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியப் பள்ளி, சமூகப் பாதுகாப்புத் துறைப் பள்ளிகள் ஆகிய அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் 344 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருது பெறும் ஆசிரியர்களுக்குப் பணமாக, பரிசுத் தொகை ரூ.2,000/-உம் வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், பயணப்படியும் வழங்கப்படுகிறது.

**2.15 ஆசிரியர்களுக்கான தேசிய விருது:**

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் துவக்க, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலை ஆசிரியர்களில் 25 பேருக்கும் சிறப்பு வகைப் பள்ளி ஆசிரியர் ஒருவருக்கும் விருது வழங்கப்படும்.



2006 ஆகஸ்ட் 4]

தேசிய விருதுக்காக மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்குக் குடியரசுத் தலைவரால் ஆசிரியர் தினத்தன்று புதுடில்லியில் இவ்விருது வழங்கப்படுகிறது. தேசிய விருது பெறும் ஆசிரியர்கட்கு ரூ. 25,000/- ரொக்கத் தொகையும், வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், பயணப்படியும் வழங்கப்படுகிறது.

**2.16 தேசிய ஆசிரியர் நல நிறுவனம்:**

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962-ல் நிறுவப்பட்டது. இதன் தலைவர் மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர், செயலர் பள்ளிக் கல்வி இயக்குநர். இந்நிறுவனம் பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் இயங்குகிறது.

**2.17 ஆசிரியர்களுக்கு மருத்துவ உதவிகள்:**

(i) அரசு ஆணை எண் 161, கல்வி, தேதி 20-5-1998-ன்படி (as per G.O.No.161 Edn dt.20-5-1998) 50,000 ரூபாய் அல்லது மொத்த மருத்துவச் செலவில் 75 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அத்தொகை பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கோ, கடும் நோயால் பாதிக்கப்பட்ட அவரை சார்ந்தவருக்கோ வழங்கப்படுகிறது.

(ii) மாநில அல்லது தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள் தங்கள் வாழ்க்கைத்துணையுடன், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியாவின் எந்த ஒரு பகுதிக்கும் சென்றுவர 14 நாட்கள் விடுமுறையும், பண உதவியும் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

(iii) மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆசிரியர்களின் குழந்தைகளின் தொழில்நுட்பக் கல்விக்கும் பட்டயக் கல்விக்கும் முறையே ரூ. 5,000/-, ரூ. 2,500/- உதவித் தொகை வழங்குகிறது.

**2.18 ஆசிரியர் இல்லம்:**

சைதாப்பேட்டை, சென்னை-15-ல் ஆசிரியர்களின் நலனுக்காக ஓர் ஆசிரியர் இல்லம் செயல்படுகிறது. இங்கு தங்கும் ஆசிரியர்களுக்கு குறைந்த செலவில் சிறந்த வசதிகள் அளிக்கப்படுகிறது.

## 2.19 மாணவர் நலத் திட்டம்:

[2006 ஆகஸ்ட 4

திறமை மிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தைக் கொணர்ந்தது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து, மூன்று இடங்களைப் பெறும் 12 ஆம் வகுப்பு அரசு, மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ-இந்தியன் பள்ளி மாணவர்களுக்குப் பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

முதலிடம் – ரூ. 15,000/–

இரண்டாமிடம் – ரூ. 12,000/–

மூன்றாமிடம் – ரூ. 10,000/–

இதுதவிர, மேல்நிலைத் தேர்வில் மாநில அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்களின் மேற்கல்விக்கான முழு செலவையும் மாநில அரசே ஏற்கிறது. மேலும் மேல்நிலைத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப்பள்ளி-1, நிதியுதவி பெறும் பள்ளி-1, ஆங்கிலோ-இந்தியன், மெட்ரிகுலேஷன், சுயநிதிப் பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து -1) பள்ளிகளில் மாணவருக்கு மேற்கல்விக்கான முழுச்செலவையும் அரசே ஏற்கிறது.

அதேபோன்று மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து முதன் மூன்று இடங்களைப் பெறும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

முதலிடம் – ரூ. 7,500/–

இரண்டாமிடம் – ரூ. 6,000/–

மூன்றாமிடம் – ரூ. 5,000/–

இது தவிர மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப்பள்ளி -1, நிதி உதவி பெறும் பள்ளி-1, ஆங்கிலோ-இந்தியன், மெட்ரிகுலேஷன், சுயநிதிப் பள்ளி ஆகிய மூன்றும் சேர்த்து-1) பள்ளியில் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மேற்கல்விக்கான செலவினமாக ரூ. 1,500/– வழங்கப்பட்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 4]

இத்திட்டத்தின்மூலம் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் செலவுகள் பின்வருமாறு:—

| வ.எண் | ஆண்டு | 10 ஆம் வகுப்பு மாணவர் எண்ணிக்கை | 12 ஆம் வகுப்பு மாணவர் எண்ணிக்கை | மொத்த செலவு இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 1996–1997 | 3 | 3 | 0.21 |
| 2 | 1997–1998 | 115 | 98 | 7.78 |
| 3 | 1998–1999 | 101 | 126 | 22.37 |
| 4 | 1999–2000 | 119 | 101 | 46.81 |
| 5 | 2000–2001 | 122 | 98 | 56.39 |
| 6 | 2001–2002 | 95 | 94 | 57.87 |
| 7 | 2002–2003 | 104 | 104 | 64.81 |
| 8 | 2003–2004 | 100 | 103 | 59.41 |
| 9 | 2004–2005 | 113 | 90 | 49.57 |
| 10 | 2005–2006 | 98 | 95 | 67.70 |
| மொத்தம் | | 970 | 910 | 432.92 |

2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.68.02 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.20 மாணவர் சேர்க்கைக்கான சிறப்புத் திட்டம்:

ஆரம்பக் கல்வி கற்கப் பள்ளியில் சேரும் அனைத்து மாணாக்கரும் ஆறாம் வகுப்பில் சேர்ந்து நடுநிலைக் கல்வியை முடிக்கிறார்கள் என்ற நிச்சயத்தைப் பெற அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆறாம் வகுப்பில் சேர்ந்த இம்மாணவர்களிடம் தோல்வி, இடைநிற்றல் இவை இல்லாதிருக்க இணக்கமான, மகிழ்வான கற்றல் சூழ்நிலையைப் பள்ளிகளில் உருவாக்கவும், 150 நாட்கள் வருகை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் தேர்ச்சி வழங்கும்படியான நிலையை உருவாக்க கற்றல்—கற்பித்தலைத் திட்டமிடவும் கல்வித் துறை சிறப்புக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கிறது.

கல்வித் துறை இலவச சீருடை, இலவச புத்தகங்கள், இலவச மதிய உணவு, இலவச பயணச் சீட்டு, கல்வி உதவித் தொகை 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி போன்ற பல பயனுடை

திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், மாணவர்கள் இடைநிற்றல் இல்லாமல் தொடர்ந்து கற்கவும் சிறப்புக் கவனம் செலுத்துகிறது.

100 சதவீதம் சேர்க்கை, 0 சதவீதம் இடைநிற்றல் என்ற இலக்கினை அடைய அரசு அதிக ஆர்வமும், சிறப்பு கவனமும் செலுத்தி வருகின்றது.

## 2.21. கிராமப்புற மாணவர்களின் திறனறி தேர்வுத் திட்டம்:

கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் திறன்மிக்க மாணவர்களைக் கண்டறிவதற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒவ்வோராண்டும், ஆகஸ்ட் மாதம் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரால் இத்தேர்வு நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 50 மாணவர்கள், 50 மாணவிகள் என மொத்தம் 100 மாணாக்கர் இத்தேர்வின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 1,000/-ம் 4 ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து வழங்கப்படுகிறது. இதற்காக அரசு ரூ.1.00 கோடி செலவிடுகிறது.

கிராமப்புற மாணவர்களின் உள்ளார்ந்த திறமையை மேம்படுத்த இத்திட்டம் உதவுவதால் இதனைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

## 2.22. இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்:

இத்திட்டத்தின்மூலம் மாணவர்களின் திறமைகள் வெளிக் கொணரப்படுகின்றன. பேச்சுப் போட்டி, கட்டுரை வரைதல், வரைதல், வினாடி வினா, இசை, கவிதை எழுதுதல், பரத நாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் போன்ற பல போட்டிகள் நடத்தப் படுகின்றன.

ஒவ்வோராண்டும் பள்ளி அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும், போட்டிகள் நடத்தப்பட்டு, பின் இறுதியாக மாநில அளவிலும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.



## 2.23. தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சி:

தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சி ஆண்டுதோறும் ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் சார்பில் ஏதாவது ஒரு மாநிலத் தலைநகரை மையமாகக் கொண்டு பெங்களூர் விஸ்வேஸ்வரையா அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகமும், சம்பந்தப்பட்ட அரசின் கூட்டு முயற்சியாலும் நிதி உதவியாலும் நடத்தப்பட்டு வருகிறது.

அரசு நம் மாநிலத்திலிருந்து இத்தகைய கண்காட்சிகளுக்கு அதிக அளவில் மாணாக்கர் பங்கேற்க ஊக்குவிக்க முடிவெடுத்துள்ளது.

## 2.24. மாணவர்களுக்கான நிதி உதவி:

அரசு 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.50 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடமாக்கப்பட்டாலோ அம்மாணவர்களுக்கு ரூ.50,000 வீதம் நிதியுதவி கிடைக்கும்.

## 2.25. நிர்வாக அலுவலகத்தை வலுப்படுத்துதல்:

உலக அளவில் தகவல் மற்றும் தொழில் நுட்பம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. அறிவியல் முன்னேற்றத்தால் உலகம் மிகப் பரந்த அலகாக மாறியுள்ளது; மற்றும் தகவல் தொடர்பு மற்றும் மின் அணுவியலில் மிகப் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அறிவியல் முன்னேற்ற காலத்திற்கு ஏற்றவாறு தகவல் தொடர்பு தொழில்நுட்பம் தலைமை அலுவலகங்களில் மட்டுமல்லாது களப்பணி அலுவலகங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். கணினிகள் இல்லாமை, தொலை நகலித் தொடர்பு மற்றும் மற்ற வசதிகள் குறைபாடு காரணமாக, இயக்குநரகம் மற்றும் மற்ற மாவட்ட அளவிலான அலுவலகங்களின் நிர்வாகம் பாதிப்படைகிறது. எனவே இயக்குநர் அலுவலகம் மற்றும் மற்றைய மாவட்ட அளவிலான அலுவலகங்களின் தரம் உயர தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டில் இயக்குநரக அலுவலக செயல்முறைகள், கணினி மயமாக்கப்பட்டு 34 மாவட்டக் கல்வி அலுவலகங்களுடனும் ஓர் ஆங்கிலோ இந்தியன் பள்ளி ஆய்வாளர் அலுவலகத்துடனும் ரூ.17.50 இலட்சம் செலவில் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

4)2006 ஆகஸ்ட் 4

**2.26. பள்ளி இயக்குநரகத்தில் மின் அரசாண்மை:**

1. மக்கட் பணியாற்றுவதில் ஒளிவு மறைவற்ற தன்மை, திறமை, நிறைந்த பயன் இவற்றைக் கொணர மின் அரசாண்மையைப் (e-governance) புகுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

2. பள்ளிக் கல்வித் துறையில் மின் அரசாண்மையைத் துவக்கவும், நடைமுறைப்படுத்தவும் கூடுதல் செயலரை ஒருங்கிணைப்பு அதிகாரியாக (Nodal Officer) அரசு நியமித்துள்ளது.

**2.27. இணைய தளம் உருவாக்குதல்:**

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் 2,930 மாநில உயர்நிலைப் பள்ளிகளும், 3,019 மாநில மேல்நிலைப் பள்ளிகளும் 1.29 இலட்சம் ஆசிரியர்களுடனும், 48.64 இலட்சம் மாணாக்கருடனும் செயல்பட்டு வருகின்றன. அரசு, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் மாணவர்களுக்குப் பல நலத் திட்டங்களை அறிவித்துள்ளது. கீழ்க்கண்ட காரணங்களுக்காக பள்ளிக் கல்வித் துறையில் இணைய தளம் உருவாக்க வேண்டியது கட்டாயத் தேவையாகிறது:

1. பள்ளிக் கல்வித் துறையின் செயற்பாடுகளை அறிதல்.

2. VI முதல் XII வகுப்பு வரை உள்ள பாடத் திட்டம், வினா அமைப்பு முறை மற்றும் பாடத் திட்டத்தில் ஏற்படும் மாறுதல் அறிதல்.

3. மாணாக்கர்களுக்கான நலத் திட்டங்கள், புதிய நலத் திட்டங்களின் அறிவிப்பு குறித்து அறிதல்.

தேசிய தகவல் மையத்துடன் இணைந்து இணையதளம் உருவாக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**2.28. கல்வி விதிகள் சீரமைப்பு:**

பள்ளி நிர்வாகத்துக்குத் தேவையான விதிமுறைகள் அடங்கிய ஒரு குறிப்புக் கையேட்டை உருவாக்க அரசு ஒரு குழுவை உருவாக்கியது. அக்குழு, 2003-ல் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. இக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 4

**2.29. நபார்டு (NABARD) திட்டம்:**

நபார்டு திட்டத்தின் மூலம் அடிப்படைத் தேவைகளாகிய வகுப்பறை, ஆய்வகங்கள், கழிப்பறை, குடிநீர், மின்சாரம் போன்ற அனைத்து தேவையான வசதிகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 605 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மூன்று கட்டங்களாக ரூ.182.74 கோடி செலவில் அடிப்படை வசதிகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மூன்று கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. IV முதல் VII கட்டம் வரை ரூ.525.24 கோடி செலவில் பணிகள் நடைபெற ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டம்மூலம் வகுப்பறைகள் கட்டுதல், கழிப்பறை, குடிநீர், மின் வசதி ஆகியவையும் வழங்கப்படுகின்றன

**2.30. தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்கம்:**

சங்கச் சட்டம் 1975 ன்படி பதிவு செய்யப்பட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பள்ளிக்குச் செல்லும் வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தவர் இடையில் நின்று விடாமல் தொடர்ந்து பள்ளியில் படிக்கச் செய்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். பள்ளிகளில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பொதுமக்களிடமிருந்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் வசூலிக்கப்படுகின்றன. பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆண்டுதோறும் பல்வேறு பாடங்களுக்கு வினா வங்கிக் கையேடுகள், மாதிரி வினாத்தாட்கள் ஆகியவற்றை அச்சிட்டு X, XII ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுபவர்களுக்காக சுமார் 48,000 பிரதிகளை விநியோகிக்கின்றது.

[2006 ஆகஸ்ட் 4

## 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள், சுயநிதி அடிப்படையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டத்தின்படி, ஆங்கில வழியில் கல்வி கற்பித்து வருகின்றன. முதலில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சென்னை மற்றும் மதுரை பல்கலைக் கழகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தன. 1976–ல் இப்பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டன. தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின்கீழ், 3,474 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

### 3.1. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்கமைப்பு:

1978 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட "மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பு" இன்றளவும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் செயல்பாட்டை மேலும் ஒழுங்குபடுத்தவும் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி நலனைக் கருத்திற் கொண்டும், அரசு இப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான பள்ளி உட்கட்டமைப்பிற்கான விதிகளை உள்ளடக்கிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

### 3.2. பயிற்சித் திட்டம்:

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்த புத்துணர்வுப் பயிற்சிகள் இக்கல்வியாண்டில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தால் அளிக்கப்பட உள்ளன.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ்வழிப்பாட வகுப்புகள் துவக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.



2006 ஆகஸ்ட் 4]

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 4.1. நோக்கங்கள்:

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், பயிற்சியின்மூலம் ஆசிரியர்களிடம் படைப்பாற்றல், பங்கேற்றல், தொழில்நுட்பம் போன்ற திறன்களை வளர்த்து, தரமான தொடக்கக் கல்வி அளிக்க முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இவ்வியக்ககம் அனைவருக்கும் தரமான தொடக்கக் கல்வி என்ற இலக்கினை எட்டுவதற்கு அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் (SSA) இணைந்தும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

### 4.2. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்:

தமிழ்நாட்டில் 404 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் ஆண்டொன்றுக்கு மாணவர் சேர்க்கை 24,800 ஆகும். இந்நிறுவனங்களிலுள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்கள், வெளிப்படையான ஒற்றைச் சாளரமுறை கலந்தாய்வு மூலம் நிரப்பப்படுகின்றன. நீதிமன்ற ஆணைப்படி, அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்ற மாணவர்களில் விடுபட்ட மாணவர்கள் நடப்புக் கல்வியாண்டில் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கப்பட உள்ளனர்.

### 4.3. அனைவருக்கும் கல்வி இயக்கம்:

அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் இணைந்து அனைத்துத் தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகளை நடத்தி வருகிறது.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் பணியிடைப் பயிற்சிகளை ஆசிரியர்களின் வகுப்பறை கற்பித்தலை மேம்படுத்தும் வகையில், தொடக்க மற்றும் உயர் தொடக்க ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிகளை அளிக்கிறது. பாடத்திட்டம் சார்ந்த பாடங்கள் தவிர பாடத் திட்டம் சாராத பேரிடர் மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, பள்ளி முழுநலக் கல்வித் திட்டம், எய்ட்ஸ் விழிப்புணர்வு, விளையாட்டு மற்றும் யோகக் கலை மற்றும் இயலாத குழந்தைகளுக்குக் கற்பித்தலுக்கான ஒருங்கிணைந்த கல்வி ஆகிய பகுதிகளிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 4

இவ்வருடத்தில் மேற்காண் பயிற்சிகள், தொடக்க, உயர் தொடக்க ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் 18 நாள் பயிற்சியாக அனைத்து பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மற்றும் வட்டார வள மையங்களிலும் ஆசிரியர்களின் பணித் திறனை மேம்படுத்தும்வகையில் அளிக்கப்பட உள்ளன.

## 4.4. பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம்:

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டத்தை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் யூனிசெப் உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. அனைத்து அரசு, நிதி உதவி பெறும் மற்றும் நிதி உதவி பெறாத உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வளரிளம் பருவ மாணவர்களைக் கருத்தில் கொண்டு, ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களிடம் எய்ட்ஸ் விழிப்புணர்வை இப்பயிற்சி ஏற்படுத்துகிறது. மாணவர்கள் வாயிலாக இவ்விழிப்புணர்வு சமூகத்தைச் சென்றடைகிறது. இக்கல்வியாண்டில், 9,423 பள்ளிகளில் எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.5. கல்வித் தொலைக்காட்சிப் படப் பதிவு நிலையம்:

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கல்வித் தொலைக்காட்சி படப் பதிவு நிலையம் பாடத் திட்டத்தை எளிமைப்படுத்தும் வகையில் ஒலி, ஒலி–ஒளி நாடாக்கள் தயாரிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்த ஒலி–ஒளி நிகழ்ச்சிகள், "காண்போம் கற்போம்" என்ற பெயரில் சென்னை தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பப்படுகின்றன. 29 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வட்டார வள மையங்களில் நடத்தப்பெறும் பணியிடைப் பயிற்சிகளிலும் இவ்வொலி நாடாக்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தொடக்கப் பள்ளிகளில் சிறப்பாகச் செயல்படும் ஆசிரியர்களையும், அவர்களது வகுப்பறை சாதனைகளையும் பதிவு செய்து ஒலி–ஒளி பரப்ப திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் 60 கல்வி ஒலி–ஒளி பரப்பு நிகழ்ச்சிகளையும், 100 கல்வி ஒலி பரப்பு நிகழ்ச்சிகளையும் தயாரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட உள்ள ஒலி–ஒளி நாடாக்கள், ஒலி குறுவட்டுகள், தொலைக்காட்சி நிலையம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் மூலம் அனைத்துப் பள்ளிகளுக்கும் பரவலாக்கப்பட உள்ளது.



2006 ஆகஸ்ட் 4]

## 4.6. தமிழ்நாட்டில் கல்விச் செயற்கைக்கோளின் செயல்பாடு:

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கென கல்விச் செயற்கைக்கோளினை விண்வெளியில் 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நிறுவியுள்ளது. இச்செயற்கைக்கோளினை நிறுவியதன் மூலமாக தொலைக்காட்சி, வானொலி மற்றும் தகவல் பரிமாற்றம் நாடு முழுவதிலும் உள்ள கல்வி நிறுவனங்களை எளிதில் சென்றடைகிறது. இச்செயற்கைக்கோளினைப் பயன்படுத்தி பள்ளி மாணவர்களுக்குக் குறிப்பாகக் கிராமப்புற மாணவர்களுக்குத் தரமான கல்வி அளிக்கப்படுகிறது. இதன்மூலம் பள்ளி ஆசிரியர்களுக்கு உயர்தரமான பணியிடைப் பயிற்சிகளையும் அளிக்க முடியும்.

கல்விச் செயற்கைக்கோளினைப் பயன்படுத்தும் பொருட்டு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், 29 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், 9 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், 385 வட்டார வள மையங்கள் மற்றும் 27 நகர்ப்புற பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் ஆகியவற்றில் கல்வி ஒலி–ஒளிபரப்பினை ஈர்க்கும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வொலிபரப்பு அண்ணா பல்கலைக்கழக படப்பிடிப்பு தளத்தில் இருந்து நிகழ்த்தப்படுகிறது. தற்போது 29 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சில வட்டார வள மையங்களில் சோதனை முறையில் கல்வி ஒலி–ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றது. இக்கல்வி ஒளிபரப்பில், இவ்வியக்கக கல்வித் தொலைக்காட்சி படப் பதிவு நிலையம் பெரும் பங்கு வகிக்கிறது.

[2006 ஆகஸ்ட் 4

## 5. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

### 5.1. இயக்கத்தின் தொலைநோக்குத் திட்டம் மற்றும் செயல்நோக்கு:

- முழு எழுத்தறிவுத் திட்ட இலக்கை அடைதல்
- எழுத்தறிவற்ற வயது வந்தோர், பள்ளிப்படிப்பை இடையில் விட்டோர், பள்ளிக்கே செல்லாதோர் ஆகியோருக்கான வாழ்க்கை முழுவதும் பொருத்தமான, பயனுடைய எழுத்தறிவை பல்வகை முயற்சிகள் மூலம் அளித்தல்.
- 15 முதல் 35 வயதுடைய அனைத்து எழுத்தறிவு அற்றவர்களுக்கும் எழுத்தறிவினை அளித்தல்.
- தமிழகத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் வளர்கல்வி மையங்களை ஆரம்பித்து கற்கும் சூழ்நிலை, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- எழுத்தறிவில் நிலவும் பாலியல் வேற்றுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டிலுள்ள மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய அனைத்து வட்டாரங்களிலும் மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினைச் செயல்படுத்துதல்.

### 5.2. வளர் கல்வித் திட்டம்:

தமிழ்நாட்டில், எழுத்தறிவுத் திட்டத்தின் முதற்கட்டமாகிய **'முழு எழுத்தறிவு இயக்கம்'** மற்றும் இரண்டாம் கட்டமாகிய **'தொடர் கல்வித் திட்டம்'** நிறைவு பெற்றவுடன், மூன்றாம் கட்டமாகிய **'வளர்கல்வித் திட்டம்'** சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட எழுத்தறிவுக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

அறிவொளி இயக்கத்தின் முதல் இரண்டு கட்டங்களில் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் தங்கள் எழுத்தறிவினை நிலை நிறுத்திக்கொள்ளும் வகையில் வளர்கல்வி மையங்களில் நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. வளர்கல்வித் திட்டத்தின் வழியே பொதுவாக அந்தந்த கிராம மக்களும் குறிப்பாக புதிதாக எழுத்தறிவு பெற்றோரும் சமநிலைக் கல்வி, தனி நபர் விருப்ப முன்னேற்றம், வருவாய் பெருக்கத்திற்கான வாய்ப்பு, வாழ்க்கைத்தர மேம்பாடு போன்றவற்றிற்கான பயிற்சிகள் அளிக்கப் பெறுகின்றனர்.



2006 ஆகஸ்ட் 4]

இத்திட்டத்தினை செயல்படுத்த முதல் மூன்று ஆண்டுகளுக்கு மைய அரசால் முழு 100% நிதியுதவி (மானியம்) வழங்கப்படும். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மைய மாநில அரசுகளால் 50:50 என்ற விகிதத்தில் நிதியுதவியுடன் இத்திட்டம் நடத்தப்படும். இத்திட்டம் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு தொடர்ந்து நடத்தப்பட வேண்டிய திட்டமாகும்.

### 5.3. தேசிய திறந்தவெளிப் பள்ளி:

தேசிய எழுத்தறிவு இயக்கமும், தமிழக அரசின் கல்வித் துறையும் இணைந்து தமிழக எழுத்தறிவு இயக்க ஆணையத்தின் வழியாக கோயம்புத்தூர் மாவட்டம் தவிர மீதம் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வளர்கல்வித் திட்டத்தை, தற்போது செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் **"எல்லோருக்கும் எழுத்தறிவு"** அளிப்பதே ஆகும். எழுத்தறிவு பெற்றவுடன் தாம் கற்ற எழுத்தறிவைத் தொடர்ந்து ஆர்வமுள்ளவர்கள் தம் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பாக அடிப்படைக் கல்வித் திட்டத்தைப் பள்ளிக் கல்வித் திட்டத்திற்குச் சமமான அளவில் வழங்குவதும் வளர்கல்வித் திட்டத்தின் சிறப்புச் செயல்பாடுகளில் ஒன்றாகும்.

இத்திட்டத்தைப் பள்ளிக் கல்வித் திட்டத்திற்குச் சமமான நிலை 1 (3-வது வகுப்பு), நிலை 2 (5-வது வகுப்பு) மற்றும் நிலை 3 (8-வது வகுப்பு) ஆகிய மூன்று கட்டங்களாகச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம், மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் தற்போது செயல்பட்டுவரும் மாவட்ட அறிவொளி வளர்கல்வித் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ஆகும் செலவினங்கள் அனைத்தையும் தேசிய எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

### 5.4. 2006–2007-ல் கொள்கை வழிகாட்டுதல்கள் விவரம்:

(1) 2006–2007 ஆம் ஆண்டில் வளர்கல்வித் திட்டத்தினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி எழுத்தறிவு விகிதத்தை உயர்த்துவதே நமது குறிக்கோள் ஆகும்.

[2006 ஆகஸ்ட் 4

(2) கிராமங்களில் வளர்கல்வி மையங்களில் நூலகங்கள் அமைத்தல்.

(3) வளர்கல்வி மையங்களில் வெவ்வேறு பயிற்சிகள் வழங்குவதன்மூலம் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் வெவ்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ள வகைசெய்தல்.

(4) குடிமக்கள் மக்களாட்சியில் தம் பங்கினை அறிந்துகொள்ள உரிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

(5) மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவு மையங்கள் துவங்கி எழுத்தறிவில் நிலவும் பாலியல் ஏற்றத்தாழ்வினைப் போக்குதல்.



2006 ஆகஸ்ட் 4]

## 6. அரசுத் தேர்வுகள்

தேர்வுகளை நடத்துவதும், தேர்வு முடிவுகளைக் குறித்த காலத்தில் வெளியிடுவதும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கிய பொறுப்பு ஆகும். 33 வகையான அரசுத் தேர்வுகளை இவ்வியக்ககம் நடத்துகிறது. அவற்றில் மிக முக்கியமான பள்ளிக் கல்வி தேர்வுகள், மேல்நிலைத் தேர்வுகள் மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகள் ஆகும்.

பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது வகுப்பு தேர்வுகள், மாநில அரசுப் பள்ளிகளுக்கும், ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் கல்வி பயிற்சிக்கான டிப்ளமோ தேர்வும், இசை, ஓவியம் மற்றும் தையற்கலை போன்ற பாடங்களில் தொழில்நுட்பச் சான்றிதழ் தேர்வும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

மார்ச் மாத எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வில் 1 அல்லது 2 அல்லது 3 பாடங்களில் தோல்வியடைந்தவர்கள் ஒரு முழு கல்வி ஆண்டை வீணாக்காமல் தேர்ச்சி பெற்று, உயர்கல்வி பெறும் நிறுவனங்களில் உடனடியாக சேருவதற்கு ஏதுவாக, ஜூன் மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.

### 6.1. தேசிய திறனாய்வு தேர்வுகள் மற்றும் திறனாய்வுத் தேர்வுகள்:

அகில இந்திய அளவில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் குழுமத்தால் நடத்தப்படும் முதன்மைத் தேர்வில் கலந்துகொள்வதற்காகத் தேர்வு செய்யப்பட, நடத்தப்படும் ஒன்பதாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான அடிப்படை நிலை தேர்வினை, தமிழ்நாட்டில், அரசுத் தேர்வுத் துறை நடத்துகிறது.

தமிழ்நாடு அரசு திட்டத்தின்கீழ், எட்டாம் வகுப்பினை நிறைவு செய்த கிராமப்புற மாணாக்கர்களுக்கு கிராமப்புற திறனாய்வுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, மாவட்டந்தோறும் 50 மாணவர்களும் 50 மாணவிகளும் தெரிவு செய்யப்படுகின்றனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு பன்னிரண்டாம் (+2) வகுப்பு வரை ஆண்டொன்றுக்கு ரூ.1,000 வீதம் அளிக்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 4

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களை அரசு பள்ளிகளுக்குத் தேர்வு செய்யும் பணிகளுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் ஒரு சிறந்த நிறுவனமாக 1987-ல் உருவாக்கப்பட்டது. வெளிப்படையான செம்மையான தேர்வு முறையில் ஆசிரியர் தேர்வு வாரியம் போட்டி எழுத்துத் தேர்வு நடத்தி அதன்மூலம் திறமை மற்றும் தகுதியில் உயர்ந்த பணிநாடுநர்களைத் தெரிவு செய்கிறது. இவ்வாரியம் துவங்கப் பெற்றது முதல் இது வரை சுமார் 53,000 விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கல்லூரி மற்றும் பள்ளிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 7.1. 2006-2007 ஆம் ஆண்டிற்கான திட்டம்:

கீழ்க்கண்ட பணியிடங்களைத் தெரிவு செய்யும் பணியினை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொள்ள உள்ளது:—

(i) ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 46 மூத்த விரிவுரையாளர் மற்றும் 117 விரிவுரையாளர் நியமனங்கள்.

(ii) பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககத்தின்கீழ் உள்ள பள்ளிகளில் 659 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 4,449 பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள்.

(iii) அரசு கலை/அறிவியல் கல்லூரிகளில் 1,020 விரிவுரையாளர் நியமனங்கள்.

### 7.2. ஆசிரியர் தேர்வு வாரிய சிறப்பியல்புகள்:

ஆசிரியர் தேர்வு வாரியம், கணினி அமைப்பு வாயிலாகத் தேர்வு நடத்துதல் மற்றும் தெரிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறியீடுகளைப் பகுத்துணரும் தன்மையுள்ள (Intelligence Character Recognition System) விண்ணப்பப் படிவங்களை அறிமுகப்படுத்தியதன்மூலம் புள்ளிவிவரங்களை விரைவாக சரிபார்ப்பதற்கும், ஒட்டுமொத்த புள்ளிவிவர தொகுப்பினை உருவாக்குவதற்கும் ஏதுவாகிறது. எழுத்துத் தேர்வுக்கு ஆசிரியர் தேர்வு



2006 ஆகஸ்ட் 4]

வாரியம், கொள்குறி வினா முறையினையும், Optical Mark Reader விடைத்தாட்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியம் அதற்கென http://trb.tn.nic.in., என்ற இணையதளத்தினை உருவாக்கி அதன்மூலம், காலிப் பணியிட விவரங்கள், தேர்வுக்கான அட்டவணைகள், அனைத்துத் தேர்வர்களின் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தலில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இறுதித் தேர்ச்சிப் பட்டியல் ஆகியவற்றைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிடுகிறது. மேலும் இவ்வாரியம் Home Page என்ற பக்கத்தை இணையதளத்தில் தொடங்கியுள்ளது. இதன்மூலம் ஆண்டு முழுவதும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து முக்கிய சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் அட்டவணைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள இயலும்.

[2006 ஆகஸ்ட் 4

## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

### 8.1. பாடநூல் அச்சடிப்பு:

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம் கீழ்க்குறிப்பிட்ட பாடநூல்கள் மற்றும் கையேடுகளை அச்சடித்து வழங்கி வருகிறது: —

(1) மாநிலப் பாடத்திட்டப் பள்ளிகளில் 1–12 வகுப்புகளுக்கான பாடநூல்கள்.

(2) மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்திய பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்புப் பாடநூல்கள்.

(3) சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடநூல்கள், +1, +2 மாணவர்களுக்கு மொழி நூல்கள் மட்டும்.

(4) ஏ.பி.எல். அட்டைகள் 1 முதல் 4 ஆம் வகுப்பு வரை

(5) ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகள்மூலம் நடத்தப்பெறும் பள்ளிகளில் 10 மற்றும் +2 வகுப்பு மாணவர்களுக்குச் சிறப்பு வழிகாட்டி நூல்கள் மற்றும் குறிப்பேடுகள்.

(6) தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்கு வினா வங்கி, மாதிரி வினா ஏடு, கையேடு (பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக).

(7) மாநிலப் பாடத் திட்டப் பள்ளிகளில் +1 மற்றும் +2 வகுப்புகளுக்குத் தொழிற்கல்வி பாடநூல்கள், சுற்றுச்சூழல் கல்விக்கான பாடநூல்கள் மற்றும் SLM அட்டைகள் (SSA).

### 8.2. பாடநூல்களின் விநியோகம்:

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் 21 வட்டார அலுவலகங்கள்மூலம் இலவச மற்றும் விற்பனை பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. பள்ளிகள் திறந்தவுடன் மாணவர்களுக்குப் பாடநூல்கள் எளிதாகக் கிடைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விற்பனை பிரதிகளைப் பொறுத்தமட்டில்



2006 ஆகஸ்ட் 4]

தமிழ்நாட்டு பாடநூல் கழகம், தமிழ்நாட்டிலுள்ள 42 மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக மொத்த விற்பனையும் 2,000 தனியார் விற்பனை நிலையங்கள்மூலம் சில்லறை விற்பனையும் தமிழ்நாடு முழுவதும் செய்கிறது. இதனால், அனைத்துப் பள்ளிகளும், பள்ளிகள் திறக்கும் முன்னரே மாணவர்களுக்குத் தேவையான அனைத்துப் பாடநூல்களையும் பெறுவது உறுதிப்படுத்தப்படுகிறது.

சென்னையில் உள்ள நிர்வாக அலுவலகத்தில் சிறப்பு விற்பனை நிலையம், அனைத்து வேலை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.

### 8.3. இலவசப் பாடநூல்கள்:

அரசு மானியம் பெறும் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் இயங்கும் சுயநிதி வகுப்புகள் உட்பட 1 முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், இலவசப் பாடநூல்களைப் பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கி வருகிறது, மேலும் இத்திட்டம் தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் சுமார் 1,28,514 மாணவ/மாணவியருக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான 2006–2007 ஆம் கல்வியாண்டிற்கு 129 தொழில்கல்வி பாடநூல்கள் தலைப்புகளில் முதன்முறையாக அச்சிட்டு அரசின் ஆணைப்படி இலவசமாக வழங்கப்படுகிறது.

### 8.4. சுற்றுச்சூழல் கல்வி:

6 முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் கல்விக்கான பாடநூல்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### குறிப்பேடுகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், அரசுத் துறை சார்ந்த பள்ளிகளுக்காகவும் மற்றும் வெளிச் சந்தை விற்பனைக்காகவும் குறிப்பேடுகளைத் தயாரித்து வெளியிடுகிறது.

[2006 ஆகஸ்ட் 4

# 9. பொது நூலகங்கள்

## 9.1. தொலைநோக்கு:

நிறைந்த மக்களுக்குக் குறைந்த செலவில், சிறந்த வாசிப்பு என்ற குறிக்கோளுடன் செயல்பட்டுவரும் பொது நூலகத் துறையின், தொலைநோக்கு திட்டங்கள் வருமாறு:

(1) அனைத்துப் பொது நூலகங்களிலும் நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல்களை, வாசகர்களுக்கு வழங்குதல்.

(2) நூலகப் பணியை அனைத்து ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்துதல்.

(3) கன்னிமாரா பொது நூலகம், 29 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாநகராட்சி/நகராட்சிப் பகுதிகளில் உள்ள 100 நூலகங்களில் கணிப்பொறி வசதியும், இணையதள வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| தமிழ்நாட்டிலுள்ள நூலகங்கள் | |
|---|---|
| மாநில மைய நூலகம் | 1 |
| மாவட்ட மைய நூலகங்கள் | 29 |
| கிளை நூலகங்கள் | 1568 |
| நடமாடும் நூலகங்கள் | 12 |
| கிராமப்புற நூலகங்கள் | 1492 |
| பகுதி நேர நூலகங்கள் | 649 |
| மொத்தம் | 3751 |

## 9.2. கன்னிமாரா பொது நூலகம், சென்னை:

கன்னிமாரா பொது நூலகம் மாநில மைய நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோக (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) சட்டம் 1954-ன்படி தேசிய வைப்பு நூலகமாகவும் செயல்பட்டு



2006 ஆகஸ்ட் 4]

வருகிறது. நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவில் அச்சிடப்பெறும் அனைத்து நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை இலவசமாகப் பெறக்கூடிய தகுதியினையும் இந்நூலகம் பெற்றுள்ளது. மேலும் யுனெஸ்கோ, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் தகவல் மையமாகவும் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகம் 6.14 இலட்சம் நூல்களைக் கொண்டு பின்வரும் முக்கிய பிரிவுகளுடன் பொது மக்களுக்குச் சிறந்த நூலகப் பணி ஆற்றி வருகின்றது.

கன்னிமாரா பொது நூலகம் முழுமையும் ரூ.20.00 இலட்சத்தில் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளது. தவிர கன்னிமாரா பொது நூலகத்தைப் பற்றிய விவரங்கள் அடங்கிய தொடுதிரைக் கணினி வசதி மற்றும் இணையதள வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகத்திலுள்ள பழமையான நூல்களைக் குறுந்தட்டில் பதிவு செய்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9.3. வாசகர் வட்டம்:

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் கொண்ட "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாசகர் வட்டம்மூலம் நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு உள்ளிட்ட பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 9.4. இராசாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி பெறுதல்:

கல்கத்தாவில் உள்ள இராசாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

## 9.5. நூல்கள் வாங்குதல்:

நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் செய்திகளை அறியவும் பொது மக்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடவும், ஆண்டுதோறும் சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் நூலகங்களுக்கு வாங்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. நூலகங்களுக்கு வாங்க, தேர்வு பெறும் தமிழ் நூல்களில் அதிகபட்சம் 750 படிகள் வாங்கப்பட்டு

வந்தது. இதனை இவ்வாண்டு முதல் 1,000 படிகளாக வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**9.6. குடிமைப் பணி கல்வி மையங்கள்:**

வங்கித் தேர்வாணையம், இரயில்வே தேர்வாணையம், மத்திய பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பயன்பெறும் வகையில் "குடிமைப் பணி கல்வி மையங்கள்" என்ற பிரிவு, மாவட்ட மைய நூலகங்களிலும் வட்டத் தலைநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள நூலகங்களில் 150 நூலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**9.7. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்:**

நூலகங்களுக்குப் படிக்க வரும் வாசகர்கள் காற்றோட்டமான பரந்த இடவசதியுடன் கூடிய கட்டடங்களில் அமர்ந்து படிக்க ஏதுவாக வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மொத்தமுள்ள 3751 நூலகங்களில் 1,340 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 349 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும், 2062 நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை, பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் தலா ரூ.50/- இலட்சம் செலவில் மாவட்ட மைய நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.





**6. புள்ளி விவரம்**

**அட்டவணை-1 எழுத்தறிவு விகிதம் 1901 முதல் 2001**

| ஆண்டு | அகில இந்திய விகிதம் (சதவீதத்தில்) | | | தமிழ்நாடு விகிதம் (சதவீதத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | நபர் | ஆண் | பெண் | நபர் |
| 1901 | 9.80 | 0.60 | 5.30 | 14.10 | 1.00 | 7.60 |
| 1911 | 10.60 | 1.10 | 5.90 | 17.10 | 1.50 | 9.20 |
| 1921 | 12.20 | 1.80 | 7.20 | 18.60 | 2.40 | 10.40 |
| 1931 | 15.60 | 2.90 | 9.50 | 20.00 | 2.90 | 11.30 |
| 1941 | 24.90 | 7.30 | 16.10 | 25.60 | 6.90 | 16.20 |
| 1951 | 27.16 | 8.86 | 18.33 | 31.70 | 10.10 | 20.80 |
| 1961 | 40.40 | 15.34 | 28.31 | 51.59 | 21.06 | 36.39 |
| 1971 | 45.95 | 21.97 | 34.45 | 59.54 | 30.92 | 45.40 |
| 1981 | 56.37 | 29.75 | 43.56 | 68.05 | 40.43 | 54.39 |
| 1991 | 64.13 | 39.29 | 52.21 | 73.05 | 51.33 | 62.66 |
| 2001 | 79.56 | 54.28 | 65.38 | 82.33 | 64.55 | 73.47 |

குறிப்பு—1961 மற்றும் 1971 விகிதமானது 5 வயது அதற்கு மேற்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும். 1981-லிருந்து 2001 வரையிலான விகிதமானது, 7 வயது அதற்கு மேற்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்புக்கு உட்பட்டதாகும்.

ஆதாரம் —அகில இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்பு அறிக்கை 2001.

## அட்டவணை - 2 மக்கள் தொகை குறிப்புகள்

| | இனம் | இந்தியா | தமிழ்நாடு |
|---|---|---|---|
| அ. மக்கள் தொகை (கோடியில்) | நபர் | 102.70 | 6.24 |
| | ஆண் | 53.13 | 3.14 |
| | பெண் | 49.57 | 3.10 |
| ஆ. மக்கள் வளர்ச்சி விகிதம் | | 21.34 | 11.19 |
| இ. ஆண் பெண் விகிதம் | | 933 | 987 |
| ஈ. எழுத்தறிவு விகிதம் | நபர் | 65.38 | 73.47 |
| | ஆண் | 75.85 | 82.33 |
| | பெண் | 54.16 | 64.55 |
| உ. மக்கள் அடர்த்தி (ஒரு சதுர கி.மீ.க்கு) | | 324 | 467 |

மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001



## அட்டவணை - 3 பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கை

### 2005-2006

| வயது தொகுதி | இனம் | மாணவர் சேர்க்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 6-11 | ஆண் | 32.94 |
| | பெண் | 30.84 |
| | மொத்தம் | 63.78 |
| 11-14 | ஆண் | 18.93 |
| | பெண் | 17.41 |
| | மொத்தம் | 36.34 |
| 14-16 | ஆண் | 10.00 |
| | பெண் | 9.25 |
| | மொத்தம் | 19.25 |
| 16-18 | ஆண் | 5.24 |
| | பெண் | 5.59 |
| | மொத்தம் | 10.83 |
| 6-18 (மொத்தம்) | ஆண் | 67.11 |
| | பெண் | 63.09 |
| | மொத்தம் | 130.20 |

**அட்டவணை - 4 பள்ளிகள், மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 2005-2006 (நிர்வாக வகைப்படி)**

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1529 | 1.73 |
| | நகராட்சி/மாநகராட்சி | 896 | 1.34 |
| | ஊராட்சி ஒன்றியம் | 21906 | 19.75 |
| | தனியார் | 5255 | 10.97 |
| | நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் | 4622 | 5.03 |
| | மொத்தம் | **34208** | **38.82** |
| நடுநிலைப் பள்ளிகள் | அரசு | 390 | 0.92 |
| | நகராட்சி/மாநகராட்சி | 453 | 1.46 |
| | ஊராட்சி ஒன்றியம் | 5458 | 13.13 |
| | தனியார் | 1716 | 7.97 |
| | மொத்தம் | **8017** | **23.48** |
| மொத்த தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் | | 42225 | 62.30 |
| உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | 2016 | 8.33 |
| | நகராட்சி/மாநகராட்சி | 110 | 0.50 |
| | உதவி பெறுபவை (தனியார்) | 613 | 3.12 |
| | சுயநிதி (தனியார்) | 179 | 0.43 |
| | ஆங்கிலோ இந்தியன் | 12 | 0.10 |
| | மெட்ரிகுலேஷன் | 2053 | 6.17 |
| | மைய அரசு | 63 | 0.51 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | | **5046** | **19.16** |
| மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | 1696 | 18.89 |
| | நகராட்சி/மாநகராட்சி | 93 | 1.33 |
| | உதவி பெறுபவை (தனியார்) | 1062 | 14.77 |
| | சுயநிதி(தனியார்) | 139 | 0.75 |
| | மொத்தம் | **2990** | **35.74** |
| | ஆங்கிலோ இந்தியன் | 29 | 0.42 |
| | மெட்ரிகுலேஷன் | 1421 | 11.26 |
| | மைய அரசு | 96 | 1.32 |
| மொத்த மேல்நிலைப் பள்ளிகள் | | **4536** | **48.74** |
| | பெரு மொத்தம் | **51807** | **130.20** |
| மொத்தப் பள்ளிகள் | அரசு | 5631 | 29.87 |
| | நகராட்சி/மாநகராட்சி | 1552 | 4.63 |
| | ஊராட்சி ஒன்றியம் | 27364 | 32.88 |
| | தனியார் | 8964 | 38.01 |
| | நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் | 4622 | 5.03 |
| | ஆங்கிலோ இந்தியன் | 41 | 0.52 |
| | மெட்ரிகுலேஷன் | 3474 | 17.43 |
| | மைய அரசு | 159 | 1.83 |
| | பெரு மொத்தம் | **51807** | **130.20** |

**அட்டவணை – 5 முக்கிய குறிப்புகள்**

**முடித்தோர் விகிதம், மீளப் படிப்போர் விகிதம், இடைநின்றோர் விகிதம்**

| Indicators | ஆரம்பக் கல்வி | | | நடுநிலைக் கல்வி | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| முடித்தோர் விகிதம் | 76.14 | 79.04 | 77.57 | 79.91 | 84.26 | 82.02 |
| மீளப் படிப்போர் விகிதம் | 20.01 | 17.16 | 18.62 | 12.04 | 8.66 | 10.41 |
| இடைநின்றோர் விகிதம் | 3.85 | 3.77 | 3.81 | 8.05 | 7.07 | 7.58 |
| **நிகர பள்ளி பயில்வோர் விகிதம்** | **98.80** | **98.15** | **98.48** | **97.89** | **97.57** | **97.73** |

ஹோகார்ட் ஆய்வு 2005



**அட்டவணை – 6 மேல்நிலைத் தேர்வு – 2006**

| வ.எண் | வருவாய் மாவட்டம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றோர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | 21849 | 14252 | 65.23 |
| 2 | திருநெல்வேலி | 23314 | 20213 | 86.70 |
| 3 | தூத்துக்குடி | 13268 | 11490 | 86.60 |
| 4 | இராமநாதபுரம் | 8879 | 6597 | 74.30 |
| 5 | சிவகங்கை | 9354 | 6905 | 73.82 |
| 6 | விருதுநகர் | 13843 | 12164 | 87.87 |
| 7 | தேனி | 9688 | 7648 | 78.94 |
| 8 | மதுரை | 22740 | 18355 | 80.72 |
| 9 | திண்டுக்கல் | 13281 | 10348 | 77.92 |
| 10 | உதகமண்டலம் | 6767 | 4461 | 65.92 |
| 11 | கோயம்புத்தூர் | 31733 | 27144 | 85.54 |
| 12 | ஈரோடு | 19831 | 16691 | 84.17 |

### அட்டவணை 6 மேல்நிலைத் தேர்வு – 2006

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | சேலம் | 22151 | 15631 | 70.57 |
| 14 | நாமக்கல் | 16753 | 13304 | 79.41 |
| 15 | கிருஷ்ணகிரி | 10149 | 5882 | 57.96 |
| 16 | தருமபுரி | 10055 | 5991 | 59.58 |
| 17 | புதுக்கோட்டை | 10045 | 6433 | 64.04 |
| 18 | கரூர் | 5875 | 4502 | 76.63 |
| 19 | பெரம்பலூர் | 9111 | 5611 | 61.58 |
| 20 | திருச்சிராப்பள்ளி | 22472 | 18161 | 80.82 |
| 21 | நாகப்பட்டினம் | 11589 | 7694 | 66.39 |
| 22 | திருவாரூர் | 9477 | 6340 | 66.90 |
| 23 | தஞ்சாவூர் | 19205 | 14329 | 74.61 |
| 24 | விழுப்புரம் | 20162 | 13831 | 68.60 |
| 25 | கடலூர் | 18785 | 12170 | 64.79 |
| 26 | திருவண்ணாமலை | 15663 | 8993 | 57.42 |
| 27 | வேலூர் | 28345 | 16345 | 57.66 |
| 28 | காஞ்சிபுரம் | 25226 | 19137 | 75.86 |
| 29 | திருவள்ளூர் | 21216 | 15908 | 74.98 |
| 30 | சென்னை | 42563 | 36003 | 84.59 |



### அட்டவணை –7 பள்ளி இறுதித் தேர்வு – 2006

| வ.எண் | வருவாய் மாவட்டம் | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றோர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | 24423 | 19483 | 79.77 |
| 2 | திருநெல்வேலி | 32787 | 28778 | 87.77 |
| 3 | தூத்துக்குடி | [illegible] | [illegible] | [illegible] |
| 4 | இராமநாதபுரம் | 14703 | 11905 | 80.97 |
| 5 | சிவகங்கை | 14305 | 12071 | 84.38 |
| 6 | விருதுநகர் | 20684 | 18794 | 90.86 |
| 7 | தேனி | 12507 | 11324 | 90.54 |
| 8 | மதுரை | 29303 | 24502 | 83.62 |
| 9 | திண்டுக்கல் | 19875 | 16984 | 85.45 |
| 10 | உதகமண்டலம் | 8373 | 6420 | 76.68 |
| 11 | கோயம்புத்தூர் | 37638 | 33012 | 87.71 |
| 12 | ஈரோடு | 22776 | 20179 | 88.60 |

அட்டவணை – 7 பள்ளி இறுதித் தேர்வு - 2006

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | சேலம் | 37398 | 24873 | 66.51 |
| 14 | நாமக்கல் | 17237 | 13733 | 79.67 |
| 15 | கிருஷ்ணகிரி | 18201 | 11857 | 65.14 |
| 16 | தருமபுரி | 16601 | 11103 | 66.88 |
| 17 | புதுக்கோட்டை | 19380 | 12696 | 65.51 |
| 18 | கரூர் | 8930 | 7018 | 78.59 |
| 19 | பெரம்பலூர் | 14776 | 11520 | 77.96 |
| 20 | திருச்சிராப்பள்ளி | 27877 | 24532 | 88.00 |
| 21 | நாகப்பட்டினம் | 17153 | 13094 | 76.34 |
| 22 | திருவாரூர் | 14050 | 10615 | 75.55 |
| 23 | தஞ்சாவூர் | 27406 | 21047 | 76.80 |
| 24 | விழுப்புரம் | 36270 | 29306 | 80.80 |
| 25 | கடலூர் | 29469 | 20650 | 70.07 |
| 26 | திருவண்ணாமலை | 29053 | 19378 | 66.70 |
| 27 | வேலூர் | 42048 | 30120 | 71.63 |
| 28 | காஞ்சிபுரம் | 35057 | 23276 | 66.39 |
| 29 | திருவள்ளூர் | 28784 | 19115 | 66.41 |
| 30 | சென்னை | 36508 | 29150 | 79.85 |



## இணைப்பு – III

*(460 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை

## அறிவிப்புகள்

**கூடுதலாகப் புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்:**

2006–2007 ஆம் கல்வியாண்டில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க, கூடுதலாக 7,979 பட்டதாரி ஆசிரிய பணியிடங்கள் ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

மேலும், வேலையில்லா பட்டதாரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிவுடன் ஏற்று, இப்பணியிடங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில், தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும் என்று ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாசிரியர்கள் உரிய புத்தாக்கப் பயிற்சி பெற்று பணியிடங்களில் அமர்த்தப்படுவார்கள்.

**பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்:**

கடந்த சில ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இது ஒரு பெரும் குறையாக உணரப்பட்டது.

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006–2007 ஆம் கல்வியாண்டில் இந்த 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்கிட அனுமதி அளித்துள்ளார்கள். இப்பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்படும் 7,979 பணியிடங்களில் அடங்கும்.

**500 வட்டார வள மைய ஆசிரியர்கள், பள்ளிகளுக்கு மாற்றம் செய்தல்:**

அனைவருக்கும் கல்வி திட்டத்தில், பணிபுரியும் வட்டார வள மைய ஆசிரியர்களின் கோரிக்கையினை இவ்வரசு ஏற்று, நடப்புக் கல்வியாண்டில், 500 வட்டார வள மைய ஆசிரியர்களைப் பணி மூப்பு அடிப்படையில், தற்பொழுது அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் மாற்றம் செய்ய ஆணையிட உள்ளது.

**உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களின் பணி மாறுதல்:**

தொடக்கக் கல்வித் துறையில் பணிபுரியும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள், இதுவரை, அவர்கள் கடைசியாக நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்த கல்வி மாவட்டத்தில் பணிபுரிய அனுமதிக்கவில்லை.

இவர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் கடைசியாகப் பணிபுரிந்த ஒன்றியத்தைத் தவிர, மற்ற ஒன்றியங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்கள் நலன்:**

தற்பொழுது அரசு மற்றும் நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி பெற்றோர்–ஆசிரியர் கழகம் / நிர்வாகத்தால் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்று பணிபுரிபவர்களில், முழுக் கல்வித் தகுதி பெற்ற 213 தொழிற்கல்வி ஆசிரியர்கள், அரசால் அனுமதி வழங்கப்பட்டு காலியாக உள்ள தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் முன்னுரிமைப்படி நியமனம் செய்யப்பட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கி உள்ளார்கள்.

**கணினி ஆசிரியர்கள் நலன்:**

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்பொழுது தொகுப்பூதியத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் கணினி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.



இவ்வாசிரியர்களின் கோரிக்கையை அரசு ஏற்று, முழுக் கல்வித் தகுதியோடு பணிபுரியும் கணினி ஆசிரியர்களைப் போட்டித் தேர்வின் மூலம் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிவுடன் பரிசீலனை செய்ய முடிவெடுத்துள்ளது.

**அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டமைப்பு வசதிகளை அமைத்துக் கொடுத்தல்:**

மாநிலத்தில் செயல்படும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் அடுத்த மூன்று ஆண்டுகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடம், அறிவியல் உபகரணங்கள், மாணவர் இருக்கை வசதி, கழிப்பறை வசதி, குடிநீர் வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் நபார்டு வங்கி உதவி, அனைவருக்கும் கல்வித் திட்டம், சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றைக் கொண்டு இவ்வரசு செய்து தரும் எனபது மகிழ்ச்சியுடன் தெரிவிக்கப்படுகிறது.

**நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளும் பணி:**

இதுவரை 5 கட்டங்களில் 1,154 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.413.87 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடம், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

நடப்புக் கல்வியாண்டில் 6, 7 கட்டங்களில், 429 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.293 கோடி மதிப்பில் இவ்வசதிகள் செய்து தரப்படும்.

**நபார்டு வங்கியின் 8–வது கட்டத்திற்கான பணிகள்:**

இதுவரை நபார்டு வங்கியால் அனுமதிக்கப்படாத அறிவியல் உபகரணம், மாணவர்களுக்கான பெஞ்ச், டெஸ்க் இருக்கைகள் மற்றும் சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகளையும் 8–வது கட்டத்திலிருந்து பள்ளிகளுக்கு அளித்திட நபார்டு வங்கி முன்வந்துள்ளதால், 8–வது கட்டத்தில் தெரிவு செய்யப்படும் அனைத்துப் பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முடிவெடுத்துள்ளது.

முதல் 7 கட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 1,583 பள்ளிகளுக்கும் கூடுதலாக அறிவியல் உபகரணங்கள் மற்றும் மாணவர்களுக்கான இருக்கை வசதிகள் செய்து தரப்படும்.

**அனைவருக்கும் கல்வித் திட்டம்:**

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2006–2007 ஆம் ஆண்டில் 1,075 பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையங்கள் நடைபெற கட்டடங்கள் ரூ.21.75 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மேலும், 14,354 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ரூ.281.28 கோடி மதிப்பில் நடப்புக் கல்வி ஆண்டில் கட்டப்படும்.

**207 மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் ஏற்படுத்துதல்:**

12 ஆம் வகுப்பு மற்றும் CLIS தகுதி பெற்று மாதம் ரூ.1,500 தொகுப்பூதியத்தில் 207 பேர், பகுதிநேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

இவர்களின் கோரிக்கையை ஏற்று, பணி மூப்பு அடிப்படையில் இவர்களை மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

**புதிய உயர்நிலைப் பள்ளிகள்:**

2006–2007 ஆம் கல்வி ஆண்டில் இவ்வரசு ஏற்கெனவே 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

பொதுமக்களின் வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று, இக்கல்வி ஆண்டில் கூடுதலாக மேலும் 20 நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புதிய மேல்நிலைப் பள்ளிகள்:**

2006–2007 ஆம் கல்வி ஆண்டில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது.

தற்போது பொதுமக்களின் வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று, நடப்புக் கல்வி ஆண்டிலேயே கூடுதலாக மேலும் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி, ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

227419

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.